ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 **மே 1938** **கதிர் 10**

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
ஸர் முகம்மது இக்பால்	—	11
உலகத்திலே என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	12
நீ யார்?	(எ. வீலர் வில்காக்ஸ்)	15
சினிமாவுக் கென்று தனிப் பெயரா?	—	16
டாக்டர் சாமிநாத அய்யர் அவர்கள்	கு. ப. ராஜ கோபாலன்	17
போஸ்ட் ஆபீஸ்	எம். வி. வேங்கடராமன்	19
மேட்டூர் அணை	"பரன்"	27
இபன் அஹமத் அல்லது காதலும் சமயப் பற்றும்	ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யா	33
எல்லோரா சித்திரங்கள்	வி. ராகவேந்திர ராவ் M. A.,	43
சமஷ்டி அரசியலில் சட்ட சபைகள்	கே. வி. ராம சுப்ரமண்யம் B. A. B. L.,	47
முந்நூறு வருஷங்களுக்கு முன்—	"சரித்திரக்காரன்"	51
உறுதிகோள் மகனே!	வ. பார்த்தசாரதி	52
ஜெர்மனியில் ஐந்து வருஷ முன்னேற்றம்	—	56
சுரேந்திர நாத் பானர்ஜி	"ஒரு காங்கிரஸ் வாதி"	57
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	61

மனிதரும் மற்ற உயிர்களும்	ச. முனிஸ்வாமி பிள்ளை	63
போர்க் களத்தில்—	விஞ்ஞான போதகர்	65
கப்பற் றெழில்—புராதன காலத்தில்	வி. நாகேசுவர சாஸ்திரி	73
சர்வாதிகாரிகள் உண்பது எப்படி ?	"சாமி"	75
பெண்ணின் உள்ளம்	வி. தேவாச்சாரியன்	77
பிரான்ஸும் கீழ் நாடும்	மொழி பெயர்த்தவர் ரா. ராம.	79
வரிப்பணம் எப்படிச் செலவழிகிறது ?	—	82
நமது நிருபர்களுடன்—	—	83
உடல் நலம் வேண்டல்	(குழந்தைகளின் அன்பன்)	88
ஸ்ரீ எஸ். சத்திய மூர்த்தி	ரா. வேங்கடராமன் B. A.,	89
நியாயந்தான்	"புதுமைப் பித்தன்"	93
துலாக்கோல்	(புஸ்தக விமரிசனம்)	98
ஜப்பானை பகிஷ்கரிக்க முடியுமா?	பாரி டாம்விலே	99
ஸ்திரீகளின் சமூக அந்தஸ்து	"குயில்"	103
விசுவ விசித்திரம்	—	107
இங்கிலாந்தில் ஜீவகாருண்ய இயக்கங்கள்	க. சரவண முத்து	110
நமது அரசியல் டைரி	—	114
அன்றாட உலகம்	—	116

இந்தியா-சிலோன் நண்பர்களுக்கு

இந்தியா, சிலோன் முதலிய நாடுகளுக்கு முன்னர், "ஜோதி"யின் வருஷ சந்தா 6 ரூபாயாக இருந்தது. இப்பொழுது, இந்தியா-பர்மா தபால் கட்டணக் குறைவு காரணமாக, **4-8-0** ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியாவிலும் சிலோனிலும் உள்ள நண்பர்கள் சந்தாதார்களாகப் பதிவு செய்து கொள்ள நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதல்லவா ?

மானேஜர்

ஜோதி
மே-1938

ஜோதி

சுடர் 1 | மே 1938 | கதிர் 10

தேவை

சமீபத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் நமது உள்ளத்தை நன்றாக உலுக்கி விட்டு விட்டது. அது, நமது பாரத தேசத்தைச் சிறிது நிமிர்ந்து பார்க்கச் செய்திருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால் நமது பொறுப்பையும் அதிகமாக அதை உணரச் செய்திருக்கிறது. மேற்பார்வைக்கு இது மிகச் சிறிய சம்பவம். இதைக் கேட்டவர்கள், 'ஓ! ஒரு சிறு கோப்பையில் ஏன் இவ்வளவு கடுமையான புயற் காற்றைக் கொண்டு விட வேண்டும்' என்று கருதலாம். ஆனால் சிறிய விஷயம் என்று சாதாரண ஜனங்கள் எதைக் கருதுகிறார்களோ, அதுவே மஹான்களுடைய வாழ்க்கையிலே ஒரு மைல் கல் மாதிரி இருந்திருக்கிறது.

பூரி என்பது ஒரிஸா மாகாணத்திலுள்ள ஒரு க்ஷேத்திரம். இதற்கு ஜகந்நாதம் என்றும் பெயர். உலக சகோதரத்துவம் இங்கே பரிபூர்ணமாக நிரம்பியிருப்பதாக ஐதிகம். ஆனால் இங்குள்ள கோயிலுக்குள் ஹரிஜனங்கள் விடப்படுவதில்லை. மகாத்மா காந்தி, தமது பரிவாரங்களுடன் சமீபத்தில் நடைபெற்ற காந்தி சேவா சங்க மகா நாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு ஒரிஸாவுக்குச் சென்றிருந்தாரல்லவா? அப்பொழுது ஜகந்நாத க்ஷேத்திரத்திலுள்ள கோயிலுக்குள் ஸ்ரீ கஸ்தூரிபாய் காந்தியும், ஸ்ரீ மகாதேவ தேசாயின் பத்தினியும், இன்னும் சிலரும் சென்று 'சுவாமி தரிசனம்' செய்து விட்டு வந்தார்கள். இதுதான் சுருக்கமாக நடைபெற்ற விஷயம். ஆனால் இது காந்தியடிகளுக்கு ரத்தக் கொதிப்பு உண்டாக்கி விட்டது. அவருடைய மனத்தில் ஒரு பெரிய சமுத்திரம் கொந்தளிக்கத் தொடங்கி விட்டது. இது வேடிக்கையாக இல்லையா?

மகாத்மா காந்தி, ஹரிஜனப் பணி செய்து கொண்டு வருகிறார். ஹரிஜன இயக்கத்தின் தலைவர் அவர். ஹரிஜனங்களுக்கு எங்கு உரிமைகள் மறுக்கப் படுகின்றனவோ, அங்கு அவரோ, அவரைப் பின் பற்றுவதாகச் சொல்லும் அவருடைய 'சிஷ்யர்'களோ சென்று உரிமைகளை அநுபவிக்கலாமா? அப்படியானால் அவர், உண்மையாகவே ஹரிஜன இயக்கத்திற்குத் தலைவராக இருந்து நடத்த

முடியுமா? சங்கடமான கேள்வி. ஆனால் முக்கியமானது.

இந்த ஒரு சிறிய சம்பவம், காந்தியடிகள் ஒழுக்கத்திற்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார் என்பதை நன்கு காட்டுகிறது. ஒழுக்கம் என்பது என்ன? கற்பு நிலை கெடாமலிருப்பது மட்டுந்தானா? எதிர் மறையிலே இதற்கு இந்தப் பொருளைச் சொல்லித் திருப்தியடையவில்லை பெரியோர்கள். மனிதத் தன்மைகள் என்று எதை எதை நாம் கொண்டாடுகிறோமோ அவையனைத்தையும் ஒரு தொகுதியாகச் சேர்த்து, அத்தொகுதிக்கு ஒரு சிகரம் அமைப்போமானால் அதுதான் ஒழுக்கம். இதனாலேயே உயிரினும் சிறந்ததாக ஒழுக்கத்தைக் கூறினார் திருவள்ளுவர். ஒழுக்கம் என்பது இருதய சுத்தத்தின் பூரணத்துவம்; மானிட வாழ்க்கையின் ஜீவ நாடி; உலகத்தை ஒழுங்காகச் செலுத்திக் கொண்டு போகும் ஒரு சக்தி. இந்த உயர்ந்த நிலையிலிருந்து தான், ஒவ்வொரு சம்பவத்தையும் காந்தியடிகள் கவனிக்கிறார். 1922ம் வருஷம் சௌரி-சௌரா சம்பவம் நடைபெற்று அதன் விளைவாகச் சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தியது முதற் கொண்டு, இந்தியாவின் அரசியல் வளர்ச்சியை நாம் கவனித்துப் பார்த்தோமானால், ஒழுக்கமென்பதனை அரசியலில் கொண்டு புகுத்த காந்தியடிகள் எவ்வளவு முயன்றிருக்கிறார் என்பது நன்கு தெளிவாகும்.

மஹான்கள் யார்? பிறருக்காக உபதேசிப்பவரா? இல்லை. பிறருக்காக வாழ்பவர்; மற்றவர்களுடைய நலத்திலே தன்னலத்தைக் காண்கின்றவர். இவர்களால்தான் உலகத்தைச் சீர்திருத்த முடியும். இவர்களுடைய சொல்லுக்குத்தான் மதிப்புண்டு. அப்படிப்பட்டவர்தான் இந்தியாவுக்குத் தேவை. நார்மன் மாக்லியாட் என்ற ஓர் ஆங்கில அறிஞன் கூறுகிறான்:—

> உயிருள்ள மனிதர்கள் நமக்குத் தேவை. அவர்களுடைய அறிவோ, அவர்களுடைய செல்வமோ நமக்குத் தேவை யில்லை. அவர்களே நமக்குத் தேவை. அவர்களுடைய கண்களில் வழியும் அருளை, ஏழைகள், உணவில்லாதவர்கள், உடையில்லாதவர்கள், திண்டாதவர்கள், மனமுடைந்து போனவர்கள் முதலியோர் பார்க்க வேண்டும்; உணர வேண்டும்; அதிலே சாந்தியடைய வேண்டும்.

இந்த வாக்கியங்கள், காந்தியடிகளைப் பார்த்துச் சொல்லப் பட்டன போலில்லையா? இத்தகைய மகான்கள், தம்மைப்போல், தம்மைச் சுற்றியிருப்போரையும் ஆக்க வேண்டுமென்பதிலே முனைந்து நிற்கிறார்கள். இதற்காகப் பல இன்னல்களை அநுபவிக்கத் தயாராகவும் இவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால், இவர்களுடைய லட்சியமெல்லாம் சத்தியத்திலும் அஹிம்சையிலும் தோய்ந்து நிற்கிறது. காந்தியடிகள் அரசியலில் இறங்கியதும் இந்த லட்சியத்திற்காகத்தான்.

இனி காந்தியடிகளின் வாக்கைச் சிறிது கேட்போம்.

> நாம் செய்து வருகிற நிர்மாண வேலைத் திட்டங்கள் யாவும் சத்தியம், அஹிம்சை இவற்றின் புற விகாசங்கள்தான். இந்த நிர்மாண திட்டங்களை எவ்வளவு தூரம் நிறைவேற்றுகிறோமோ அவ்வளவு தூரம் அஹிம்சை பாதையிலும் சத்திய மார்க்கத்திலும் சென்றவர்களாகிறோம். இது கடைசியில்

சுதந்திரத்தில் நம்மைக் கொண்டு சேர்ப்பிக்கிறது. அஹிம்சையின் பூரண விகாசங்களுள் தீண்டாமையும் ஒன்று. தீண்டாமை ஒழியாவிட்டால் ஹிந்து மதமே அழிந்துவிடுதல் நல்லது என்பது என்னுடைய பிரார்த்தனை. அதுவே உங்களுடைய பிரார்த்தனையுமாயிருக்க வேண்டும். ஹரிஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் நான் ஹரிஜன யாத்திரை செய்தபோது இந்த உண்மையைக் கண்டேன். தீண்டாமை விலக்கில் நம்பிக்கையுள்ளவர்கள், ஹரிஜனங்களுக்கு அநுமதி மறுக்கிற கோயில்களுக்குள் செல்லக் கூடாதென்று நான் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படியிருக்க என் மனைவியும் என் புத்திரிகளும் அப்படிப்பட்ட கோயில்களுக்குச் செல்வார்களானால் அதைநான் எப்படிப் பொறுப்பேன்? அத்தகையகோயில்களுக்குச் செல்லவேண்டாமென்று அவர்களோடு மன்றாடிப் பார்ப்பேன். முழந்தாளிட்டு அவர்களைப் பணிந்து கேட்பேன். என்னுடைய இந்த முறையீடுகள் பலிக்காவிட்டால், அவர்களோடு நான் வைத்துக் கொண்டிருக்கும் உறவை அறுத்துக் கொள்வேன். இந்தக் கொள்கையின் படியே இத்தனை வருஷங்களாக என் வாழ்க்கையை நடத்த முயற்சி செய்து வந்திருக்கிறேன். அப்படியிருக்க, என் மனைவியும், என்னால் என்னுடைய புத்திரிகளென்று கருதப் பெறும் வேறு இரண்டு ஆசிரம வாசிகளும் பூரி கோயிலுக்குச் சென்றார்கள் என்று நான் கேள்விப்பட்டபோழ்து, அவமானத்தினால் தலைகுனிந்தேன். நான் வீழ்ந்து படுவதற்கு இந்தத் துன்பம் போதுமானதாயிருந்தது. வைத்தியர்களின் பரிசோதனை யந்திரம், என் தேகத்தில் ரத்தக் கொதிப்பு அதிகமாக ஏறியிருப்பதாகக் காட்டியது. ஆனால் இயந்திரத்தை விட என் நிலைமையை நான் நன்றாக அறிந்து கொண்டேன். இயந்திரம் காட்டியதை விட நான் கேவலமான நிலைமையில் இருந்தேன். பற்றில்லாமல் இருக்க வேண்டுமென்று கீதை கூறுகிறது. ஆனால் இப்படிப்பட்ட அதிர்ச்சிகளிலிருந்து, தம்மிடத்தில் நெருங்கியவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யாமலிருப்பதால் ஏற்படும் அதிர்ச்சிகளிலிருந்து பராமுகமாக இருக்க வேண்டுமென்பது அதன் அர்த்தமல்ல. பூரி கோயிலுக்குச் சென்றவர்களை நான் குறை கூற மாட்டேன். அவர்கள் அறியாமையினால் சென்றார்கள். ஆனால் அவர்களுடைய தர்மம் இன்னது என்பதை எடுத்துச் சொல்லாமல் இருந்த என்னுடையவும் மஹாதேவ தேசாயினுடையவும் குறை அது. (என்னிடத்தில் நெருங்கிய உறவு பூண்ட அவர்கள்) இங்ஙனம் கோயிலுக்குச் சென்றதனால் சமூகத்தில் என்ன விதமான கொந்தளிப்பு ஏற்படும் என்பதை மஹாதேவ் உணர்ந்திருக்க வேண்டும். பூரி கோயிலுக்குள் சென்று வருமாறு அவர்களுக்கு நான் கூறவில்லை. ஹரிஜனங்கள் எதுவரையில் அநுமதிக்கப் படுகிறார்களோ அதுவரையில் சென்று, அதற்கு மேல் போக மறுத்துத் திரும்பி வந்திருந்தால் அது, ஹரிஜன இயக்கத்திற்குப் பெரிய பிரசாரமாக இருந்திருக்கும்; ஹரிஜனத் தொண்டு செய்ததாகவும் இருக்கும். குப்பை கூட்டு

வதோ, ஹரிஜனங்களோடு சேர்ந்து உண்பதோ, அல்லது அவர்களுக்கு ஆகார மளிப்பதோ போதாது. ஹரிஜனங்களுடைய உபயோகத்திற்கு இடம் பெருத கோயில் முதலிய வற்றிற்கு நாம் செல்ல மறுக்க வேண்டும்.

இந்தவாக்கியங்களிலிருந்துகாந்தியடிகள்செயலுக்குஎவ்வளவுமுக்கியத்துவம் கொடுத்திருக்கிருர்என்பது நன்கு புலனுகிறது. இதுவே இந்தியாவின் புராதன லட்சியமா யிருந்திருக்கிறது. அந்த லட்சியத்தை மீண்டும் நிலை நிறுத்தவே அவர் பாடுபட்டு வருகிருர்.

ஒரு தேசத்தின் பெருமையை எப்படி அளந்து பார்ப்பது? அதன் விஸ்தீரணத்திலுலா? அதன் ஏற்றுமதி இறக்குமதிப் பெருக்கத்திலுலா? இல்லை; இல்லை. அஃது உற்பத்தி செய்கிற மஹா புருஷர்கள் செய்யும் அரிய காரியங்களினுலேயே அது பெருமை யடைகிறது. இந்தியாவை இப்பொழுது வெளி நாட்டார் அறியத் தொடங்கி யிருக்கின்றன ரென்ருல் அது மஹாத்மா காந்தியினுல் தான். காந்தியின் இந்தியாவே தவிர, இந்தியாவின் காந்தியல்ல. வெளிநாடுகளிலே சுற்றுப் பிரயாணம் செய்கிறவர்களுக்குத்தான் இந்தச் சொற்ருடரின் முழு அர்த்தம் தெரியும்.

இந்த ஒரு சிறிய சம்பவம் இந்தியாவின் பொது வாழ்விலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஓர் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையிலே ஒரு விதமாகவும் பொது வாழ்க்கையிலே வேருரு விதமாகவும் இருந்து நடிக்கிறவர்கள் இனி அப்படிச் செய்ய முடியாது. அப்படிப் பட்டவர்களால் இந்தியா முன்னேற்றத்தை அடையமுடியாது. காங்கிரஸுக்கு இப்பொழுது அதிகமான மதிப்பு இருக்கிற தென்ருல் அதற்குக் காரணம், உள்ளும் புறமும் ஒத்த உண்மையாளர்கள் பலர் அதில் இருக்கிருர்கள் என்பதே. எனவே, அரசியல் வாதிகளின் பொறுப்பு அதிகமாகிற தென்று மட்டும் சுருக்கமாக இங்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிருேம்.

மகாத்மா காந்தி, அஹிம்சா தர்மத்தின் மூலமாகத்தான் உலகம் நல்வழிப்பட முடியும் என்று இருதய பூர்வமாக நம்புவதால்தான் அவரை உலகம் போற்றுகிறது. போற்றுவதோடு நில்லாமல் அவரைப் பின்பற்றக் கூடிய காலம் விரைவிலே வரப் போகிறது. மேனுட்டு வல்லரசுகள் ஆயுத பலத்தைக் கொண்டுதான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற பொய் நம்பிக்கையில் ஈடுபட்டு, தலை கால் தெரியாமல் அழிவை நோக்கி ஓடிக் கொண் டிருக்கின்றன. எதற்கும் ஓர் எல்லையுண் டல்லவா? அந்த எல்லையை அவை அடையும் பொழுதுதான், ஆயுத பலத்தின் பயனற்ற தன்மையும், அஹிம்சா தர்மத்தின் சிறப்பும் நன்கு தெரியப்போகின்றன. அன்றுதான், காந்தியடிகள் உலக சிரேஷ்டராகப் போற்றப்படுவார். உலகத்து ராஜ தந்திரிகள் அவர் அடியின் கீழ்ப் பணிந்து நிற்கப்போகிருர்கள். அந்தக்காலம் வெகுதூரத்தில் இல்லை யென்பதை மட்டும் நாம் நன்கு உணர்கிருேம்.

இப்படி நாம் உணர்வதற்கு ஆதாரங்களில்லாமல் இல்லை. மத்திய மாகாண அரசாங்கத்தினர் தொடங்கி யிருக்கும் வித்தியா மந்திரத் திட்டப்படி வார்தாவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் 21–4–38ல் திறக்கப் பட்டது. அப்பொழுது காந்தியடிகள்

பேசியிருப்பதை அன்பர்கள் கவனிக்க வேண்டும்.

ஹிட்லர், சக்தி பலத்தைக் கொண்டு தன் லட்சியத்தை அடையப் பார்க்கிறார். நானோ ஆத்ம பலத்தைக் கொண்டு என் லட்சியத்தை அடையப் பார்க்கிறேன். மேனாட்டு எண்ணங்களை அறவே விட்டு ஒழியுங்கள். கிராம வாசிகளுடன் ஒன்று படுங்கள். அவர்கள வாழ்க்கையை வாழுங்கள். மேனாட்டார் அழிவு தரத் தக்க பயிற்சியையே அளித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் அஹிம்சா தர்மத்தின் மூலம் பயன் பெறத் தக்க பயிற்சியை அளிப்போம்.

இந்தச் சில வாக்கியங்களிலிருந்து நமது நம்பிக்கை வலுப்படுகிறது.

தேசங்கள், தனி மனிதர்களைப் போல் தங்கள் புராதனப் பெருமையிலே பலம் பெறுகின்றன. அந்தப் பெருமை அழிந்து படாமல் காப்பாற்றப் பட வேண்டுமென்ற உறுதியிருந்தால் மட்டும் அந்த நாடு வாழ முடியும். அப்படிப் பட்ட பெருமையிலே நாம் ஒரு காலத்தில் திளைத்திருந்தோம். ஆனால் இடைக் காலத்தில் எவ்வளவோ சிறுமைகள் பட்டோம். அவற்றை நிகழ்கால அநுபவங்களாகக் கொண்டு நாம் எதிர் காலத்தில் எவ்வளவு ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருக்க வேண்டு மென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. நமது புராதனப் பெருமையை நிலை நிறுத்தி அதன் வாயிலாக உலகத்திற்கு வழி காட்ட காந்தியடிகள் முயன்று வருகிறார். அவரை உண்மையிலே பின் பற்றுவோர் இப்பொழுது தேவை. அந்தத் தேவையை நாம் எவ்வளவு விரைவிலே அறிந்து பூர்த்தி செய்கிறோமோ அவ்வளவு நமது நாட்டிற்கும் நல்லது; உலகத்திற்கும் நல்லது.

இந்தச் சந்தர்ப்பத்திலே, காங்கிரஸைத் தூய்மைப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆந்திர தேசத்தில் தோன்றியுள்ள இயக்கத்தை நமது வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம். ஜன நாயக ஸ்தாபனங்களிலே வந்து சேரும் ஊழல்களை யெல்லாம் அகற்றி காங்கிரஸை தூய்மைப் படுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கம். அதாவது, உண்மையானவர்களையே காங்கிரஸில் அங்கத்தினராகச் சேர்ப்பது, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் லஞ்சம் வாங்குதல், மோசடிகள் முதலியன இல்லாமல் பாதுகாப்பது முதலிய வேலைகளை இந்த இயக்கத்தினர் செய்வர் என்று சொல்லப் படுகிறது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எந்த விதமான தேர்தலுக்கும் அபேட்சகராக நிற்க மாட்டார்கள். எந்த விதமான உத்தியோகத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; இப்படிப்பட்டதோர் இயக்கம் ஏற்பட்டதே வருந்துதற்குரியது. ஆனால் உள்ள நிலையை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். காங்கிரஸ் இயக்கத்தில் கல்மஷத்தை உண்டு பண்ணக் கூடியவர்கள் இருக்கவே செய்கிறார்கள். இவர்களை அப்புறப் படுத்துதல் ஒவ்வோர் உண்மைத் தேசாபிமானியி னுடைய கடமையுமாகும். கல்மஷத்தை உண்டுபண்ணக் கூடியவர்களுக்கு மேற்படி இயக்கத் தோற்றமும், காந்தியடிகளின் பூரி சம்பவமும் ஓர் எச்சரிக்கையாயிருக்கட்டும்.

ஸ்ரீ

ஒருவருடைய பெயருக்கு முன்னால், ம-ா-ா-ஸ்ரீ, கனம், ஸ்ரீமான், திருவாளர், உயர் திரு, ப்ரம்மஸ்ரீ முதலிய முகவுரைகள் ஒன்றும் போடாமல் ஸ்ரீ என்ற ஒரே சொல்லை மட்டும் போட்டு அழைப்பது என்று தமிழ் நாட்டிலே தோன்றியுள்ள முயற்சியை நாம் பூரணமாக ஆதரிக்கிறோம். இதில் வட மொழி தென் மொழி வாதமே வேண்டாம். ஸ்ரீ என்பது சுருக்கமாகவும் அர்த்த புஷ்டி யுள்ளதாகவும் இருக்கிறது. இதனோடு, பெயருக்குப் பின்னால், 'அவர்களுக்கு,' 'சமுகத்திற்கு' முதலிய ஒன்றையுமே போடாமல் விட்டு விடுதல் நல்லது.

நல்ல உபயோகத்திற்கு

தர்பங்கா மகாராஜா, மதம், அரசியல் முதலியவற்றில் பரம வைதிகம். இதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. மஹாராஜாக்களாயிருக்கப் பட்டவர்கள் வேறெவ்விதமாக இருக்க முடியும்? ஆனால், இவர் 11-4-38ல் ஹரித்வாரத்தில் கூடிய அகில இந்திய சநாதன தர்ம மஹா சபையின் மகா நாட்டில் தலைமை வகித்துப் பேசிய பேச்சின் ஒரு பாகம் நமக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. கோயில் பணங்கள் வீணாகச் செலவழிக்கப் படுகின்றன வென்றும், இவை, ஆங்காங்கு உடற் பயற்சி சாலைகளை ஏற்படுத்துவதற்கும், ஹிந்து மதத்தைப் பிரசாரஞ் செய்வதற்காக மாணக்கர்களைப் பயிற்சி செய்விக்கும் காலேஜுகளை ஏற்படுத்துவதற்காகவும் உபயோகிக்கப் பெற வேண்டு மென்றும் கூறுகிறார். இது நல்ல யோசனை. நமது பண்டார சந்நிதிகளும் லோக குருக்கள்களும் இது விஷயத்தில் வழி காட்டுவார்களா? 'பகவத் கீதையைப் படித்துமோட்சமடைவதைவிட, பந்து விளையாடி மோட்ச லோகத்தை யடையலாம்' என்று விவேகானந்தர் கூறினார். அதாவது ஆன்ம வலிமைக்கு அடிப்படையா யுள்ளது தேக வலிமை என்ற உண்மையை வலியுறுத்தவே விவேகானந்தர் இங்ஙனம் சொன்னார். ஜனங்களின் தேக பலத்தை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் வேலை யென்று சொல்லாமல், தரும ஸ்தாபனங்களும் இதில் கலந்துழைக்க வேண்டும். குருட்டு நம்பிக்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் ஒன்று கூட்டி மதம் என்ற பெயரால் அழைத்து நாம் இடர்ப்படுகிறோம். நமது பொருளாதாரச் சீர்கேட்டிற்கு இஃதொரு முக்கிய காரணமாயிருக்கிறது. இதனின்று நம்மை விடுதலை பெறச் செய்து, உண்மையான மதத்தை உணர்த்தி, அதன் மூலமாக தேச முன்னேற்ற சக்திகளுடன் நம்மைப் பிணைத்து வைப்பது மதாசாரியர்களின் கடமை. இந்த மதாசாரியர்கள், இன்னும் பல்லக்குகளிலேயே ஊர்ந்து சென்று கொண்டிருந்தால், எங்கேயோ போய் விழவேண்டியதுதான்.

நல்ல முயற்சி

பீஹார் மாகாணக் கல்வி மந்திரி டாக்டர் சையத் மகம்மத், அந்த மாகாணத்தில் உள்ள கல்வி அறியாமையைப் போக்கத் தொடங்கியுள்ள முயற்சி நல்ல பலனைக் கொடுக்க வேண்டு மென்று விரும்புகிறோம். வயது வந்தவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க, பரீட்சார்த்தமாக பாட்னா ஜில்லாவில் எழுபது பள்ளிக்கூடங்கள் திறக்கப் படுமென்றும், ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும், முப்பது பேருக்கு மேல் நாற்பது பேருக்குள்ளாகப் படிக்க ஏற்

பாடு செய்யப் பெறுமென்றும், இவர்களுக்கு புத்தகம், கரும்பலகை முதலியன அளிக்கப்படுமென்றும் அறிவிக்கப் படுகின்றன. இப்பள்ளிக் கூடங்களில் பாடங்கள் போதிக்க, தொண்டர்கள் நியமிக்கப்படுவார்கள். ஐந்து அல்லது ஆறு பள்ளிக் கூடங்களுக்குச் சேர்ந்து, பயிற்சி பெற்ற ஓர் உபாத்தியாயர் இருப்பார். இந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றிகரமாகுமானால், மாகாண முழுவதும் இதனைப் பரப்ப உத்தேசமென்று அறிவிக்கப் படுகிறது. இந்த முயற்சியை மற்ற மாகாண அரசாங்கங்களும் பின் பற்றும் என்று நம்புகிறோம்.

ஏகாதிபத்திய ஹரிஜனங்கள்

தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களுடைய நிலை நமது நாட்டு ஹரிஜனங்களுடைய நிலையைப் போல் இருக்கிறது. இவர்களுடைய நிலை நாளுக்கு நாள் விருத்தியடைவதற்குப் பதிலாக, கேவலமாகிக் கொண்டு வருகிறது. இந்தியா அரசாங்கத்தினரால் நியமனம் செய்யப்பட்ட ஏஜெண்ட்—ஜெனரல், இந்தியர்களுக்கென்று ஒன்றுஞ் செய்ய முடியாதவராயிருக்கிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த ஏஜெண்ட்—ஜெனரல், பலஹீனமானதோர் அரசாங்கத்தின் பிரதிநிதியாயிருக்கிறார். அதனால் அவரால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. பிரபலஸ்தர் என்று ஏற்கனவே பெயர் வாங்கியிருந்த கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரால் கூட ஏஜெண்ட்—ஜெனரல் என்ற முறையில் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. இதேமாதிரிதான் ஸர் கே. வி. ரெட்டி நாயுடுவின் விஷயமும். இந்தியா சுதந்திரம் பெற்றால்தான், வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களுக்கு மதிப்புண்டு என்ற உண்மை, சமீபத்தில் தென்னாப்ரிக்கா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்த சேத் கோவிந்த தாஸின் மேற்கண்ட வாசகங்களினால் நன்கு தெரியவில்லையா?

உண்ணாவிரதம்

எல்லைப்புற மாகாணத்திலேயுள்ள மான்ஸாய் என்ற ஒரு கிராமத்தில் இரண்டு கட்சியினருக்குள் சச்சரவு ஏற்பட்டு சில உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. இதைக் கேட்ட கான் அப்துல் கபார்கான், மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்தார்.

காந்தீயம், இந்தியாவின் வடகோடிப் பிரதேசத்திலே எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கிற தென்பதை இந்தச் செய்தி நன்கு எடுத்துக் காட்டுகிறது.

நற் செய்தி

மனித வாழ்க்கையில் சில லட்சியங்களுக்காக, அநேக நூற்றாண்டுகள் கணக்கில் சீனாவும் இந்தியாவும் ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றைய உலக நிலைமைக்குத் தக்கபடி நாம் இந்த லட்சியங்களை மாற்றியமைத்துக் கொண்டு நமது எதிர் காலத்திற்கு வழி காட்டிகளாயிருக்குமாறு செய்ய வேண்டும். உலக சமாதானத்திற்காகவும் உலகசுதந்திரத்திற்காகவும் இரண்டு நாடுகளும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும், நம்மிரு நாடுகளுமே, ஏதோ தற்காலிக சாதகங்களுக்காக நமது ஆத்மாவை

இழந்துவிடக் கூடாதென்றும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

சீனாவுக்கு அனுதாபஞ் செலுத்தி, பண்டித ஜவஹர்லால் நேரு விடுத்திருக்கும் செய்தியில் ஒரு பாகம் இது.

ஐக்கியம்

ஜெர்மனியோடு ஆஸ்திரியா ஐக்கியப் படுத்தப் பெற்றதைக் குறித்து 10-4-38ல் பொதுஜன வாக்கு எடுக்கப் பெற்றதல்லவா? இதில் வாக்குக் கொடுத்தவர்கள் விவரம் வருமாறு:—

	சாதகம்	பாதகம்
ஜெர்மனியில்	44,431,450	440,899
ஆஸ்திரியாவில்	42,67,819	11,281

அதாவது ஆஸ்திரியாவில் நூற்றுக்குச் சுமார் கால்பங்கினர்தான் ஐக்கியத்திற்கு விரோதமாக வாக்குக் கொடுத்தனர். ஆனால் ஜெர்மனியில் ஏறக்குறைய ஒன்றரை பங்கினர் ஐக்கியத்திற்கு விரோதமாக வாக்குக் கொடுத்திருக்கின்றனர். இதனால் ஜெர்மனியிலேயே ஹிட்லருக்கு விரோதமான எண்ணம் கொஞ்சம் வலுத்து நிற்கிறது என்று சொல்லலாம். ஆனால் இதே வாதத்தை திருப்பியுங் கூறலாமல்லவா? ஹிட்லர், தனது சர்வாதிகாரத்திற்கு விரோதமாக உள்ள எண்ணங்களை அடக்கி விட்டிருக்கிறானென்று சொல்வோருக்கு, நாஜி கட்சியினரல்லாதவர்களும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல உரிமை பெற்றிருக்கின்றனர் என்பதை மேற்படி கணக்கு எடுத்துக் காட்டுகிறதென்று திருப்பிச் சொல்லலாமல்லவா?

வருங்கால சந்ததிகள்

ஸ்பெயின் யுத்தம் 1936ம் வருஷம் ஜூலை மாதம் ஆரம்பித்தது. அது முதல், 1938ம் வருஷம் மார்ச் மாதம் முடிவுவரை, இருதரப்பினரும் ஆகாய விமானங்களிலிருந்து போடும் வெடிகுண்டுகளினால் 10,709 சிறு குழந்தைகள் இறந்துபோயிருக்கின்றன. இவை தவிர, வயது வந்த ஆண்களும் பெண்களும் சுமார் நான்கு லட்சம் பேருக்கு மேல் உயிர்துறந்திருக்கின்றனர். ஏகாதிபத்தியக் கழுகுகள் இன்னும் அந்த நாட்டிலே இரை தேடிக் கொண்டிருக்கின்றன!

ஒப்பந்தம்

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இதாலிக்கும் சிநேக ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அவரோகணமும், முஸோலினியின் ஆரோகணமும் நன்றாகப் பிரதிபலிக்கின்றன. முஸோலினியின் நட்பைச் சம்பாதிப்பதற்காக, எதையும் பலி கொடுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் தயாராயிருக்கிறதென்று இந்த ஒப்பந்தத்தினால் நன்றாகத் தெரிகிறது. எதியோப்பியா ஆக்ரமிப்பை அங்கீகரித்து விட்டதும், ஸ்பெயினில் பிராங்கோவின் ஆதிக்கத்தை அங்கீகரிப்பதும் இந்த ஒப்பந்தத்தினின்று நன்றாக விளங்கி விட்டன. மத்திய தரைக் கடல் ஆதிக்கத்தில் கூட, முஸோலினியின் கைமேலோங்கி நிற்பதை இந்த உடன்படிக்கை அங்கீகரிக்கிறது. எப்படியும் சூயஸ் கால்வாய் வழியையும் செங்கடல்பாதையையும் தங்களுக்குத் தாராளமாக விட்டு விட்டால் போதுமென்ற நிலையில் தான் தற்போதைய பிரிட்டிஷ் ராஜ தந்திரம் நிற்கிறது. ஆனால் இப்படியே விட்டுக் கொண்டு போனால் சர்வாதிகாரத்தின் சாதனைக்கோ அல்லது ஜன நாயகத்தின் சறுக்கலுக்கோ முடிவுதான் எப்பொழுது?

உண்மை

இந்த ஆங்கிலோ-இதாலிய ஒப்பந்தத்தினால் ஓர் உண்மை வெளியாகி

றது. அதாவது சர்வதேச சங்கத்தின் பிரதி நிதித்துவத் தன்மை எப்பொழுதோ காலாவதியாகி விட்டது. எதியோப்பியாவும், ஸ்பெயின் குடியரசு அரசாங்கமும், சர்வதேச சங்கத்தில் அங்கத்தினர்களா யிருந்தாலும், அச்சங்கத்தில் அங்கத்தினரா யில்லாத இத்தலி, ஜெர்மனி முதலிய நாடுகளின் உருட்டல் மிரட்டல்களுக்கு அவை பலியாக வில்லையா? அப்படியானால் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினராயிருப்பவருக்கு என்ன உரிமைதான் இருக்கிறது? வலியார் மெலியாரை வாட்டுதற்கும் வீழ்த்துவதற்கும் சர்வதேச சங்கம் ஒரு கருவியாக வல்லவோ உபயோகிக்கப் படுகிறது? இதில் அங்கத்தினராயிருப்பவர், ஒருவரை யொருவர் கட்டிக் காத்துக் கொள்ள வேண்டுமென்ற விதிகளெல்லாம் காற்றிலே பறக்க விடப் பட்ட பிறகு, சங்கத்தின் உபயோகந்தானென்ன?

ஆத்மாவைப் அடிமைப் படுத்துவதா?

மத்திய மாகாணத்தில் சமீபத்தில் ஸ்ரீ காமத் என்ற ஓர் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர் தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டதை நேயர்கள் அறிவார்கள். அவர் தம்முடைய ராஜீநாமாவின் காரணத்தை விளக்கி இப்பொழுது ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஐ. சி. எஸ். உத்தியோக வருக்கம் எவ்வளவு கௌரவமாக வெளியிலே போற்றப் பட்டு வந்த போதிலுங் கூட, உள்ளே, வெண்மை நிறத்திற்கு அலாதி சலுகை காட்டப் படுகிறதென்பது ஸ்ரீ காமத்தின் அறிக்கையிலிருந்து நன்றாகத் தெரிகிறது.

ஓர் இந்திய ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர், ஒரு ஆரம்பப் பள்ளிக் கூடத்தைத் தொடங்கி வைக்கலாம்; அல்லது கிணறு தோண்டி வைக்கலாம். ஆனால் சம்பிரதாயத்தை மீறி ஒரு சிறிது சென்று விட்டாலும், பலத்த கைகள் அவர் தோள் மீது இறங்கி அவர் திட்டங்களை யெல்லாம் உடைத்தெறிந்து விடுகின்றன.

ஏகாதிபத்திய தேவதையை உபாசிக்கிறவர்களுக்குத் தான், உத்தியோக வருக்கத்தில் சீரும் சிறப்பும் உண்டு என்பதை இந்த வாக்கியங்கள் நமக்கு வலியுறுத்திக் காட்டுகின்றன. இந்த உண்மை பலருக்கும் தெரிந்ததே யாதலினால் இதைப் பற்றி நாம் விரிவாக வியாக்கியானம் செய்து கொண்டு போக விரும்ப வில்லை. ஆனால் ஸ்ரீ காமத்தின் சேவை, இனி, தேசத்திற்குப் பயன்பட வேண்டும். அவருடைய நிர்மாண சக்திகள், தேசத்தின் முன்னேற்ற சக்திகளோடு ஒன்று பட்டு, இந்தியாவின் பெருமையை உயரச் செய்ய வேண்டும். ஸ்ரீ காமத்துக்குச் சரியான உதாரண புருஷர் வழிகாட்ட இருக்கிறார். காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ், ஐ. சி. எஸ். உத்தியோக வருக்கத்தி லிருந்து ராஜிநாமா செய்தவர்தான் என்பது மட்டும் அவர் நினைவிலே இருந்தால் போதும். ஸ்ரீ காமத்தை, சிறை வாசமும் இன்னும் பல இன்னல்களும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தால் அதைப் பற்றி நாம் ஆச்சரியப்பட மாட்டோம். அவரும் ஆச்சரியப்பட மாட்டாரென்று நம்புகிறோம். 'என் ஆத்மாவை அடிமைப் படுத்த நான் விரும்பவில்லை' என்ற ஒரு வாக்கியத்தினால் தமது ராஜீநாமா காரணத்தை ஸ்ரீ காமத் விளக்கி யிருப்பதனால், எதிர் காலத்தில் அவருடைய தேசீய சேவை மிகவும் தூய்மை யுள்ளதாக

வும் அதனால் பிரகாச முடையதாக வும் இருக்கப் போகிற தென்ற நம்பிக்கை நமக்கு வலுப்படுகிறது.

அரசியல் கைதிகள்

பர்மாவிலுள்ள அரசியல் கைதிக ளில் பெரும்பாலோரை விடுதலை செய்ய பர்மா அரசாங்கத்தார் தீர் மானித்திருப்பதைக் கேட்டு மகிழ்ச்சி யடைகிறோம். பொது ஜன நன்மைக் குரிய பல திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரப் போவதற்கு முதற் படியாக இந்தக் கைதிகளின் விடுதலை இருக்குமென்று நம்புகின்றோம். இந் தியாவிலுள்ள எல்லா மாகாணங்களி லும் ஏறக் குறைய எல்லா அரசி யல் கைதிகளும் விடுதலை செய்யப் பட்டிருக்கின்றனர். வங்காளத்தில் பாக்கியுள்ள கைதிகள் விரைவிலே விடுதலை செய்யப் படுவார்களென்று நம்ப இடமிருக்கிறது. ஆகவின், பர்மா அரசாங்கத்தார், இந்த விடுதலை விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்தது பாராட்டத் தக்கது. கொள்கை வேற் றுமை காரணமாகச் சிறையிலே அடை பட்டிருந்தவர்களை விடுதலை செய்து விடுவது ஒரு பெரிய காரிய மல்ல. அவர்களுக்கு, பின்னர் தகுந்த ஜீவன மார்க்கத்தைத் தேடிக் கொடுப் பது அரசாங்கத்தார் கடன்.

கொடி

பீஹார் மாகாண அரசாங்கத்தார் மூவர்ணக் கொடியைத் தேசியக் கொடியாக அங்கீகரித்து விட்டதைக் குறித்து அவர்களை நாம் பாராட்டு கிறோம். தேசியக் கொடிக்கு அர சாங்கதோரணையில் கௌரவம்கொடுத் தது ஒரு விசேஷ சம்பவமில்லை யானு லும், மந்திரிகளின் வரம்பிட்ட அதி காரத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுத்துக் கொண் டிருப்பதைக் குறித்து நாம் சந்தோஷப்பட வேண் டியதுதானே. தேசியக் கொடியின் புனிதத் தன்மையைப் பற்றியோ, அது வணங்கப்பட வேண்டிய அவசி யத்தைப் பற்றியோ நாம் இன்னும் கூறிக் கொண் டிருக்க வேண்டிய தில்லை யல்லவா?

உருக்கமான பேச்சு

வங்காள மாகாணத்திலுள்ள அலி பூர் சிறையில் வதியும் அரசியல் கைதி களை மகாத்மா காந்தி சென்று பார்க் கிற போது, அவர்களிடம் சில வார்த்தைகள் சொன்னார். அவற்றில் கீழ்க்கண்ட வாக்கியங்கள் எவ்வளவு உருக்கமாயிருக்கின்றன பாருங்கள்.

> நான் இருக்கப் போவது இன் னும் கொஞ்ச காலந்தான். நீண்ட நாட்கள் நான் உயிரோடு இருக்கப் போவதில்லை. இருந்தால் ஒரு வரு ஷம் இருப்பேனோ அதற்கு மேல் சில நாட்களோ! ஆனால் இந்த நாட் களில் பெரும் பாகத்தை உங்களு டைய விடுதலைக்காகக் கழிப்பேன் என்பதை மட்டும் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். நான் இறந்து போவதற்கு முன்னர், நீங் கள் விடுதலை பெறுவதை நான் காண வேண்டும்

ஆண்டவனே! உலகத்திற்காக காந் தியடிகளை இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்கச் செய். காந்தியடிகள் இந்த வார்த்தைகளை, ஆழ்ந்து யோசித்துச் சொல்லியிருக்கிறார் என் பது மட்டும் விடுதலை பெறாத அர சியல் கைதிகளின் ஞாபகத்திலிருந் தால் போதுமானது.

ஸர் முகம்மது இக்பால்

இவர் பிரபல உருதுகவி. உலகப்பிரசித்தி பெற்றவர். இவருடைய மூதாதையர்கள் சாப்ரு என்ற பெயர் படைத்த காஷ்மீர பிராமண வமிசத்தைச் சேர்ந்தவர்கள். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள்.

முகம்மது இக்பால் 1877ம் வருஷம் பஞ்சாப் மாகாணத்தி லுள்ள சியால்கோட் நகரத்தில் பிறந்தவர். மேற்படி யூர் ஸ்காட்ச் மிஷன் காலேஜில் இவர் படித்துக் கொண் டிருக்கிற போது பிரபல முஸ்லீம் ஞானியாகிய சையத் மீர் ஹாஸன் என்பவருடைய நட்புக் கொண்டார். இதனால் இஸ்லாமியக்கலையில் அதிகப் பற்றுக்கொள்ள ஆரம்பித்தார். பின்னர் லாகூரில் வந்து ஸர் தாமஸ் ஆர்னல்ட் என்ற ஆங்கிலப் பேராசிரியருடன் நட்புக் கொண்டு ஆங்கில இலக்கியத்திலும் பயிற்சி பெற்றார். பின்னர் எம். ஏ. பரீட்சையில் தேறினார். இந்தக்காலத்திலிருந்தே இவர் உருது கவிகள் பாட ஆரம்பித்தார்.

பிறகு இங்கிலாந்துக்குச் சென்று பல துறைகளிலும் அறிவு பெற்று, லண்டன் சர்வகலாசாலையில் சிறிது காலம் அராபிய பாஷைக்கு ஆசிரியராக இருந்தார். எல்லாம் 32 வயதுக்குள்ளேயே இவ்வளவு புகழும் பெற்றார்.

பின்னர் 1908ம் வருஷம் லாகூருக்குத் திரும்பிவந்து வக்கீல்தொழிலை நடத்த ஆரம்பித்தார். ஆனால் இவர் மனம் பணம் சம்பாதிப்பதில் செல்லவில்லை. கவிஞரல்லவா? 1912-13ம் வருஷம் நடைபெற்ற பால்கன் யுத்தம், பின்னர் நடைபெற்ற ஐரோப்பிய யுத்தம் இவற்றின் விளைவாக, துருக்கி சின்னாபின்னப் படுத்தப்பட்டது. இந்தச் சம்பவங்களெல்லாம் இவர் உள்ளத்தில் பெரிய மாறுதலை உண்டுபண்ணி விட்டன. ஏகாதிபத்தியக் கொள்கையை அறவே வெறுக்கலானார். இது சம்பந்தமாகப் பல பாடல்கள் பாடி யிருக்கிறார்.

1931—32ல் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேஜை மகா நாட்டில் இவர் பிரதிநிதியாகச் சென்றார். 1930ம் வருஷம் அலகாபாத்தில் கூடிய முஸ்லீம் லீக்கின் தலைவராக இருந்திருக்கிறார்.

21-4-38 காலை 5-30 மணிக்கு இவர் லாகூரில் உயிர் நீத்தார். சென்ற சில மாதங்களாகவே தேக அசௌகரியத்துடன் இருந்தார். ஆனாலும் கவி பாடுவதை நிறுத்தவே யில்லை. பிராணன் போவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்னர் இவர் கீழ்க் கண்ட பர்ஷிய பாடலை பாடினார்:—

கவிஞனின் கவி மீண்டும் பாடப் பெறலாம்; அல்லது இல்லை.

ஹெஜாஸிலிருந்து செய்தி வரலாம்; அல்லது இல்லை.

இந்தப் பரதேசியின் வாழ்க்கை முடிந்து விட்டது.

இதைப் போல ஒரு ஞானியை உலகம் மீண்டும் காணலாம்; அல்லது இல்லை.

உலகத்திலே என்ன நடக்கிறது?

இரண்டு சர்வாதிகாரிகளின் சந்திப்பு. ஹிட்லர் மே மாதம் மூன்ருந் தேதியிலிருந்து ஒன்பதாந் தேதி வரை ரோமா புரியில் தங்குவார். அந்த ஒரு வார காலத்தில் இத்தலியின் பெருமையை ஹிட்லருக்கு விளக்கிக் காட்ட வெகு ஆடம்பரமான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. இதற்காக **60** லட்சம் ரூபாய் முஸோலினி செலவழிக்கப் போகிருராம். இது கொஞ்சம் மிகைப் படுத்திச் சொல்வதாயிருக்கலாம். எப்படியோ ஒருவர்க் கொருவர் தங்களுடைய பலத்தைக் காட்டிக்கொள்ள வேண்டியதுதானே!

வெடி மருந்து

வெடித்தால் ?

சிங்கம் ரொம்ப கிழமாப் போயிட்டுது ஸார்! பின்னால் பிடரி மயிரைப் பிடித்திழுக்கிறான் ஒருவன்; இன்னொருவன் நெருப்புப் பற்ற வைக்கிறான். ஆனால் சிங்கமோ வீறாப்பு பேசுகிறது, 'எனக்குப் புதிய பல் முளைக்கட்டும். பாருங்கள் அப்பொழுது உங்களையெல்லாம் என்ன செய்கிறேன்' என்று.

சர்வாதிகாரத்தைக் கொண்டு எவ்வளவு இறுக மூடினலும் என்ன? எரிமலை சும்மா யிருக்குமா?



ஆங்கிலோ-இத்தாலிய ஒப்பந்தம் 16-4-38ல் நிறை வேறியது. சேம்பர்லேன் குயில், சமாதானம் என்று கூவுகிறது. முஸோலினி, ஜபர்தஸ்த் கண்ணியை விரிக்கிருர்.

நீ யார்?

(எ. வீலர் வில்காக்ஸ்)

உலகினிலே இருவகை மாந்தருண்டு.
கூறுவையோ அவர் தான் யாரென்று?
பாவிகளும் ஞானிகளுமோ? இல்லை.
செல்வரும் வறியருமோ? இல்லை.
தலைதாழ்ந்தாரும் தூக்கினாருமோ? இல்லை.
சுகப்பட்டவரோ? துக்கித்தவரோ? இல்லை.
உலகினிலே இரு வகை மாந்தர்தானுண்டு.
அவரே பிறரைக் கைதூக்கி விடுவார்;
  பிறரால் தூக்கப் படுவார்.
எங்குச் சென்றாகிலும் நீர் தூக்கிப் பார்.
இந்த இருவகைப் பிரிவினையே காண்பாய்.
ஒருவர் தூக்குவார்; இருபதின்மர் தூக்கப் படுவார்.
நீ எந்த வகுப்பில் சேர்ந்து சிறப்புறுகிறாய்.
தூக்குவோர் சுமையைக் குறைக்கிறாயா?
தூக்கப் படுவோருடன் சேர்ந்து துன்புறுகிறாயா?

சினிமாவுக் கென்று தனிப் பெயரா?

சினிமாவில் நடிக்கிறவர்கள், தங்களுடைய உண்மையான பெயரை மறைத்து வைத்துக் கொண்டு வேறொரு பெயருடன் தான் தோன்றுகிறார்கள். எல்லாருமே இப்படி யில்லையானாலும், பெரும்பாலோர் இப்படித்தான். இந்திய சினிமா உலகத்திலும், இந்த 'நாகரிகம்' பரவி விட்டது. ஹாலிவுட் 'நட்சத்திரங்'களில் 100க்கு 95 பேர் இந்தப் புனை பெயருடன் தான் சினிமாவில் காட்சி யளிக்கிறார்கள். இதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு, அமெரிக்க செனெட் சபை அங்கத்தினர் ஒருவர் அமெரிக்க அரசாங்கத்திற்கு வருமானத்தை உண்டு பண்ண யோசிக்கிறார். அதாவது சினிமாவுக் கென்று வேறொரு பெயரை வைத்துக் கொள்கிறவர்கள், அந்தப் புனை பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டு மென்றும், இதற்காக ஒரு கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் ஒரு மசோதா கொண்டுவரலாமா வென்று யோசிக்கிறாராம். இந்த மசோதா கொண்டுவரப்படுமோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனாலும், "ஜோதி"யின் சினிமா பிரியர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு, சில முக்கியமான ஐரோப்பிய நடிகர்களுடைய சினிமா பெயர்களும் உண்மைப் பெயர்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

உண்மைப் பெயர்	சினிமா பெயர்
ரிச்சார்ட் வான் மாட்டிமோர் Richard Van Mattimore	ரிச்சார்ட் ஆர்லென் Richard Arlen
ஜார்ஜ் ஆர்லிஸ் ஆண்ட்ரூஸ் George Arliss-Andrews	ஜார்ஜ் ஆர்லிஸ் George Arliss
ப்ரெடரிக் ஆஸ்டர்லிட்ஸ் Frederick Austerlitz	ப்ரெட் ஆஸ்டேர் Fred Astaire
லூஸில்லே லங்காங்கே Lucille Langhanke	மேரி ஆஸ்டர் Mary Astor
ஜான் ப்ளித் John Blyth	ஜான் பாரிமோர் John Barrymore
லைனல் ப்ளித் Lionel Blyth	லைனல் பாரிமோர் Lionel Barrymore
இஸ்ஸி இட்ஸ்கோவிட்ஸ் Izzy Itskowitz	எட்டி காண்டர் Eddie Cantor
சார்லஸ் எட்வர்ட் ப்ராட் Charles Edward Pratt	போரிஸ் கார்லோப் Boris Karloff
ப்ரெடரிக் மக்கிண்டைர்-பிக்கெல் Frederic Mc Intyre Bickel	ப்ரெடெரிக் மார்ச் Frederic March
ம்யூனி வீஸன் ப்ரூண்ட் Muni Weisenfreund	பால் ம்யூனி Paul Muni
அப்போலோனியா சாலுபெக் Appollania Chalupec	போலா நெக்ரி Pola Negri
ராமோன் சாமானிகோஸ் Ramon Samaniegoes	ராமோன் நோவாரோ Ramon Novarro
க்ளாடிஸ் ஸ்மித் Gladys Smith	மேரி பிக்போர்ட் Mary Pickford

டாக்டர் சாமிநாத அய்யர் அவர்கள்

—கு. ப. ராஜகோபாலன்

ஸ்ரீ ராஜகோபாலன், தமிழிலக்கிய உலகத்திற்குப் புதியவரல்லர். பழமைக்குப் புதிய ஆடை அணிவித்துப் பார்ப்பதிலே ஆர்வமுடையவர். அதனால்தான் முதுமையிலே இளமையோடு திகழும் ஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்களைப்பற்றி இந்த முதல் கட்டுரையில் எழுதியிருக்கிறார். மிகச் சுருக்கமானதுதான். ஆனால் எப்படி விரிவாக எழுதமுடியும்? கர்ரன்ஸி ஆபீசில் அதிகமான ரூபாய்களை எடை போட்டுத்தான் மொத்தம் மொத்தமாகக் கணக்கிட்டு விடுகிறார்களே தவிர, ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டிருப்பதில்லை யல்லவா? அதைப்போல ஸ்ரீ ஐயரவர்கள் ஒரு நிதி. அதனை மொத்தமாகத் தானே நிறுத்து பார்க்க முடியும். அதனால் தான் நண்பர் ராஜகோபாலன் சுருக்கமாக எழுதியிருக்கிறார்.

மூன்று வருஷங்களுக்குமுன் ஒரு நாள் பிற்பகல் திருச்சினாப்பள்ளி தேசியக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஸாரநாதன் அவர்களின் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருந்தேன். வகுப்பில் பிரசங்கம் செய்துவிட்டுத் திரும்பியவர், பெருத்த தலைப்பாகையும் கருத்த 'லாங் கோட்டு'ம் அணிந்த பெரியார் ஒருவருடன் உள்ளே நுழைந்தார். ஸ்ரீ ஸாரநாதன் என்னை, தன்னுடைய பழைய மாணவனென்று அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். நான், அவர், டாக்டர் சாமிநாத அய்யர் என்று அறிந்தேன்.

டாக்டர் ரொம்ப பரிவுடன் என்னைப்பற்றிப்பல கேள்விகள் கேட்டார். அது நான் தமிழ் இலக்கியத்தில் அவ்வளவாக ஈடுபடாத காலம். ஆகையால் அந்த முதல் பரிசயம் முதிர சந்தர்ப்பம ஏற்படவில்லை.

அன்று மாலை, கல்லூரியில், ஸ்ரீ சாமிநாதய்யர் அவர்கள் தமது குரு ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையைப்பற்றிப் பேசினார். தாக்ஷிணாத்திய கலா நிதியாகிய அவர் பேசுவது வெறும் செந்தமிழாக இருக்குமோ என்று அஞ்சியிருந்தேன். ஆனால் அவர், தான் 'கண்டதையும் கேட்டதையும்' எடுத்துச் சொன்ன நடையின் தெளிவு

வர்ஜீனியா மாக் மாத் Virginia Mc Math	ஜிஞ்சர் ரோகர்ஸ் Ginger Rogers
ப்ராங் ஜே. கூப்பர் Frank J. Cooper	காரி கூப்பர் Gary Cooper
மேரி மக்டலெனெவான் லோக்ஷ் Mary Magdalenevon Loch	மார்லேனே டீட்ரிக்ஷ் Marlene Dietrich
டக்ளாஸ் உல்மான் Douglas Ullman	டக்ளாஸ் பேர்பாங்க்ஸ் Douglas Feirbanks
க்ரெட்டா குஸ்டோப்ஸன் Greta Gustoffson	க்ரெட்டா கார்போ Greta Garbo
லவ்ரா கெய்னர் Laura Gainor	ஜானெட் கெய்னர் Janet Gaynor
அஸா யோயெல்ஸன் Asa Yoellson	அல் ஜால்ஸன் Al Jolson

என்னை பிரமிக்கச் செய்துவிட்டது. அந்தப் பிரசங்கத்தின் நினைவு இன்னும் என் மனதிலிருக்கிறது.

இப்பொழுது அவருடைய நூல்களைப் படிக்கும்பொழுது நடையில் அதே தெளிவையும் தேர்ச்சியையும் நயத்தையும் காண்கிறேன். பேசுகிறது போலவே எழுதுகிறார். தமிழ்ப் புலமையின் பழுத்த பழமாகிய டாக்டர் இப்படிப் பேசுவதும் எழுதுவதும் பண்டித பரம்பரை முறைக்கு நேர் விரோதமானதல்லவா? இந்த எளிய நடை தான் அவருடைய எழுத்துக்களுக்கு சாசுவதமான இலக்கிய ஸ்தானம் அளித்து விட்டது. ஆங்கிலத்தில் கார்டினல் நியூமான் எழுதுவது போல இவர் தமிழில் எழுதுகிறார் என்று அன்று ஸ்ரீ ஸார நாதன் சொன்னார்.—சந்தேகமில்லை.

டாக்டர் சாமிநாத அய்யரின் நூலாராய்ச்சித் திறமையைப் பற்றி எதுவும் சொல்ல எனக்குத்தேர்ச்சி கிடையாது. ஆனால் அவருடைய எழுத்தில் காணப்படும் தனிச் சிறப்பே யாருக்கும் இன்பம் கொடுப்பதாக இருக்கிறது. கட்டுரை என்னும் இலக்கியப் பகுதியின் ஒரு அம்சமாகிய ஆராய்ச்சி வியாசம் அவர் கையில் தான் முதல் முதலாகத்தமிழ் மொழியிலேயே பதனடைந்து தென்படுகிறது. நடைமுதல் தமிழில் வசன நடையின் அபிவிருத்தியில் ஓர் பெரும் பங்கைப் பெற்று லட்சிய உருவங்களாகத் துலங்குகின்றன அவருடைய கட்டுரைகள்.

உதாரணயாக, கோபால கிருஷ்ண பாரதியைப் பற்றி அவர் எழுதியிருக்கும் நூல் நல்ல இலக்கிய மணம் பெற்றது. சங்கீத சாகித்திய சம்பந்தமான அநேக சமீப காலத்து நிகழ்ச்சிகளை அவர் எழுத்தில் நிரந்தரமாக்கி விட்டார். அதிலும் கோபால கிருஷ்ண பாரதியின் ஜீவியத்தைப் பற்றி அவர் கொடுக்கும் குறிப்புகளும் முக்கியமாக அவருடைய உடலமைப்பைப் பற்றிய அரிய சித்திரமும் மிகவும் அருமையானவை. அவர் சொன்னாலன்றி என்றைக்கும் காண, கேட்கக் கிடைக்காத அநேக இலக்கிய சம்பவங்களையும் செய்திகளையும் நாம் எந்த நாளும் படித்துக் களிக்கும் படி தன் மாசற்ற எளிய நடையில் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

இப்பெரியாரின் வாக்கு, கட்டுரையில் தான் பூரணப் பொலிவு பெற்று விளங்குகிறது. அதே காரணத்தால் உயிர் வாழும் தமிழ் எழுத்தாளர்களிடையே முதன்மை ஸ்தானம் வகிக்கிறார்.

பழைய தமிழ் இலக்கிய நூல்களை விளக்கி எடுத்துக் கொடுத்த தொண்டினால் இவர் தமிழ், மறு மலர்ச்சி இயக்கத் திற்கே எப்பேர்ப் பட்ட உரம் ஏற்றியிருக்கிறார் என்பது காலம் போகப் போகத்தான் தெரியும்.

மற்றொரு மிகவும் முக்கிய விஷயமென்ன வெனில் இப்பெரியார், தமிழ்ப் பண்டிதர்களின் பிரதமராயிருந்து கொண்டு நவீன முறை தமிழ் எழுத்தாளர்களுக்கும் அவர்களுக்கும் ஒரு இணைப்புச் சங்கிலியாக இருக்கிறார். அவர் வழியைப் பின்பற்றி பண்டிதர்கள் தங்கள் தமிழ் நடையைக்கையாண்டு, புது எழுத்தாளர்களுடன் கை கோத்துக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு உதவுவார்களாக!

போஸ்ட் ஆபீஸ்

'தூமகேது'
குஜராத்தியில் எழுதியது.

—எம். வி. வேங்கடராமன்
ஹிந்தி மூலம் மொழி பெயர்த்தது

நேற்றிரவு ஆகாயத்தில் புகைந்து கொண்டிருந்தது. இன்று அங்கு ஒரே நக்ஷத்திர மயமாக இருந்தது. சிறிய, பெரிய தாரகைகள், மனித வாழ்க்கையில் இனிமை நினைவுகள் பிரகாசிப்பது போல், 'எடுப்பாக' ஒளி விட்டுக்கொண்டிருந்தன. குளிர் காலம்; பனிக் காற்றின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக, கிழிந்து கந்தலாயிருந்த தன் போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்டே பட்டணத்தின் மத்ய பாகத்து வழியாகப் போய்க் கொண்டிருந்தான் ஒரு கிழவன். சுதந்திர வாழ்க்கை நடத்தும் பலர் வீட்டிலிருந்து இந்தச் சமயத்தில், மணியின் இனிய ஒலியும் பெண்மணிகளின் தணிந்த குரலும் கலந்து, அவனோடு கூடவே வந்து கொண்டிருந்தன. நாய்களின் குலைப்பு, சீக்கிரம் விழிக்கும் வழக்கமுள்ள யாராவது ஒரு மனிதனின் காலடிச் சப்தம், அல்லது அகாலத்தில் விழித்துக் கொண்ட ஏதாவது ஒரு பக்ஷியின் குரல் எடுப்பு, இவைகளைத் தவிர மற்றபடி எங்கும் சாந்தி; அமைதி. ஜனங்கள் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். குளிரால் இரவு ஆழ்ந்துக் கொண்டிருந்தது. சீத காலக் குளிர், கூர்மையான அஸ்திரத்தைப் போல் பாய்ந்துப் பாய்ந்து தன் அதிகாரத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. கிழவன் நடுங்கிக் கொண்டு, சாந்தமாகக் காலடி எடுத்து வைத்துக் கொண்டே, பட்டணத்து 'கேட்'டைத் தாண்டி வந்தான். நேராக ஒரு பாதை சென்று கொண்டிருந்தது. தன்னுடைய பழைய கம்பைப் பிடித்துக் கொண்டு அந்த தெருவில் நடக்க வாரம்பித்தான்.

ஒரு புறம் விருக்ஷங்களின் வரிசை; இன்னொரு புறம் பட்டணத்துப் பூங்கா. இங்குக் குளிர் அதிகம். இரவு சோர்வு கொடுப்பதாயிருந்தது. காற்றும் கடுமையாக அடித்தது. சுக்கிர நக்ஷத்திரத்தின் மெலிந்த, இனிய ஒளி பனிபோல் பரவி யிருந்தது. தோட்டத்தின் முடிவில் புது மாதிரியாகக் கட்டப்பட்ட ஆடம்பரமான மாளிகை ஒன்று. மூடப்பட்டிருந்த அதனுடைய ஜன்னல்களிலிருந்தும் வாசலிலிருந்தும் விளக்கின் ஒளி வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

பக்தனுக்குக் கோயில் சிகரத்தைக் கண்டதும் ஆனந்தம் பொங்குமே, அதுபோல் அந்த மாளிகையின் 'ஆர்ச்'சைப் பார்த்ததும் கிழவன் பூரித்து விட்டான். 'ஆர்ச்' மீது ஒரு பழைய 'ஸைன் போர்ட்'. அதில் புதிதாக வர்ணம் தீட்டின அக்ஷரங்களில், 'போஸ்ட் ஆபீஸ்' என்று எழுதி இருந்தது.

கிழவன் 'போஸ்ட் ஆபீஸி'ற்கு வெளியே திண்ணை மீது உட்கார்ந்து கொண்டான். உள்ளே யிருந்து விசேஷமான சப்தம் ஒன்றும் வரவில்லை. வேலையில் ஈடுபட்ட நாலைந்து பேர் பேசிக் கொள்ளும் சாதாரண ஒலி கேட்டது.

'போலீஸ் ஸூபரின் டென்டென்ட்!'— என்று உள்ளே யிருந்து

ஒரு குரல் கூவியது. கிழவன் திடுக்கிட்டான்; ஆனால் மறுபடியும் சாந்தமாகி உட்கார்ந்து கொண்டான். நம்பிக்கையும், அன்பும் இந்தக் குளிரிலும் அவனுக்கு உஷ்ணம் கொடுத்துக் கொண்டிருந்தன.

உள்ளே யிருந்து குரலுக்குப் பின் குரல் வரத் தொடங்கியது. 'ஸார்டர்' ஆங்கிலக் கடிதங்களின் விலாஸங்களைப் படித்துப் படித்து போஸ்ட் மேனின் பக்கம் எறிந்து கொண்டிருந்தான்.

கமிஷனர், ஸுபரின்டென்டென்ட், திவான், லைப்ரேரியன்—இப்படியே ஒன்றன் பின் ஒன்றாகப் பெயர்களைப் படிப்பது ஸார்டருக்கு வழக்கமான வேலை. தங்கு தடை யில்லாமல் வேகம் வேகமாகக் கடிதங்களை விட்டெறிந்து கொண் டிருந்தான் அவன்.

திடீரென்று உள்ளே யிருந்து கேலி நிறைந்த ஒரு குரல் எழுந்தது— 'கோச்வான் அலீபாபா!'

கிழவன் எழுந்து நின்றான். சிரத்தையுடன் வானத்தை ஒரு முறை பார்த்தான். நகர்ந்து கதவின் மீது கை வைத்தான்.

'கோகுல்!'

'யார்?'

'என் கடிதந்தானே?—நான் வந்திருக்கிறேன்!' பதிலுக்கு, பரிகாசம் கலந்த சிரிப்பு எழுந்தது.

'ஸார், இவன் ஒரு பித்துக்குளி; கிழவன்; தினம் கடுதாசி, கடுதாசி என்று வந்து வசவு வாங்கிக் கொண்டு போகிறான்' என்று ஸார்டர், போஸ்ட் மாஸ்டரிடம் விஷயத்தை விளக்கினான். கிழவன் மறுபடியும் தன் யதாஸ்தானத்திற்குப் போய் உட்கார்ந்தான். ஐந்து வருஷங்களாக அதே இடத்தில் உட்கார்ந்து, உட்கார்ந்து அவனுக்குப் பழக்கமாகி விட்டது.

முன்பு அலீ ஒரு ஷிகாரி; நல்ல புத்திசாலி. வேட்டை யாடுவதென்றால் கன குஷி அவனுக்கு. அபினி சாப்பிடுகிறவனுக்கு, அபினி இல்லாமல் நாள் போகாது என்பார்கள். அலீக்கு வேட்டை யில்லா விட்டால் பொழுது போகாது; அத்தனை டைத்தியம். புழுதியோடு மறைந்து கிடக்கும் கவுதாரியின் மீது அலீயின் கண்கள் பட்டால் போதும்; தீர்ந்தது! அவனுடைய கூரிய பார்வை முயலின் பொந்துக்குள்ளும் பாயும். சுற்றுப்புற நிலங்களில் தன்னை மறைத்து கொண் டிருக்கும் முயலை வேட்டை நாய் பாராதிருந்து விட்டாலும் இருந்து விடும்; முயல் தப்பித்துவிடும்; ஆனால் இதாலி தேசத்துக் கழுகு போல் தீக்ஷண்ய மானது அலீயின் பார்வை. கணக்காக, முயலின் காதுகள் மீது பாயும் அவன் கண்கள்; மறுகணம், முயல் பிணமாகிக் கிடக்கும். சில சமயம், அலீ செம்படவர்களோடு சேர்ந்து போவதுண்டு.

வாழ்க்கையின் மாலை நெருங்க வாரம்பித்ததும், அந்த ஷிகாரி திடீரென்று வேறு பக்கம் திரும்பி விட்டான். அவனுடைய ஒரே பெண் மரியம் கலியாணமாகிப் புக்ககம் சென்றாள். அவனுடைய மாப்பிள்ளைக்கு சேனையில் வேலை. ஆகையால் மரியம் தன் கணவனோடு பஞ்சாபுக்குப் போய் விட்டாள். ஐந்து வருஷமாகிறது அவள் போய். அவளைப் பற்றி ஒரு தகவலையும் காணோம். அவள் அலீயினுடைய ஜீவன். இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது அன்பும் விரகமும் என்ன வஸ்துக்கள் என்று. முன்பெல்லாம் கவு

தாரிக் குஞ்சுகள் பயந்து கலைந்து ஓடு வதைக் கண்டு சிரிப்பது அவன் வழக் கம். அதில் அவனுக்கு—வேட்டைக் காரனுக்கு ஆனந்தம்.

வேட்டையின் ஆனந்தம் அவனு டைய ஒவ்வொரு நரம்பிலும் பரவி யிருந்தது. ஆனால் மரியம் போன நாள் முதற் கொண்டு அவனுக்கு வாழ்க்கை சூன்யமாகப் புலப் பட வாரம்பித்தது. அன்றிருந்து அலீ வேட்டையாடுவதில்லை. 'வெறித்து' நிலைத்த பார்வை செலுத்தி தானியம் விளைந்திருக்கும் பச்சை வயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பது அவ னுக்கு வழக்கமாகி விட்டது! அவ னுடைய வாழ்க்கையில் முதல் முறை யாக இப்போதுதான் பிரகிருதியில் அன்பின் சிருஷ்டியும், விரகக் கண் ணீரும் இருப்பது அவனுக்குத் தெரிய வந்தது! பிறகு ஒருநாள் அலீ ஒரு பலாச மரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு மனதை விட்டு அழுதான். அன் றிருந்து காலை நாலு மணிக்கு எழுந்து இந்த போஸ்ட் ஆபீஸுக்கு வரு வது அவன் வழக்கம். அவன் பெயருக் குக் கடிதம் வருவதேயில்லை. ஆனாலும் மரியம் கட்டாயம் எழுதுவாள் என்ற நம்பிக்கை; நம்பிக்கையால் சந்தோ ஷம்; சிரத்தையோடு பக்தனைப் போல் தினம் தவறாமல் எல்லாருக் கும் முந்தி அங்கு வந்து உட்கார்ந்து விடுவான்.

போஸ்டாபீஸ், உலகிலேயே மிக வும் ரஸமற்ற ஓரிடமோ என்னவோ! ஆனால் அதுவே அவனுக்கு தர்ம க்ஷேத்திரம், தீர்த்த ஸ்தானம் ஆகி விட்டது. ஒரே இடத்தில் ஒரே மூலை யில் அவன் உட்காருவது வழக்கம். அவனுடைய நிலையை அறிந்து எல் லாரும் அவனைப் பரிகசிப்பது வழக் கம். வாஸ்தவத்தில் அவனுக்குக் கடி தம் வந்திராவிட்டாலும், வந்திருக் கிறது என்று சொல்லி போஸ்ட் ஆபீ ஸின் வாசல் வரை அவனை ஓட்டி வேடிக்கை பார்ப்பார்கள். அவனு டைய சிரத்தைக்கும் தைரியத்திற் கும் எல்லையும் முடிவும் இல்லை; இல் லாவிட்டால் தினம் இங்கே வந்து வெறுங்கையுடன் திரும்புவானா?

அலீ உட்கார்ந்திருந்தான். தங் கள் யஜமானர்களுடைய கடிதங்களை எடுத்துக் கொண்டு போக சேவகர் கள் வந்து குவியத் தொடங்கினார்கள். இந்த இருபதாவது நூற்றாண்டில் வேலையாட்களும், ஆபீஸர்களின் மனை விகளும்தான் வீட்டு நிர்வாகஸ்தர் கள். ஆகையால் பட்டணத்தில் இருக் கும் எல்லா ஆபீஸர்களின் வீட்டு இதிகாசங்கள் தாராளமாகப் படிக் கப் பட்டன.

ஒருத்தன் தலைமீது முண்டாசு; இன்னொருத்தன் கால்களில் பளிச் சிடும் 'பூட்ஸ்'. இப்படி ஒவ்வொரு வருக்கும் தனித்தனி அலங்காரம்; தொழில் குறி. திடீரென்று கதவு திறந்தது. விளக்கொளியில் தும்பைப் பூபோல் வெளிறிய தலையுடனும், நிரந்தரமான துக்கம் குடிகொண்ட முகத்துடனும் காக்ஷி யளித்தார் போஸ்ட் மாஸ்டர். நெற்றி, முகம், அல்லது கண்களில் தேஜஸே இல்லாத ஆளைப் பார்த்திருக்கிறீர்களா? அவன் கோல்டுஸ்மித்தின் 'வில்லேஜ் ஸ்கூல் மாஸ்டர்' (Goldsmith's 'The Village School Master) அல்லது இந்தயுகத்து கிளர்க் அல்லது போஸ்ட் மாஸ்டராகத்தான் இருக்க வேணும்!

அலீ தன் இடத்திலிருந்து அசைய வில்லை.

'போலீஸ் கமிஷனர்' என்று கூவி னான் கிளர்க். மிடுக்குடன் ஒரு வாலி

பன் கைகளை நீட்டினுன், கமிஷன ரின் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள.

'ஸுபரின்டென்டென்ட்'.

இன்னொரு சேவகன் முன் வந்தான். இப்படியே இந்த ஸஹஸ்ர நாமாவளியை விஷ்ணு பக்தன் போல் பாராயணம் செய்து ஸார்டருக்கு வழக்கம்.

கடைசியில் எல்லோரும் போய் விட்டார்கள். அலீ எழுந்தான். போஸ்ட் ஆபீஸை குனிந்து ஒரு முறை வணங்கி விட்டு நடந்தான், அதில் ஏதோ சமத்காரம் இருப்பது போல். ஒரு தூற்றுண்டுக்கு முந்தின பட்டிக் காட்டான்!

'இவன் பித்துக்குளியா, என்ன?' என்று கேட்டார் போஸ்ட்மாஸ்டர்.

'யார்?—அலீயா? ஆம், ஐயா! ஐந்து வருஷமாக கடுதாசு, கடுதாசி என்று இங்கே வருகிருன். வெயில் காய்ந்தாலும் சரி, மழை பெய்தாலும் சரி. இவனுக்குக் கடிதம் வந்ததே யில்லை' என்று பதில் அளித்தான் கிளர்க்.

'வேலை மெனக்கட்டு, எப்பவும் எவன் கடிதம் எழுதிக் கொண்டிருப் பான்?'

'இவனுக்கு ஒரு 'ஸ்குரு லூஸ்'. முன்பெல்லாம் ரொம்ப அக்கிரமம் செய்து கொண்டிருந்தான். ஒரு தடவை தெய்வ ஸ்தானத்தில் ஏதோ பாவம் செய்து விட்டான். அதன் பலனை அனுபவிக்கிருன்!' என்ருன் போஸ்ட் மேன்.

'பித்துக் குளிகள் ரொம்ப வேடிக் கைப் பேர்வழிகள்!'

'ஆமாம்; ஆமதாபாத்திலே ஒரு பைத்தியத்தைப் பார்த்தேன். நாள் முழுக்க மணலைக் குவித்துக் கொண் டே இருக்கும்; வேறே ஒன்றும் செய் யாது. சாயங்கால வேளையிலே ஒரு கல் மேலே தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கும் இன்னொரு பைத்தியம்!'

'இதைக் கேள் ஐயா, நாள் முழு வதும் ஊர் சுற்றிக் கொண்டே யிருக் கும் ஒரு பைத்தியம்! இன்னொரு பித் துக் குளி ஒரே பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடுவான்! இன்னுமொரு பைத்தியத்தைப் பார்த்திருக்கிறேன்; தன் கன்னத்தில் தானே அறைந்து கொண்டு விடும்; வேறே ஆள்கள் அடித்து விட்டதாக நினைத்து கொண்டு அழ ஆரம்பித்து விடும்!'

இன்று போஸ்ட் ஆபீஸில் பித்துக் குளிகள் புராண பாராயணம்! எப் போதும் இந்த மாதிரி ஏதாவது ஒரு விஷயத்தை ஆரம்பித்து, அதைப் பற்றி பத்து பதினைந்து நிமிஷங்கள் பேசிக் களிப்பது எல்லா வேலையாட் களுக்கும் பழக்கமாகி விட்டிருந்தது. குடிப் பழக்கம் போல் விடாத பழக் கம். கடைசியில் போஸ்ட் மாஸ்டர் எழுந்து நின்ருர். நடந்து கொண் டே சொன்னர், 'இந்தப் பைத்தியக் காரர்களின் உலகமே அலாதி! இவர் கள் நம்மைப்பைத்தியம் என்று நினைத் துக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை இவர்களுடைய திருஷ்டி, கவியின் திருஷ்டியைப் போல இருக்குமோ என்னவோ?' கடைசி சொற்களைக் கூறும் போது போஸ்ட் மாஸ்டர் குறும்பாகச் சிரித்து விட்டுப் போய் விட்டார். ஒரு கிளர்க் ஒய்வு கிடைக் கும் சமயத்தில் கவிதைகளைப் புனை வது வழக்கம். அதற்காக எல்லாரும் அவனைக் கேலி செய்வார்கள். போஸ்ட் மாஸ்டரும் அதற்காகவே குறும்புச் சிரிப்புடன் அவனைப்பார்த்த

வண்ணம் அப்படிக்கூறினர். போஸ்ட் ஆபீஸில் முன் போலவே அமைதி குடி கொண்டது.

ஒரு முறை கிழவன் அலீ, இரண்டு மூன்று நாள்கள் சேர்ந்தாற் போல் வரவில்லை. அலீயின் ஹிருதயத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய ஸஹானுபூதி நிறைந்த விசால திருஷ்டி போஸ்ட் ஆபீஸில் யாருக்குமில்லை. ஆனால் அவன் ஏன் வரவில்லை என்று அறிய எல்லாருக்கும் ஆவலாயிருந்தது. பிறகு ஒரு நாள் அலீ வந்தான். ஆனால் அன்று அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் முகத்தில் வாழ்க்கை மாலையின் தெளிவான சின்னங்கள் காணப்பட்டன.

இன்று அலீயின் தைரியம் குன்றி விட்டது. போஸ்ட் மாஸ்டரிடம் கேட்டான், 'ஐயா, என் மரியத்திடமிருந்து கடிதம் வந்ததா?'

போஸ்ட் மாஸ்டருக்கு அன்று கிராமத்துக்குப் போக வேண்டிய அவசரம். இந்தப் புதுக் கேள்விக்குப் பதிலளிக்கும் சாந்தமான நிலைமையில் இல்லை அவர் மனது.

'நீ என்ன மனுஷ்யன் என்று தெரியவில்லை!'

'என் பெயர் அலீ!' என்று சம்பந்தமில்லாத பதிலளித்தான் அலீ.

'உன்னுடைய மரியத்தின் பெயரை இங்கே எவனாவது எழுதி வைத்திருக்கிறானா?'

'எழுதி வைத்துக் கொள்ளுங்கள் ஐயா! நான் இல்லாத சமயம் கடுதாசி வந்து விட்டால் வீணாக நீங்கள் சிரமப் பட வேண்டியிருக்கும்.'

வாழ்க்கையின் பெரும் பகுதியை வேட்டையில் கழித்தவனுக்கு, மரியம் என்ற பெயர், அவள் தகப்பனைத் தவிர மற்றவர்களுக்கு ஒரு காசு கூடப் பொறாது என்று எப்படித் தெரியும்'?

போஸ்ட் மாஸ்டருக்குக் கோபம் வந்து விட்டது. 'உனக்குப் பைத்தியமா என்ன? போ வெளியே! உன் கடுதாசி வந்தால் யாரும் சாப்பிட்டு விட மாட்டார்கள்!'

போஸ்ட் மாஸ்டர் சீக்கிரம் போய் விட்டார். அலீ மெதுவாக வெளியே வந்தான். வெளியே வந்ததும் திரும்பி ஒரு முறை போஸ்ட் மாஸ்டரின் பக்கம் பார்த்தான். இன்று அவன் கண்களில் அனுதைகளைப் போல் நீர் துளிர்த்திருந்தது; சிரத்தை இருந்தது; ஆனால் தைரியம் தணிந்து விட்டது. ஐயோ! இனி மரியத்தின் கடிதம் எப்படிக் கிடைக்கும்?

ஒரு கிளார்க் அவன் பின்னால் வருவது தெரிந்தது. அலீ அவன் பக்கம் திரும்பினான்.

'தம்பி!'

கிளார்க் திடுக்கிட்டான். அவன் நல்ல மனுஷ்யன்.

'ஏன்?'

'இதைப் பார்!' என்று விட்டு தன்னிடமிருந்த ஒரு பழம் பெட்டியிலிருந்து ஐந்து 'கினி'களை வெளியில் எடுத்தான். கிளார்க் திடுக்கிட்டு விட்டான்.

'திடுக்கிடாதே. இவை இருந்தால் உனக்கு ரொம்ப ஒத்தாசையாயிருக்கும். எனக்கு இவைகளால் பிரயோஜனமேயில்லை. ஆனால் ஒரு வேலை செய்வாயா?

'என்ன?'

மேலே அங்கே என்ன தெரிகிறது. அலீ ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினான்.

'ஆகாயம் !'

'மேலே அல்லா இருக்கிறார். அவரைச் சாக்ஷியாக வைத்துக்கொண்டு உனக்கு இந்த கினிகளைக் கொடுக்கிறேன். என் மரியத்துடைய கடிதம் வந்தால் என்னிடம் சேர்ப்பித்து விட வேண்டும் !'

கிளர்க் ஆச்சரிய மடைந்து நின்றுவிட்டான். 'எங்கே, எங்கே சேர்க்க வேண்டும் ?'

'என் கல்லறைக்கு !'

'அடே !'

'நிஜமாக இன்று என் கடைசி நாள் !—கடைசி நாள் ! ஐயோ ! மரியமும் கிடைக்க வில்லை; அவள் கடிதமும் கிடைக்க வில்லை !'

அலீயின் கண்களில் ஒரு வெறிஇருந்தது. கிளர்க் மெதுவாக அவனருகிலிருந்து நகர்ந்து நடந்தான். அவன் பையில் மூன்று சோலா தங்கம் கிடந்தது.

ஃ ஃ ஃ

இதற்குப் பிறகு அலீ காணப் படவே யில்லை. அவனைப் பற்றி அறியும் கவலையும் யாருக்கு மில்லை. ஒரு நாள் போஸ்ட் மாஸ்டர் கொஞ்சம் துக்கமாக இருந்தார். அவருடைய பெண் தூர தேசத்தில் வியாதியா யிருந்தாள். அவளைப் பற்றின தகவலுக்காக சோகத்தில் எதிர் பார்த்துக் கொண் டிருந்தார்.

தபால் வந்தது. கடிதங்கள் குவிந்து விட்டன. ஒரு கவரைத் தனதென்று நினைத்துக் கொண்டு கையில் எடுத்தார்; ஆனால் அதன் மேல் 'கோச்வான் அலீபாபா' என்று விலாஸம் எழுதி யிருந்தது.

இடி விழுந்தாற் போலக் கடிதத்தைக் கீழே எறிந்தார் அவர். சோகமும், சிந்தனையும் அவருடைய ஆபீஸர் என்ற கடூர ஸ்வபாவத்தை அழித்து, மனுஷ்ய ஸ்வபாவத்தை வெளிப் படுத்திக் கொண் டிருந்தன. அவருக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது, அந்தக் கடிதம் அந்த கிழவனுடையது; ஒரு வேளை அவன் மகள் மரியத்திட மிருந்து வந்திருக்கலாம் என்று.

'லக்ஷ்மிதாஸ் !'— போஸ்ட்மாஸ்டர் கூப்பிட்டார்.

அன்று அலீபாபாவிட மிருந்து கினிகளை வாங்கிக் கொண்ட மனிதன் பெயர்தான் அது.

'என்ன, சொல்லுங்கள் ?'

'இந்த உன்னுடைய கோச்வான் அலீபாபா !........ இப்போது எங்கே இருக்கிறான் அவன் ?'

'தேடுகிறேன் '.

அன்று போஸ்ட் மாஸ்டரின் மகளைப் பற்றிய செய்தி யொன்றும் வர வில்லை. இரவு முழுவதும் அவர் திகிலில் கழித்தார். மறு நாள் விடியற் காலை மூன்று மணிக்கு அவர் ஆபீஸில் உட்கார்ந்திருந்தார். நாலு மணிக்கு அலீ வருவான்; தம் கையால் அவனிடம் காகிதம் கொடுக்க வேண்டும் என்பது அவர் அபிலாஷை.

அலீபாபாவின் நிலைமை இப்போது போஸ்ட் மாஸ்டருக்குப் புரிந்துவிட்டது. இன்று இரவு முழுவதும், காலையில் வரப் போகும் கடிதத்தை எதிர் பார்த்துக் கொண்டே கழித்திருந்தார். இப்படியே. ஐந்து வருஷங்க

ளின் நீண்ட ராத்திரிகளை எதிர்பார்ப்பில் கழித்து வருபவனின் நிலைமை எப்படி இருக்கும்! இன்றுதான் அவர் மனம் இதை யோசித்தது. இன்றுதான் முதன் முறையாக அவன் மீது ஸஹானுபூதி உண்டாகியது. சரியாக ஐந்து மணிக்கு யாரோ கதவைத் தட்டினார்கள். போஸ்ட் மேன்கள் இன்னும் வரவில்லை. ஆனால், அவருக்கு அலீதான் வந்து கதவு தட்டியது போலத் தோன்றியது. போஸ்ட் மாஸ்டர் எழுந்தார். தந்தையின் ஹிருதய வேதனையை அனுபவித்து, இன்று அவர் பாய்ந்து கதவைத் திறந்தார்.

'வா அப்பா அலீ! இந்தா உன் கடிதம்!' வாசல் மீது ஒரு கிழவன், கம்பை ஆதாரமாக வைத்துக்கொண்டு நின்றிருந்தான். கடைசிக் கண்ணீர்த் துளிகள் அவன் கன்னத்தில் இன்னும் காயவில்லை. முகத்தின் சுருக்கங்களில், கடூரத்தின் நிறத்து மீது, ஸௌஜன்ய ப்ருஷ் பாய்ந்திருந்தது.

அவன் போஸ்ட் மாஸ்டர் பக்கம் பார்த்தான். அவர் கொஞ்சம் திடுக்கிட்டார். கிழவனின் கண்களில் மனிதனின் ஒளியே இல்லை!

'யார் ஐயா, அலீயா?'—லக்ஷ்மி தாஸ் ஒரு புறமாக வந்து வாசலருகில் வந்து நின்று கொண்டான்.

போஸ்ட் மாஸ்டர் அவனைக் கவனிக்க வில்லை; வாசல் புறமே பார்த்துக் கொண் டிருந்தார். ஆனால் அங்கே யாரும் காணப் படவில்லை. ஆச்சரியத்தால் அவர் கண்கள் விரிந்தன! வாசலில் யாருமில்லை! இதென்ன ஆச்சரியம்! அவர் லக்ஷ்மி தாஸின் பக்கம் திரும்பினார்.

'ஆம், அலீபாபா; யார், நீயா?'

'அலீபாபா செத்து விட்டான் ஐயா! ஆனால் அவன் கடிதத்தை என்னிடம் கொடுங்கள்'.

'அட! எப்போது செத்தான்? நிஜமா லக்ஷ்மிதாஸ்?'

'ஆம், ஐயா! அது ஆகி மூன்று மாசமாகிறது'. எதிரில் ஒரு போஸ்ட் மேன் வந்து கொண் டிருந்தான்; அவன் இப்படி பதிலளித்தான்.

போஸ்ட் மாஸ்டர் பிரமித்து விட்டார். மரிபத்தின் கடிதம் இன்னும் வாசலிலேயே கிடந்தது. அலீயின் உருவம் அவர் கண் முன்னால் வந்து நின்றது. அலீ தன்னைக் கடைசி நாள் சந்தித்த விவரத்தை வர்ணித்தான் லக்ஷ்மிதாஸ். போஸ்ட் மாஸ்டரின் காதுகளில் கதவு தட்டுகை; பிறகு கண்களின் முன் அலீயின் உருவம் வந்து நின்றது. அவர் உள்ளம் பிரமையில் தவித்துக் கொண்டிருந்தது. 'நான் அலீயைப் பார்த்தேனே; அது வெறும் பிரமைதானா? அல்லது அது லக்ஷ்மி தாஸா?'

மறுபடியும் வழக்கப்படி ஸஹஸ்ர நாமாவளி ஆரம்பமாகியது. போலீஸ் கமிஷனர்! ஸூபரின்டென்டென்ட்! ஒப்ரேரியன்! ஸார்டர் வேகம் வேகமாகக் கடிதங்களை எறிந்து கொண்டிருந்தான்.

ஆனால் ஒவ்வொரு கடிதத்தையும் அவர் இமை கொட்டாது கவனித்துக் கொண்டிருந்தார். அந்தக் கடிதங்களில், துடிக்கும் ஹிருதயங்களிருப்பது போலத் தோன்றிக் கொண்டிருந்தது அவருக்கு. கவர் ஒரணா, கார்டு அரையணா என்ற நினைவேயில்லை. தூரத்து ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து யாராவது விதவையின் ஒரே அருமை மைந்தன் கடிதம் வந்திருக்கலாமல்ல

வா? போஸ்ட் மாஸ்டர் இன்று மிகவும் கம்பீரத்தில் இறங்கிக் கொண்டிருந்தார்.

மனிதன் தன் பார்வையை அகற்றிவிட்டு இன்னொருத்தன் பார்வையால் நோக்கினால், பாதி ஜகத்தில் சாந்தி பரவிவிடும்.

ஃ ஃ ஃ

அன்று மாலை லக்ஷ்மிதாஸனும், போஸ்ட் மாஸ்டரும் மெதுவாக அலியின் கல்லறைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். மரியமின் கடிதம் அவர்களிடமேயே இருந்தது. கல்லறை மீது கடிதத்தை வைத்துவிட்டு லக்ஷ்மிதாஸனும் போஸ்ட் மாஸ்டரும் திரும்பினார்கள்.

'லக்ஷ்மி தாஸ், இன்று காலையில் நீர் தான் எல்லாருக்கும் முந்தி வந்தீரா?'

'ஆம் ஐயா.'

'நீர்தானே சொன்னது, அலீ பாபா—'

'ஆம் ஐயா'.

'ஆனால்—அப்போது............அப்போது எனக்குப் புரியவில்லை.......'

'என்ன?'

'ஆம், சரி—ஒன்றுமில்லை.'

போஸ்ட் மாஸ்டர் சீக்கிரம் தன் வார்த்தைகளை மாற்றி விட்டார். போஸ்ட் ஆபீஸின் திண்ணை அருகில் வந்ததும் போஸ்ட் மாஸ்டர் லக்ஷ்மிதாஸை விட்டுப் பிரிந்து யோசித்துக் கொண்டே உள்ளே போய் விட்டார். தம்முடைய பித்ரு ஹிருதயம் அலீ பாபாவை அறியவில்லையே என்று நினைவு அவருக்கு வேதனையளித்தது.

இன்றும், இதுவரை மகளின் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகையால் மறுபடியும் செய்தியைப்பற்றின சிந்தனையில் இன்றைய இரவைக் கழிக்க வேண்டும். ஆச்சரியம், திகில், பச்சாத்தாபம் ஆகிய மூன்று வித தாபங்களில் எரிந்து கொண்டே தம் ஆபீஸில் உட்கார்ந்தார் அவர். அருகில் வைத்திருந்த கணப்பிலிருந்து மெலிந்த அக்னி ஜ்வாலை அவர் பக்கம் வரத்தொடங்கியது.

சர்வ தேச சங்கம்

அபிசீனியா, ஸ்பெயின், சைனா ஆகிய நாடுகள் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினர்கள் தான். சங்கத்தின் முதலாவது விதிப்படி இவை அங்கத்தினராதற்கு உரியனவாவென்ற பிரச்னையைப் பற்றி நாம் யுக முடிவு வரை வாதஞ் செய்து கொண்டிருக்கலாம். அதனால் அடைகிற லாபம் ஒரு காசு கூட இல்லை. மேற்படி மூன்று நாடுகளும் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டன. சாதாரணமாக எந்தச் சங்கத்தினருக்குமுள்ள உரிமையைப் போல், இந்த மூன்று அங்கத்தினர்களுக்கும் சர்வதேச சங்கத்தில் உரிமையுண்டு. சங்கத்தைச் சேராத வெளியார் யாரேனும் உருட்டு மிரட்டல் பண்ணுகிறபோது, சங்கத்தின் அங்கத்தினரே சங்கவிதிகளைப் புறக்கணிக்க ஆரம்பித்தால், அந்தச் சங்கம் நீடித்து நிற்காது. இப்பொழுது தெளிவாகத் தெரிகிறதென்னவென்றால், உருட்டல் மிரட்டல் பண்ணுகிற வெளியார், சங்கத்தின் பணக்கார அங்கத்தினர்களிடமிருந்து உதவி பெறுகிறார்கள். சங்க விதிகளுக்குக் கட்டுப் பட்டு நடக்கிற அங்கத்தினர்களோ பலியாகிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்து கொள்கிற மாதிரி இப்படித்தான் இருக்கிறது. இதனால் ஒழுங்கான சங்கத்தின் மீது நம்பிக்கையே இல்லாமல் போய் விடுகிறது.

—வெர்னான் பார்ட்லெட்

மேட்டூர் அணை

—"பரன்"

இயற்கை மிகப் பெரிய சக்தி வாய்ந்தது. அதற்குரிய சக்தியை எதிர்த்து நிற்க எதனாலும் முடியாது. மானிட அறிவு அங்கே கொஞ்சம் வணங்கிக் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் அதன் சக்தியுடன் கலந்து போவோமானால், அந்த இயற்கை நமக்கு எவ்வளவு அருமையாகப் பயன்படுகிறது!

மேட்டிலே இருந்து பள்ளம் கண்ட இடத்தை நோக்கி, நீர் ஓடுவது இயற்கை. 'நீர் மட்டம்' என்று கேட்டிருக்கலாம். எவ்வளவு பள்ளங்கள் இருக்கின்றனவோ அவ்வளவையும் நிரப்பக்கூடிய அளவு தண்ணீர் இருந்தால், எந்தவிதமான வித்தியாசமும் தோன்றாதவாறு நீர் நிலை நிரப்பி நிற்கும். அதுவே நீர் மட்டம். ஆனால், நீர் நின்று மட்டம் காட்டக் கூடிய அளவிலடங்காத படிப்படியாகத் தொடரும் பள்ளங்களாயிருந்தால் அத் தண்ணீர், உற்பத்தி ஸ்தானத்திலிருந்து பள்ளத்தின் கடைசி எல்லையாகிய கடல் முகம் வரை, கால் கோலி ஓடிக்கொண்டே இருக்கும். உற்பத்தி ஸ்தானத்தில் குறைந்தாலொழிய தண்ணீர் ஓட்டம் தடைப்படவழி இல்லை.

இந்தவிதமாக மேட்டிருந்து வரும் தண்ணீரைக் 'கட்டுப் படுத்தி—ஒரு வழிப்படுத்தி ஓட விட்டிருக்கும் அணைகளுள் மேட்டூர் அணையும் ஒன்று.

இந்த மேட்டூர் அணையை, ஒவ்வொருவரும் சென்று காணவேண்டுவது அவசியம். இது சேலம் ஜில்லாவிலே இருக்கிறது. சென்னையிலிருந்து செல்லுவதானால் இரண்டு ரயில்வே மார்க்கங்கள் இருக்கின்றன. ஒன்று சென்னை எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து கார்டு லைன் (Chord Line) வழியாக விருத்தாசலம்—சேலம்—மேட்டூர் அணை. சுமார் 281 மைல். இன்னுமொன்று சென்னை செண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து (M. & S. M.) ரயில்வே மார்க்கமாக ஜோலார்ப்பேட்டை சுமார் 133 மைல் தூரம். அங்கிருந்து தென்னிந்திய ரயில்வே மூலமாக சேலம்—மேட்டூர் அணை. 100 மைல். ஆக 233 மைல்.

சேலத்திலிருந்து 25-வது மைலில் இம்மேட்டூரணை யிருக்கிறது. மேட்டூரணை ஒரு ஸ்டேஷன். இதிலிருந்து இறங்கி ஜட்கா வண்டி வைத்துக் கொண்டு ஊருக்குள் செல்ல வசதி இருக்கிறது. வழிகாட்டி ஒருவனும் தயாராகவே இருக்கிறான். இவ்வுதவிகளைக் கொண்டு புதிதாக அவ்விடத்துக்குச் செல்லுவோர், எவ்வித சிரமமுமின்றி எல்லா வற்றையும் காணச் சந்தர்ப்ப மிருக்கிறது.

ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்று பர்லாங் தூரம் சென்றால் ஒரு பெரிய இரும்புப் பாலம் குறுக்கிடுகிறது. அதைக் கடந்தே அணைக் கட்டுக்கும் ஊருக்கும் செல்ல வேண்டும். சுமார் நூறு கஜ தூரம் நீளமுள்ள இந்த இரும்புப் பாலமானது மிக உயரமாகவும் ஏறக்குறைய 20 அடி அகலமுள்ளதாகவும் இருக்கிறது. நாம் ஊரை நோக்கிச் சென்றால் நமக்கு வலப்புறமாக உள்ளது நீர்த் தேக்கம். அந்தத் தேக்கம் அளவுக்கு அதிக

மாகி விட்டால் அதனை ஓர் அளவுப் படுத்துவதற்காகவே இந்த நீண்டபாலத்தின் அடிப் பாகத்தில் நீரோட்டம் இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் இத்தனை அடிக்குமேல் தண்ணீர்த் தேக்கம் இருத்தல் கூடாது என்றுகணக்கு வைத்து, அதற்கு அதிகமாக நிரம்பும் நீரை ஓடவிட்டு விடுகிறார்கள். இதை அளவுப் படுத்திவிட, ஆங்காங்குத் தண்ணீர் அளவை அடிக்கணக்கில்காட்டும்படியான அடையாளங்கள் இருக்கின்றன. தண்ணீர் ஓட்டத்தைக் கூட்டவும் குறைக்கவும் ஏற்றனவான இரும்புக் கதவுகள் ஒவ்வொரு வாயிலையும் அடைத்து நிற்கின்றன. இவற்றில் சில கதவுகள் எப்பொழுதுமே ஒரு அரையடி, ஒரு அடி உயரத்துக்குத் திறந்து வைக்கப்படுகின்றன.



அணைக்கட்டுக்கு இந்த இரும்புப் பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும்.

இந்தப் பாலத்தின் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதியில் சுமார் 6 அடி அகலமுள்ள சுவர், வெள்ளைக் கல்லால் கட்டப்பட்டிருக்கிறது.

சிறிது தூரம் கடந்து சென்றால் மிக உயரமான ஒரு மேடு. அதன்மேல் ஏறிச் செல்ல வளைந்து செல்லும் ஒரு ரோடு. அதன் உச்சியான இடத்தில் மிக அழகான ஒரு கட்டிடம். அதனையே கவர்னர் மாளிகை என்று அழைக்கிறார்கள். அக்கட்டிடத்தின் உள்புறத்தில், ஒரு பளிங்குக்கல் பதிக்கப் பட்டிருக்கிறது. அதில் மேட்டூர் அணை கட்ட உதவிய கனவான்களின் பெயர்களும், எஞ்சினீர்களின் பெயர்களும், வருஷங்களும், உத்தேச செலவு விபரமும் அணைக்கட்டுத் திறக்கப்பட்ட தேதியும் பொறிக்கப் பட்டிருக்



இந்த மேட்டின் உச்சியில்தான் கவர்னர் மாளிகை இருக்கிறது.

கின்றன. அவ்வழகிய இடத்தில் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் சலிப்பின்றித் தங்கலாம். ஒரு பக்கத்தில் தண்ணீர் தேங்கிய விசாலமான காட்சி; மறுபுறம் குன்றுகளும் பசுந் தளிர்களும்; இன்னொரு புறம் அழகிய பூந்தோட்டத்தின் கண்ணையும் மனதையும் கவரும் காட்சி; நீரோட்டத்தால் கிளம்பும் ஒலியின் இனிமை.

இதன் மறுபுறமாகிய அணைக் கட்டுக்குக் குறுக்கு வழியில் கால் நடையாக இறங்கிச் செல்லுவோம். அணைக்



அணைக்கட்டின் முழுத்தோற்றம்.

கட்டின் ஆரம்பத்தை அடைவதற்கு முன்னால் ஒரு இரண்டு மாடிக் கட்டிடத்தைக் காண்கிறோம். அது தான் ரெஸ்ட் ஹவுஸ் (Rest House). அதிலிருந்தே அணைக் கட்டு ஆரம்பமாகிறது. அணைக் கட்டின் மேல் பாகம் சுமார் 20 அடி அகலமிருக்கலாம். மோட்டார்கள் செல்லவும் வசதியாக இருக்கிறது. அதற்குள் நடந்து செல்வோரும் மோட்டாரில் செல்வோரும் ஆளுக்கு இவ்வளவென்றும், மோட்டாருக்கு இவ்வளவென்றும் கட்டணம் செலுத்த வேண்டும்.

அந்த அணையின் அஸ்திவாரம் சுமார் 60 அடி அகலத்தில் தொடங்கி மேலே 22 அடி அகலத்திற்குச் சரிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. அணைக் கட்டின் நீளம் 300 கஜ தூரத்துக்கு அதிகமாகவே இருக்கும். அதன் மறு எல்லையாகிய அணைக் கட்டின் முடிவில் ஒரு ரெஸ்ட் ஹவுஸும் இருக்கிறது. அணைக் கட்டின் மத்திய பாகத்தில் அடைக்கவும், திறக்கவும் கூடிய விதமான மிகப் பெரிய இரும்புக் கதவங்களோடு கூடிய தண்ணீர் ஓட்ட வழிகள் (கண்ணுகள்) இருக்கின்றன. அவற்றை அடைப்பதற்கும் திறப்பதற்கும் ஏற்ற 'க்ரேன்கள்' (Cranes) சாமான் தூக்கும் யந்திரங்கள் இரண்டு அமைந்திருக்கின்றன. அவற்றை உருட்டிச் செல்லக் கூடிய விதமாக நீண்ட தண்டவாள வழிகளும் (Railway) உண்டு.

அணைக்கட்டின் நீர்த் தேக்கத்துக்கு எதிர்ப் பக்கமாகிய சுமார் 80 அடி ஆழத்தில் உள்ள பூந்தோட்டமும் நீர் வீழ்ச்சியும் ஆகாயக் கப்பலிலிருந்து பார்ப்பதே போல அவ்வளவு சிறியனவாகவும் பரந்தும் தோன்றுகிற காட்சி மறக்க முடியாத ஒன்று. அணைக் கட்டின் மத்திய பாகத்திலிருந்தே, கீழே உள்ள அப்பூந்தோட்டத்துக்குச் செல்லப் பல படிக்கட்டு இறக்கங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. அவற்றில் இறங்குவதென்றால் அசாதாரணமான தைரியம் வேண்டும். ஏறக்குறைய அந்தப் படிக் கட்டின் பாதி தூரத்தில் ஒருவன்

இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். மேலே இருந்து பார்ப்பவர்களுக்கும்; கீழே இருந்து பார்ப்பவர்களுக்குங்கூட அவன் ஒரு சிறிய ஜந்துவாகவே காட்சியளிப்பான்.



நீர் வீழ்ச்சியை மத்தியாகவுள்ள பூந்தோட்டம்.

அணைக் கட்டின் மறு கோடியில் நீர் நிலைப்பக்கம், யாவரும் இறங்கி நீராடுமாறு படிக்கட்டுகளும் ஏற்ற வசதிகளும் ஆழங் காட்டும் அடிக் கோடிட்ட மரங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. அதிலே நீராடுவது ஒரு ஆனந்தத்தையும், சுறு சுறுப்பையும், தேகசுகத்தையும் தருவதாகும். அழுக்கான ஆடைகளை இந்தத்தண்ணீரில் அலசினாலே போதும்; பரிசுத்தமாக்கிவிடும். பக்கத்திலே படகு ஒன்றும் இருக்கிறது. அநுமதிபெற்று அப் படகில் ஏறி நீண்டதூரம் செல்லலாம். அணையின் அடிப் பாகத்தில் பரந்து விளங்கும் பூந் தோட்டம் ரம்மியமானது.

அணைக் கட்டுக் கடங்கி தண்ணீர் வெளியேற மூன்று தொகுப்பான வழிகள் தனித் தனியே இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் பல கண்ணுகள். (தண்ணீர் வெளியேற வழிகள்). தண்ணீர் அதிகத்துக்குத்தகுந்தபடி இந்தக் கண்ணுகள் திறக்கப்படும். ஆனாலும் சதா சில கண்ணுகளில் அரை அடி அல்லது ஒரு அடி உயரத்துக்கு இரும்புக் கதவங்கள் திறக்கப்பட்டு எப்பொழுதும் தண்ணீர் பீறிட்டுக் கொண்டே இருக்கும். அதன் வேகத்தினால் மேலே எழும்பும் இடைறசல் சுமார் 8 அடி உயரத்துக்குக் கிளம்பும். அவை தூய வெள்ளை நிறமாகவும், பரிசுத்தமாகவும், ரம்மியமாகவும் உடம்பில் பட்டால் வெகு குதூகலமாகவும் இருக்கின்



நீர் பெருகியோடும் கண்கள் ஏழு.

றன. தண்ணீர் அங்குப் பரவி யிருக்கும் கற்களின் மீது மிக வேகமாக மோதி அலைந்து துள்ளி ஓடுவதானது, பார்ப்பவர் மனதிலே புதுமையையும், இளமையையும் அதிகரிக்கச் செய்கிறது. அதிலிருந்து எழும்பும் ஓசை இடைவிடாமல் ஒரே மாதிரியாக ஒலி பரப்பி நிற்கிறது. இக்கண்ணுகளில் இருந்து விழும் தண்ணீர் சுமார் 4 அடி. ஆழமான மூன்று நான்கு பள்ளங்களில் விழுந்து பின்னர் பலவிதமாகப் பிரிந்து ஓடத் தலைப் படுகின்றது.



தண்ணீர் படிப்படியாக இறங்கி வரும் காட்சி.

தண்ணீர் விழுந்து ஓடும் ஒரு இடத்தில்—உயரமான தலத்திலேயே ஒரு சிறு கால் கட்டிவிடப்பட்டிருக்கிறது. அதில் சிறிய அளவான தண்ணீர் பிரிந்து, அக் கால் கண்ட மட்டும் பல பல விதமாக அசராமல் ஓடுகிறது. வேண்டிய வேண்டிய விதமாக நுண்ணிய அறிவுக்கு எட்டிய எல்லாவிதத்திலும் அழகாக, பல நீர்த் துளிகள் மேலே எகிறிச் சிந்தும் படியான (Fountains) நீர்க்குன்றுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இயற்கையாக ஓடும் தண்ணீர் பள்ளங் கண்டதும் விசையாகக் கீழே விழுகிறது. அவ் விசை தண்ணீர்க் குன்றின் மேல் ஏறக் கூடிய அவ்வளவு அதிகமாக இருப்பதோடு மட்டு மில்லை. அக் குன்றிலிருந்து பல அடி தூரம் விசாலித்துச் சிதறி விழுந்து கொண்டிருக்கிறது.

இவ்விதமான இடத்தில் அழகிய பல மலர்ச் செடிகளும் கொடிகளும் கணக்கோடு வளர்ந்து அழகு செய்கின்றன. இன்னும் பலப் பல விதமான புதிய புதிய அயல் நாட்டு மலர்ச் செடிகளுடன் எல்லா வித காய்கறிச் செடிகளும் பயிர் செய்யப் படுகின்றன. (காலி பிளவர், முட்டைக் கோஸ், பீட்ரூட் முதலியன).

பூந்தோட்டத்தின் மற்றொரு காட்சி.

அணைக்கட்டின் அடிப் பாகத்தில் பாதி தூரம்

வரை குறுக்கே செல்ல வழி யொன் றிருக்கிறது. அங்குச் சென்ருல் பாதி தூரம் வரை அணையின் கீழ்ப் பாகத்தில் நீளமாகச் செல்லக் கூடிய குகை யொன்று அமைந்திருக் கிறது. அவ் வழியே செல்வதற்கு ஆங்காங்கு வரிசையாக எலெக்ட்ரிக் விளக்குகள் உதவியாக அமைக்கப் பட்டிருக்கின்றன. நீளக் கடந்து சுமார் 500 அடி தூரம் உள்ளே நடந்து சென்ருல் குகையின் மறு எல்லையைக் காணலாம். அவ் வழி யாகப் பூந் தோட்டத்தின் மத்தியில் வந்து சேர முடியும்.

இப்பொழுது இவ் விடத்தின் ஒரு பகுதியில் மின்சார சக்தி உண்டாக்கு வதற்காகப் பணம் லக்ஷக் கணக்கில் செலவு செய்து யந்திரங்களை அமைத்து அதிக வேலைப் பாட்டுடன் முயன்று வருகிருர்கள். வெகு விரை வில் இதிலிருந்து மின்சார சக்தி உற்பத்தியாக்கப் படும். குறைந்த செலவில் உற்பத்தி யாகும் இம் மின் சார சக்தி நூற்றுக் கணக்கான மைல் தூரம் சப்ளை செய்ய ஏற்பா டாகி இருக்கிறது.

மேட்டூர் ஒரு பெரிய ஊர் என்று சொல்ல முடியாது. நீண்ட அகல மான தெரு ஒன்று உள்ளது. அதில் இருமருங்கும் சாதாரண வீடுகள். அங்குக் குறிப்பிடத்தக்கதாக எதுவு மில்லை. பிரயாணிகளின் வசதிக்காக சிலர் ஹோட்டல்கள் வைத்திருக்கிருர் கள். இன்னொரு பகுதியில் ஒரே மா திரியான சிறு சிறு வீடுகள் நிறைய இருக்கின்றன. அங்கே கூலி வேலை செய்வோர் தங்கியிருப்பதாகக் கூறப் படுகிறது.

மேட்டூரணையி லிருந்து பங்களூர் செல்வதற்கு ஒரு உயர்ந்த ரக ரோடு இருக்கிறது. சேலத்தி லிருந்து ரோடு மார்க்க மாகவும் மேட்டூ ரணைக்கு வரலாம்.

இந்த அணைக்கட்டைச் சாதாரண மாக எங்கும் சென்று பார்க்கவும், நீர்த் தேக்கத்தில் நீராடவும், குகைக் குள் சென்று திரும்பவும், பூந்தோட் டங்களைக் கடந்து செல்லவும், ஊருக் குள் சென்று ஆகார மருந்தித் திரும்பி ரயில்வே ஸ்டேஷனுக்கு வர வும் சுமார் ஆறு மணி நேரம் போது மான தாகும். இவ்வளவு இடைக் காலத்தோடுதான் ரயில் வண்டியும் அங்குச்சென்று தங்கி மீண்டும் புறப் படுகிறது.

ஒவ்வொருவரும் இதைச் சென்று காண வேண்டுவது அவசியம் என்று கூறுதல் மிகையாகாது.

உலகத்திலுள்ள பெரிய பாலங்கள்

பெயர்	நீளம்
சான் பிரான்சிஸ்கோ (அமெரிக்கா)	$8\frac{1}{4}$ மைல்
காண்டா டாம்பா	6 ,,
ஜாம்பெஜி	2 ,,
ஸ்டோர்ஸ்ட்ராம் (டென்மார்க்)	2 ,,
போர்த் (ஸ்காத்லாந்து)	$1\frac{1}{2}$,,
மோர்டைக் (ஹாலந்து)	$1\frac{1}{4}$,,

இபன் அஹமத் அல்லது
காதலும் சமயப் பற்றும்

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யா

ஷத்தோப்ரியான் (Chateaubriand) என்ற பிரெஞ்சு நூலாசிரியன் எழுதிய கடைசி அபென்ஸெராஜ் (Les Aventures du Dernier Abencerage) என்ற கதையைத் தழுவி இஃது எழுதப் பட்டிருக்கிறது.

ஆசியாவில் கிறிஸ்து சகாப்த ஆரம்பத்தில் ஹூண ஜாதியார் கடல் போலப் பொங்கி எழுந்தார்கள். அக்கடலின் கடைசி அலை அத்திலா (Attila) தலைமையில் ரோமாபுரியைப் பணிய வைத்து கால் (Gaul) என்னும் தற்கால ப்ரான்ஸ் தேசத்தைத் தாக்கிற்று. இவ்வதிர்ச்சியினால் வெளிச்சென்ற விஸிகோத் (Visigoths) கூட்டத்தார் ஸ்பெயின் பழங் குடிகளாகிய இபேரியர்களை (Iberians) வென்று அவர்கள் மேல் ஆட்சி செலுத்தலானார். இக்குழப்பங்கள் ஒருவாறு தணியுமுன் அராபியாவில் ஒரு திவ்ய ஒளி தோன்றிற்று. மஹமத் நபியின் திவ்ய திருஷ்டியும், சொல்வன்மையும், பராக்கிரமமும் காட்டாளிகளாய்த் திரிந்து வந்த அராபியர்க்குப் புத்துயி ரளித்தன. அவர்கள் உலகம் பிரமிக்கும்படி திக்விஜயம் செய்யப் புறப்பட்டார்கள். இம்மத வெழுச்சியின் வேகம் கிழக்கே இந்தியா, சீனா, ஜப்பான் தேசங்களிலும், மேற்கே ஒரு புறம் இஸ்தாம்பூல் (கான்ஸ்டான்டி நோபல்) வழியாகவும், மறுபுறம் வட ஆப்ரிக்கா மூலமாக ஸ்பெயின் நாட்டிலும் பெரும் மனித வெள்ளத்தைச் செலுத்திற்று. ப்ரான்ஸ் எல்லையில் நுழையாதபடி சார்ல்மான் (அதாவது சார்ல்ஸ் மகான்—பெரிய சார்லஸ்) இதைத் தடுத்து விட்டான்.

ஸ்பெயினில் அப்பொழுது ஏற்பட்ட 'மூர்' என்று சொல்லப்படும் அராபிய முஸ்லீம் ஆட்சி எழுநூற்றெண்பத்தோரு வருஷங்கள் (711-1492) நீடித்தது. இங்கு 'இபேரியர்' என்னும் பழங்குடிகள் பினிசியர்களாலும், (Phoenecians) ரோமர்களாலும் நாகரிகமடைந்து விஸிகோத்தர் ஆட்சியில் அவர்களோடு ஒன்றுபட்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள். இவர்கள் தான் தற்கால ஸ்பானியர்கள். இவர்களுக்கு வெளியுலக ஞானத்தைப் புகட்டிப் பல துறைகளிலும் இவர்களை முன்னேற்ற மடையச் செய்வதற்காகவே இம்முஸ்லீம் படையெழுச்சி வட ஆப்ரிக்கா மூலம் அங்கு வந்து நிலைத்ததோ வென்று கூட எண்ணும்படி இருக்கிறது.

மூர்களின் ஆட்சி ஸ்பெயினில் ஆரம்பித்த போது ஐரோப்பிய நாடுகள் வெகு தாழ்ந்த நிலைமையி லிருந்தன. அழகிய மாளிகைகள் கட்டுவதிலும், விவசாய முறைகளிலும், விஞ்ஞான சாஸ்திரங்களிலும், இலக்கிய மியற்றுவதிலும் கூட இவர்களிடமிருந்து நாலு நூற்றாண்டு காலம் அவை கற்க வேண்டியிருந்தது. இவர்கள் கார்டோவா (Cardova) நகரில் எழுப்பிய அழகும் பெருமையும் வாய்ந்த மசூதியைப் போல அந்நாட்களில் ஐரோப்பாவில் எந்த நாடும் கட்டியிருக்க முடியாது. எதிரெதிராகவுள்ள இருமலைச் சார்புகளில் வீடுகளையும் மாளிகைகளையும் ஒழுங்காகப் பொருத்தி, மலையடிவாரத்தில் அல்ஹம்பரா (Alhambra) செங்கோட்டை கொண்ட க்ரனடா (Granada) நகர் பழுத்து வெடித்த பிரம்மாண்டமானதொரு மாதுளைப் பழம்போல விளங்குகிறது. அதனாலேயே அதற்கு 'க்ரனடா' (மாதுளை)

என்ற பெயர் வழங்கப் பட்டதாகவும் சொல்லுகிறார்கள். கணிதம், வான சாஸ்திரம் முதலியவைகளில் இவர்கள் செய்துள்ள வேலை இன்றைக்கும் காணப்படுகின்றன.

இப்படி ஐரோப்பாவைத் தட்டி எழுப்பி நாகரிகத்தில் முன்னேற்ற வந்த மூர் வெள்ளம், ஸ்பெயின் நாட்டிலேயே தேக்கப் படவே இம் மூர்கள் அங்கு தம் மதத்தையும் பாஷையையும் நடையுடை பாவனைகளையும் ஜனங்களிடை பலவந்தமாகப் புகுத்த முயன்றார்கள். கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த பற்றுடைய ஸ்பானியர், காடுகளிலும் மலைகளிலும் ஓடி ஒளிந்து தம் மனத்துக்கினிய தெய்வத்தைத் தொழுது வந்தார்கள். அவர்கள் அக்காலங்களில் மலைக்குகைகளை வாச யோக்கியமாகச் செய்ததற்கு அடையாளங்கள் இன்றைக்கும் கிடைக்கின்றன.

இப்படி பலாத்காரப் படுத்தியதன் பயனாக இருபுறத்திலும் மதப் பற்று அதிகரித்துப் பெரும் பகையும் மூண்டது. பதினோராவது நூற்றாண்டிலிருந்து மூர்களின் பெருமை மங்கத் தொடங்கிற்று. இவர்களால் கண் விழித்தெழுந்த ஐரோப்பா முழுவதிலும் 'புனர் ஜன்ம' இயக்கம் ஓங்கி வந்தது. அதன் பயனாக ஒவ்வொருவரும் தத்தம் 'சம்பிரதாயப்'படியே நடக்க வேண்டுமென்ற கட்டாயம் கைவிடப் பட்டது. இதிலிருந்து புத்தி விசால மடைந்து குருட்டு நம்பிக்கைக்கு இடமில்லாமற் போகவே மதவெறி குன்றிற்று; மற்றக் கட்டுப் பாடுகளும் தளர்வுற்றன; அறிவு வளர்ச்சியே பெரிதாகக் கருதப் பட்டது.

அரசியல் துறையில் இதன் முதல் விளைவு முஸ்லீம்களை ஐரோப்பாவிலிருந்து அகற்ற வேண்டுமென்ற முயற்சியேயாகும், ஏனெனில் வர வர முஸ்லீம்கள் தம் மதத்தையும் தம் சம்பிரதாயங்களையுமே பெரிதெனக்கருதி முன்னேற்ற மடைய முயலவில்லை. ஆகையால் பொங்கி எழும் புது நாகரிகத்திற்கு அவர்கள் தடையாக நின்றார்கள். தன்னை எழுப்ப வந்தவர்களை, ஐரோப்பா, தானே விலக்கி முன் செல்ல வேண்டியதாயிற்று.

இபன்ஸிராஜ் என்னும் ராஜ வம்சத்தினர் க்ரனடாவிலிருந்து 1492-ம் வருஷத்தில் கடைசியாக ஆப்ரிக்காவுக்குத் துரத்தப் பட்டனர். அதே வருஷத்தில் உலகின் மற்றொரு பாதியாகிய அமெரிக்காவைக் கண்டு பிடிக்கக் கொலம்பஸ் புறப்பட்டான்.

இப்பெரு முயற்சிகள் ஒரு புறம் நடக்கையில் மறுபுறம் கடைசி மூர் அரசர்கள் சுகபோகங்களில் காலங்கழித்து வந்தார்கள். இபன்ஸிராஜ் கடைசி அரசனான அபு அப்துல்லா, தன் தாயாகிய ஸுல்தானா அயிக்ஸாவோடும் தன் உம்ராக்களோடும் க்ரனடா நகரிலிருந்து தப்பியோடுகையில் மலைமுகட்டிலிருந்து தன் இனிய நகரை நோக்கிக் கண்ணீர் விட்டான். அவன் வீரத்தாய், 'இவ்வழகிய நாட்டைக் காக்க ஆண்மையற்று இப்பொழுது பொட்டச்சி போல அழுவதில் என்ன பயன்?' என்று கடிந்தாள்.

இக் குடும்பம் வட ஆப்ரிக்கா சென்று முன்பு வசித்து வந்த டூனிஸ் (Tunis) என்னும் நகருக்கருகில் தங்கி இருபத்து நான்கு வருஷங்களில் இக்குடும்பத்தைச் சேர்ந்த யாவரும் துயரத்தாலும் நோயாலும் யமனுலகு சென்றார்கள். கடைசியாக ஒரே ஒரு சிறுவன்தான் மிஞ்சினான். அவன் தான் இபன் அஹமத்.

க

'க்ரனடா! க்ரனடா! எம தருமைத் தலை நகரே! உன்னை நான் காண்பது இதுதான் முதல் முறை! இதுவே கடைசி முறை யாகவும் இருக்கக் கூடும்! உன் வனப்பில் ஈடுபட்டு மகிழ நான் கொடுத்து வைக்கவில்லையே! மனம் புண்பட்டுப் பரிதவிக்கிறேனே! ஐயோ! இக் கொடு

மைக் கென் செய்வேன்!........ஒன்ரு, இரண்டா! எட்டு நூற்ருண்டுகள் இங்கிருந்தோமே! என்ன பயன்! இந் நாட்டுக் குடிகளோடு ஒன்று படத் தெரிந்து கொள்ள வில்லை. ஆயுத பலத்தால் வென்று விட்டோம். எனப் பெருமை கொண்டோம். அது ஒரு ஜயமாகுமா? அதனுல் நாட்டினர் மனதைக் கவர்வது இன்னும் கஷ்டமாய் விட்டது. பலாத்காரப் படுத்தப் பார்த்தோம். அதன் பயனுக ஒரு முஸ்லீம் கூட தங்க இன்று இடம் பெருது துரத்தப் பட்டோம்!........ அவர்கள் சந்தோஷங்களில் கலக்காது தூர விலகி நின்ருேம். அவர்கள் திருவிழாக்களை அவமதித்தோம். நம் திருவிழா வன்று அவை நேர்ந்தால் அவைகளைத் தடுத்தோம். அவர்கள் கோயில் மணி யோசை நமது மசூதிகளில் கேட்கப் படலாகா தென்ருேம். நமது புனித மஹமதுநபி (அல்லா அவர்க்கருள் புரிவாராக) இவ் விஷயத்தில் எவ்வளவு பெருந் தன்மை காட்டி யுள்ளார்! சில கிறிஸ்தவர்கள் பூஜை செய்ய அவரை இடம் கேட்ட போது தமது புனித மசூதியையே அவர்களுக்குத் தந்தருளினுர். அதில் அக் கிறிஸ்தவர்கள் ஒரு தடையு மின்றித் தமது முறைப்படி பூஜை செய்து போக வில்லையா? அப் பெரியாரின் உதாரம் எங்கே! நமது குறுகிய நோக்கம் எங்கே!........நாம் வெளியேறி ஐம்பது வருஷங்களாய் விட்டன. ஆனுலும் என் குடும்பத்தார் அன்று பட்ட கஷ்டம் இன்றைக்கும் என் மனதை வாள்போலறுக்கிறது. அதற்காகப் பழி வாங்கியே தீருவேன். அல்லாஹு அக்பர்! என் கிழப் பாட்டனுரைக் கொன்ற கொடியன் குடும்பத்தில் ஒருவனை யாவது என் வாளுக் கிரை யாக்காது விடப் போவதில்லை! அல்லாஹுதாலா! எனக்கு வழி காட்டி நீர் உதவி புரிவீராக! நான் உம தடிமை!'

என்று தெய்வப் பிரார்த்தனையும் குரூரம் நிறைந்த சொற்களும் கலந்து கலந்து வரும் மொழிகளை வாய் ஓயாது சொல்லிக் கதறிக் கொண்டு மலைச் சிகரத்தி லிருந்து இறங்கி இபன் அஹமத் விடியுமுன் க்ரனடா நகரில் நுழைந்தான்.

உ

அருணேதய சமயம். நகரில் நடமாட்டம் நன்ருக ஆரம்பம் ஆக வில்லை. அது உறக்கத்தின் அந்திம தசையி லிருந்தது. சூரியனை எதிர் பார்த்து நாற் புறத்திலும் கோழிகள் கத்தின. விடியு முன் தன் விடுதி போய்ச் சேர வேண்டு மென்று இபன் அஹமத் விரைவாகச் சென்ருன். அருகில் வந்த போது பெரிய மாளிகைகளுக் கிடையில் வழி தவறி விட்டான். நடை தடுமாறிற்று. விறைக்க விறைக்க இங்கு மங்கும் விழித்துக் கொண்டு வழி நடந்தான்.

தேவலோகத்தி லிருந்து வந்தவளோ வென்று பிரமிக்கும்படி அழகுடைய நங்கை யொருத்தி தன் கிழச் சேடியோடு காலைப் பூஜைக்காகக் கோயில் மணி யோசை கேட்டு எதிரில் வந்துகொண்டிருந்தாள். இவன் தலைப் பாகையும், தளர்த்தியாய்த் தொங்கும் சட்டையும், இடையி லிருந்து தரை வரை நீண்டிருந்த போர் வாளும், இவன் முகச் சாயலும் அவள் கவனத்தைக் கவர்ந்தன. அருகில் வந்ததும் அவனை அழைத்து,

'ஐயா மூர், உமக்கு இவ்வூர் புதிதா என்ன? வழி தவறி விட்டீரா?' என்று வினவினுள்.

'புஷ்பங்களுக்கு ஸுல்தானுவாய் விளங்குபவளே! கிறிஸ்தவர்களுக் கடியாளே! ஜார்ஜியா கன்னியரினு மெழிலுடையோய்! நீகூறிய துண்மை. நான் வெளியூர். மூர் விடுதிக்குப் போக வழி தெரிய வில்லை. நீ எனக் குதவி செய்ய மஹமது நபிநாயகம் அருள் புரிவாராக' என்ருன் இபன் அஹமத்.

அவள் புன்முறுவல் பூத்து, 'மூர் இனத்தார் சொல் நயத்தில் பெயர் பெற்றவர்கள். நான் புஷ்பங்களுக்கு ஸுல்தானுவு மன்று; அடிமையு மன்று; மஹமது பெருமானின் அருளில் திருப்தி கொள்பவளு மன்று. ஐயா, ராவுத்தரே, (குதிரை வீரரே!) என்னைப் பின் தொடர்ந்து வாரும். மூர்கள் விடுதியில் கொண்டு விடுகிறேன்' என்ருள்.

அவள் முன் செல்ல, மந்திரத்தில் கட்டுண்டவன் போல இவன் பின் சென்ருன். விடுதிக் கருகில் வந்ததும் அவள் அதைத் தன் அழகிய விரல்களால் சுட்டிக் காட்டிவிட்டு மாளிகைகளிடை மறைந்தாள்.

ஃ ஃ ஃ

மனித இயற்கையை என்னென்று கூறுவது! இப்படி அரை நொடியில் மாறுந் தன்மை அதற்கு எங்கிருந்து வந்தது? இபன் அஹமத் மனதில் முன்னிருந்த துவேஷ எண்ணங்கள், அற்றுப் போகா விட்டாலும் தனியாக முன் போலச் செலுத்த முடிய வில்லை. க்ரனடா நகர் மேல் அவனுக்கிருந்த அன்பு முன்னை விட அதிகரித்தது. அதற்கு இன்னும் ஒரு கலை கூடச் சேர்ந்தது. அவன் பார்வையில் முன்னிருந்த சோகம் வர வர அகன்று, கொடுமை இழந்து, இன்பகரமாய் மாறுவதுபோ லிருந்தது.

நகர முழுவதும் சுற்றி வந்து தன் முன்னேர்கள் எங்கு வசித்தார்கள், எங்குஉலவினுர்கள், எங்குரமித்தார்கள் என்பதையெல்லாம் அறிந்து கொண்டான். முன்பு அவ் விடங்களைப் பற்றி நினைத்தாலே அவன் மனம் புண்படும். அவர்கள் வாழ்ந்த இடங்களெல்லாம் இப்பொழுது சோபையற்றுக் கிடப்பதாகத் தோன்றும். இன்று அவைகளை நேரில் சுற்றிப் பார்க்கையில் அப்படித் தோன்ற வில்லை. இக் கட்டழகி அங்கெல்லாம் உலாவியிருப்பா ளல்லவா என்ற எண்ணம் தான் மனதில் உதிக்கும். இவ் விடங்களுக்கு என்ன பாக்கியம்!

இபன், அஹமத் ரண வைத்தியத்தில் கெட்டிக்காரன். அவன் முன்னேர்கள் அரசாண்ட காலத்திலும் கூட அவர்கள் போர் முடிந்ததும், களத்தில் போய் தம் பக்ஷத்தினர், எதிரி பக்ஷத்தினர் என்று பாராமல் காயம் பட்ட எல்லோருக்கும் பச்சிலை வைத்துக் கட்டுவார்கள். அநேக மாய்த் தாம் செய்த கத்தி வெட்டுகளைத் தாமே ஆற்றிக் கருவார்கள். இபன் அஹமத் தனக்கு வேண்டிய பச்சிலைகளைத் தேடுவதற்காகத் தோட்டம் துரவுகளில் சுற்றுவான். ஆனல் அவன் கவனம் முழுவதும் அந்தத் தெய்வ நங்கையைத் தேடுவதிலேயே செல்லும். அவளைப்போலுடுத்திச் செல்லும் ஸ்திரீகளைப் பின் தொடர்வான். அவளல்ல வென்று தெரிய வந்ததும் மன வருத்தத்தோடு திரும்புவான்.

இம்மாதிரி திரிந்து வருகையில் ஒரு நாள் 'துரோ' நதி யோரமாக இருந்த ஒரு நந்தவனத்தில் வீணையோடு பாடும் குரல் கேட்டது. இவன் திடுக்கிட்டான். ஒரு பெண் மணியின் குரலுக்கும், உருவத்திற்

கும், கண்ணெளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும். அவைகளில் ஒன்றைக் கொண்டே காதலர் தம் காதலிகளை ஊகித் தறிகிருர்கள். பாட்டை உற்றுக் கேட்டான். ஆனந்த வெள்ளத்தில் நெஞ்சம் மிதந்தது. ஏனெனில் அவனுக்குத் தன் காதலிதான் பாடுகிருள் என் றறிந்ததோடு அவள் பாடியது இபன்ஸிராஜ் ஸுல்தான்களின் புகழைப்பற்றிய பாட்டுகள். அவனுல் தன் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. ஒரே தாண்டில் வேலியைக் கடந்து நந்தவனத்தில் திடீரென்று தோன்றினன்.

வீணையோடு பாடி வந்த பெண்மணியைச் சூழ்ந்து பல சிறுமியர்கள் இருந்தார்கள். அவர்கள், அன்னிய உடை தரித்த ஒருவன் அங்கு வந்து திடீரென்று தோன்றவே பெருங் கூச்சலிட்டு ஓடப் பார்த்தார்கள். பாடி வந்தவள், 'இவர்தான் அந்த மூர்' என்று சொல்லித் தன் சகிகளை மறுபடியும் வரும்படி அழைத்தாள்.

'யக்ஷப் பிரியே! மத்தியான வேளையில் நீருக்கு அலையும் அராபியர்களைப் போலே நான் உன்னைத் தேடியலைந்தேன். உன் வீணகானத்தில் என் பெரியோர்களைப் பாடினய். உன் குரலழகைக் கொண்டு நீயே அவள் எனத் தெரிந்து உன் பாதத்தில் என் இதயத்தை இதோ அர்ப்பணம் செய்கிறேன்' என்ருன் இபன் அஹமத்.

'உம்மை உத்தேசித்துத்தான் இபன்ஸிராஜ்களின் வீரச் செயல்களை எடுத் துரைத்தேன். மூர் குதிரை வீரர்கள் உம்மைப் போலத்தான் இருந்திருப்பார்கள் என்று உம்மைக் கண்டதி லிருந்து எண்ணி வந்தேன்' என்று நாணத்தால் சற்று முகம் சிவந்து சொன்னுள் ப்ளான்கா.

இபன் அஹமத்துக்கு மனம் பூரித்தது. அக் கிறிஸ்தவப் பெண்மணியின் காலில் உடனே விழுந்து அவள் புகழ்ந்து பாடிய வம்சத்தில் மிஞ்சியுள்ளவன் தான் ஒருவனே என்று சொல்லி விடலாமா என்று கூட எண்ணினன். இந்தச் செய்தி வெளியில் தெரிந்தால் அதிகாரிகள் தனக்குப் பல இடைஞ்சல்கள் செய்யக் கூடுமென்று அஞ்சி அப்படிச் செய்யவில்லை.

ஃ ஃ ஃ

ப்ளான்கா, கீர்த்தி பெற்ற 'பீவார்' வம்சத்தைச் சேர்ந்தவள். ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இவ் வம்சத்திற்கு மூல புருஷனுக இருந்தான் ராடரீகோ என்பவன். அவன்தான் முதல் முதலில் மூர்களோடு போர் தொடுத்து 'வனப்புடை வாலென்ஸியா' நகரைக் கைப்பற்றினன். அதனுல்தான் அவனுக்கு 'ஸித்' (ஸய்யத் என்பதன் திரிபு) என்ற பட்டம் வழங்கப்பட்டது. நாளடைவில் அவன் பின்னேர்கள் தம் சொத்துக்களையும் பெருமையையும் இழந்து பெயர்கூட மறந்துபோகும் நிலைமைக்கு வந்து விட்டார்கள். அச் சமயத்தில் ப்ளான்காவின் பாட்டனர் (அவர் பெயரும் ராடரீகோ தான்) தமது பராக் கிரமத்தால் தம் குடும்பத்தை மறுபடி ஓங்கச் செய்தார். க்ரனடாவி லிருந்து கடைசியாக இபன்ஸிராஜ் அரசனைத் துரத்தும் போது புகழுடன் சண்டை செய்தார். விரோதிகளை இவர் வெகு கடுமையாக நடத்தியதாகவும், இபன்ஸிராஜ் வம்சத்துக் கிழவரொருவர் தம் குடும்பக் கல்லறையைக்காத்து வந்தபோது, போர் முடிந்த பின்னும் அவர் வீடு நுழைந்து வாளுக் கிரையாக்கியதாகவும் சொல்லப்பட்டது. அவருக்கு மூர்கள் சொத்துக்களிற் சில கிடைத்

தன. ஸான்டபே (புனிதத் தீ) யின் டியூக் என்ற பட்டப் பெயரும் பெற்றார்.

இவருடைய ஒரே குமாரருக்கு கார்லோஸ் என்ற மகனும் ப்ளான்கா என்ற மகளும் பிறந்தார்கள். கார்லோஸ் பதினைந்து வயதிலேயே கோர்தெஸ் என்பவன் தலைமையில் அமெரிக்கா சென்று அங்கிருந்த புராதன ராஜ்யங்கள் பழுத்த இலைகளைப்போலே உதிர்ந்து விழுவதைக் கண்டான். அவன் மறுபடி தன்நாடு திரும்பி வந்தபோது ஐரோப்பாவிலும் ராஜ்யங்கள் நிலையற்றுக் கிடந்தன. இக்காட்சிகளாலும் மற்றும் சில காரணங்களாலும் சொத்து யாவற்றையும் தன் தங்கை ப்ளான்காவுக்குக் கொடுத்துவிட்டு ஒரு துறவிக் கூட்டத்தில் சேர்ந்தான்.

ஃ ஃ ஃ

எதிர்பாராத வண்ணம் இபன் அஹமத் நந்தவனத்தில் வந்ததற்காகச் சிறுமிகள் போட்ட கூச்சலைக் கேட்டு ப்ளான்காவின் தந்தை அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டு அவள், 'அப்பா, உம்மிடம் நான் முன்பு இவரைப்பற்றித்தான் பேசினேன். நான் பாடும்போது என்னைக் குரலினால் தெரிந்து கொண்டு என்னிடம் தம் நன்றியைச்செலுத்த வேண்டுமென்று தோட்ட வழியாக இங்கு வந்தார்' என்றாள்.

சாதாரணமாய் ஸ்பானியர் அதிக படிப்புள்ளவர்களன்று. ஆனால் உயர்ந்த உணர்ச்சி அவர்களுக்கு இயற்கையாகவே உண்டு. வெளியாரிடத்தில் இச்சகம்பாடித் தம்மைச் சிறுமைப் படுத்திக் கொண்டாவது உயிர் வாழ விரும்பார்கள். அவர்களுக்குள் குடியானவனும் எஜமானனும் பேசிக்கொள்ளும்போது ஏற்றத்தாழ்வென்பதே இல்லை. ஒருவருக்கொருவர் வணங்கும் பொழுதும் அதில் வித்தியாசமிராது. அவர்கள் பழக்க வழக்கங்களில் பேதமென்பதேயில்லை. ஸ்பானியர் வெளியாரிடம் உதாரமாகவே நடந்து கொள்வார்கள். அவர்களைச் சுலபமாக நம்பிவிடுவார்கள். அது காரணமாக அவர்களை வஞ்சித்தாலோ, அவர்கள் மேல் பயங்கரமாகப் பழி தீர்க்கப்பின் வாங்க மாட்டார்கள். தமக்குப் பெருங் கஷ்டங்கள் நேரும்போது அளவிறந்த துணிவும் குலைவுறாத பெருமையும் கொண்டு அவைகளைச் சகித்து வருவார்கள். என்ன நேர்ந்தாலும் மன மழிய மாட்டார்கள். ஒன்று கஷ்டங்கள் ஒழிய வேண்டும்; அல்லது தாம் அழிய வேண்டும். இதுவேயன்றிக் கஷ்டங்களுக்காகத் தம்மைச் சிறுமைப் படுத்திக் கொண்டு வாழ மாட்டார்கள்.

இக்குணங்களை ப்ளான்காவின் தந்தை பூரணமாகப் பெற்றிருந்தார். இபன் அஹமதை அவர் மரியாதையோடு வரவேற்றார். அவ்வன்னிய நாடுகளைப்பற்றிப் பல கேள்விகளைக் கேட்டு உல்லாசமாகப் பேசி வந்தார். கடைசியில் வீடு திரும்பும் சமயம் வந்தபோது அடிக்கடி வந்து தங்களுடன் வேடிக்கையாய்ப் பேசி ப்ளான்காவைத் திருப்தி செய்து போகும்படி வேண்டினார். பரம சந்தோஷத்தோடு அப்படிச் செய்வதாக உறுதி கூறிவிட்டு இபன் அஹமத் விடை பெற்றுச் சென்றான்.

இவ்வெளி நாட்டானுக்கும் தனக்கும் இடையில் எவ்வளவோ வேற்றுமைப்பாடுகள் இருக்கின்றன. அதனால் அவன்மேல் தனக்கு ஏற்படும் பிரியத்தினால் கெடுதி நேராது என்று

எண்ணினுள் பிளான்கா. அவன் மதம் வேறு; ஜாதி வேறு; தனக்கு முன் பின் தெரியாதவன்: ஆகையால் காதலுக்கு இன்றியமையாத மன ஒற்றுமை இந்நிலையில் இருவருக்குள்ளும் எப்படி உண்டாகும்? என்று தன் மனதைக் கட்டுப்படுத்தாது அது போன வழியே விட்டுவிட்டாள்.

மனித வேற்றுமைகளைச் சிறிதும் பொருட்படுத்தாத இயற்கைத் தெய்வம் அவள் மனதில் காதல் தீயை மூட்டி விட்டது. அதை உணர்ந்த போது அவள் சிறிதும் கவலைப்படவில்லை. வெளிப்படையாகவே அதை ஒப்புக்கொள்வ தெனத் தீர்மானித்தாள். தனக்கு அதனுல் பல கஷ்டங்கள் நேரக்கூடும். அதற்காகத் தன் உணர்ச்சியை மறைக்க அவள் இசையவில்லை. தன் ஸ்பானிய குணத்தை ஒட்டி அளவிறந்த துணிவு கொண்டு இக்காதலையே போற்றலானுள்.

அவள் எண்ணம் இதுதான்: இபன் அஹமத் கிறிஸ்து மதத்தைத் தழுவித் தன்னை விரும்பும் பட்சத்தில் அவன் உலகத்தில் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கு அவன் கூடச் செல்வது என்பதே.

இபன் அஹமத் கொண்ட எண்ணமும் இப்படிப் பட்டதுதான். முன்பு அவனுக்கிருந்த நோக்கம் இப்பொழுது மறைந்து விட்டது. ப்ளான்காவை எப்படிப் பெறுவது என்ற எண்ணந்தான் இப்பொழுது அவன் மனதை அலைத்து வந்தது. அவன் கொண்ட தீர்மானம் இதுதான்:

ப்ளான்கா இஸ்லாம் மதத்தைத் தழுவித் தன்னை விரும்பும் பட்சத்தில் தனக்குள்ள கடைசி மூச்சு வரை அவளுக்கே உழைப்பது என்பது.

இப்படித் தமக்குள் இருவரும் தீர்மானித்துக் கொண்டு அதை ஒருவருக்கொருவர் தெரிவிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருநாள் இருவரும் அல்ஹம்பரா அரண்மனையைக் காணச் சென்றுர்கள். தனிமையாகப் பேசி உலாவி வருகையில் சங்குபோல் அமைந்த ஒரு சூத்திரக் குழாய்க் கருகில் முன்பு போர் நடந்த காலத்தில் ஏற்பட சில உதிரக்கறைகள் இலேசாக இருப்பதைக் கண்டார்கள். இபன் அஹமத் தன் சகியைப் பார்த்து,

'என் அருமை ப்ளான்கா, இங்குக் காணும் என் முன்னோர் உதிரத்துளிகள்மேல் ஒட்டு வைத்துச் சொல்லுகிறேன். எனக்குன்மேல் ஏற்பட்ட காதல் அளவு கடந்து விட்டது. இனி அதை மறைத்து வைக்க என்னுல் இயலாது.'

'உமக் கென்மேல் காதலா? நீரோ என் மத விரோதி; ஒரு மூர். நானே ஒரு கிறிஸ்தவப் பெண்; ஸ்பெயின் தேசத்தவள். நான் எப்படி உமது பேச்சை நம்புவேன்?' என்று தன் விரிந்த கண்களால் வானை நோக்கிக் கொண்டு சொன்னுள்.

'ஓ மஹமது ரஸூல்! நபிநாயகமே! நீர் தான் இதற்குச் சாக்ஷி புரிய வேண்டும்' என்றுன் அஹமத்.

பிளான்கா அவனைத் தடுத்து, 'என் தெய்வத்தைக் கடிந்து பேசுபவர் பிரமாணத்தை நான் எப்படி ஏற்பேன்? நான் உம்மைக் காதலிக்கிறேனு இல்லையா என்பது உமக்குத் தெரியுமா? என்னிடத்தில் இம்மாதிரி பேசத் துணிவு எப்படி உண்டாயிற்று?' என்றுள்.

இபன் அஹமதுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தான் தவறு செய்த

தாக எண்ணி, 'உண்மை தான். நான் உனதடிமையே யன்றி வேறன்று. நீ என்னை உனக்கு வேண்டியவனாகக் கொள்ளவில்லை' என்றான்.

'இந்தப் பாசாங்கு நமக்குள் வேண்டாம். ஐயா மூர், என் கண்பார்வையிலிருந்தே நான் உம்மிடம் காதல் கொண்டிருப்பதைக் கண்டு விட்டீர். நீர் கிறிஸ்தவராகும் பட்சத்தில் நான் உம்முடையவளே யாவேன். என்னை எதுவும் தடை செய்யாது. நான் இவ்வளவு பச்சையாகப் பேசுகிறேனே என்று நீர் வியப்படையலாம். நான் காதலுக் கடிமைப்பட்டு கிறிஸ்தவ மத விரோதிக்கு என் மனதில் சிறிதும் இடந்தர மாட்டேன் என்பதையும் நீர் தெரிந்து கொள்ள வேண்டும்' என்றாள்.

இபன் அஹமதுக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது. அவன், அவள் இருகரங்களையும் பற்றித் தன் தலைப் பாகை மீதும் தன் இதயத்திலும் வைத்தழுத்தினான். 'அல்லாஹு தாலா! இபன் அஹமதின் பாக்கியமே பாக்கியம்! ஓ மஹமது நபி நாயகமே! இம் மாதரசியை உமது கட்டளையில் சேர்த்துக் கொள்ளும்; பிறகு எதுவுமே..............'

'போதும், இத் தகாத மொழிகள் பேச வேண்டாம். வெளியே போவோம்' என்று குறுக்கிட்டுத் தடுத்தாள் ப்ளான்கா.

அங்கிருந்து புறப்பட்டு இருவரும் வழி நடக்கையில் அவள் சொன்னாள், 'என் முடிவான பேச்சு இதுதான். நீர் இஸ்லாமியராகவே இருந்தால், நான் நிர்க்கதியான உமது காதலியாகவே இருப்பேன். நீர் கிறிஸ்தவராவதானால் நான் பாக்கியசாலியான உமது மனைவி'.

இதைக் கேட்டு இபன் அஹமத் சற்று நேரம் ஒன்றும் பேசாது வழி நடந்தான். பிரிந்து செல்லும் சமயத்தில் அவன் சொன்னான், 'ப்ளான்கா, நீ கிறிஸ்தவப் பெண்ணாகவே இருக்கும் பட்சத்தில் நான் துயரார்த உனதடிமை; நீ இஸ்லாமியப் பெண்ணாவதானால் நான் உனது இசை கொள் கணவன்.'

இப்படி ஒருவர்க் கொருவர் பிடிவாதமாகப் பேசி வந்தார்களானாலும் இருவருள்ளத்திலும் காதல் தீ கொழுந்து விட்டு வளர்ந்துவந்தது. சாதாரணமாகவே பேரெண்ணம் ஒன்றில் ஊன்றி நிற்பவர்களைக் கண்டால் பெண்கள் மனம் எளிதில் கவரப்படும். தன் காதலனாகிய இம்மூர் ஜாதியான் கொண்டுள்ள பல உயர் குணங்களில் இக் குலைவிலாத தெய்வப் பற்றும் ஒன்று என்றறியவே இக்கற்புக் கரசிக்கு அவன் மேலுள்ள மதிப்பு பன் மடங்கு பெருகிற்று. 'எனக்கு அது பொய்த்தெய்வமாகஇருக்கலாம்; ஆனால் அவர் மட்டுக்கு அது உண்மை தானே! அதில் அவர் காட்டிவரும் பிடிவாதம் போற்றத்தக்கதே. நான் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டுமானால் அவரைப் போலவே எனக்குண்மையா யிருக்கும் தெய்வத்தை நான் கைவிடலாமா? கூடவே கூடாது. அதனால் அவருக்கு என்னிடம் மதிப்பு அதிகரிக்குமே யன்றிக் குன்றாது' என்ற எண்ணங்கள் தான் அடிக்கடி அவள் மனதில் தோன்றும்.

தன்னை இன்னானென்றும் தன் பதவி இன்னதென்றும் அறியுமுன் தனக்கு முற்றும் வேறான ஒரு பெண் தன்னைக் காதலிக்கிறாள்; அவள், குணத்தை நாடினாளே யன்றி மற்றெதையும் பொருட்படுத்தவில்லை என்று இபன் அஹமத் நினைக்க நினைக்க

அவன் உடல் மயிர்க் கூச் செறிந்தது. அவள் தனக்கு மணமாலை யிடும் போது, தான் இபென்ஸி ராஜ வம்சத்து அரசிளங் குமரன் என்று சொல்லி அவளை ஆனந்தக் கடலில் அமிழ்த்த வேண்டு மென எண்ணி யிருந்தான்.

இப்படி இருக்கையில் அவன் திடீ ரென்று டுனிஸ் நகர் திரும்ப வேண்டி யிருந்தது. அதைத் தன் காதலியிடம் தெரிவித்து விடைபெறச் சென்று,

'என் இனிய ஸல்தானு, என் தாய் சாகக் கிடக்கிறாள். கடைசி முறை தன் கண்ணை வந்து மூடும்படி என்னை அழைத்திருக்கிறாள்' என்றான்.

'ஆனால் என்னை விட்டுப் போகிறீரா? மறுபடி உம்மை நான் எப்பொழுது காண்பேன்?' என்றாள் பிளான்கா.

'ப்ளான்கா, இதைப் பொறுமையுடன் கேள். அல்லாவின் தூதர்கள் என்னை அழைத்துச் செல்லும் வரை உன்னைத் தவிர வேறு பெண்கள் மேல் என் மனம் செல்லாது. நீ, என்று எங்கள் நபிநாயகத்தின் கோட்பாடுகளை ஏற்கிறாயோ அன்று உன்னை மணப்பேன். அதுவரை ஒவ்வொரு வருஷமும் இந்தப் பருவத்தில் க்ரனடா வந்து உன் மன நிலையை அறிந்து செல்வேன்' என்றான்.

'சரி, நானும் இப் பருவத்தில் ஒவ்வொரு வருஷமும் உம் வரவை எதிர் நோக்கிக் கொண் டிருப்பேன். என் மூச்சுள்ள வரை உமக்காக என் கற்பைக் காத்து வருவேன். உம்மைக் காதலித்து வரும் என்னை விட சக்தி கொண்ட கிறிஸ்துவின் தந்தையாகிய எங்கள் தெய்வம் உமது மனதை இளகச் செய்யும் தினத் தன்று உம்மையே என் கணவராக வரிப்பேன்' என்று கண்களில் நீர் பெருக பதில் சொன்னாள்.

இபன் அஹமது தன் ஊர் வந்து சேர்ந்தான். அவன் தாய் இறந்து கிடந்தாள். அவளைக் காணாத துக்கத்தால் கண்ணீர் சொரிந்து அவளுக்குச் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்தான். பல மாதங்கள் கழிந்தன. வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்த பருவம் வந்ததும் கப்பலேறிப் புறப்பட்டான். க்ரனடாவின் துறை முகமாகிய மலாகா (Malaga) வந்துசேர்ந்தான்.

ப்ளான்காவும் அவன் வரவை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள். சில நாட்களுக்கு முன்னே புறப்பட்டுத் தன் தந்தையைத் துணை கொண்டு அவள் அங்கு வந்திருந்தாள். அங்குள்ள மலை முகட்டில் ஏறிக் கடலையே பார்த்துக் கொண்டு நிற்பாள். அதில் சிறிது கொந்தளிப்பு ஏற்பட்டால், இபன் அஹமத் கப்பல், இதில் என்ன பாடு படுமோ என்று உடல் நடுங்குவாள். அப்படி ஆபத்து ஏதாவது நேருமாகில் தானும் கடலில் குதித்து இபன் அஹமதுடன் ஒன்று படலாமா என் றெண்ணுவாள்.

ஒரு நாள் கப்பலொன்று கரைக்கு வருவதைக் கண்டு துறை முகத்திற்கு ஓடினாள். அதிலிருந்து இபன் அஹமத் ஒரு அராபியக் குதிரையோடும் ஒரு அழகிய மான் குட்டியோடும் தரையி லிறங்குவதைக் கண்டாள். அங்குக் கூட்டமா யிருந்தபடியால் மூர் அரண்மனையில் சந்திப்பதாக அவனுக்குச் சொல்லி யனுப்பி விட்டு அங்குச் சென்று காத்திருந்தாள். இபன் அஹமது மூர் அரண்மனைக்கு வந்த போது அவளுக்காகக் கொண்டு வந்த மானை அவளிடம் கொடுத்தான்.

அதன் கழுத்தில் ஒரு தங்கத் தகட்டில் தன் பெயர் அராபிய எழுத்துக்களில் செதுக்கி இருந்ததைக் கண்டாள். அவள் தன் காதலன் பாஷையைக் கற்றுவந்தா ளாகையால் அவளுக்கு அவ் வெழுத்துக்கள் சுலபமாகத் தெரிய வந்தன.

இருவரும் நெறி பிறழாது தம் கற்பைக் காத்து ஒரு வருஷ காலம் பிரிந்து மறுபடி சந்தித்த போது அவர்கள் உடல், அளவு கடந்து பூரித்தது. சிறு குழந்தைகளைப் போலவே இணை பிரியாது ஒன்று கூடி இருப்பதிலேயே அவர்களுக்குப் பரம சந்தோஷம். ஒருவரை யொருவர் என்னென்னவோ கேள்விகள் கேட்பார்கள். அவைகளுக்கு எந்த பதில் கிடைத்தாலும் சந்தோஷப் படுவார்கள். ஒருவர் பேச்சில் மற் றொருவருக்குத் தேனொழுகுவது போல இருக்கும். குரல் ஒலி கேட்பதையே முக்கியமாகக் கொண்டார்கள். அதன் பொருளைப் பற்றி அவ்வளவு அக்கரை காட்டவில்லை. அதனால் இடையறுாது வேண்டியவைகளைப் பற்றியும் வேண்டாதவைகளைப் பற்றியும் பேசிக் கொண்டே க்ரனடா வந்து சேர்ந்தார்கள்.

சென்ற வருஷம் போல உலாவுவதிலும் குலாவுவதிலுமே அவர்கள் காலம் கழிந்தது. தம் பேச்சுக்களுக்கிடையே பழைய பல்லவியும் பாடிக் கொண்டே இருப்பார்கள். 'கிறிஸ்தவ மதத்தில் எவ்வளவு தூரம் சென்றிருக்கிறீர்?' என்பாள் ப்ளான்கா. இபன் அஹமத் அதற்கு வாலைச் சுட்டிக் காட்டி விட்டு வேறு பேச்சுக்களை எடுப்பான். சற்று நேர மானதும் அவளுக்கு இரண்டு அழகிய பட்சிகள் ஜோடியா யிருப்பதைக் காட்டி, 'ப்ளான்கா, நீ யொரு இஸ்லாமியப் பெண்ணுவாயானுல் இக்காட்சி நமக்கு எவ்வளவு ஆனந்த மளிக்கும்!' என்பான் இபன் அஹமது.

'ஆமாம், நீர் கிறிஸ்தவரானுலும் நாம் அதே ஆனந்தம் அனுபவிக்கலாம். தெய்வம் என்றைக்கு அந்தப் பாக்கியத்தை எனக்குக் கொடுக்கும் என்றுதான் எதிர்பார்த்திருக்கிறேன். நான் மதம் மாறுவேன் என்று நீர் கனவிலும் எண்ண வேண்டாம். அது என் உயிரினும் மேம் பட்டது' என்பாள்.

இப்படி எத்தனையோ கேள்விகள் பிறக்கும். அவைகளுக்கு எத்தனையோ பதில்களும் வரும். அவர்கள் காதலில் மாத்திரம் சிறிதும் குறைவு ஏற்படவில்லை. மதப் பற்றும் குறைவதாகக் காணுேம். பிரிய வேண்டிய காலம் வந்தபோது இபன் அஹமத் டூனிஸ் போய்ச் சேர்ந்தான்.

பிரியதம! வா!

பிரியதம! வா! உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான்தான் அழகி என்று அகங்கரித்திருந்தேன்.

உன் தரிசனம் அதனை அகற்றி விட்டது. என் இருதயம் இதுவரை அந்தகார குகையா யிருந்தது.

உன் நேத்திர ஒளி அதில்பட்டது. விசுவ ப்ரேமை குருத்து விட ஆரம்பித்திருக்கிறது.

எல்லோரா சித்திரங்கள்

—வி. ராகவேந்திர ராவ்
M. A.,

எல்லோரா குகாலயங் களுக்குச் செல்ல விரும்புவோர், நைஜாம் ஸ்டேட் ரெயில்வேயிலுள்ள அவுரங்கபாட் (Aurangabad) ஸ்டேஷனில் இறங்கி, 12மைல்தூரம் மோட்டாரில் பிரயாணம் செய்ய வேண்டும். யாத்திரிகர்களுக்குச்சௌகரியமாக மேற்படி குகாலயங்களுக்குச் சமீபத்தில் ஒரு முஸாபரி பங்களா, தரும சாலை முதலியன இருக்கின்றன. இவைகளுக்கு ஓர் அதிகாரி இருக்கிறார். இவருடைய உத்திரவு பெற்று யாத்திரிககர்ள் இந்த இடங்களில் தங்கலாம்,

முற்காலத்து பாரதநாட்டின் ஆத்ம ஞானிகள், தங்களுடைய தவத்திற்கும், இருப்பிடத்திற்குமாக, இயற்கையழகு நிரம்பிய தனியான இடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். வாழ்க்கையின் கொந்தளிப்புகளிலிருந்து சிறிது விலகியே இவர்கள் வசிக்க விரும்பினார்கள். இயற்கை தேவதை வாசஞ் செய்யும் கோயில்கள் எனத் தகும் இந்த இடங்களில் ஜனங்களின் குறுகிய மனோபாவங்கள், தீய எண்ணங்கள் முதலியன வந்து சேரா. அஜண்டா, எல்லோரா, திருப்பதி ஆகிய இந்த இடங்கள், மேற்கூறிய கருத்தை நன்கு வலியுறுத்தும். அஜண்டாகுகைச்சித்திரங்களில் புத்தமதந்தான் நிலவியிருந்தது. எல்லோரா சித்திரங்களில், புத்த மதம், ஜெயின மதம், ஹிந்து மதம் ஆகிய மூன்று மதங்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதைக் காண்கிறோம்.

எல்லோரா எங்கே யிருக்கிறது? நைஜாம் ராஜ்பத்தின் வடமேற்கெல்லைப்புறத்தில் வெருல் என்றொரு கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமமானது, வரிசையாயுள்ள சில குன்றுகளின் அடிவாரத்தில் இருக்கிறது. இந்த ஊருக்குச் சமீபமாய், மலையின் இருமருங்கிலும், புத்த, ஜைன, ஹிந்து குகாலயங்கள் இருக்கின்றன இவற்றில் எல்லோரா குகைச் சித்திரங்கள்தான்மிகவும் புராதனமானவை. ஹிந்துக்களுக்கு இஃது ஒரு புண்ணிய க்ஷேத்திரம். ஹிந்துக்களால் கொண்டாடப் பெறும் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்று இங்கு மூர்த்திகரித்திருப்பதாக ஹிந்துக்களால் இந்த இடம் போற்றப் பட்டு வருகிறது. இங்கேயுள்ள தீர்த்தமானது, அவுரங்கஜீப்பின் காலத்தில் தீட்டுப் பட்டு விட்டதால், இந்தத் தெய்விகத் தன்மை மேற்படி வெருல் கிராமத்திலுள்ள கிருஷ்ணேசுவர் கோயிலில் எழுந்தருளச் செய்யப் பட்டிருக்கிறது. வெருல் என்பது தான் பிற்காலத்தில் எல்லோரா என்று மாறிய தென்று சொல்கிறார்கள். சிவாஜி மகாராஜாவின் மூதாதையர்கள் இந்த இடத்திலேதான் வசித்தார்களென்று தெரிகிறது. மகாராஷ்டிரத்தில் பிரபல அரசு செலுத்தி வந்த மகாராணி அகல்யாபாய், இங்கே ஓர் ஈசுவரன் கோயிலை நிருமாணித்திருக்கிறாள்.

எல்லோரா குகைத் தொகுதிகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டு மொத்தம் 33 குகைகள்இருக்கின்றன. இதிலுள்ள ஒரு புத்த விஹாரத்தைப்



விசுவகர்ம சைத்தியம்

பற்றி மட்டும் சுருக்கமாக இந்த வியாசத்தில் குறிப்பிடுகிறேன். இங்கே முற்காலத்தில் புத்த பிக்ஷுக்கள் வசித்திருந்ததாகத் தெரிகிறது. இதனை விசுவகர்ம சைத்தியம் என்று அழைக்கிறார்கள். இங்கேயுள்ள புத்தர் உருவத்திற்கு, வெருல் கிராமத்தைச் சேர்ந்த தச்சு வேலை, கொத்து வேலை முதலியன செய்கிற தொழிலாளர்களும் சுற்றுப் புறங்களிலுள்ள தொழிலாளர்களும் வருஷந்தோறும் பூஜை செய்கிறார்கள். இந்த விசுவ கர்ம சைத்தியம், இருக்கப்பட்ட குகைகளுக்குள் மிகப் பெரியது. இதற்கு மூன்று நுழை வாயில்கள் உண்டு. இவை மிகவும் நன்றாகச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த நுழைவாயில் ஒவ்வொன்றின் மேலும் மூன்று ஜன்

கைலாசக் கோயிலின் முற்றம்

னல்கள் இருக்கின்றன. அஜண்டா வில் ஒரே ஒரு ஜன்னல்தான் இருக்கிறது. வெளியிலிருந்து பார்த்தால் இரண்டு மாடி வீடுபோல் இது தோன்றும். இந்தச் சைத்தியத்திற்குள்ளே பெரிய மண்டபம் ஒன்று இருக்கிறது. இது 86 அடி நீளமும், 43 அடி அகலமும், 43 அடி உயரமும் உடையதாய் இருக்கிறது. மேற்கூரை இரண்டு பக்கங்களிலும் சாய்வாக அமைக்கப்பட்டிருக்கிறது. கூரையைத் தாங்கிக் கொண்டிருக்க 28 அஷ்ட கோண ஸ்தம்பங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்திற்குள் 28 அடி உயரமுடையஒருஸ்தூபம்இருக்கிறது. இதில் 17 அடி உயரமுள்ள புத்தர் விக்கிரகம் செதுக்கப் பட்டிருக்கிறது. இந்த விக்கிரகத்தின் இரு பக்கங்களி

னும் வஜ்ரபாணி என்றும் பத்மபாணி என்றும் இரண்டு தேவதைகள் செதுக்கப் பட்டிருக்கிறார்கள். புத்தர் விக்கிரகம் சுகாஸனத்தில் வியாக்யான முத்திரையுடன் நிருமாணிக்கப் பட்டிருக்கிறது.

இந்த எல்லோரா குகைத் தொகுதியைச் சேர்ந்தாற் போல் ஒரு சிறிய குன்றில் கி. பி. 760–765ம் வருஷத்தில் செதுக்கப் பட்ட கைலாசக் கோயில் ஒன்று இருக்கிறது. இது ஹிந்துக்களால் செதுக்கப் பட்டது. ஒரு குன்று முழுவதையும் அப்படியே குடைந்து செதுக்கி யிருக்கிறார்கள். சுமார் 100 அடி ஆழத்திற்கும், 275 அடி நீளத்திற்கும், 156 அடி அகலத்திற்கும் குடையப் பட்டிருக்கிறது. ஒரு பெரிய பாறையை அப்படியே கோயிலாகச் செதுக்கி யிருக்கிறார்கள். இந்தக் கைலாசக் கோயிலின் விமானம் 90 அடி உயரமுடையது. யானைகள் இந்த விமானத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாகச் செதுக்கப் பட்டிருக்கிறது. கர்ப்பக் கிருகத்திற்கு முன்னுள்ள பதினாறு கால் மண்டபம் 47 அடி நீளமும் 55 அடி அகலமும் உடையது. இதற்கு முன்னால் நந்தி மண்டபம் என்றொரு மண்டபம் இருக்கிறது. இந்த நந்தி மண்டபத்திற்குள் செல்ல ஒரு மஹா த்வாரம் அமைக்கப் பட்டிருக்கிறது. இதன் இரு மருங்கிலுமுள்ள பெரிய முற்றத்தில் இரண்டு பெரிய துவஜ ஸ்தம்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 50 அடி உயரமுடையது. இந்தக் கைலாசக் கோயிலைச் சுற்றி மஹாபாரதம், ராமாயணம், சிவபுராணம் முதலியவைகள் பல உருவங்களாகச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. எத்தனையோ வருஷங்களுக்கு முன் இவை தீட்டப் பெற்ற போதிலும், இப்பொழுது பார்த்தால் கூட உயிருடன் கூடிய உருவங்கள் நம் கண் முன்னே நிற்பது போல் தோன்றுகின்றன.

புதிதாகக் கோயில்களைக் கட்டாமல், ஏன் இப்படிப் பாறைகளைக் குடைந்து பல உருவங்கள் செதுக்கினார்கள் நமது முன்னோர்கள் என்ற கேள்விக்கு பெர்குஸன் என்ற ஆங்கில சித்திர நிபுணர் என்ன சமாதானம் கூறுகிறாரென்றால், கோயில் கட்டுவதற்கேற்படும் செலவை விட இந்த மாதிரி செதுக்குவது குறைவான செலவாகிறதே காரணமாகும்.

இந்தச் சித்திரங்கள் எழுதினவர்களுடையவும், பாறைகளைச் செதுக்கி உருவங்கள் சமைத்தவர்களுடையவும் சந்ததியார்தான் பிற்காலத்தில் முஸ்லீம்களுடைய அரசாங்கத்தில் தாஜ் மஹால் முதலிய அருமையான கட்டிடங்களைக் கட்டினார்கள். இவர்களுடைய பரம்பரையினர் இன்னும் ஆங்காங்கு இருக்கிறார்கள். இவர்களை ஆதரவு செய்தால், இந்தச் சித்திரக் கலை முன்போலச் செழித்தோங்கச் சந்தர்ப்பமுண்டு. ஆனால் அப்படிச் செய்வோர் யார்?

கி. பி. பத்தாவது நூற்றாண்டில் பிரபல பூகோள சாஸ்திரியாக இருந்த மாஸுதி என்ற அராபிய அறிஞன் இந்த எல்லோரா சித்திரங்களைப் புகழ்ந்து பேசி யிருக்கிறான். கி. பி. 1667ம் வருஷத்தில் இந்தச் சித்திரங்களைப் பார்வையிட வந்த தெவனோ (Thevenot) என்ற மேனாட்டு அறிஞன், கலை விற்பன்னர்களுக்கு இந்த இடம் பெரிய யாத்திரை ஸ்தலம் என்று போற்றுகிறான்.

சமஷ்டி அரசியலில் சட்ட சபைகள்

—கே. வி. ராம சுப்ரமண்யம்
B. A., B. L.,

சுய ஆட்சியுள்ள சில பிரதேசங்கள் தங்களுடைய பொது நன்மையை உத்தேசித்து ஒரு மத்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, தேச ஆட்சி சம்பந்தமான சில பொது விஷயங்களை மேற்படி மத்திய ஸ்தாபனத்திடம் ஒப்புவித்து, மேற்படி விஷயங்கள் சம்பந்தப் பட்ட மட்டில் மேற்படி ஸ்தாபனத்தின் அதிகாரத்துக்குட்பட்டு நடப்பதே சமஷ்டி ஆட்சியின் லக்ஷணம் என்று முன் இதழ்களில் கூறியிருக்கிறோம். இவ்விதம் மத்திய ஸ்தாபனம் மேற்படி விஷயங்களைச் சரிவர நிர்வகிக்க நிர்வாக அதிகாரிகளும், சட்ட சபையும், நியாய ஸ்தலங்களும் இருக்க வேண்டியது அவசியம். இந்த இதழில் மேற்படி மத்திய ஸ்தாபனத்தின் சட்ட சபைகளைப் பற்றியும், இந்தியாவில் புதிய அரசாட்சி மூலம் ஏற்படுத்தப்படும் சமஷ்டி சட்ட சபைகளைப் பற்றியும் ஆராய்வோம்.

இரண்டு சபைகள்

சமஷ்டி ஆட்சியுள்ள ஒவ்வொரு தேசத்திலும் மத்திய சட்ட சபை இரண்டு பிரிவுகளுடன் கூடினதாக இருக்கிறது. இவைகளில் ஒன்றை மேல் சபை என்றும், ஒன்றைக் கீழ்ச் சபை என்றும் கூறுவது வழக்கம். 'மேல் சபை' 'கீழ் சபை' என்ற பதத்திலிருந்து, ஒன்று உயர்ந்தது, மற்றது தாழ்ந்தது என்று கருதக் கூடாது. இந்தச் சபைகளுக்கு அநேகமாக சமத்துவமான அதிகாரம் உண்டு. சில தேசங்களில் மேல் சபையைவிட கீழ் சபைக்கே அதிகமான அதிகாரங்கள் உண்டு. இவைகளைப் பற்றிப் பின்னால் விவரிப்போம். சட்ட சபைகள் ஆதியில் ஏற்படுத்தப்பட்ட பொழுது (உதாரணமாக இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்) அதில் பிரபுக்கள், ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள், செல்வாக்குள்ளவர்கள் முதலியவர்கள் மட்டுந்தான் மெம்பர்களாக இருந்தார்கள். பின்னால் பொது ஜனங்களின் அதிகாரம் பெருகப் பெருக பிரதிநிதிகளையும் சட்ட சபையில் மெம்பர்களாக ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்களுக்காகத் தனியாக ஒரு சபை ஏற்படுத்தப் பட்டது. அந்தக் காலத்தில் பிரபுக்கள் முதலியவர்கள் மேலோர்களாகவும், பாமர ஜனங்கள் கீழோராகவும் கருதப்பட்டதால் பிரபுக்கள் அடங்கிய சபை 'மேல் சபை' என்றும், பாமர ஜனங்கள் அடங்கிய சபை 'கீழ் சபை' என்றும் பெயர் வழங்கப் பட்டது. இந்த வழக்கத்தின் சின்னங்கள் இன்றும் இங்கிலாந்து சட்ட சபையில் நாம் காணலாம். மேல் சபைக்கு லார்ட் சபை என்றும் (House of Lords) கீழ் சபைக்கு காமன்ஸ் சபை என்றும் (House of Commons) பெயர் வழங்கி வருகிறது.

ஒரு தேசத்தில் சட்ட சபை இரண்டு பிரிவாக இருக்க வேண்டும் என்ற அவசியமாவது மற்ற நிர்ப்பந்தமாவது கிடையாது. ஒரே ஒரு பிரிவுள்ள சட்ட சபைகள் சில ஏகாதிபத்

கிய தேசங்களில் இருக்கின்றன. ஆனால் சமஷ்டி அரசியல் உள்ள ஒவ்வொரு தேசத்திலும் சமஷ்டி சட்ட சபை இரண்டு பிரிவாகவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

ஏன் இருக்க வேண்டும் ?

பொதுவாகச் சட்ட சபை இரண்டு பிரிவுகளுடன் கூடினதாயிருக்க வேண்டும் என்ற கொள்கையை யுடையவர்கள் அடியிற் கண்ட காரணங்களை அதற்கு ஆதாரமாகக் கூறுகிறார்கள்:—

1. ஜன நாயக ஆட்சியுள்ள எல்லா தேசங்களிலும் சாதாரணமாக 21 வயது பூர்த்தி யடைந்த ஒவ்வொரு பிரஜைக்கும் ஓட்டுரிமை யளிக்கப் பட்டிருக்கிறது. இவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பாமர ஜனங்களாகவே இருப்பார்கள். இவர்கள் அவசரமாக ஒரு சட்டத்தை ஏற்படுத்த முயன்றால், மேற்படி சட்டம் தேச நன்மையை அளிக்கக் கூடியதா என்று தீர்மானிக்கச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். சட்ட சபை இரண்டு பிரிவாக இருக்கும் பக்ஷத்தில், ஒரு சபையில் அனுவசியமாகவோ, அல்லது அவசரமாகவோ ஒரு சட்டம் ஏற்படுத்தினால், மற்றொரு சபையில் அதற்கு முட்டுக் கட்டை போட்டு மேற்படி சட்டத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யலாம்.

2. ஒரு தேசத்தில் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள் தேச சேவை செய்ய விரும்பலாம். இப் பெரியோர்களின் சேவையும் தேச நன்மைக்காக இருக்கவும் கூடும். ஆனால் இவர்கள் தேர்தலில் ஏற்படும் சிரமம், பணச்செலவு முதலியவைகளை யுத்தேசித்துத்தேர்தலுக்கு நிற்கப்பிரியப்படாம லிருக்கலாம். இவர்களைச் சட்ட சபைக்கு நியமுகம் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். ஜனநாயக ஆட்சி முறையில் சட்டசபை, ஜனப்பிரதிநிதி சபையாக அல்லது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய சபையாக இருக்க வேண்டு மாதலால் சட்ட சபையை இரண்டு பிரிவாக ஏற்படுத்தி, ஒரு பிரிவுக்குப் பிரதிநிதிகள் பூராவும் ஜனங்களே தேர்தல் செய்ய வேண்டுமென்றும் மற்றொரு பிரிவுக்குச் சில பிரதிநிதிகள் தேர்தல் மூலமாகவும் சில பிரதிநிதிகள் சர்க்காரின் நியமுக மூலமாகவும் பிரதிநிதித்துவம் அடைய வேண்டும் என்றும் ஏற்பாடு செய்வது தேச நன்மைக்குச் சாதகமாயிருக்கும்.

3. சமஷ்டி அரசியலில் மத்திய சட்ட சபை இரண்டு பிரிவாக இருக்க வேண்டும் என்பதற்கு இன்னம் ஒரு முக்கியமான காரணம் கூறப்படுகிறது. சமஷ்டி என்பது சுயேச்சாதிகார முள்ள சில பிரதேசங்களின் ஐக்கியத்தையும், அவைகளில் உள்ள ஜனங்களின் ஐக்கியத்தையும் குறிக்கும். (A Federation is a union of the States as well as of the people of each State.) ஆகையால் சமஷ்டி சட்ட சபையில் அந்தந்தப் பிரதேச ஜனங்களின் பிரதிநிதித்துவமும், அந்தந்தப் பிரதேசங்களின் சர்க்காரின் பிரதிநிதித்துவமும் இருக்க வேண்டும். இதற்காக இரண்டு பிரிவுகள் இருக்க வேண்டியது அவசியம்.

ஏன் இருக்கக் கூடாது ?

இரண்டு பிரிவுகள் இருக்கக் கூடாது என்ற கொள்கையையுடையவர்கள்

அதற்கு ஆதாரமாக அடியிற் கண்ட காரணங்களைக் கூறுகின்றனர்:—

1. மேல் சபைகள் சாதாரணமாக 'மூத்தண்ணுக்களின் சபை' யாகவே இருக்கும். பொது ஜன நன்மையைக் கருதாமலும், தேச நன்மைக்கு அவசியம் என்று கருதப்படும் சட்டத்தை உடனே ஏற்படுத்தாமலும், அனுவசியமான முட்டுக் கட்டைகள் சதா போட்டுக் கொண்டே யிருக்கும்.

2. இந்தச்சபையின் பிரதிநிதிகளும், இந்தச் சபைக்குத் தேர்தல் செய்யும் ஓட்டர்களும் பணக்காரர்களாகவும், செல்வாக்குள்ள வர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் தங்கள் சுதந்திரங்களைப் பாது காத்துக் கொள்வதிலேயே அக்கரையாக இருப்பார்கள். இந்தச்சுதந்திரங்களைச் சிறுகச்சிறுகக் குறைத்தாலொழிய பொது ஜனங்களுக்கு நன்மை செய்வது சாத்தியமில்லை. ஆகையால் பொது ஜன நன்மைக்காக ஏற்படுத்தப் படும் சட்டத்துக்கு இவர்கள் சதா முட்டுக் கட்டை போட்டுக்கொண்டே யிருப்பார்கள். இதனால் தேசத்தின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தடைப்படும்.

இந்த இரண்டு வாதங்களில் எது சரி, எது தப்பு என்று நாம் தீர்மானிப்பது அனுவசியம். இந்தியா ஆக்டுப்படி சமஷ்டி சபை இரண்டு பிரிவாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிற்கு கவுன்ஸில் ஆப் ஸ்டேட் (ராஜாங்க சபை) என்றும், மற்ரென்றிற்கு ஹவுஸ் ஆப் அஸெம்பிளி என்றும் பெயர். ராஜாங்க சபையில் மொத்தம் 260 மெம்பர்கள். இவர்களில் 104 பேர் சமஸ்தானப் பிரதிநிதிகள்; 156 பேர் இந்திய மாகாணப் பிரதிநிதிகள். அஸெம்பிளியில் மொத்தம் 375 மெம்பர்கள். இவர்களில் 125 பேர் சமஸ்தானப் பிரதிநிதிகள். 250 பேர் இந்திய மாகாணப் பிரதிநிதிகள்.

பிரதிநிதிகளின் தேர்தல்

மற்ற தேசங்களில் சமஷ்டி சட்ட சபைகளின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் விதத்தையும் இந்தியா ஆக்டுப்படி இந்திய சமஷ்டி சபையின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படும் விதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியா ஆக்டில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதம் விசித்திரமாகத் தோன்றும். உதாரணமாக ஆஸ்திரேலியாவை எடுத்துக் கொள்வோம். 1900ம் வருஷத்தில்தான் அங்கே சமஷ்டி அரசியல் ஏற்படுத்தப் பட்டது. கீழ் சபையில் மொத்தம் 76 மெம்பர்கள். மேல் சபையில் மொத்தம் 36 மெம்பர்கள். ஆஸ்திரேலியாவில் மொத்தம் 60 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். அதில் 6 மாகாணங்கள் (States) இருக்கின்றன. (ஸ்டேட் என்ற பதத்துக்கு ராஜ்யம் என்று அர்த்தம் ஏற்பட்டாலும், நாம் மாகாணம் என்ற பதத்தையே உபயோகப் படுத்துவோம்). மேற்படி பிரதிநிதிகள் அனைவரும் அந்தந்த மாகாணத்தின் ஜனங்களாலேயே நேர்முகமாகத் தேர்தல் செய்யப்படுகிறார்கள். 21 வயது பூர்த்தியடைந்த ஒவ்வொரு பிரஜைக்கும் ஓட்டுரிமை யுண்டு. கீழ் சபையின் 76 பிரதிநிதிகளில் ஒவ்வொரு மாகாணமும், அதன் ஜன சங்கியையின் ஈவுப்பிரகாரம் தேர்ந்தெடுத்து அனுப்பும். ஒவ்வொரு மாகாணத்தையும் பல தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்

படுவார். ஆனால் மேல் சபையின் 36 பிரதிநிதிகளை ஒவ்வொரு மாகாணமும் 6 பிரதிநிதிகள் வீதம் தேர்தல்செய்து அனுப்பும். இந்த 6 பிரதிநிதிகளையும் ஒவ்வொரு மாகாணமும் ஒரே தொகுதியாக யிருந்து தேர்தல் செய்யும். ஆகையால் மேல் சபைக்காயினும் சரி, கீழ் சபைக்காயினும் சரி பிரதிநிதிகள் பொது ஜனங்களால், அதுவும் 21 வயது பூர்த்தியடைந்த எல்லா ஜனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஆஸ்திரேலியாவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் இதே முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்திய அரசியல் சட்டப்படி இந்திய சமஷ்டி சட்ட சபை சம்பந்தமாக அடியிற் கண்ட மாறுதல்களைக் காணலாம்:—

(1) இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகள் அந்தந்த சமஸ்தானாதிபதிகளால் நியமிக்கப்படுவார்கள். சமஸ்தானப் பிரஜைகளுக்கு இதில் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆனால் சில சமஸ்தானங்களில் சமஸ்தானப் பிரஜைகளின் பிரதிநிதிகள் அடங்கிய சட்டசபையின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டே தாங்கள் இந்திய சமஷ்டி சட்டசபைக்குப் பிரதிநிதிகள் நியமிப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

(2) ஒவ்வொரு மாகாணமும் இவ்வளவு பிரதிநிதிகள் அனுப்பவேண்டும் என்று இந்தியா ஆக்டில் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்ணயம் அந்தந்த மாகாணத்தின் ஜன சங்கியையைப் பொறுத்து மில்லை; விஸ்தீரணத்தைப் பொறுத்து மில்லை. உதாரணமாக பம்பாய் ராஜதானியையும் சென்னை ராஜதானியையும் எடுத்துக் கொள்வோம். விஸ்தீரணத்திலும் ஜன சங்கியையிலும் சென்னை ராஜதானி பிரிட்டிஷ் இந்தியாவில் $\frac{1}{6}$ பங்கு உள்ளதாக இருக்கிறது. இதை அனுசரித்துக் கணக்கிட்டால் சென்னைக்கு அஸெம்பிளியில் 42 ஸ்தானமும், ராஜாங்க சபையில் 26 ஸ்தானமும் இருக்கவேண்டும். ஆனால் முறையே 37, 20 ஸ்தானங்கள் மட்டும் கொடுக்கப் பட்டிருக்கிறது. பம்பாய் ராஜதானி பிரிட்டிஷ் இந்தியாவின் விஸ்தீர்ணத்தில் $\frac{1}{9}$ பங்கு; ஜனத் தொகையில் $\frac{1}{14}$ பங்கு. ஜனத் தொகையை வைத்துக் கணக்கிட்டால் பம்பாய்க்கு ராஜாங்க சபையில் 11 ஸ்தானமும் அஸெம்பிளியில் 18 ஸ்தானமும் இருக்க வேண்டும். விஸ்தீரணத்தை வைத்துக் கணக்கிட்டாலும் அஸெம்பிளியில் 28 ஸ்தானங்கள் மட்டும் தான் கிடைக்கும். ஆனால் பம்பாய்க்கு ராஜாங்க சபையில் 20 ஸ்தானமும் அஸெம்பிளியில் 30 ஸ்தானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாகாணங்கள் சம்பந்தமாகவும் இதே தாரதம்மியம் இருக்கிறது. ஆகையால் மாகாணங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பது யாதொரு முறையையும் அனுசரித்ததாக இல்லை. இந்திய சமஸ்தானங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பதும் யாதொரு முறையையும் அனுசரித்ததாக யில்லை. உதாரணமாக 50 லக்ஷம் ஜனங்கள் உள்ள திருவாங்கூருக்கு ராஜாங்க சபையில் 2 ஸ்தானங்களும் 35 லக்ஷம் ஜனங்கள் உள்ள குவாலியர் சமஸ்தானத்துக்கு 3 ஸ்தானங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

(3) இந்தப் பிரதிநிதிகளை மாகாணங்கள் தேர்ந்தெடுக்கும் முறையும் மிக விசித்திரமானது. மற்றத் தேசங்களில் கீழ் சபையே ஜனப் பிரதிநிதி சபை. இந்தச் சபைக்குப் பிரதிநிதிகள் ஜனங்களால் நேர்முகமான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவார்

கள். ஆனால் இந்தியாவில் சமஷ்டி அஸெம்பிளிக்கு நேர்முகமான தேர்தல் கிடையாது. ஒவ்வொரு மாகாணத்திற்கு அஸெம்பிளி என்று ஒரு சட்டசபை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்தந்த மாகாணத்தின் அஸெம்பிளி என்ற சட்டசபையின் மெம்பர்கள் சமஷ்டி அஸெம்பிளிக்குப் பிரதிநிதிகள் தேர்தல் செய்வார்கள். இம்மாதிரி, சமஷ்டி அஸெம்பிளிக்கு மறைமுகமான தேர்தல் என்ற முறை, வேறு எந்த தேசத்திலும் கிடையாது. ராஜாங்க சபைக்கு நேர்முகமான தேர்தல் முறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இதற்குத் தேர்தல் செய்யும் ஓட்டர்கள் பணக்காரர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

(4) சமஷ்டி ஆட்சியுள்ள மற்ற தேசங்களில், எந்தெந்த விஷயங்கள் மத்திய ஸ்தாபனத்தின் அதிகாரத்துக்குட் படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்த விஷயங்கள் சம்பந்தமாக சமஷ்டி சட்டசபை ஒரு சட்டம் ஏற்படுத்தினால், சமஷ்டியில் சேர்ந்த எல்லாப் பிரதேசங்களையும் அந்தச் சட்டம் கட்டுப்படுத்தும். ஆனால் இந்தியாவில் இந்த விதிக்கு விசேஷ விலக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்திய சமஸ்தானங்களுக்கு விசேஷ சலுகை காண்பிக்கப் பட்டிருக்கிறது. சமஷ்டி சட்டசபையில் ஏற்படுத்தப்பட்ட சில சட்டங்கள் மாகாணங்களில் மட்டும் அமுலுக்கு வரும். இந்திய சமஸ்தானங்களில் அமுலுக்கு வராது.

இவை சம்பந்தமான விஷயங்களையும், சட்டசபையின் அதிகாரங்களையும் அடுத்த வியாசத்தில் ஆராய்வோம்.

முந்நூறு வருஷங்களுக்கு முன்—

"சரித்திரக்காரன்"

இன்றைக்குச் சரியாக முந்நூறு வருஷங்களுக்கு முன்னர், இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யம் மிகவும் உன்னத ஸ்திதியிலிருந்தது. அப்பொழுது ஆண்டுவந்த ஷாஜஹான் சக்ரவர்த்தி காலத்தில் இந்தியாவின் செல்வநிலை எப்படி இருந்ததென்பதைப் பற்றி ஒரு சரித்திராசிரியர் பின்வரும் கணக்குகளைத் தெரிவிக்கிறார். இந்தக் கணக்குகளை நாம் படிக்கிற போது, ஒரு ரூபாய்க்கு இப்பொழுதுள்ள மதிப்பைக் காட்டிலும் அப்பொழுது அதிகம் என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு படிக்க வேண்டுவது அவசியமாகும்.

அரசாங்கத்தின் மொத்த வருமானம் 20 கோடி ரூபாய். சக்ரவர்த்தியின் சொந்த நிலங்களிலிருந்து அவருடைய செலவுக்கென்று கிடைத்த வருமானம் 3 கோடி ரூபாய். ஷாஜஹான் கட்டிய கட்டிடங்களின் மதிப்பு பின்வருமாறு:-

	லட்சம் ரூ
ஆக்ரா கோட்டை முதலியன	60
தாஜ்மஹால்	50
டெல்லி லாகூர், காபூல், காஷ்மீர், காந்தஹார், ஆஜ்மீர் முதலிய இடங்களில் சக்ரவர்த்தியின் உபயோகத்திற்கென்று கட்டப் பெற்ற கட்டிடங்கள்.	$162\frac{1}{2}$

சக்ரவர்த்தி உபயோகித்த நகைகளின் மதிப்பு 5 கோடி. ஷாஜஹானின் ஜெபமாலை மட்டும் 8 லட்சம் ரூபாய் பெறுமான முள்ளது.

1635ம் வருஷம் மார்ச் மாதம் 12ந் தேதி, ஷாஜஹான், மயிலாசனத்தில் அமர்ந்தார். இதில் உபயோகப் படுத்தப் பெற்ற பொருள்களுக்கு மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. இது தவிர, இதில் வேலை செய்த தொழிலாளர்களுக்குக் கூலி முதலியன வேறே இருக்கின்றன.

உறுதிகொள் மகனே!

—வ. பார்த்தசாரதி

மகனே! முன்னே உனக்குக் கடமையைப்பற்றிச் சொன்னேன். இப்பொழுது அது பிரகாசிக்கிற விதம் எப்படி என்பதைப்பற்றியும், அதன் மூலமாகவே, மானிட ஜன்மம் எடுத்தவர்களெல்லாரும் மனிதர்களாகிறார்களென்பதைப்பற்றியும் உனக்குத் தெரிவிக்கப்போகிறேன்.

குழந்தாய்! கடமை, ஒரு செப்பனிட்ட பாதையல்ல. எத்தனையோ எதிர்ப்புகளையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் எதிர்த்துக் கொண்டுதான் இந்தப் பாதையில் செல்ல வேண்டும். இந்த எதிர்ப்புகளையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் கண்கூடாகப் பார்க்கிற சக்தி உனக்கு இருக்கலாம். ஆனால் அவற்றைச் சமாளித்துக் கொண்டு போகக் கூடிய மனோ திடம் உன்னிடம் இல்லாமல் இருக்கலாம். இங்கேதான் நீ பரிசோதிக்கப் படுகிறாய். மனோ திடம் இல்லாதவன், ஒவ்வொரு அடிக்கும் ஒரு சிம்மத்தை எதிர்த்துக் கொண்டு போராட வேண்டியது தான். இவன் மனக்கோட்டைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கலாமே தவிர வேறொன்றையும் செய்ய முடியாது.

கடமையைச் செய்கிற போது உனக்கு விருப்பு வெறுப்பு என்பதே இருக்கக் கூடாது. இப்படி இல்லாமல் கூட இருந்துவிடலாம். ஆனால் உன்னை எதிர்த்துப் போராடும் சக்திகளோடு போராடுவதுதான் கடினம். நீ செய்ய வேண்டியதிதுவென்று, ஒரு கடமை உன் கண் முன்னே வந்து நிற்கிறது என்று வைத்துக் கொள். 'நான் இந்தக் காரியத்திலே இறங்கினால் ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?' என்று நினைக்கத் தொடங்கிவிடுவாயானால், உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. 'இது நான் செய்ய வேண்டிய கடமை' என்று உன் மனச் சாட்சி சொல்லி விடுமானால் உடனே அதில் நீ இறங்க வேண்டியதுதான். மற்றவர்கள் உன்னைத் தூஷிக்கட்டும்; பரிகசிக் கட்டும். அவைபற்றிக் கவலையில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்து

ஒரு குழந்தை தன் கடமையை எங்கே கற்கிறது? குடும்பத்திலே தான். பிறக்கிறபோது, எல்லாருடைய உதவியையும் அது எதிர்பார்க்கிறது. சரியானபடி பழக்கம் பெற்றுப் பிறருக்குக் கீழ்ப்படியவும், தன் கடமையை உணரவும் ஆரம்பிக்கிறது. இதற்கென்று ஒரு மனோ திடமும் ஏற்படுகிறது. அது எப்படிச் செலுத்தப் படுகிறதோ அதைப் பொறுத்தே அதன் பிற்கால வாழ்க்கை அமைகிறது. ஒரு கொடுங்கோலனிடத்தில் இந்த மனோதிடம் என்பது அமைந்துவிடுமானால் அவன் ஒரு நர பிசாசுதான். எல்லையற்ற இந்த மனோதிடந்தான் ஒரு அலெக்ஸாந்தரையோ, ஒரு நெபோலியனையோ உற்பத்தி செய்கிறது. ஹநுமான்கூட, தன்னுடைய மனோ பலத்தைக் கொண்டுதான், கடலைக் கடந்து இலங்கையை அடைந்தான். சீதா பிராட்டியை அசோக வனத்தில் சத்துருக்களின் மத்தியில் ஒழுக்கர்

தவருமல் இருக்கச் செய்தது அவளுடைய மனே திடந்தான்."

இந்த மனே திடத்தைக்குழந்தைப் பருவத்திலிருந்தே பக்குவப்படுத்திக் கொண்டுவர வேண்டும். இந்த மனே விதையை இளமைக் காலத்தில்தான் பயிர் செய்ய வேண்டும். இந்தக் காலத்தில் இதை நாம் செய்யா விட்டால், காலக்கிரமத்தில் கீழான இச்சைகளெல்லாம் நம்மை ஆட் கொள்ள ஆரம்பித்துவிடும். நாம் ஒழுக்கந்தவறினவர்களாகி விடுகிருேம்.

படிப்பு வேறு; சந்தோஷம் வேறு.

ஞானம் என்பது எங்கே இருக்கிறது? மூளையிலேயா? இல்லே; இல்லே. நமது இதயத்திலே தான் இருக்கிறது. நமது வாழ்க்கையில், நமது செயல்களில் பல குறைபாடுகளேக் காண்கிருேமே. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? நமது அறிவுக் குறைவா? இல்லே. மனே திடமில்லாமைதான்.

படிப்புக்கும், சந்தோஷத்திற்கும் சம்பந்தமேயில்லே. அப்படியேதான் நல்ல சுபாவங்கூட. நம்முடைய அதிகப்படிப்பு, நம்மை அடக்கத்தினின்று விடுதலே செய்து, கர்வத்திற்குள் கொண்டு போய் விடலாம். மானிட சரித்திரத்திலே பிரசித்தி பெற்ற பலர், அதிகப் படிப்பில்லாதவர்கள். படித்தவர்கள் சிந்தனை உலகத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றவர்களா யிருக்கலாம். ஆனல் செயலளவில் அப்படி உன்னதத்தை யடைந்ததாகத் தெரிய வில்லே. ஆகையால், படிப்போடு திருப்தி யடைந்து விடாதே. உன்னுடைய மனத்தையும் திடப்படுத்திக்கொண்டு வா; பக்குவப் படுத்தி வை. அப்பொழுதுதான் உன்ஞல் மேன்மையான காரியங்களேச் செய்ய முடியும்.

இன்னொரு விஷயத்தையும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். நல்லெண்ணம் உன்னிடத்தில் நிறைய இருக்கலாம். அதஞல் மட்டும் நீ நல்ல காரியங்களேச் செய்ய முடியாது. மனேதிடம் உன்னிடத்தில் நிறைய இருக்க வேண்டும். அப்பொழுது தான் நீ அதிகமான காரியங்களேச் செய்ய முடியும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையை அளக்குங் கருவி எது? அவன் செய்த காரியங்கள், அவன் பொறுமையோடு சகித்த துன்பங்கள் ஆகிய இவைதான். சோம்பேறித்தனத்திலே வாழ்க்கையைக் கழிப்பது இருக்கிறதே, அது வியாதியால் அவஸ்தைப் படுவதுபோல.

உழைப்பே ஆசான்

உழைப்புதான், மனிதனுக்கு உண்மையான ஆசான். உலகத்திலே தோன்றும் பெரும்பாலான துயரங்களுக் கெல்லாம் காரணம் சோம்பேறித்தனந்தான். உழைப்பில்லாமல் மனித சமூகம் முன்னேற முடியாது. அநேக கஷ்டங்கள் நம்மை வந்து அவஸ்தைப் படுத்துகின்றனவா? அப்படியாஞல் வேலே செய்து அவைகளேச் சமாளி. சோம்பிக் கொண்டிருந்தால் உன் மனமும், அறிவும் ஆத்மாவும் துருப் பிடித்துப் போகும். ஒரு கர்ம வீரன் சொல்கிருன், 'நான் வேலே செய்து இறந்து போவேனே தவிர, வேலே செய்யாமல் துருப் பிடித்து இறந்து போக மாட்டேன்' என்று. கஷ்டமான சம்பவங்கள் நேரிடுகிறபோது, நம்மைப் பரிசோதிக்கத்தான் அவை வருகின்றன வென்று நாம் கொள்ள வேண்டும்.

அந்தப் பரிசோதனை காலத்தில் நாம் உறுதியாக நின்றோமானால், மன துக்கு நிம்மதி ஏற்படுவதோடு கூட நமது கடமையும் எளிதில் முடிந்து விடுகிறது.

வறுமைதான் மனிதனுடைய வாழ்க்கையைப் புனிதப் படுத்துகிறது. கஷ்டம் நேரிடுகிறபோது, சந்தோஷமாக அதனை வரவேற்க வேண்டும். நமது உழைப்பிலேதான் இன்பம் இருக்கிறதே தவிர, நமது லட்சியத்திலே இல்லை யென்று அரிஸ்டாடல் என்ற கிரேக்க தத்துவஞானி கூறுகிறான். ஆகையால் கஷ்டங்களோடு போராடுந் திறன் உன்னிடத்தில் இருந்தால் நீ அவைகளைச் சுலபமாகச் சமாளித்து விடலாம்.

நமக்குச் சொத்து சுதந்திரங்களை வைத்துக் கொண்டு அநுபவிக்க வேண்டுமென்ற ஆசை யிருக்கிறது. ஆனால் அவற்றைச் சம்பாதிக்கக் கூடிய முயற்சி யொன்றுஞ் செய்வதில்லை. அதனை வைத்து நிருவகிக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு வேண்டா மென்று தோன்றுகிறது. இது பெரிய பலஹீனமாகும். ஆகையால் நாம் அநுபவிப்பதிலே இன்பங் காண வேண்டுமானால் முதலில் உழைப்பிலே இன்பங் காண வேண்டும். இதுதான் உண்மையான பலத்தின் ரகசியம்.

ஆகாத காரியமும் உண்டோ ?

இந்த உலகத்திலே நம்மால் ஒன்றுஞ் செய்ய முடியாதென்று சிலர் நினைக்கிறார்கள். இது சுத்தத்தவறு. உலகம் அவர்கள் முன்னிலையில் இருக்கிறது. நல்லதையோ, கெட்டதையோ எதை வேண்டுமானாலும் பொறுக்கி யெடுத்துக் கொள்வது அவர்கள் கடமை. அவர்களிடத்தில் ஒப்படைக்கப் பட்ட காலத்தையும், சாதனங்களையும் அவர்கள் எந்த விதமாக உபயோகப் படுத்தி யிருக்கிறார்கள்? தாங்கள் பிறந்தது, ஏதேனும் பிரயோஜனத்திற் கென்று அவர்கள் நிரூபித்துக் காட்டினார்களா? அவர்களுடைய வாழ்க்கை, சுய நலமும் சோம்பேறித்தனமும் நிறைந்ததாகவே போய் விட்டதா? அவர்கள் சந்தோஷத்தை எதிர் பார்த்துக் கொண் டிருக்கிறார்களா? ஆனால் சோம்பேறித் தனத்தைக் கண்டு, சந்தோஷம் ஓடிவிடுமே? இரண்டுக்கும் நீண்ட தூரம் அல்லவோ?

1868ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவில் ஒரு விநோத சம்பவம் நடந்தது. ஒரு இளைஞன், இந்த உலகத்தில் தான் இருப்பது எவ்விதத்திலும் பிரயோஜனமில்லையென்று நிச்சயப் படுத்திக் கொண்டு, பகிரங்கமாகத் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அறிவித்தான். இவன், தன் அறிவை மட்டும் விருத்தி செய்து கொண்டிருந்தான். கடமை, மதம், ஒழுக்கம் முதலியவைகளைப்பற்றி இவனுக்கு ஒன்றுமே தெரியாது. தான் ஒரு பிரசங்கம் செய்து விட்டு பிறகு துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தான். இந்தச் சம்பவத்தைப் பார்க்கச் செல்வோர் ஒரு டாலர் விகிதம் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்தான். இந்தப் பணத்தைக் கொண்டு தன் இறுதி காலச் சடங்குகளை நடத்த வேண்டுமென்றும், மிகுதியுள்ள பணத்தில் மூன்று பிரபல நாஸ்திகர்களுடைய நூல்களை வாங்கி தனது ஊர்ப் புத்தக சாலையில் வைக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டான். சொன்ன படியே ஒரு பிரசங்கம் செய்து

விட்டு, துப்பாக்கியால் தற்கொலையும் செய்து கொண்டு விட்டான். புனித மான ஒருவனுடைய உயிர் எவ்வளவு வியர்த்தமாகப் போய் விட்டது பார்த்தாயா? இதை நீ தைரியமென்று சொல்கிறாயா? இல்லை. இது கோழைத் தனம். வாழ்க்கையோடு எதிர்த்துப் போராட முடியாமல் இப்படிச் செய்து கொண்டான் இந்தச் சிறுவன்.

தைரியம் தேவை

கோழைத்தனம் வாழ்க்கையில் மகா கொடுமையானது. மனிதனுக்கு தைரியம் மிகவும் தேவை. நல்ல தருணத்தில் சொற்ப தைரியத்தோடு நாம் நடந்து கொண்டு விட்டோமானால், நம்மால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்க முடியுமே. ஒருகுக் கிராமத்திலே, ஜனங்களுக்கு உபகாரம் செய்து கொண்டிருக்கிற ஒரு சமூகத்தொண்டனை எடுத்துக் கொள்வோம். அவன் செய்கிற தொண்டுகள், மனோ திடத்தையும் தைரியத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. இவனை விட, உலகத்தையே திக் விஜயஞ் செய்து விட வேண்டுமென்று விரும்பிய மஹா அலெக்ஸாந்தர் மன்னன் எந்த விதத்தில் பெரியவன்?

உன்னோடு அன்றாடம் நட்பு முறையிலோ உத்தியோக முறையிலோ பழகுகிறவர்களுடன் சுறு சுறுப்பான சம்பந்தம் வைத்துக் கொள். அவர்களிடத்தில் அன்பு காட்டு. அப்பொழுது சிறந்த ஞானியாக நீ ஆக முடியும். ஸ்வீடன்போர்க் என்ற ஓர் அறிஞன் 'மோட்சத்திற்கு மார்க்கம், உலகத்தைத் துறப்பதிலே இல்லை; உலகத்தின் நடுவிலே இருந்து கொண்டு வேலை செய்வதிலே தான் இருக்கிறது' என்று கூறுகிறான். இது முற்றிலும் உண்மையல்லவா?

ஆகையால் மகனே! சூழ்ந்திருக்கும் துன்பங்களைக் கண்டு, அவைகளுக்குப் பரிகாரந் தேடும் வகையில் நீ செய்ய வேண்டிய உழைப்பைக் கண்டு மலைத்துப் போகாதே. உலகத்தைத் துறந்து காட்டிற்கு ஓடிப் போய் விட வேண்டுமென்று எண்ணாதே. உலகத்திலே இன்பம் நிறைய இருக்கிறது. உழைத்தால் அதனைக் காண்பாய். அதற்காக உன் மனதைத் திடப் படுத்திக்கொள்.

இந்தியாவில் மரணவிகிதம்

பெயர்.		1000க்கு
அஸ்ஸாம்	....	19
வடமேற் கெல்லைப் புற மாகாணம்	....	$20\frac{1}{2}$
வங்காளம்	....	$23\frac{1}{4}$
சென்னை	....	24
பம்பாய்	....	$24\frac{1}{2}$
பீஹார்—ஒரிஸா	....	25
ஐக்கிய மாகாணம்	....	$25\frac{1}{2}$
பஞ்சாப்	....	$26\frac{1}{4}$
டெல்லி	....	$28\frac{1}{2}$
ஆஜ்மீர் மீர்வாரா	....	29
மத்திய மாகாணம்	....	$35\frac{1}{2}$

ஜெர்மனியில் ஐந்து வருஷ முன்னேற்றம்

ஜெர்மன் தேசத்து நிருவாகத்தை, தான் 1933ம் வருஷம் ஏற்றுக் கொண்டபிறகு, இதுவரை—சுமார் ஐந்து வருஷ காலத்தில் ஜெர்மனியில்—பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்று, ஜெர்மன் பார்லிமெண்டில் 20–2–38ல் ஹிட்லர் பேசியபோது குறிப்பிடுகிறான். அப்படிப் பேசுகையில் தான் பதவியேற்றுக் கொண்டதற்கு முந்தின வருஷத்தில் அதாவது 1932ம் வருஷத்தில் இருந்த தேசத்தின் பொருளாதார நிலைமைக்கும் 1937ம் வருஷத்திய நிலைமைக்கும் ஒப்பிட்டுச் சில புள்ளி விவரங்களினால் தெரிவிக்கிறான். அவற்றில் சில வருமாறு:—

ஜெர்மனியின்	1932ல்	1937ல்
தேசிய வருமானம்	4,502 லட்சம் மார்க்	6,800 லட்சம் மார்க்
அரசாங்க வருமானம்	660 ,,	1,400 ,,
ரெயில்வே வருமானம்	225 ,,	450 ,,
தொழிற் சாலைகள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள்	3,780 ,,	7,500 ,,
விவசாய உற்பத்தி	870 ,,	1,200 ,,
பொதுஜனங்களால் சேவிங்க்ஸ் பாங்கிகளில் போட்டிருக்கிற மூலதனம்	1,140 ,,	1,610 ,,
நிலக்கரி உற்பத்தி	1,047 லட்சம் டன்	1,845 லட்சம் டன்
எஃகு உற்பத்தி	91 ,,	190 ,,
மண்ணெண்ணெய் உற்பத்தி	19,000 டன்	40,000 டன்
கம்பளி நூல் உற்பத்தி	4,700 ,,	7,500 ,,
செயற்கைப்பட்டு உற்பத்தி	28,000 ,,	57,000 ,,
மோட்டார் வண்டிகள்	15 லட்சம்	30 லட்சம்
கப்பல் கட்டுந் தொழில்	22,000 டன்	11,20,000 டன்
தபாலாபீஸ்களின் மூலமாகக் கடிதப்போக்கு வரத்து	550 ல. கடிதங்கள்	640 ல. கடிதங்கள்
டெலிபோன்கள்	296 லட்சம்	358 லட்சம்
புதிய ரோடுகள் போடுவதற்காகச் செழவழிக்கப் பட்ட தொகை	4,400 ல. மார்க்	14,500 ல. மார்க்
புதிதாகக் கட்டப் பெற்ற பாலங்கள்	—	3,417
புதிதாகக் கட்டப் பெற்ற வீடுகள்	680,000	1,400,000
புதிதாகப் பிறந்த குழந்தைகள்	970,000	1,270,000



சுரேந்திர நாத் பானர்ஜி

ஜனனம்—1848 **மரணம்—1927**

—"ஒரு காங்கிரஸ் வாதி"

இந்தியாவின் 'பேரிகைக் குரலை'க் கேளாதவர் யார்? அவருடைய பெயரைத் தெரிந்து கொள்ளாதவர் யார்? சுரேந்திரநாத் பானர்ஜியின் புகழ் இந்தியாவின் மூலை முடுக்குகளி லெல்லாம் பரவி யிருக்கிறது. ஏன்? அவருடைய நாவன்மை மட்டுந்தான் இதற்குக் காரணமா? அஃதொரு காரணந்தான். ஆனால் அவருடைய சலியாத உழைப்பு, தன்னலமற்ற சேவை முதலியவைகளே அவருடைய நற் புகழுக்குக் காரணம். அந்நிய பாஷை ஒன்றைக் கற்று அதில் புலமை பெற்று, அந்தப் பாஷைக் குரித்தானவர்களும் வியக்குமாறு பேசுவதென்றால் அது லேசான காரியமல்ல. இந்தச் சிறப்பை சுரேந்திரநாத் பானர்ஜி பூரணமாகப் பெற்றிருந்தார். முற்காலத்தில் கிரீஸ் தேசத்தில் டெமாஸ்தெனஸ் (Demosthenes) என்பவனையும் இத்தலியில் சிஸிரோ (Cicero) என்பவனையும் எப்படிச் சிறந்த நாவலர்களாகப் போற்றி வந்தார்களோ அதுபோல் இந்தியாவில் சுரேந்திரநாத் பானர்ஜி போற்றப்பட்டு வந்தார்.

சுரேந்திரநாத் பானர்ஜி 1848ம் வருஷம் கல்கத்தாவில் குலீன பிராமண வமிசத்தில் பிறந்தார். இவருடைய தகப்பனார் பெயர் பாபு துர்க்காசரன் பானர்ஜி என்பது. அவருக்கு ஐந்து பிள்ளைகள். அவரில் இரண்டாவது பிள்ளை சுரேந்திரர். துர்க்காசரணார், அந்தக் காலத்தில் பிரபல டாக்டரா யிருந்தார். மிகவும் சுறு சுறுப்பானவர். தம் தொழிலில் கண்ணுங் கருத்துமா யிருந்து புகழும் பொருளும் சம்பாதித்தார். இந்தச் சுறு சுறுப்பும், உழைக்கும் சுபாவமும் சுரேந்திரருக்குப் பூரணமாக அமைந்திருந்தது. சுரேந்திரர் இளமையில் ஒரு பாடசாலையில் சென்று படித்தார். பிறகு, அக்காலத்தில் ஆங்கிலோ—இந்தியப் பிள்ளைகளின் படிப்புக்கென்றே ஏற்பட்டிருந்த டவ்டன் காலேஜில் சேர்ந்து படித்தார். ஆங்கிலத்தையே தாய் மொழியாகக் கொண்ட இளைஞர்களோடு இவர் பழகி வந்ததனால் இவருடைய ஆங்கில பாஷா ஞானம் அதி துரிதமாக முன்னேற்றமடைந்து வந்தது. இது தவிர, லத்தீன் பாஷையையும் உப பாடமாக இவர் கற்றுக் கொண்டு வந்தார். எப். ஏ. வகுப்பில் முதல் தரமாகத் தேறினார். 1868ம் வருஷம் பீ. ஏ. பட்டம் பெற்றார். இந்த பீ. ஏ. வகுப்பில் படிக்கிறபோது இவருக்கு நோய் ஏற்பட்டது. இதனால் மன மொன்றிப்

படிக்க முடியாமல் போய்விட்டது. பீ. ஏ. பரீட்சையில் இரண்டாவது வகுப்பில் இவர் தேறியதற்குக் காரணம் இதுதான்.

இவருடைய புத்தி கூர்மையைக் கண்ட காலேஜ் அதிகாரி, இவரை லண்டனுக்குச் சென்று ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிக்கும்படி சொன்னார். ஆனால் உறவினர்கள் இவரை இங்கிலாந்துக்குச் செல்லக் கூடாதென்று தடுத்தார்கள். அந்தக் காலத்தில் இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குக் கப்பலேறிச் செல்வது ஜாதி தருமத்திற்கு முரண்பட்டதென்று கருதப் பட்டது. கடைசியில், எந்த வருஷம் இவர் பீ. ஏ. வகுப்பில் தேறினாரோ அதே வருஷத்தில் இவர் இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றார். லண்டனில் யூனிவர்ஸிடி காலேஜில் போய்ச் சேர்ந்து படிக்கிறபோது இவருக்கு ஆசிரியரா யிருந்தவர் பிற்காலத்தில் இந்தியா மந்திரியா யிருந்த லார்ட் மார்லி என்பவர். கவிர அறிஞர் கோல்ட் ஸ்டக்கர் என்பவர் சுரேந்திரருடைய வட மொழி ஆசிரியரா யிருந்தார். இவர்களிடத்தில் ஒரு வருஷந்தான் படித்தார். 1869ம் வருஷத்திலேயே ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு ஆஜரானார். இவருடன் பரீட்சைக்குச் சென்றவர்கள் ரோமேச சந்திரதத்தர், பிஹாரி லால் குப்தா, ஸ்ரீபாத பாபாஜி தாகூர் ஆகியோர். இவர்கள் பிற்காலத்தில் இந்தியப் பொது வாழ்க்கையில் அதிகமாக பங்கெடுத்துக் கொண்டவர்கள். கடைசியில் சுரேந்திரர், ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறினார். பின்னர் 1871ம் வருஷம் செப்டம்பர் மாதம் அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த ஸில்ஹெட் நகரத்தில் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்ட்ரேட்டாக நியமனம் செய்யப் பட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து உத்தியோகத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் இவருடைய தகப்பனார் காலமாகி விட்டார். சுமார் இரண்டு வருஷ காலம் இவர் உத்தியோகத்தி லிருந்தார். இதற்குப் பிறகு, அரசாங்கத்தாரால் இவர் மீது பல குற்றச் சாட்டுகள் கொண்டுவரப் பட்டன. இவற்றைப் பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷன், தன் விசாரணையை பகிரங்கமாக நடத்த வேண்டுமென்று சுரேந்திரர் கோரினார். ஆனால் அரசாங்கத்தார் இதற்கு இணங்க வில்லை. கடைசியில் இரகசியமாக விசாரணை நடந்தது. சுரேந்திரர் குற்றவாளி என்று சொல்லி, அவரை உத்தியோகத்தி லிருந்து மாதம் ஐம்பது ரூபாய் உபகாரச் சம்பளத்துடன் விலக்கி விட்டார்கள். தம்முடைய கட்சியைப் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி நியாயந் தேட இங்கிலாந்து சென்றார். பயன் ஒன்றும் விளைய வில்லை. கடைசியில் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். 'இந்தியன் ஸர்விஸ் உத்தியோக வருக்கத்திற்கு நஷ்டம். ஆனால் இந்தியாவுக்குப் பெரியலாபம்' என்று இந்தச் சம்பவத்தைப் பிற்காலத்தில் ஓர் அன்பர் கூறி யிருக்கிறார்.

இந்திய தேசிய இயக்கத்திற்கு விதை யூன்றிய தலைவர்களிற் பெரும்பாலோர் ஆரம்பத்தில் ஆசிரியர்களாக இருந்து தொண்டாற்றி வந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ஸ்ரீ அரவிந்த கோஷ், பரோடா காலேஜில் போதகாசிரியராக இருந்திருக்கிறார். லோகமான்ய திலகர் புனா பெர்க்குஸன் காலேஜில் புரொபஸராக இருந் திருக்கிறார். கோபால கிருஷ்ண கோகலே, சிறந்த ஆசிரி

யரா யிருந்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனந்த மோஹன் போஸ், போதிக்குந் தொழிலில் நிபுணர் என்பது எல்லாருக்கும் தெரியும். அப்படியே சுரேந்திரரும் 1876ம் வருஷம், ஐ. சி. எஸ். உத்தியோகத்தி லிருந்து நீக்கப்பட்ட பிறகு, மெட்ரோபாலிடன் காலேஜில் ஆங்கில போதகாசிரியராக நியமிக்கப் பட்டார். 1881ம் வருஷம், இந்தக் காலேஜில் தொழில் பார்த்துக் கொண்டிருந்ததோடு கூட, சர்ச் காலேஜில் ஆங்கிலப் போதகாசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். இரண்டு காலேஜ்களிலும் ஆங்கில பாடத்தைப் போதிக்கும் திறமை இவருக்கு அந்தச் சிறுவயதிலேயே ஏற்பட்டிருந்த தென்றால் அதைப்பற்றி நாம் விரித்துக் கூற வேண்டுவ தில்லை. பின்னர், 1882ம் வருஷம் சுரேந்திரர், தாமே சொந்தமாக ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இதில் நூறு பிள்ளைகள் இருந்தார்கள். சுமார் ஏழு வருஷ காலத்தில் இந்தப் பள்ளிக்கூடம் மிகவும் அபிவிருத்தி யடைந்தது. இது பின்னர் ரிப்பன் காலேஜ் என்று பெயர் மாற்றி யமைக்கப் பட்டது. இதற்காகச் சுரேந்திரர் அல்லும் பகலும் உழைத்திருக்கிறார். இப்பொழுது இந்தக் கல்லூரி ஒரு மகத்தான ஸ்தாபனமாக விளங்குகிற தென்றால் அதற்கு ஸ்ரீ சுரேந்திரர் ஆதியில் போட்ட அஸ்திவாரந்தான் காரணம்.

எப்படி இந்திய தேசியத் தலைவர்கள் ஆரம்பத்தில் போதகாசிரியர்களாக இருந்திருக்கிறார்களோ அப்படியே பத்திரிகாசிரியர்களாகவும் இருந்திருக்கிறார்கள். தாதாபாய் நௌரோஜி, கோகலே, திலகர், மாளவியா, அரவிந்தகோஷ் முதலியவர்கள் இதற்குச் சிறந்த உதாரணங்கள். இதற்குச் சுரேந்திரர் எவ்விதத்திலும் புறம்பாகவில்லை. இவர் காலஞ் சென்ற உமேச சந்திர பானர்ஜியினால் ஆரம்பிக்கப்பட்ட 'வங்காளி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக நியமனம் செய்யப் பெற்று, அதனை முன்னுக்குக் கொண்டு வந்தார். இது ஆரம்பத்தில் வாரப் பத்திரிகையா யிருந்து பிறகு தினசரிப் பத்திரிகையாக மாறியது. சுரேந்திரர், இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில் அரசாங்கத்தை நிர்த்தாட்சண்யமாகக் கண்டித்தும், பொது ஜனங்களுடைய குறைகளைத் தாராளமாக எடுத்துத் தெரிவித்தும் வந்தார். இதற்காகச் சிறை வாசத்தையும் அனுபவித்திருக்கிறார்.

சுரேந்திரர், பத்திரிகாசிரியராக இருந்த காலத்தில், இந்தியாவில் தேசிய உணர்ச்சி வலுத்துவரத் தொடங்கியது. காங்கிரஸானது பத்து வயதடைந்து, மிகுந்த பிரகாசத்தை யடையக் கூடிய சூசகங்களைக் காண்பித்து வந்தது. சுரேந்திரர் காங்கிரஸ் இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்து அதில் ஈடுபட்டு வந்தார். இது சம்பந்தமாக தேசிய சங்கங்கள் பலவற்றைக் கல்கத்தாவிலேயே கண்டார். 1876ம் வருஷம் ஜூலை மாதம் 26ந் தேதி கல்கத்தாவில், சுரேந்திரர், ஆனந்த மோஹன் போஸ் முதலியவர்களுடைய பெரு முயற்சியால் 'இந்தியர் சங்கம்' என்றொரு சங்கம் ஏற்படுத்தப் பெற்றது. இந்தச் சங்கத் திறப்புவிழா வன்று, சுரேந்திரருடைய ஒரே மகன் காலமாகி விட்டான். ஆனால், பொது வேலை மிகவும் முக்கியமான தென்று கருதிய சுரேந்திரர், திறப்பு விழாவின் போது ஆஜரா யிருந்தார். எல்லாரும், இவ

ருடைய தியாக புத்தியை வியந்தார்கள். இதற்குப் பிறகு அநேக வருஷ காலம் இவர் மேற்படி சங்கத்தின் காரியதரிசியா யிருந்தார். இந்தச் சங்கத்தின் சார்பாக இவர் பல இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து சங்கத்தைப் பலப் படுத்தினார். இதன் மூலமாக அரசியல் கிளர்ச்சிகள் பலவற்றை நடத்தினார்.

சுரேந்திரர், காங்கிரஸில் ஈடுபட்டிருந்தார் என்று சொன்னோமல்லவா? 1885ம் வருஷம் பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரஸ் தவிர, மற்ற எல்லாக் காங்கிரஸ் களுக்கும் இவர் தவறாமல் ஆஜரா யிருந்திருக்கிறார். முக்கியமான தீர்மானங்களைப் பற்றி வாசாம கோசரமாகப் பேசி யிருக்கிறார். ஐந்தாவது காங்கிரசில் இவர் பேசிக் கொண் டிருக்கிற போது, காங்கிரஸ் நிதிக்குப் பொருள் உதவ வேண்டு மென்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். உடனே அந்த இடத்திலேயே 60,000 ரூபாய் வசூலாயிற்று. யேற்படி காங்கிரஸில் நிறைவேற்றப் பட்ட ஒரு தீர்மானத்தின் பயனாக இங்கிலாந்துக்குச் சென்ற தூது கோஷ்டியில் சுரேந்திரரும் ஒருவராகச் சென்று, இங்கிலாந்தில் பல பொதுக் கூட்டங்களில் பேசி இந்தியாவின் நிலையை எடுத்துரைத்தார்.

காங்கிரஸுக்கு இவர் செய்த சேவையை மதித்து, 1895ம் வருஷம் புனாவில் நடைபெற்ற பதினோராவது காங்கிரஸுக்கும், 1902ம் வருஷம் ஆமதாபாத்தில் நடை பெற்ற பதினெட்டாவது காங்கிரஸுக்கும் தலைவராகத் தெரிந் தெடுக்கப்பட்டார். இது பெரிய கௌரவமல்லவா?

இந்தியாவின் சார்பாகப் பல கமிஷன்களின் முன்னிலையில் காட்சியங் கொடுக்கும் பொருட்டும், இந்தியாவின் கட்சியைப் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டும் பல முறை இங்கிலாந்து சென்றிருக்கிறார் சுரேந்திரர்.

காங்கிரஸ் இயக்கந் தவிர, ஸ்தல ஸ்தாபன வேலைகளிலும் சட்டசபை வேலைகளிலும் சுரேந்திரர் பெரிதும் ஈடுபட்டு உழைத்து வந்தார். 1876ம் வருஷம் இவர் கல்கத்தா நகர சபைக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டு சுமார் 23 வருஷ காலம் அதில் ஓயாமல் உழைத்துவந்தார். இங்ஙனமே 1893ம் வருஷம் வங்காள சட்டசபையில் ஓர் அங்கத்தினராகச் சுரேந்திரர் நியமிக்கப் பட்டு, தமது அந்திய காலம்வரை அதில் அங்கத்தினரா யிருந்தார்.

மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் அமுலுக்கு வந்ததும், சுரேந்திரர் மிதவாதியாக மாறிவிட்டார். அரசாங்கத்தார் இவருக்கு 'ஸர்' பட்டம் அளித்ததை ஏற்றுக் கொண்டார். இரட்டை யாட்சியின் கீழ் மந்திரியாகவும் வேலை பார்த்தார். அந்தக் காலத்தில், இவருடைய பழைய சேவைக்காக ஜனங்கள் இவரைத் தூற்றாமல் இருந்தார்கள்.

இவர் தமது கடைசிகாலம் வரை—அதாவது 1927ம் வருஷம் இறந்து போகும் வரை, சுறு சுறுப்பாக இருந்தார். தினம் தோட்ட வேலை செய்வார். நீண்ட தூரம் அலுப்பின்றி நடப்பார்.

சுரேந்திரருக்கு ஒரு குமாரரும் ஐந்து குமாரத்திகளும் உண்டு.

கனகாவின் கடிதங்கள்

—— "சரசா"

கடிதம் IX

அம்மாவுக்கு அநேக நமஸ்கரித்த விஞ்ஞாபனம்.

எங்கள் சங்கம் இப்பொழுது நன்றாக வேலை செய்கிறது. எனக்கு எப்பொழுதும் அதைப் பற்றிய எண்ணமாகத்தான் இருக்கிறது. உன் மாப்பிள்ளையும் 'என்னைக் கூட மறந்து விடுவாய்போலிருக்கிறது' என்று என்னைப் பரிகாசஞ் செய்ய ஆரம்பிக்கிறார்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை சங்கத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களுக்குச் சென்றிருந்தோம். காலை ஏழுமணிக்குக் கையிலே சில ஆகார வகைகளை எடுத்துக் கொண்டு கால் நடையாகப் புறப்பட்டுச் சென்று, நான்கு கிராமங்கள் வரை பார்த்துவிட்டு, சாயங்திரம் ஆறு மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம். புருஷத் துணை யாரையும் நாங்கள் அழைத்துக் கொண்டுபோகவில்லை. இது கிராமத்திலுள்ள நிஷ்கபடமான ஜனங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. ஆனால் எங்களிடத்தில் எவ்வளவு அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டார்கள் தெரியுமா? அவர்கள் பார்வையிலே ஒரு வித இரக்க குணம் இருக்கிறது. தரித்திரத்தினால் எவ்வளவு பீடிக்கப்பட்டிருந்த போதிலும், தற்கால நாகரிக முறைகள் என்று சொல்லப்பட்ட எதனையும் அவர்கள் அறியாமலிருந்த போதிலும், அவர்கள், தங்களிடத்திலுள்ள அற்ப சொற்பத்தையும் எங்களுக்கு உற்சாகத்தோடு கொடுத்தார்கள். அப்பொழுது அவர்களுடைய முகத்திலே எவ்வளவு புன் சிரிப்பு! தங்களிடத்தில் இருப்பதைக் கொடுக்கிறோமே யென்பதில் எவ்வளவு திருப்தி!

நாங்கள், பெரிய மனிதர்கள் கோஷ்டி மாதிரி வீதிகள் வழியே மட்டும் ஊர்வலமாகச்சென்று திரும்பி வரவில்லை. நாங்கள் ஊர் பார்ப்பதற்கும் போகவில்லை யல்லவா? கிராமங்களின் நிலைமை எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்ளவும், எங்களால் என்னென்ன வகையில் சேவை செய்ய முடியும் என்பதைப் பற்றி ஒரு திட்டம் போட்டுக் கொள்ளவுமே சென்றோம். (இப்பொழுது என் தமிழ் நடை கூட எவ்வளவு மிடுக்காக இருக்கிறது பார்த்தாயா?) ஆகையால், எங்களுடைய நடவடிக்கைகளைக் கண்டு கிராம ஜனங்கள் ஆச்சரியப் பட்டதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

நாங்கள் முதலில் சென்ற கிராமத்தைப்பற்றி மட்டும் உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன். இந்தக் கிராமத்தில் சுமார் நூறு குடியானவர்கள் தான் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரே ஜாதியினர். இதனால் இங்கே ஜாதிச் சண்டைகள் ஒன்றுமில்லை. பிடாரியம்மன் கோயில் ஒன்று மட்டும் இருக்கிறது. இதற்கு ஒரு பூசாரி இருக்கிறான். இவன் இந்த ஊருக்குத் தனிக்காட்டு ராஜா. இவன் அடித்ததுஆடம்பரம். எங்களைப்பார்த்தவுடன் அவனுக்கு ஒருவித அச்சம் ஏற்பட்டது. தன்னுடைய செல்வாக்கு எங்கே போய் விடுமோ என்ற பயம் போலிருக்கிறது. பணக்காரர்கள், புரோகிதக் கூட்டத்தினர் முதலியோ

ருக்கு, பாமர ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அஞ்ஞான அந்தகாரத்தில் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லதுதானே.

நாங்கள் சுமார் பத்து, பன்னிரண்டு குடிசைகளில் நுழைந்து, ஜனங்கள் எப்படி தங்களுடைய தினசரி காலட்சேபத்தை நடத்துகிறார்கள் என்று பார்த்தோம். மகா கண்ட்ராவி! குடியானவர்களைப் பார்த்து, 'ஏன் இப்படி அழுக்குத் துணியோடு இருக்கிறார்கள்?' என்று சுலபமாகக் கேள்வி போட்டுவிட்டு, அதன் காரணத்தை ஆராயாமல் ஒதுங்கி விடுகிறோம். கிராம ஜனங்கள், அதிலும் பெண்கள் ஒரு துணிக்குமேல் எங்கே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அதிக துணிகளை வாங்க அவர்களிடத்தில் பணமேது? கந்தலையும் கிழிசலையும் உடுத்திக் கொண்டு ஏதோ மானம் போகாமல் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்திவிடாமல், அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டுமென்று சொல்வதெல்லாம் குதிரை முன்னே வண்டியைக் கட்டி ஓட்டுவது போலத்தான். இதற்காக, நாங்கள் என்ன ஏற்பாடு செய்தோமென்றால், ஒவ்வொருவரும் கையிலே ஒரு நோட் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய், ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கின்றனர், அவர்களுடைய சராசரி வருமானம் எவ்வளவு, அவர்களுடைய சராசரி செலவு எவ்வளவு, கடன் எவ்வளவு முதலியவைகளையெல்லாம் விசாரித்துக் குறித்துக் கொண்டோம். நாங்கள் குறித்துக் கொள்வதைப் பார்த்து, தங்களுக்கு ஏதோ ஆபத்து வந்துவிடப் போகிறதென்று பாவம், எளிய ஜனங்கள் மிகவும் பயந்தார்கள். சிலர் விஷயங்களை ஒளித்துச் சொல்லவும் பார்த்தார்கள். இவர்களைச் சரியானபடி சமாதானப் படுத்தி, உண்மையான தகவல்களை வாங்கிக் கொள்வது பிரம பிரயத்தனமாகி விட்டது. நாங்கள் சென்று பார்த்த பத்து பன்னிரண்டு குடிசைகளிலும் உள்ளவர்கள், ஒரே மாதிரியாக, வருமானத்திற்கு மிஞ்சி செலவு செய்யக் கூடியவர்களாகவும், கடனாளிகளாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்கு விமோசனந்தான் எப்பொழுது? இது தவிர, இவர்களிடத்தில் குடிப் பழக்கம் மிக அதிகமாயிருக்கிறது. சில சம்பந்தமான வேலையில்லாத காலத்தில், அன்றாடக் கூலி வேலை செய்து கிடைக்கிற பணத்தைக் கள்ளுக் கடைகளுக்குத் தொலைத்து விடுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் பிரசாரத்தின் மூலம் பரிகாரந் தேட முடியுமா? முடியவே முடியாது. சட்டத்தின் துணை அவசியம் தேவை. இதனால் சிலருக்குப் பாதகங்கள் ஏற்படலாம். அதற்காக என்ன செய்வது?

அப்பா கலெக்டர் உத்தியோகம் பார்த்தாரே தவிர, அவருக்கு இந்தக் கிராம ஜனங்களின் வாழ்க்கை நிலை தெரியுமா! அவர்களுடைய அன்றாட ஜீவனம் எப்படி நடக்கிறதென்பதை அவர் தெரிந்து கொண்டாரா? ஆனால் அவரைச் சொல்லி என்ன பயன்? அவர் எந்த ஏற்பாட்டின் கீழ் வேலை செய்கிறாரோ அந்த ஏற்பாடே அடியில்லாத குடுக்கைபோல் இருக்கிறது. இப்படி நான் எழுதுவதனால் அப்பாவுக்கு என் மீது கோபம் வரலாம். என்ன செய்வது?

நாங்கள் சேகரித்து வந்த இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு, ஒரு ஸ்திரீ தொண்டர் படையை அமைத்து, அதன் மூலம் கிராம சேவைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் போகிறோம்.

அன்புள்ள **கனகா**

மனிதரும் மற்ற உயிர்களும்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

மனித சிருஷ்டிக்கும், மற்ற சிருஷ்டிகளுக்கும் பரஸ்பர சம்பந்தம் எத்தன்மையது என்னும் பிரச்னை யானது அற்ப சொற்பமான தல்ல. இக் கால நாகரிகத்தை யுண்டாக்கிய வர்களும், அந் நாகரிகத்தில் மேம் பட்டவர்களாயு முள்ள மேனுட்டார் கள் இந்தக் கேள்வியை எப்படி மதித்து, இதற்கு என்ன உத்தரம் சொல்லி யிருக்கிருர்கள் என்பதைக் கவனிப்போம்.

கிறிஸ்துவ மதத்தைப் பற்றியவர் களுக் கெல்லாம், 'மனித சிருஷ்டியே பூரணமானது; அதற்கு மிஞ்சியது ஒன்றில்லை; மற்ற சிருஷ்டிகள் அதற் குக் கீழ்ப்பட்டன வாகவும், அதற்கு உபயோகமாகும் பொருட்டும் அமைக்கப்பட் டிருக்கின்றன' வென் னும் கொள்கையே இன்றும் சாதா ரணமா யுள்ளது.

இந்தக் கொள்கை இன்று நேற்று தோன்றிய தல்ல. மேனுட்டாரின் மதத்துடன் பிறந்து, அவர்கள் வாழ்க்கையுட் புகுந்து இருப்பதும் இதுவே. சில காலத்துக்கு முன் அமெரிக்காவின் பிரபல வேதாந்த விற்பன்னர் என்று மதிக்கப் பட்ட ஒருவர் பிரசங்கம் செய்தபோது, 'மனிதரிலும் மிஞ்சிய சிருஷ்டி யில்லை. மனிதன் உலகத்தில் கடவுளின் பிரதி பிம்பமாவான். அவனுக்கே மோட்ச முண்டு. மற்றச் சிருஷ்டிக ளெல்லாம் அவன் சௌகரியத்துக்காக ஏற் பட்டவை' என்று மொழிந் துள்ளார்.

இவ் வுலகமும், இதை யன்றி எவ் வளவோ வேறு உலகங்களும், அவற் றுட்பட்ட எல்லா ஜீவராசிகளும், பஞ்ச பூதங்களும் ஒரு மூல சக்தி யின் பரிணாம மென்றும், மனித ஜன்மத்திற்குக் கீழ்ப் பட்டும் மேற் பட்டும் எவ்வளவோ ஜன்மங்களிருக் கின்றன வென்றும், இவை யனைத் தும் மறுபடி அந்த மூல சக்தியில் லயமாக வேண்டியன வென்றும் அறியாதவர்கள் இந்துக்களுள் இல்லை என்றே சொல்லலாம்.

திரிவன, நிற்பன (சரம்—அசரம்) என்று பிராணிகளை இரு விதமாய்ப் பிரித்து, சர்வ சிருஷ்டிகளும் கடவு ளின் அம்சமென மதிக்கும் மனப் பான்மை, தம்முள் அறிவு தெரிந்த குழந்தை வயது முதல் உண்டாகி நம் தினசரி நடத்தையில் நாமறிந் தும் அறியாமலும் கலப்பதா யிருக் கிறது. இந்த மன நிலையையும் தற்கால நாகரிகர்களான மேனுட்டார் மன நிலையையும் ஒத்துப் பார்க்கும் போது, ஹிந்து நாகரிகத்தின் பழ மையும் முதிர்ச்சியும் வெளியாகும்.

இக் கால சாஸ்திர ஆராய்ச்சியின் போக்கு மேனுடுகளில் நம் புராதன வேதாந்த வழிக்கு ஒத்து வருகிற தென்னலாம். வொர்ட்ஸ் வொர்த் போன்ற ஞானிகளும், ஹக்ஸ்லி, டார்வின், ஸ்பென்ஸர் போன்ற விற் பன்னர்களும் மனுஷ சிருஷ்டி மற்றவைபோ லன்றித் தனிப்பட்ட தென்று சாதாரணமா யிருந்த கொள் கையை வேரோடு அசைத்து விட்டார்கள். மேலும் கண்ணிற் படாத சிறு உயிர்கள் எவ்வளவோ ஆகாச மெங்கும் நிறைந் திருக்கின் றன வென்றும், உயிரற்றன வென்று கருதப்படும் பொருள்கள் எல்லாம் உணர்ச்சியும், அறிவும், ஜீவனுமுடை யனவா யிருக்கின்றன வென்றும்,

சில வருடங்களாக மேனுட்டுச் சாஸ்திர விற்பன்னர்களால் கண்டு பிடிக்கப்பட, அந்த அபிப்பிராயத்தில் நம்பிக்கையும், சம்மதமும் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன் ஒரு ஆங்கிலேயப் பத்திரிகையில் வெளியாயிருந்த, 'மனிதரும் மற்றப் பிராணிகளும்' என்ற வியாசத்தில் மனிதனின் உபயோகத்துக்காக மற்றப் பிராணிகளிருக்கின்றன என்னும் எண்ணம் எவ்வளவு தப்பானதென்று காட்டப்பட்டிருந்தது. மனிதனுடன் சமத்துவமாயும், போட்டியிடுவனவாயும், தீங்கிழைப்பனவாயும் எவ்வளவோ உயிர்களிருக்கின்றன என்ற உணர்ச்சியானது, மனிதனின் தன் மதிப்பையும் திருப்தியையும் குறைக்கக் கூடியதென்று இப் பத்திரிகை சொல்லியிருக்கிறது.

அறிவே வன்மையாகும்; அறிவு பெருகப் பெருகச் சக்தி பெருகும் என்று எண்ண வேண்டியது போய், அப் பெருக்கினுல் மனிதன் தன் சிறுமையையும் பலவீனத்தையும் உணரும்படியாகிறதென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆயினும் இப்படி ஏங்குவதும், வாழ்க்கையில் வெறுப்போ, திகிலோ, கொள்வதும் சரியான மன நிலையல்ல. உலக அமைப்பிலும் சங்கற்பத்திலும், தான் ஒரு துகள் என்று மனிதன் உணர வேண்டியதே நேர்மை. இதுவே மனிதனுக்கு மன அமைதியை யுண்டாக்கும். இப்படி அறிவு பெருகவும், மன அமைதியுண்டாகுமானுல், மனிதனுடைய ஒழுக்கமும் தர்மமும் உயருமென்று இப் பத்திரிகை தேறுதல் கூறியுள்ளது.

'லான்ஸெட்' என்னும் பழைய மதிப்புள்ள வைத்திய சாஸ்திரப் பத்திரிகை ஒன்றில், மனித வாழ்க்கைக்குச் செடி பூண்டுகள் எவ்வளவு அவசியமென்று காட்டி எழுதியிருப்பதைக் கீழே தருகிறேன். இதனுல் மேனுட்டுச் சாஸ்திர விசாரம் இப்போது எவ்விதமாய் மாறி வருகிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

'மனிதன் ஜீவிப்பதற்கு வேண்டிய வாயுவையும் உணவையும் பூண்டுகள் கொடுக்கின்றன. மனிதனுக்கு இப் பூண்டுகள் செய்யும் உபகாரத்தை வேறு விதமாய் அமைத்துக் கொள்வது மனித சக்தியாற் கூடியதல்ல. ஆகையால் பூண்டுகளைப் பயபக்தி வாஞ்சையோடு மனிதன் மதிக்க வேண்டும். இறைச்சி தின்பவனும் சரி, தின்னுதவனும் சரி, பூண்டுகள் சகாயமில்லாவிட்டால் சீவிக்கமுடியாது. பூண்டுகளும் மற்றப் பிராணிகளினுல் சீவிக்க வேண்டியிருக்கிறது. பூண்டுக்கும் மனிதனுக்கும் ஜீவாதாரமானது ஒளியாகும். ஆகவே சூரியன் சில காலம் பூமியிலிராது போகுமானுல், பூமி ஒருயிருமில்லாது பெரும் பாழாகி விடும். சூரியனை பூஜித்தவர்கள் இவையெல்லாம் தெரிந்து பூஜித்தார்களா? தெரியாது பூஜித்தார்களா?'

இங்ஙனம் மேற் கூறிய பத்திரிகை கண்டு பிடித்திருக்கும் உண்மை இந்து வேதாந்தமாகிய ஏணியின் கீழ்ப்படியேயாகுமென்றுபதில் சொல்லலாம்.

நிற்க, இக வாழ்வின் சௌக்கியாதி போகங்களை எல்லாம் அநுபவித்துத் தெவிட்டிய பிறகு, மேனுட்டார்மனப்பான்மை புராதன இந்து வேதாந்த வழியில் இறங்கி யிருப்பது ஆழ்ந்து கவனிக்கத் தக்கது. இம் மனப்பான்மை மேனுட்டுச் சாதாரண ஜனங்களுள்ளும், இந்துக்களுட்போல் பரவி வலுப்பட்டு வருமானுல், மேனுட்டார் ஆதிக்கமும் தன்மையும் எப்படி மாறுமென்று யார் சொல்லக்கூடும்?

அறிவுத்துறை

போர்க்களத்தில்—

—"விஞ்ஞான போதகர்"

1. எதிரியின் பீரங்கி ஸ்தலத்தைக்கண்டு தாக்குவதெப்படி?

யுத்த களத்தில் எதிரிகள் மறைந்து நின்று பீரங்கிப் பிரயோகம் செய்வது வழக்கம். அவ்வாறு மறைந்து நின்று பீரங்கிப் பிரயோகம் செய்வோரின் சரியான இடந் தெரிந்து அவ்விடத்தைக் குறி பார்த்துத் தாக்க வேண்டுவதவசிய மல்லவா? கடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் எதிரிகளின் மறை விடங்களைக் கண்டு தாக்கிய விவரத்தைக் கவனிப்போம்.

எதிரிகள் மறைந்திருக்கு மிடத்திற்கு முன் பக்கமாகக் கொஞ்ச தூரத்தில் குறைந்தது மூன்று ஒலி பரப்புங் கருவிகளை அ, ஆ, இ (படத்தில்) ஒவ்வொன்றையும் சுமார் ½ மைல் தூரத்திற்கப்பால் மறைத்து வைத்து அவைகளை மேலதிகாரிகளிருக்கும் மூல ஸ்தலம் எ இடத்திற்குக் கம்பிகளால் இணைத்து வைக்கப் படுகின்றன. மூல ஸ்தலத்தில் அம் மூன்று ஒலி பரப்புங் கருவிகளிலிருந்து வரும் கம்பிகள் எ போன்றமூன்று மின்சாரக் கருவி (Galvanometers)களில் பொருத்தி வைக்கப் படுகின்றன. இம் மின்சாரக் கருவிகளில் வெளிச்சக் கதிர்களை பிரதிபிம்பிக்கச் செய்து



எதிரிகளின் பீரங்கி சப்தத்தை ஒலி பரப்புங் கருவிகளால் கிரகித்து அவைகளில் சப்தம் வந்துசேரும் முன் பின்னான நேரங்களைக் கணிக்கும் விதம்.

ஓடிக் கொண்டே யிருக்கும் சினிமா படச்சுருள் ஐ மீதுவிழுந்துகொண்டே யிருக்கும்படி செய்வார்கள். ஒலி பரப்புங் கருவிகள் மீது சப்தம் தாக்கப் படாமலிருந்தால் மின்சாரக் கருவி ஏ யிலிருந்து பிரதிபிம்பிக்கப்படும் வெளிச்சம் சினிமா படச்சுருளில் நேரான வரியை உண்டாக்கிக் கொண்டே யிருக்கும்.

இப்பொழுது, எதிரிகளின் பீரங்கிக் குண்டு வெளியாகியவுடன் அதன் குமுறுதலுடனுண்டான சப்த அலைகள் நாலா பக்கமும் பறந்தோடுகின்றன. அவ்வாறு ஓடிவரும் ஒலியின் அலைகள் மறைந்திருக்கும் அ, ஆ, இ ஒலிபரப்புங் கருவிகள் மீதும் தாக்குகின்றன. இக்கருவிகள் எதிரிகளின் இடத்திற்கு முன் பின்னாக வைக்கப்பட்டிருப்பதால் அவைகளில் சப்த அலைகளும் முன் பின்னாக வந்தடைகின்றன. அவைகள் வந்து சேருவதற்கொப்ப ஒலி பரப்புங் கருவிகளின் மின்சாரம் உண்டாகி மூலஸ்தலம் எ இடத்திலுள்ள மின்சாரக் கருவியைச் சிறிது அசைக்கின்றன. அவ்வாறு அசையவும் அவைகளில் பிரதிபிம்பிக்கப்படும் வெளிச்சமும் அசைந்தாட ஆரம்பிக்கிறது. அதனால் படச் சுருளில் எப்பொழுதும்போல நேர்கோடு ஏற்படாமல் திடீரென்று அசைந்த கோடுகள் ஏற்பட்டு பிறகு எப்பொழுதும்போல நேர் கோடுகள் உண்டாக்கப்படுகின்றன.



ஓடிக் கொண்டே யிருக்கும் சினிமா படச்சுருளில் பிரதிபிம்பிக்கப்படும் வெளிச்சக்கதிர் அசைந்தாடி யிருக்கும் விதம்.

மூன்று ஒலிபரப்புங் கருவிகளில் சப்த அலைகள் முன் பின் வந்து சேருவதால் ஓடிக்கொண்டே யிருக்கும் சினிமா படச்சுருளிலும் படத்தில் காட்டியவாறு அசைந்த கோடுகள் முன் பின்னாக ஏற்படும். இச்சினிமாச் சுருளில் உண்டாக்கப்பட் டிருக்கும் அசைந்த கோடுகள் இருக்கும் ஸ்தானத்திலிருந்து சப்தம் ஒலிபரப்புங் கருவிகளில் முன் பின்னாக வந்து சேர்ந்த நேரத்தைச்சரியாகக் கண்டு கொள்ள முடிகிறது.

இப்பொழுது, சப்தம் ஓடும் வேகத்தையும், மேலே குறிப்பிட்ட ஒலிபரப்புங் கருவிகளில் சப்தம் முன்

பின்னாக வந்து சேரும் நேரத்தையும் கொண்டு எதிரிகளின் பீரங்கி ஸ்தலத்தைக் கண்டு பிடித்து விடுகின்றனர். அதனைச் சில புள்ளி விவரத்துடன் விளக்குவோம்.

ஒலிபரப்புங் கருவி ஆ வில் சப்த அலைகள் முதலாவது வந்து சேர்ந்ததாக வைத்துக் கொள்ளுவோம். அ வில் $\frac{78}{250}$ விநாடிக்குப்பிறகும், இ யில் $\frac{124}{250}$ விநாடிக்குப் பிறகும் சப்தம் வந்து சேர்ந்ததாகவும் வைத்துக் கொள்ளுவோம். அதாவது கருவி ஆ வுக்கு சப்தம் வந்து சேர்ந்தவுடன், கருவி அ வை அடைய $\frac{78}{250}$ விநாடியும், கருவி இ யை அணுக $\frac{124}{250}$ விநாடியும் முடிய வேண்டியதா யிருக்கிறது. சப்தம் ஒரு மணிக்கு சுமார் 700 மைல் வீதம் அதாவது விநாடிக்கு சுமார் 343 கெஜ தூரம் வீதம் பாய்ந் தோடுகிறது. ஆகவே இக்கணக்குப்படி பீரங்கிச் சப்தம் ஆ வை அடைந்தபோது அ வை அடைய சுமார் 114 கெஜ தூரமும், இ யை வந்தடைய 182 கெஜ தூரமு மிருக்கின்றன.



பீரங்கி சப்தம் அ, ஆ, இ இவைகளை வந்தடைந்த நேரத்தைக் கண்டபின் எதிரியின் இடம் உ வை வரைந்துகாணும் விதம்.

இவ்வாறு கண்ட பிறகு அவ் விடத்து பூகோளப் படத்தை விரித்து அ வை மத்தியாக வைத்து 114 கெஜங் கொண்ட வட்டக் கோட்டையும், இ யை மத்தியாக வைத்து 182 கெஜ வட்டக் கோட்டையும் படத்தில் காட்டியவாறு வரைகின்றனர். இப்பொழுது ஆழ்ந்து கவனிக்கில் ஆ வை சப்தம் வந்தடைந்த அதே சமயத்தில் அ வின் வட்டக் கோட்டையும், இ யின் வட்டக் கோட்டையும் வந்தடைகிறதாகத் தெரிகிற தல்லவா? தற்போது இவ் விருவட்டக் கோட்டையும் ஆ வையும் தொட்டுப் போகக் கூடிய பெரியதோர் வட்டக் கோடிட்டால் அக் கோட்டின் மத்தி உ எதிரியின் பீரங்கி ஸ்தலமாகும்.



சென்ற மகாயுத்தத்தில் பிரான்ஸ் தேசத்தில் உண்மையில் உபயோகித்து எதிரிகளின் மறைவிடத்தைக் கண்டதை மேற்காட்டிய படம் உணர்த்துகிறது.

மேலே கண்ட கணக்குப்படி எதிரியின் இடம் 2361 கெஜ தூரத்தில், ஆவுக்கு 46 டிகிரி வட கிழக்கிலு மிருப்பதாகக் கண்டு கொள்ளப்படுகிறது. மூல ஸ்தலம் எப்பொழுதும் பூமிக்குக் கீழ் அமைக்கப்பட்டிருக்கும். கணக்குகள் யாவும் மூல ஸ்தலத்தில் சில விநாடிக்குள் போடப்பட்டு தங்கள் பீரங்கி ஸ்தலங்களுக்கு நொடிப் பொழுதில் டெலிபோன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அதன் பிறகு எதிரிகள் பாடு அதோ கதிதான்!

அநேகமாய் இதே விதமாகத்தான் தண்ணீரிலும் எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடிக்கின்றனர். ஒவ்வொரு கப்பலும் ஒலி பரப்புங் கருவியைத் தண்ணீர் அதனுள் செல்லா வண்ணம் அமைத்துத் தண்ணீருக்குள் ஆழத்தில் விட்டுவைப்பார்கள்.



தண்ணீரினுள் உபயோகிக்கும் ஒலி பரப்புங் கருவி

படத்தில் முதற் பகுதியில் காட்டியிருப்பதுபோன்றுதான் ஒலிபரப்புங் கருவியை அமைத்து உபயோகிக்கின்றனர். அக்கருவிக்கு ஒரு புறத்தில் வட்டமான தகடு ஒன்று இணைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தண்ணீருக்குள் சப்தம் அம்புக்குறி மார்க்கமாக வந்துகொண்டிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் படத்தில் மறுபகுதியில் மேலே காட்டியவாறு கருவியைத் தண்ணீரில் விட்டுவைத்திருந்தால் வரும் சப்த அலைகளை ஒலி பரப்புங் கருவி கிரகிக்க முடியாது, கருவி இரண்டாவதுவிதமாக அதாவது சேர்க்கப்பட்டிருக்கும் தகடு சப்த அலைகள் வரும் மார்க்கமாக வைக்கப்பட்டிருந்தால் வரும் சப்தத்தை வெகு சொற்பமாகக் காதுக்குக் கேட்டும் கேட்காதவிதமாகவும் கிரகிக்க முடிகிறது. கடைசியில் காட்டியவாறு தகடு மறுபுறத்திலிருக்குமாறு கருவி தொங்க விடப்பட்டிருந்தால் சப்தத்தை நன்றாய்க் கேட்க முடிகிறது. நீர் மூழ்கிக்கப்பல்கள் ஓடும்போது தண்ணீருக்குள் சப்தமின்றிச் செல்ல முடியாது. ஆகவே தண்ணீருக்குள் தொங்கவிடப்பட்டிருக்கும் ஒலி பரப்புங் கருவியை நாலா பக்கமும் மெதுவாகத் திருப்பி சப்தம் உண்டாகும் மார்க்கத்தைக் கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறு பல கப்பல்கள் ஆங்காங்கு நின்று அவைகளைச் சப்தம் வந்தடையும் மார்க்கங்களைக் கண்டு நீர் மூழ்கிக் கப்பல் இருக்கும் ஸ்தானத்தை ஏறக்குறைய சரியாக உணர்ந்து வெகு சமீபமானால் வெகு பிரகாசம் பொருந்திய வெளிச்சத்தை தண்ணீருக்குட் செலுத்தி நீர் மூழ்கிக்கப்பலைத் தகர்த்துவிடுகின்றனர்.

2. இரவில் எதிரிகள் பதுங்கி வருவதைக் காண்பதெப்படி ?

யுத்தத்தில் இரு எதிரிகளும் ஒருவர் இருக்குமிடம் மற்றவருக்குத் தெரியாமலிருந்து வேலை செய்ய வேண்டும்.

கப்பல்களிலிருந்து ஒலி பரப்புங் கருவியைத் தண்ணீரில் தொங்க விடுவதைக்காட்டுகிறது.

முக்கியமாக இரவில் வெளிச்சம் முதலிய எவ்வகைத் தோற்றமுமின்றி மறைவாகயிருந்து கொண்டு எதிரிகள் பதுங்கிப்போவதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதற்காக ஒரு நுட்பமான (Boy's Radio Micrometer) மின்சாரக் கருவியை உபயோகிக்கின்றனர்.

இருவித உலோகக் கம்பிகளை எடுத்து அவைகளை நுனியில் சேர்த்து ஒரு நுனிப்பாகத்தை உஷ்ணப்படுத்தினால் அக்கம்பிகளில் மின்சாரம் தானாக உண்டாகிறது. இவ்வாறு அவ்விரு உலோகக் கம்பிகளை அதிகமாகச் சேர்த்து சூடுண்டாக்கினால் அதிக மின்சாரம் உண்டாகும். இவ்வுண்மையைத் தான் மேற்கூறிய கருவியில் உபயோகித்துக் கொள்ளுகின்றனர். 'ஆண்டிமனி' (Antimony) 'பிஸ்மத்' (Bismuth) என்ற இருவித உலோகத் துண்டுகளை நூற்றுக் கணக்காகச் சேர்த்துக் கூட்டுக் கம்பியாக்கி படத்தில் காட்



எதிரிகள் இரவில் பதுங்கி வருவதை உணர்த்தும் கருவி

டியவாறு எ, ஏ மாதிரி தொங்கவிடப் படுகிறது. அவைகளின் கீழ்ப்பாகத்தில் கருப்பான செப்புத் தகடு ஐ சேர்த்து வைக்கப் படுகிறது. அவைகளின் மேற்பாகம் மெல்லிய செம்புக் கம்பி இயால் இணைக்கப் பட்டு, இச் செம்புக் கம்பி மறுபடியும் வெகு மெல்லிய ஒருவித கண்ணாடி நூல் அமூலமாய்த் தொங்கவிடப் பட்டிருக்கும். இந்நூலில் ஒரு சிறு இலேசான முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டு ஆ ஒட்டப்பட்டிருக்கும். உ, ஊ என்பவை மிகவும் சக்தி வாய்ந்த இருவித காந்தங்கள்.

கருப்பான வஸ்துக்கள் எப்பொழுதும் உஷ்ணத்தை அதிகமாகக் கிரகிக்க வல்லவை. ஆகவே கருப்புத் தகடு ஐயில் உஷ்ணம் பட்ட மாத்திரத்தில் எ, ஏ இருவித உலோகக் கம்பிகளில் மின்சாரம் தானாக உண்

டாகி இக்கம்பியில் ஓடுகிறது. அவ்வாறு பின்சாரம் உண்டாகியோடவே உ, ஊ வின் காந்த சக்தியால் அக்கம்பி இருபுறமும் இழுக்கப் படுகிறது. கண்ணாடித் துண்டு ஆ வில் வெளிச்சம் பிரதிபிம்பிக்கச் செய்திருந்தால் கம்பி இ இழுக்கப் பட்டுத் திரும்பியதும் வெளிச்சமும் இரண்டு பங்கு அசைந்து செல்லும். வெளிச்சம் உபயோகிக்க சாத்தியப் படாவிடில் சிறிய கண்ணாடியிருக்குமிடத்தில் கடிகார முள்போன்ற கூரிய இலேசான கம்பியைச் சேர்த்து வைத்தால் அது அசைந்து காட்டும் சுமார் ஒரு மைலுக்கப்பால் ஒரு மெழுகு வர்த்தி எரிந்தாலும் அதனாலுண்டான அவ்வளவு அற்ப உஷ்ணத்தின் பயனாய் இக்கருவி அசைந்து காட்டும் ஆற்றலுள்ளது. ஆகவே இக்கருவி வைக்கப் பட்டிருக்கும் இடத்திற்கு முன்பாக எதிரிகள் வெகு தூரத்தில் அரவமின்றிப் பதுங்கி வந்தாலும் அவர்கள் தேகத்தின் பாலேற்படும் உஷ்ணத்தின் பயனாய் இக்கருவி அசைந்து அவர்கள் வரும் மார்க்கத்தைக் காட்டிக் கொடுத்து விடுகிறது.

3. குண்டு பாய்ந்தோரைக் குணப் படுத்துவதெப்படி ?

'எக்ஸ்ரே' என்னும் வெளிச்சம் (X-ray) கண்ணுக்குப் புலனாகாத வெளிச்சங்களின் ஒரு பகுதி. இது அநேக உலோகங்களினூட் சென்று அவைகளின் உட் பாகங்களைக் கண்ணாடி போல் காட்டும்.

ஈயத்தில்	0.2	அங்குல தூரம்	செல்லும்
தகரம்	2	,,	,,
உருக்கு, இரும்பு	3	,,	,,
அலுமினியம்	6	,,	,,
மரக்கட்டை	16	,,	,,

இவ் வெளிச்சத்தால் தேகத்தின் உட்புறத்தில் ஏற்பட்ட குறைகளை நேரில் தெரிந்து அதன் சரியான இடத்தையும், நிலைமையையும் அறிந்து தக்க முறைகளைக் கையாடலாம். யுத்தங்களில் துப்பாக்கிப் பிரயோகங்களால் குண்டுகள் மனிதர்களின் அவயவங்களினூட் சென்று தங்கி சகிக்க வொண்ணாத் துயரங்களைத் தந்தன. குண்டுகளி லிருக்கும் சரியான ஸ்தானங்கள் தெரியாமல் அவயவங்களைப் பலவாறு அறுத்து வீணாக நோயாளியை இறக்க வைப்பதுமுண்டு. ஆனால் 'எக்ஸ்ரே' வெளிச்சத்தைக் கொண்டு குண்டு தங்கியிருக்கும் ஸ்தானத்தைச் செவ்வனேயறிந்து அந்த ஸ்தானத்தில் மாத்திரம் அறுத்து குண்டுகளை வெளியேற்ற முடிகிறது. இதனால் சாகும் போர் வீரர்களைச் சாகாமலாக்கிவிட முடியும். கையில் குண்டு பாய்ந்து தங்கியிருக்கும் இடத்தை 'எக்ஸ்ரே' வெளிச்சம் காட்டியிருப் பதைப் படத்தில் பார்க்



"எக்ஸ்ரே" உபயோகத்தால் கையின் உட்பாகம் தோன்றும்

கலாம். இப்படியே ஆகாய விமானங்களுக்குச் சேர்க்கும் பலகைகள் உட்புறங்களில் வெடிப்புகளிரா வண்ணம் இவ்வெளிச் சத்தைக் கொண்டு பார்க்க முடிகிறது. செய்து முடிந்த குண்டுகளையும், மற்றச் சண்டை ஆயுதங்களையும் போலிகளாயிரா வண்ணம் பிளந்து கெடுத்து விடாமல் அவைகள் சரியாகச் செய்யப் பட்டிருக்கின்றனவா வென்று அறிந்து கொள்ள முடிகிறது.

4. விஷப்புகைக்குத்தப்புவதேப்படி?

தற்கால யுத்தங்களில் பெரும்பாலும் விஷப்புகையை உபயோகித்து ஜனங்களை ஆயிரக் கணக்காய் நொடிப் பொழுதில் மாய்த்து விட எத்தனித்து விட்டனர். இதனால் உலகமெங்கும் (இந்தியாவிலுங் கூட) இவ்வித அபாயத்தினின்றும் தப்பிக்கும் உபாயத்தைத் தேட முயன்று விட்டனர். விஷப்புகைக்குத் தப்பும் முக மூடிகளை யுண்டாக்கிப் பல விடங்களில் ஒத்திகை வைத்தும் வருவதை பத்திரிகையில் படிக்கிறோம்.

சாதாரணமாக விஷப் புகையை ஆகாய விமானங்களிலிருந்து பூமியில் பரவும் படி செய்கிறார்கள். விஷப் புகைகளில் மிகவும் கொடியது 'குலோரின்' (Chlorine), 'பாஸ்ஜென்' (Phosgene) முதலிய வாயுக்கள். ரசாயன நிபுணர்கள் அனேக விஷ வாயுக்களை உண்டாக்கி விஷப் புகை யுத்தங்களுக்கு உதவி விட்டு அவர்களே தற்போது அவைகளினின்றும் தப்பும் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. விஷப் புகை இலேசாக உபயோகிக்கப் பட்டால் அதனின்று தப்புவிக்க இலேசான வழியுண்டு. விஷப்புகை நம்மை வந்து அடையா வண்ணம் இறுக மூடக் கூடிய அறையில்லாத போது உடனே எவ்வளவு உயரமான இடங் கிடைக்குமோ அவ்விடத்திற்கு ஓடிப் போய் நின்று கொண்டு ரப்பர், பஞ்சு, அல்லது துணியை சோடா உப்பு கலந்த தண்ணீரில் நன்றாய்த் தோய்த்துச் சிறிது பிழிந்து அதனை முகத்தில் வைத்து மூச்சு இழுக்க வேண்டும். அப்படிச் செய்தால் சோடா உப்பு நீர் புகையின் விஷத்தைக் கிரகித்து விடுகிறது. இந்த உபாயம் வெகு சொற்ப விஷப்புகை உபயோகிக்கப்படுங் காலத்தில் பயனுண்டு. அதிகமான பல வித விஷப் புகைகள் உபயோகிக்கப் பட்டால் பட்டாளத்தில் உபயோகிக்கும் முக மூடி போல அணிய வேண்டும். இம்முக மூடியில் சுவாசம் நம்மை வந்தடையுமுன் விஷப்புகை பலவித வஸ்துக்கள் வழியாகச் சென்று விஷத்தின் பலத்தை இழந்து விடுகிறது.



விஷப்புகை முக மூடியின் அமைப்பின் தன்மை

படத்தில் காட்டியிருப்பதில் நீண்ட குழாய் வழியாகத்தான் நாம் சுவாசம் இழுக்க வேண்டும். D யின் வழியாகப் பிராண வாயும் விஷப்புகையும்

கலந்து உள்ளே வருகிறது. A யும், C யும், சாதாரண மர அடுப்புக் கரி வைத்துள்ள பாகம் இரண்டுக்கும் ஊடே D யில் சோடா உப்பும் சுண்ணும்பும் வைக்கப்பட்டிருக்கின்றன. மரக்கரி அநேக மரக்கரி சம்பந்த மான விஷப்புகைகளைக் கிரகித்துக் கொள்ளுகிறது. சோடா உப்பு குலோரின் முதலிய அநேக விஷ வாயுக்களைக் கிரகித்துக் கொள்ளுகிறது. இதனால் விஷ வாயு கலவாத பிராண வாயுமாத்திரம் சுவாசிக்க ஏற்படுகிறது. சுவாசத்தை வெளியிட V என்ற குழாய் உண்டு. இதன் வழியாக நம் சுவாசத்தை வெளியே பல மாகத் தள்ளி விடத்தான் முடியும். வெளியினின்று எதனையும் அநுமதிக்காது. E முகக் கண்ணாடி முகமூடி முகத்தைப் பலமாக, இறுகக் காற்று உட் பிரவேசிக்கா வண்ணம் கட்டிக் கொள்ள ஏதுவுண்டு.

இளைஞர்களைச் சரியான பாதையில் கொண்டு செலுத்துவது பெரியோர் கடமை. அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது சிறியோர் செயல்.

ஃ ஃ ஃ

நம்மிடத்திலே பெரிய மூளை இருக்கிறது; ஆனால் அதில் சிறிய நம்பிக்கை. ஏராளமான அறிவு; ஆனால் சொற்ப மான ஞானம். கலாவிற்பன்னன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் ஒரு துளி அன்பு கூட நமது இருதயத்தில் இல்லையே.

ஃ ஃ ஃ

காரியதரிசியா யிருப்பது சுலபம்; ஆனால் டிரஸ்டியாக இருப்பது கடினம்.

ஃ ஃ ஃ

நீ தேகாரோக்கியத்தோடு இருக்க வேண்டுமானால், பிறருடைய நோய்களுக்குப் பரிகாரந் தேடு. கடவுளிடத்தி லிருந்து நீ மன்னிப்புக் கோர வேண்டுமானால் நீ பிறருடைய குற்றங்களை மன்னித்து விடு.

இப்படியும் நடக்குமா ?

லெனினின் பத்தினியான க்ரூப்ஸ்காயா என்பவர், இப்பொழுதும் அதாவது 70 வயதுக்கு மேலாகியும்-சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறார். இவருக்குத் தினசரி சுமார் முந்நூறு கடிதங்களுக்கு மேல் வருகின்றன. இவையனைத்திற்கும் தம் கைப்பட பதில் எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

எவரஸ்ட் மலைச் சிகரத்தைச் சென்று பரிசீலனை செய்வதற்காக 1921, 1922, 1924, 1933, 1935, 1936 ஆகிய இத்தனை வருஷங்களில் யாத்திரைக் கூட்டங்கள் சென்றன. 1938ம் வருஷம் ஒரு யாத்திரைக் கூட்டம் சென்றிருக்கிறது. ஆனால் இதுவரை ஒரு கூட்டமாவது மலையுச்சியை யடையவில்லை.

ஃ ஃ ஃ

துருக்கியில் முஸ்தபா கெமாலின் உருவச் சிலைகள் 22,000 இருக்கின்றன.

ஃ ஃ ஃ

மாஜி கெய்ஸருக்கு ஜெர்மனியின் ஸ்வஸ்திகைச் சின்னம் பிடிப்பதே யில்லையாம்.

ஃ ஃ ஃ

உலகத்து மொத்த ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் தான் மேஜைமீது உணவு கொள்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஜெர்மனியில் புர்க் ஹோஹின்ஸ்டீன் என்ற இடத்தில் ஒரு பள்ளிக் கூடம் இருக்கிறது. இங்கே படிக்கிற பிள்ளைகள் இங்கிலீஷ் பாஷையைத் தவிர வேறொன்றையும் பேசக் கூடாதென்பது கட்டளை. தப்பித்தவறி ஒரு ஜெர்மன் வார்த்தையை உபயோகித்தால் 5 அணு அபராதம்.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் பீடர் ஓடல் என்ற ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் தன் கால் விரல்களினாலே டைப் அடிக்கிறான்.

ஃ ஃ ஃ

ஆஸ்டின் மோடார் தொழிற்சாலையில் இருபதினாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

கப்பற் றொழில்—புராதன காலத்தில்

——வி. நாகேசுவர சாஸ்திரி

இப்பொழுது நாம் கப்பலேறுவதற்குக் கூட பயப்படுகிறோம். ஆனால் நமது முன்னோர்கள் முன்பின் அறியாத ஊர்களுக்கெல்லாம் கப்பல்களில் ஏறிச் சென்றிருக்கிறார்கள். ஆங்காங்குக் கண்ட அரிய பொருள்களையெல்லாம் கொண்டு வந்து நமது நாட்டிலே குவித்திருக்கிறார்கள். நமது நாட்டிலிருந்த பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி, அந்நாட்டாருடைய பொறாமையை எழுப்பியிருக்கிறார்கள்.

இப்படி இவர்கள் கப்பல்களில் ஏறிச் சென்றது கூட விசேஷமில்லை. கப்பல் கட்டுந் தொழிலில் இவர்கள் விசேஷ நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள். கப்பல் நிர்மாணத்தைப் பற்றிப் பல நூல்களையும் நமது பெரியோர்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். முற்காலத்தில் இந்தத் தொழிலிலே திறமை பெற்றவர்கள், சமூகத்தினரால் மதிக்கப்பட்டுவந்தார்கள். இவர்கள், கப்பல் கட்டுவதற்கு என்னென்ன விதமான மரங்கள் உபயோகிக்கப்பட வேண்டுமென்பதையும், அவை எங்கெங்கே கிடைக்குமென்பதையும், ஆற்று மார்க்கங்களில் செல்லக்கூடிய கப்பல்கள் இன்னவிதமாகக் கட்டப்பட வேண்டுமென்பதையும், கடல் மார்க்கமாகச் செல்லக்கூடிய கப்பல்கள் இப்படி நிர்மாணிக்கப்படவேண்டுமென்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள். இது தவிர, இ[illegible]க காலத்தில் இன்ன மாதிரியான கப்பலில் சென்றால் சௌகரியமாக இருக்குமென்பதையும் ஆராய்ந்து வைத்திருந்தார்கள். ~~சிலவற்றை இங்குக் கவனிப்போம்.~~

கப்பல்கள், சாமான்ய கப்பல்களென்றும் விசேஷ கப்பல்கள் என்றும் இருவகைப் படுத்தப் பட்டன. ஆற்று மார்க்கங்களிலும் சிறு வாய்க்கால்களிலும் செல்வன யாவும் சாமான்யக் கப்பல்கள்; கடல், சமுத்திரம் முதலியவைகளில் செல்லக்கூடியன விசேஷக் கப்பல்கள். சாமான்யக் கப்பல்கள், நீளம், அகலம், உயரம் இவைகளுக்குத் தகுந்தாற்போல் பத்து விதங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவை வருமாறு:—

பெயர்		முழ நீளம்	முழ அகலம்	முழ உயரம்
1. க்ஷுத்ரா	—	16	4	4
2. மத்யமா	—	24	12	8
3. பீமா	—	40	20	20
4. சபலா	—	48	24	24
5. ப[illegible]லா	—	64	32	32
6. பயா	—	72	36	36
7. தீர்க்கா	—	88	44	44
8. பத்ரபுடா	—	96	48	48
9. கர்ப்பரா	—	112	56	56
10. மந்தரா	—	120	60	60

இவற்றில் பீமா, பயா, கர்ப்பரா ஆகிய மூன்று விதமான கப்பல்களும் துரதிருஷ்டத்தைக் கொடுக்கக்கூடியவை என்று சொல்லப் பட்டன. ஒருகால், இவைகளின் நீளம், உயரம், அகலம் முதலியன நீரில் சௌகரியமாகச் செல்லக் கூடிய தன்மையில் இல்லையென்பதற்காக இங்ஙனம் கூறப்பட்டிருக்கிறது போலும்.

இனி விசேஷக் கப்பல்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இவை தீர்க்க கப்பல்கள் என்றும் உன்னத கப்பல்கள் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அகலம், உயரம் இவைகளைக் காட்டிலும்

நீளம் அதிகமா யுள்ள கப்பல்கள் தீர்க்கக் கப்பல்கள் என்றும், நீளம், அகலம் இவைகளைக் காட்டிலும் அதிக உயரம் உடைய கப்பல்கள் உன்னதக் கப்பல்கள் என்றும் அழைக்கப் பட்டன.

தீர்க்கக் கப்பல்கள்

	பெயர்		முழ நீளம்	முழ அகலம்	முழ உயரம்
1.	தீர்க்கிகா	....	32	4	3 1/5
2.	தரணீ	....	48	6	4 4/5
3.	லோலா	....	64	8	6 4/5
4.	கட்வரா	....	80	10	8
5.	காமினி	....	96	12	9 2/5
6.	தரீ	....	112	14	11 1/5
7.	ஜங்காலா	....	128	16	12 4/5
8.	ப்ளாவினீ	....	144	18	14 2/5
9.	தாரிணீ	....	160	20	16
10.	வேகினி	....	176	22	17 3/5

உன்னதக் கப்பல்கள்

	பெயர்		முழ நீளம்	முழ அகலம்	முழ உயரம்
1.	ஊர்த்வம்	....	32	16	16
2.	அனூர்த்வம்	....	48	24	24
3.	ஸ்வர்ணமுகி	....	64	32	32
4.	கர்ப்பிணி	....	80	40	40
5.	மந்தரா	....	96	48	48

இப்படிப் பல வகையான கப்பல்கள் பொருள்களையும் பிரயாணிகளையும் ஏற்றிக் கொண்டு, ஆறுகளிலும் கடல்களிலும் சென்று வந்தன.

கப்பல்களை எப்படி அழகுபடுத்துவ தென்பது பற்றியும், பிரயாணிகளுக்கு என்னென்ன விதத்தில் சௌகரியங்கள் செய்து கொடுப்ப தென்பது பற்றியும், 'யுக்தி கல்பதரு' என்ற புராதன நூல் ஒன்று விரிவாகக் கூறுகிறது. தங்கம், வெள்ளி, செம்பு, இவை மூன்றின் கலப்பு ஆகிய இந்த உலோகங்கள், கப்பல்களுக்கு உபயோகப் படுத்தப் பெற்றன. நான்கு பாய் மரங்களை யுடைய கப்பல்களுக்கு வெண்மை வர்ணமும், மூன்று பாய் மரங்க ளுடையனவற்றிற்குச் சிவப்பும், இரண்டு பாய்மரங்க ளுடையனவற்றிற்கு மஞ்சளும், ஒரு பாய்மர முள்ளதுக்கு நீலமும் பூசப் பெற்றன. கப்பலின் முன் பாகம், சிங்கம், புலி, பாம்பு, எருமை, அன்னப்பட்சி முதலிய பல உருவங்களாகச் சித்திரிக்கப்பட் டிருந்தன. இதனால் தச்சர்களும் ஓவியக்காரர்களும் தங்கள் திறமையைக் காண்பிப்பதற்கு நிறையச் சந்தர்ப்பம் இருந்தது.

தற்காலத்துக் கப்பல்களில் காபின் (Cabin) என்ற தனி யறைகள் இருப்பது போல் முற்காலத்துக் கப்பல்களிலும் இருந்தன. இந்தக் 'காபின்'

சர்வாதிகாரிகள் உண்பது எப்படி?

—"சாமி"

உலகத்திலே ஐந்து சர்வாதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் முறையே, ஜப்பானிய சக்ரவர்த்தியான மிகாடோ, முஸோலினி, ஹிட்லர், ஸ்டாலின், கெமால் பாஷா ஆகியோர். இவரில் மிகாடோ, சட்ட வரம்புக்குட்பட்ட ஒரு பரம்பரைச் சக்ரவர்த்தியாயிருந்த போதிலும், அந்தச் சட்டப்படி சர்வாதிகாரங்களும் அவரிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருப்பதால் அவரையும் ஒரு சர்வாதிகாரியென்றே சாதாரணமாகச் சொல்வதுண்டு. இந்த ஐவரும் 399,894,000 ஜனங்களை ஆள்கிறார்கள்.

மிகாடோ இவருடைய அரச பரம்பரை 2500 வருஷ பழமையும்

களுக்கு மந்திரங்கள் என்று பெயர். இவற்றின் விசாலத்தையொட்டி கப்பல்கள், சர்ப்ப மந்திரக் கப்பல்கள் என்றும், மத்திய மந்திரக் கப்பல்களென்றும், அக்ர மந்திரக் கப்பல்களென்றும் மூன்று வகையாக வகுக்கப் பட்டன.

சர்ப்ப மந்திரக் கப்பல்கள் விசாலமானதும், கப்பலின் பெரும்பகத்தை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதுமான 'காபின்' களை உடைத்தாயிருந்தன. கப்பலின் மத்திய பாகத்தில் 'காபின்' களை உடைய கப்பல்களுக்கு 'மத்திய மந்திரக் கப்பல்கள்' என்று பெயர். கப்பலின் முன் பாகத்தில் 'காபின்' களையுடைய கப்பலுக்கு 'அக்ர மந்திரக் கப்பல்' என்று பெயர். கோடை காலத்தில் பிரயாணஞ் செய்வதற்கும், கடற்படை யுத்தத்திற்கும் இந்த அக்ர மந்திரக் கப்பல்களே பெரும்பாலும் உபயோகிக்கப் பெற்றன. வேத காலத்திலும், ராமாயண, மகாபாரத காலத்திலும் இத்தகைய கப்பல்கள் அதிக போக்கு வரத்தில் இருந்தனவென்று தெரிகிறது. துக்ரன் என்ற ராஜரிஷி, புஜ்யு என்ற தனது மகனை, சத்துருக்களைச் சம்ஹாரம் செய்ய அனுப்பியது இந்த அக்ர மந்திரக் கப்பலில்தான் என்று ரிக்வேதத்தினின்று தெரிகிறது. இப்படியே ராமாயணத்திலும் மகாபாரதத்திலும் பல உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம். புத்த ஜாதகக் கதைகளிலும், வியாபாரிகள் பலர் தங்கள் விற்பனைப் பொருள்களை ஏற்றிக் கொண்டு, கப்பல்களில் கடல் கடந்து தூர தேசங்களுக்குச் சென்றதாகக் காணப் படுகிறது.

ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னரேயே, நமது நாட்டில் கப்பல் கட்டுந்தொழிலும், கப்பல் போக்கு வரத்து வியாபாரமும் மிகவும் உன்னத நிலையில் இருந்தன. சமீப காலத்தில்—அதாவது பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வந்து அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொள்கிற வரையில் கூட—கிழக்கு வங்காளம், மேற்குக் கரையோரமாகவுள்ள ஆலப்புழை, கோவா முதலிய இடங்களில் கப்பல் கட்டுந் தொழில் மூலமாகப் பலர் ஜீவனஞ் செய்து வந்தார்கள். இதற்குப் பிறகு, இந்த அரிய தொழில் நசித்துப் போனது ஒரு துக்ககரமான கதை. இதைப் பற்றிச் சந்தர்ப்பம் வந்தபோது கூறுவோம்.

பெருமையும் உடையது. இப்பொழுதுள்ள மிகாடோவுக்கு ஹிரோஹிடோ என்று பெயர். இவர் எவ்வித சாராய வகைகளையும், புகையிலை முதலியனவற்றையும் உபயோகிப்பதில்லை. இவருடைய ஆகாரம் மிகவும் நிதானமாகவே இருக்கும். சாப்பாட்டுக்கு இடையே, டீ முதலிய ஒன்றையுமே சாப்பிட மாட்டார். இவர் காலையில் சரியாக ஆறு மணிக்கு எழுந்து விடுகிறார். தாமே க்ஷவரஞ் செய்து கொள்கிறார். சக்ரவர்த்தினியுடன் அந்நிய நாட்டு முறையில் காலை ஆகாரம் உட்கொள்கிறார். கொஞ்சம் பழம், ரொட்டி, காபி இவை தான் காலை ஆகாரம். பகல் போஜனமும் இப்படித்தான் லேசாக இருக்கும். அநேகமாக இவர் மாமிச ஆகாரம் உட்கொள்வதில்லை.

முஸோலினி இவருடைய காலை ஆகாரம் மிகவும் சொற்பமானது. பால் சேர்க்காத காபியும் சிறு துண்டு ரொட்டியும் உட்கொண்டுவிட்டு, இவர் குதிரை சவாரி செய்யப் புறப்பட்டு விடுவார். பகல் ஒரு மணிக்குமேல் கொஞ்சம் பாலும் பழமும் ஆகாரமாக எடுத்துக் கொள்கிறார். இவருக்கு திராட்சப்பழம் என்றால் நிரம்பப் பிரியம். இவருக்கு மட்டும் இது சப்ளை செய்யப்படுகிறது. இவர் குடிப்பதுமில்லை.; சிகரெட் முதலியன பிடிப்பதுமில்லை.

ஹிட்லர் இவர் காலை 6–30 மணிக்கே காலை ஆகாரம் உட்கொண்டு விடுகிறார். அது மிகச் சொற்பந்தான். பகல் உணவு உண்ணும் போது, தினம் குறைந்தது பத்து விருந்தாளிகளாவது கூட இருந்து சாப்பிடுவார்கள். ஆனால் ஹிட்லர் மட்டும் அதிகமாக ஒன்றுஞ் சாப்பிடமாட்டார். கொஞ்சம் பழ ரசத்தையும் சில கறிகாய்களையும் உட்கொள்வார். எப்பொழுதும் இவர் மாமிச ஆகாரமே உட்கொள்வதில்லை. பிரயாணஞ் செய்கிற போது, சுத்த ஜலம் குடிப்பதற்கு எடுத்துக் கொண்டு செல்வார். இவர் சாப்பிடுகிற போது மெதுவாக மென்று மென்றுதான் சாப்பிடுவார். இவருக்கு அதிகப் பிரியமுள்ளது சோறு, உருளைக் கிழங்கு வறுவல் முதலியன.

ஸ்டாலின் ஸ்டாலின் சாப்பிடுகிற ஆகாரம் எதுவும் முன்னர் பரிசோதிக்கப் பட்ட பிறகுதான் அவருடைய மேஜைக்குச் செல்கிறது. ஆட்டிறைச்சி, மீன் முதலியவைகளில் இவருக்கு நிரம்பப் பிரியம். தித்திப்பு பட்சணங்களை இவர் நிறைய உண்பார். இவர் சாராயம் ஓரளவுக்குட்பட்டுக் குடிப்பார்.

கெமால் பாஷா இவர் தமது ஆகார வகைகளில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. இவருக்கென்று தயாரிக்கப்பட்ட ஆகாரம் ஒவ்வொன்றையும் முதலில் ஒருவர் ருசி பார்த்து விட்டுப் பிறகு தான் கெமாலிடம் அனுப்பப் படுகிறது. இவர் மாமிசம் நிறைய உண்பார். குடிவகைகளில் இவருக்கு அதிகப் பிரியம். தவிர, சுருட்டும் நிறையப் பிடிப்பார். இதனால் இவருக்கு அடிக்கடி வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

பெண்ணின் உள்ளம்

—வி. தேவாச்சாரியன்

இது கட்டுக் கதை யல்ல வென்றும் நடந்த விஷய மென்றும் ஸ்ரீ தேவாச்சாரியன் தெரிவிக்கிறார்.

மாலை மணி ஏழு. தி—ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றது. வயது சுமார் இருபது இருக்கும். ஓர் யுவதி கையில் ஓர் குழந்தையுடன் வண்டியில் ஏறினாள். 'என் புருஷன் இந்த ரயிலில் வருவதாகச் சொன்னார். அவரைக் காணவில்லை. அவர் வருவார் என்று நம்பி குறிப்பிட்ட இடத்திற்கு டிக்கட்டும் வாங்கவில்லை' என்று துக்கமான குரலில் கூறினாள்.

'என்ன அவசர ஜோலியோ? என்னமோ வரத்தவறியிருக்கலாம்' என்று பதில் சொன்னேன்.

வண்டியும் ஓரிரு பர்லாங் சென்றது. ஒருவாறு அந்த யுவதி தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு 'இந்தக் குழந்தையின் தகப்பனாருக்கு போலீஸில் வேலை. எனக்காக வராவிட்டாலும் இந்தக் குழந்தைக்காகவாவது வரக் கூடாதா?' என்றாள்.

'ஏன் அம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டேன்.

அவள் 'நான் என் புருஷருக்குஇரண்டாந்தாரம். நான் குடித்தனம் செய்ய ஆரம்பித்ததும், என் புருஷனை என் மூத்தாள் எப்படியோ வசஞ்செய்து கொண்டு விட்டாள். என்னை என் புருஷன் படுத்தும் பாடு சொல்லி முடியாது. மாமன் மாமி உபத்ரவம் வேறு' என்று பதில் சொன்னாள்.

'ஏற்கனவே ஓர் மனைவி அவருக்கு இருப்பதை அறிந்திருந்தும் ஏன் கலியாணம் பண்ணிக் கொண்டீர்கள்', என்று நான் வினவினேன்.

'எனக்கு ஒரு குறைவும் வராமல் பட்சமாக நடத்துவதாகவும், பிணக்கு நேரிட்டால் ஜீவனாம்சம் கொடுத்து விடுவதாகவும் சொன்னார். என் தந்தை அவருடைய வார்த்தையை நம்பிவிட்டார்' என்று மறுமொழி கூறினாள்.

'உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?' என்பது என் அடுத்த கேள்வி.

அதற்கு 'நான் ஹையர் எலிமெண்டரி டிரெயினிங் படித்திருக்கிறேன். பரீக்ஷையிலும் தேறிவிட்டேன்' என்பது அவள் பதில்.

நான்—*டிரெயினிங் படித்தது கலியாணத்திற்கு முன்னா? பிறகா?*

யுவதி—*அந்தக் கூத்தை ஏன் கேட்கிறீர்கள்? என் புருஷன் அடிக்கடி உத்தியோகத்தின் மேல் வெளியில் போய்விடுவதால், என் மாமி மாமன் இருவரும் வீட்டில் படுத்தும் பாடு தாங்க முடியாமல் இருந்தது. என் புருஷரோ தாய் தந்தையின் வார்த்தையைக் கேட்டு என்னை அடித்து உபத்திரவிக்க ஆரம்பித்தார். ஒரு நாள் இரவு கிணற்றில்கூட விழுந்து விட்டேன். என்னைத் தூக்கி விட்டு விட்டார்கள். அறிந்தோ அறியாமலோ என்னுடன் சந்தோஷமாக விருந்த சமயத்தில் நான், அவரை*

என்னை டிரெயினிங்குக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டேன். அவரும் சம்மதித்து அனுப்பினார். ஒரு வருஷத்திய படிப்பு முடிந்தது. திடீரென்று ஒரு நாள் அவர் டிரெயினிங் ஸ்கூலுக்கு வந்து 'நீ படித்தது போதும்; நீ கவர்ன்மெண்டினிடமிருந்து வாங்கி யிருக்கும் பணத்தை நான் கட்டிவிடத் தயாராகவிருக்கிறேன். உன்னை இனிமேல் உன் இஷ்டப்படி விட்டுவைக்க முடியாது' என்று சொல்லி வாயில் வந்தபடி திட்ட ஆரம்பித்தார். 'பெரிய மனது பண்ணி இந்த ஒரு வருஷம் அனுமதித்ததுபோல் இன்னும் ஒரு வருஷம் என்னை அனுமதியுங்கள்' என்று காலில் விழுந்து கேட்டுக் கொண்டேன். அங்குள்ளவர்களுடைய நிர்ப்பந்தத்தின்மேல் என்னை விட்டுச் சென்றார்.

நான்—இப்பொழுது உங்களுடைய உத்தேசமென்ன?

யுவதி—என்னை உபாத்தியாயினி வேலைக்குச் செல்ல அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்ளவே இப்பொழுது அங்குப் போகிறேன்.

நான்—அவர் மறுத்தால்?

யுவதி—என் க்ஷேமத்தில் அவருக்குச் சிறிதும் அக்கரையில்லை. ஏற்கனவே என் நகைகளை யெல்லாம் விற்றுச் செலவழித்து விட்டார். என்னுடைய நடத்தையையும் அவர் சந்தேகிக்கிறார். என்னை உபாத்தியாயினி வேலையில் அமர அனுமதித்தால் பார்க்கிறேன். இல்லையானால் நேரே வீடு திரும்பி ஜீவனாம்சத்திற்கு பிராது போடுகிறேன். பிறகு வேலைக்குப் போகிறேன்.

நான்—அம்மா! உங்களுக்கு இப்பொழுது, துக்கம், ஆத்திரம் எல்லாம் பொங்கி நிற்கிறது. அவைகளை மறந்து, உங்கள் புருஷரைச் சந்தித்து நயத்துடன் அனுமதி வேண்டுங்கள். நீங்களும் சம்பாதிப்பதால் குடும்ப அந்தஸ்து உயருவதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

யுவதி—அந்தப் பாவி அவ்வளவு லேசில் கேட்க மாட்டார். போலீஸ்காரர்தானே! ஒரே முரட்டு சுபாவம். பாருங்கள் (குழந்தையைச் சுட்டி) நான் இந்தக் குழந்தையைக் கர்ப்பமாக இருக்கும் பொழுது என்னை ஒரு உதை உதைத்தார். அப்படியே வயிறு இழுத்துப் பிடித்துக் கொண்டு விட்டது. கூடப் பிறந்த ஒரு தம்பியிடம் சொல்லுவது போல் உங்களிடம் சொல்லுகிறேன். பிரசவித்த பிறகுதான் அந்த வலி நீங்கிற்று. போதும்! அன்னத்துக்கும், ஆடைக்கும் புருஷர்களைச் சார்ந்து வாழ்வதென்பது;

என்று பதிலிறுத்தாள். இதற்குள் நான் இறங்க வேண்டிய ஸ்டேஷனும் நெருங்கிவிட்டது. 'ஐயோ! இன்னும் சிறிது தூரம் பிரயாணம் செய்வீர்கள்; என் குறையைச் சொல்லி ஆற்றிக் கொள்ளலாமென்று எண்ணியல்லவா யிருந்தேன்!' என்று விசனப் பட்டாள்.

எனக்கு ஆணுலகத்தின் மீது கோபம் பொங்கியது. 'வயிற்றுக்குச் சோறு; உடலை மறைக்கத்துணி; இதற்காக ஒரு பெண், ஆணை அண்டி, அவன் ஆடும்படி யெல்லாம் ஆட வேண்டு மென்பதற்கும், விபசாரத்திற்கும் வித்தியாசமில்லை போலிருக்கிறதே!' என்று அப்பெண்மணியிடம் கூறினேன்.

'இன்றைய வாழ்க்கை அந்த நிலையில்தானிருக்கிறது' என்று கூறிப் பெருமூச் செறிந்தாள் அவள்.

பிரான்ஸும் கீழ் நாடும்

மொழிபெயர்த்தவர்——ரா. ராம.

ஒரு நாட்டைப் பற்றி மற்றொரு நாட்டில் எந்த விதமான எண்ணங்கள் பரவி நிற்கின்றன வென்பதும், அந் நாட்டில் தோன்றும் மகான்களைப் பற்றி என்ன கருத்துக்கள் கொள்ளப் படுகின்றன வென்பதும், பாரிஸிலுள்ள டாக்டர் ஜே. இ. எலியட் என்பவர் எழுதிய இந்தக் கட்டுரையி லிருந்து விளங்குகின்றன.

பிரான்சிலுள்ள கல்வியை மூன்று பாகு பாடாக அமைக்கலாம். அவை யாவன:-(1) பிரதமக் கல்வி (Primary Education) (2) மத்திய தரக் கல்வி (Secondary Education) (3) உயர்தரக்கல்வி(Higher Education)

இப் பிரதமக் கல்வியைக் கட்டாயம் எல்லோரும் படித்தாக வேண்டும். சுமார் 12வது வயது வரைக்கும் இக் கல்வி யளிக்கப் படுகிறது. இம் முறையில் வாசித்தல், எழுதுதல், இலேசான கணக்குகள் செய்தல், பிரெஞ்சு தேச சரித்திரம், சிறிய அளவில் பூகோளம், இயற்கைப் பொருட் பாடத்தில் கொஞ்சம் கற்பிக்கப்படுகின்றன.

மத்திய தரக் கல்வி எல்லோருக்கும் கட்டாயமானதல்ல. உயர்தரக் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள், எளிய குடும்பத்தில் பிறந்த புத்தி சாலிகள், உழைத்துப் படிக்கக் கூடியவர்கள் முதலியவர்களுக்கு இக் கல்வி அளிக்கப் படுகிறது. எளிய குழந்தைகளின் படிப்புச் செலவை ராஜாங்கம் கொடுத்துதவுகிறது. இவர்கள் படிக்கும் பாடங்களாவன:- பிரெஞ்சு பாஷையிலுள்ள இலக்கியம், அதன் சரித்திரம், பூகோள சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், பிராணி நூல், தாவர சாஸ்திரம், கணக்கு, லத்தீன் பாஷை, சிறிது கிரேக்க பாஷை, ஒன்றிரண்டு அன்னிய பாஷை முதலியன. இக் கல்வி முடிந்தவுடன் அனேகர் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். மிகச் சிலரே சர்வ கலாசாலைக்குப் போகின்றனர்.

உயர்தரக் கல்வியை பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். விஞ்ஞான சாஸ்திரங்கள்படித்தல், சட்டம், வைத்தியம், போதனை முறை, சரித்திரம், சிற்பம் முதலியன. இப் பேர்ப்பட்ட கல்வித் துறையில் கீழ் நாட்டிற்கு என்ன பங்கு கொடுக்கிறார்களென்பதை ஆராய்வோம்.

என்னிடமிருந்த சில தமிழ்ச் சஞ்சிகைகளை அந்த யுவதிக்குக் கொடுத்து 'ஆண்டவன் உங்களுக்குக் கல்வியை அளித்திருக்கிறார். பிழைக்கவும் வழி காட்டி யிருக்கிறார். உங்கள் கற்பைக் காத்துக் கொண்டு, நல்லவழியில் நடவுங்கள். கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்' என்று சொல்லி இறங்கினேன்.

சாரதா சட்டத்தை எதிர்க்கும் போலி வைதீகக் கூட்டமும், பெண் மக்கள் பொருளாதார சுதந்திரத்தில் தலை யிட்டுக் கலகத்தை விளைவிக்கும் யதாபூர்விகளும் மேலே விவரித்திருக்கும் புதுமைப் பெண்ணின் மனப் பான்மையை, விசால ஹிருதயத்துடன் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

பிரதமக் கல்வித் துறையில் இந்தியா, சைனு, ஜப்பான் முதலிய தேசங்களைப் பற்றி பிரெஞ்சுக் குழந்தைகள் கொஞ்சமும் கற்பிக்கப்படுவதில்லை. பிரெஞ்சுக் காரர்களுக்குச் சொந்தமான இந்தியா, சைனு முதலிய தேசங்களிலுள்ள சில ஊர்களின் பெயர்களை மாத்திரம் தெரிந்து கொள்ளுகிறார்கள். பதினைன்காவது லூயியின் கீர்த்தி, பிரெஞ்சு கலகத்தின் முக்கியாம்சம்—இவைகளைப் படிப்பவர்கள், ஆசியாவில் பல நாகரீகங்கள் தோன்றியிருக்கின்றன வென்பதைச் சற்றும் தெரிந்து கொள்வதில்லை.

மத்திய தரக் கல்வித் துறையிலும் சரித்திரத்தைப் படிக்கிறார்கள். ஆசியாவைப் பற்றிப் படிக்கும் பொழுது, குடியேற்றத்தினுலேற்பட்ட நன்மை தீமைகள், குடியேற்ற நாட்டின் பொருளாதாரம் முதலிய விஷயங்களையே கற்கின்றார்கள். பூகோளங் கற்கும் பொழுது அங்குள்ள மலைகள், நதிகள், சமவெளிகள், ஜனத்தொகை, ஆசியர்கள் வணங்கும் பல தேவதைகள் முதலியன கற்பிக்கப் படுகின்றனவே யொழிய இங்குத் தோன்றிய பெருமை வாய்ந்த மதங்களைப் பற்றிச் சற்றும் அவர்கள் தெரிந்து கொள்வதில்லை.

சர்வ கலாசாலையில் படிப்பவர்கள் தாங்கள் விரும்பும் பிரத்தியேகமான பாடங்களைப் படிக்கிறார்கள். கீழ் நாட்டு விஷயங்களைப் பற்றிப் படிக்க விரும்புவோர் (Orientalists) இந்தியக்கலை, (Institute of Indianism) கீழ் நாட்டுப் பாஷைகள், மதங்கள் முதலியவைகளைப் போதிக்கும் கலா சாலைக்குச் சென்று கற்கின்றார்கள். ஆனல் அப்படிப் படிப்பவர்களோ மிகச் சிலர். அதுவும் ஆசியா சென்று பார்க்காமல் ஐரோப்பாவிலிருந்து கொண்டே பல விஷயங்களுக்கு முடிவு கட்டுகின்றனர்.

இதுதான் தற்காலத்திய பிரெஞ்சுக் கல்வி முறை. நான்கு கோடி ஜனத் தொகையுள்ள பிரெஞ்சுக்காரர்களில் மிகவுஞ் சிறுபாலரே கீழ்நாட்டைப் பற்றித் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். ஒரு பிரெஞ்சுக்காரன் ஆசியாவைப் பற்றி ஏதாவது அபிப்பிராயம் கூற வேண்டுமானல், தான் அரை குறையாகப் படித்த சில விஷயங்களை வைத்துக் கொண்டே முடிவு சொல்லி விடுகின்றான். அப்படியிருந்த போதிலும் அநேக அற்புதமானவிஷயங்களையெல்லாம்பிரான்ஸ் தேசம் வெளியிடுகின்றது. மகாயுத்தத்திற்கு முன்னல் பிரான்ஸில் 'கீழ்நாட்டபிமானிகள்' (Friends of Orient) என்று சிலர் இருந்தார்கள். அவர்களுடைய நோக்கம் ஆசியாவைப்பற்றி அறிந்துகொள்வதே. கி.பி. 1918ம்வருஷத்திலிருந்து ஏற்பட்டஅநேக சங்கங்களிருக்கின்றன. மகாத்மா காந்தியின் நண்பர்கள் சங்கமென்ன, புத்தமத அனுதாபிகள் சங்கமென்ன, சில வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட தாகூரின் நண்பர்கள் சங்கமென்ன—இம்மாதிரிச் சிறு சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆசியாவைப்பற்றிஆராய்ந்து வருகின்றனர். மொத்த ஜனத்தொகையோடு இச்சிறு பான்மையினரை ஒப்பிடும் பொழுது மிகச் சிலர் தான் இத்துறையில் கவனஞ்செலுத்தி வருகின்றனர் என்று சொல்ல வேண்டும். ஆனலும் இவ்விஷயம் வேரூன்றித் தழைத்தோங்கி மெல்ல மெல்லப் பரவி வருகின்றது. எறும்பூரக் கற்குழியு மன்றோ!

இது மாத்திரமல்ல! ஜூலை 1900ம் வருஷத்தில் பாரிஸில் மதங்களின்

சரித்திரத்தை ஆராய்வதற்காகக் கூடிய மகாசபைக்கு சுவாமி விவேகானந்தர் விஜயமாயிருந்தார். கொஞ்சகாலந்தான் அவர் பாரிஸில் தங்கினர். ஏதோ சிலர்தான் அவருக்கு அறிமுகம். அவர்களில் ஜூலா போயா, எஜரார்ட் நோபல் முக்கியமானவர்கள். அவர்களிடத்திலிருந்து விவேகானந்தரைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்வதற்கில்லை. இருந்தாலும் 1930ம் வருஷத்தில் திடீரென்று ரோமன்ரோலண்டு ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டார். ரோமன் ரோலண்டு முன்னலேயே இந்தியாவைப் பற்றி எழுதியிருக்கின்ருர். 1922ம் வருஷத்தில் மகாத்மா காந்தியின் வாழ்க்கையையும் அவர் செய்த செயல்களையும் ஒரு புத்தகத்தில் விளக்கியிருக்கின்ருர். இவர் புதிதாக எழுதிய ராமகிருஷ்ணரின் வாழ்க்கை, விவேகானந்தரின் வாழ்க்கைமுதலியபுத்தகங்கள்இருபதினயிரத்திற்கு மேல் விற்கப் பட்டிருக்கின்றன. அவைகள் புது உணர்ச்சியை ஜனங்களுக்கு அளிக்கின்றன.

மகாத்மா காந்தியை தெய்வத் தன்மை வாய்ந்தவர் என்று கருதினலும் அவர் செய்து வரும் காரியங்களிலிருந்து மனித சுபாவமுள்ளவரே என்னலாம். ராம கிருஷ்ணரோ அப்படியல்ல. அவரை அவதார புருஷரென்றே சொல்லலாம். 30 வருடங்களுக்கு முன் நம்மிடையேயிருந்த அவரை ஏசு நாதருக்கும், ஸெயிண்ட் பாலுக்கும் ஒப்பிடுவதில் சற்றுங் குற்றமில்லை. அவருடைய வாழ்க்கை உலகத்தாருக்கு அளித்திருக்கும் மேலான ஞானந்தானென்னே!

ஸ்ரீ கே. நாகேசுவர ராவ் பந்துலு 11-4-38ல் சென்னையில் காலமாகி விட்டார். இவர், தமது உழைப்பினலும் மனே தைரியத்தினலும் முன்னுக்கு வந்தவர். சிறந்த தியாகி. கொஞ்சங்கூட வெளிப்பகட்டில்லாதவர். தெலுங்கு பாஷைக்கு ஓர் ஆபரணம் போன்றிருந்தவர். 1867ம் வருஷம், கிருஷ்ண ஜில்லாவிலுள்ள எலக்கூர் என்ற ஊரில் பிறந்து, குண்டூரிலும் சென்னையிலும் பயின்று, ஜீவனர்த்தம் பம்பாய் சென்று அங்கே, 1894ம் வருஷம் அமிருதாஞ்சனம் என்ற மருந்தைத் தயார் செய்து விற்பனைக்குக் கொண்டு வந்தார். இது பின்னர் பிரபலமாகி இதன் மூலமாக இவருக்கு நிறைய வருமானம் கிடைத்தது. 1908ம் வருஷம் பம்பாயில் 'ஆந்திர பத்திரிகா' என்ற பெயருடன் ஒரு வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். பின்னர், தமது வியாபாரத்தையும் பத்திரிகாலயத்தையும் சென்னைக்கு மாற்றினர். காந்தியடிகள் இந்திய அரசியல் மேடையில் தோன்றிய போது, இவர் அவருடைய இயக்கத்தில் ஈடுபட்டுப் பல தியாகங்களைச் செய்தார். இவர் செல்வத்தைச் சேமிப்பதிலே இன்பங்காணவில்லை. அதனை வேண்டுவோர்க்கு விரும்பி வழங்கினர். இதனல் சிறந்த கொடையாளி என்று பெயரெடுத்தார்.

வரிப்பணம் எப்படிச் செலவழிகிறது?

இங்கிலாந்தில் ஒருவன் ஒரு பவுன் வரிப் பணம் செலுத்து கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதனை அரசாங்கத்தார் எங்கெந்த வழிகளில் செலவழிக்கின்றனர் என்பதைக் கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள் நன்கு தெரிவிக்கின்றன:—

நாட்டு நலனுக்காக	ஷில்லிங்	பென்ஸ்
கல்வி	1	4
பென்ஷன்	1	6
ஸ்தல ஸ்தாபன நிருவாகம்	1	3
வேலையில்லா இன்ஷ்யூரென்ஸ்	1	6
வீட்டு வசதிகள், ரோட்டுகள்	....	9
சுங்க இலாகா, கலால் இலாகா	....	9
போலீஸ்	....	4
கைத் தொழில்	....	3
சுகாதாரம்	....	2
வட ஐர்லாந்து நிருவாகம்	....	2
சில்லரைச் செலவு	....	11
மொத்தம்....	8 —	11

யுத்தத் தயாரிப்புக்காக		
முன் நடைபெற்ற யுத்தங்களுக்கு வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தும் வகையில்	5	2
யுத்த பென்ஷன்கள்	1	0
கப்பல் படை	1	10
தரைப் படை	1	6
ஆகாயப் படை	1	5
சில்லரைச் செலவு	0	2
மொத்தம்....	11 —	1

வரிப் பணத்தில் பாதிக்கு மேல், எங்குப் போய்க்கொண்டிருக்கின்றது பார்த்தீர்களா? ஆனால் சமாதானத்திற்குத்தான் இவ்வளவு பணமும் செலவழிக்கப் படுகிறதென்று சமாதானம் சொல்லப்படும்போது நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்?

நமது நிருபர்களுடன்—

வெற்றிக்குப் பரிசு

அன்புள்ள ஐயா,

பொதுவாக எல்லாவிதமான கொண்டாட்டங்களுக்கும், சிறப்பாக தேகப் பயிற்சி சம்பந்தப்பட்ட விளையாட்டுகளில் ஜெயமடைந் தோர்க்கும் 'வெற்றிக்குப்பரிசு கப்'(கிண்ணம்) அளிக்கப்படுவது வழக்கமாய் இருந்து வருகிறதே! இதன் அர்த்தமென்ன ?

நான் நினைக்கிறேன், இது நம் புராதன வழக்கமாய் இருக்க முடியாது; பிற் காலத்தில் வெள்ளையர்களால் ஏற்றுமதி (இறக்குமதி?—) செய்யப்பட்ட ஒரு விஷயம் என்று. அவர்களுக்கு, குடி குல தெய்வம். எனவே அவர்கள் வெற்றியின் சின்னமாக 'கப்' வழங்கிக் கொள்கிறார்கள். அர்த்தமற்ற வழிக்கும் அவர்களைப்பின் பற்ற வேண்டும் என்பது என்ன அவசியம் ?

அவர்களை 'காப்பி' அடிக்காமல் நம் நாகரீகத்திற்கு ஏற்ற முறையில் ஒரு புதிய விதத்தில் சிருஷ்டித்து கையாளக் கூடாதா ? பரிசு வழங்கக் கூடாதா ?

—முறசை

நண்பரின் முதல் பாராவிலுள்ள கேள்விக்கு இரண்டாவது மூன்றாவது பாராக்களிலேயே பதில் இருக்கிறது. வெள்ளையர்களால் இறக்குமதி செய்யப்பட்ட நாகரிக ஆட்டவகைகளோடு இந்தப் பரிசு வகைகளும் இறக்குமதியா யிருக்கின்றன. இந்த நாகரிகத்தைப் பொருளாதாரக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் அதிகச் செலவு என்பதுதான் புலப்படும். பரிசு வகைகளை மாற்றிக்கொள்வது ஒரு புற மிருக்கட்டும். முதலாவது விளையாட்டு வகைகளையும், நமது நாட்டுச் சீதோஷ்ணம், மனப்பான்மை முதலிய வற்றிற்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். அதிகச் செலவில்லாமலே, நமது பெரியோர்கள் தேகத்தைப் போஷித்து வந்தார்கள். அந்தமாதிரி, பழைய விளையாட்டு களுக்குப் புத்துயிர் கொடுத்தல் நல்லது.

—ஆசிரியர்

அன்னதானமா? வித்தியாதானமா?

ஐயா,

தானத்தில் பெரிது எது யென்னும் விஷயமாய் நான் கேட்டிருந்ததற்கு உங்கள் பதிலை "ஜோதி"யின் கதிர் ஒன்பதில் நிருப நேயர்களுடன் எனுந் தலைப்பின் கீழ்க் கண்டேன். அதில் நீங்கள் 'வித்தியா தானந்தான் பெரிது. சந்தேகமென்ன இதில்? அன்னதானத்திற்கு இரண்டாம் பிரைஸ் தான்' யெனக் கூறுகிறீர்கள். நம் நன்னூல் கூறும் அறம் முப்பத்திரண்டில் எவை நீக்கம்

எவை பெறத் தக்கவை யென விரவி யாராயினும் ஒவ்வொன்றும் அதி முக்கியமான தெனக் கொள்ளினும் அவற்றில் தலை சிறந்து தனிப் பெரும் புகழுடையது அன்னதானமே. மக்களாலியற்றி யனுஷ்டிக்கப் பட்டு-பட விருக்கும் தானங்களில் யாதொன்றிலும் முதற் பரிசுக்குரியது அன்னதான மெனச் சொல்லின் எவரும் மறுப்பதற்கில்லை. உலகம் கண்ட உண்மையுமிதுவே. அதை விடுத்து நீங்கள் இரண்டாவது பரிசுக்கு இலக்காக்கினது வித்தையின் பாற்பட்ட பேரன்பே காரணமென அறிந்து உவகை கொண்டோம்.

வாழ்விற் கின்றியமையாத அன்னம் (சாப்பாடு) இன்றேல்'பசி வந்திடப் பத்தும் பறந்து போமெ'ன்ற மூதுரையிது நாள்வரை பழக்க வழக்கத்திலிருந்து வரா தல்லவா? ஆதலால் ஜீவாதாரமானது அன்னமே. இதற்கேன் முதற் பரிசு வழங்கப்படாது?

—எஸ். சுப்பிரமணியம்

அன்னதானத்திற்கு முதற் பரிசு வழங்க நண்பருக்குப் பூரண உரிமையுண்டு. நமது அபிப்பிராயத்தைத் தான் நாம் கூறினோம்.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

என்ற செய்யுளை நண்பருக்குச் சிபார்சு செய்ய விரும்புகிறோம். இதனோடு இந்த வாதத்தை முடித்துக் கொள்ளலாமா?

—ஆசிரியர்

ஹிட்லர் லட்சிய புருஷனா?

அன்புள்ள ஐயா,

ஹிட்லர் ஓர் ரத்த வெறி பிடித்தவன்; பிறநாடுகளைத் தன் கைக்குக் கொண்டு வருவதற்கு 'கனலைக் கக்கும் கண்டனப் பேச்சுக்கள் மட்டும் போதாது: கனத்த கத்தியே இதைச் சாதிக்க வல்லது' என்று அவன் கூறுகிறான். இவைகளை எல்லாம் பார்க்கும் போது ஹிட்லரை ஒரு இலட்சிய புருஷன் என்று சொல்லலாமா? ஏப்ரல் மாத "ஜோதி"யின் தலையங்கந்தான் இந்தச் சந்தேகத்தை எனக்கு உண்டாக்கியது.

—வே. சோக்கலிங்கம்

நமது சத்துருவா யிருந்தாலும் அவருக்குரிய மதிப்பைக் கொடுத்து அவரோடு போராட வேண்டும். இது தான் நமது தருமம். பாரத தேசத்து இதிகாசம் இப்படித்தான் கூறுகிறது. ராவணன் இருக்கிறான்; அவன் தனியாக இருந்த சீதாபிராட்டியை, மாறு வேஷம் பூண்டு அப்புறப்படுத்திச் சென்றதென்னமோ அநியாயந்தான்; அதருமந்தான். அதை நாம் கண்டிக்கவே செய்கிறோம். ஆனால் அதற்காக, அவனுடைய—அந்த ராவணு

னுடைய—புலமையையோ, சிவபக்தியையோ, புய வலியையோ நாம் குறைத்துக் கூற முடியுமா? ஹிட்லரின் சரித்திரத்தைப் பூராவும் அன்பர் படிப்பாரானால், அவன், தன் தாய் நாட்டிற்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறான், ஜெர்மானியர் அவனை எப்படி தெய்வமாகப் போற்றுகின்றனர் என்பவை தெரியவரும். ஹிட்லரை ஒரு லட்சிய புருஷன் என்றுதான் சொல்லி யிருக்கிறோமே தவிர நமது லட்சிய புருஷன் என்று நாம் சொல்ல வில்லை. இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை அன்பர் கவனிக்க வேண்டும். நமது தலையங்கத்தை நண்பர் மீண்டு மொருமுறை கூர்ந்து படிப்பாரானால் தமது கேள்விக்குச் சமாதானம் அடையப் பெறுவார்.

—ஆசிரியர்

சில சந்தேகங்கள்

ஐயா,

1. நம்நாட்டில் விக்ரஹ ஆராதனையால் வருஷம் ஒன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கின்றோமே; விக்ரஹங்களுக்குச் சக்தி யுண்டா?

2. பிதுர்க்களுக்கு சிரார்த்தம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?

3. பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளெல்லாம் நம்பத்தக்கவைகள்தானா?

4. கீதா சுலோகத்தை தமிழ் அக்ஷரத்தில் எழுதாமல் ஸமஸ்கிருத அக்ஷரத்தில் எழுதி அர்த்தம் தமிழில் எழுதுவது ஏன்?

இந்த நான்கு ஸந்தேகங்களுக்கும் தங்களின் அந்தரார்த்தத்தை விபரமாக விளக்க வேண்டுகிறேன்.

—எஸ். ராமன்

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல கேள்விகளையும் நண்பர் இங்குக் கேட்டிருக்கிறார். ஆயினும் அவரைத் திருப்தி செய்ய முயல்வோம்.

1. விக்ரஹங்களுக்குச் சக்தி உண்டா இல்லையா வென்பது அவரவர்களுடைய நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. ஹிந்து மதம் விரிந்தது. மனிதன் பூரணத்வம் அடைவதற்கு முன்னர், தாண்ட வேண்டிய எல்லாப் படிகளுக்கும், அப்படிகளில் இருப்பவர்களுக்கும் ஹிந்து மதம் இடங்கொடுக்கிறது. விக்ரஹ ஆராதனை மூலமாகக் கடவுளை அடையலாம் என்ற நம்பிக்கை, இத்தகைய படிகளுள் ஒன்று. இதனைக்கொள்ளுவதும் தள்ளுவதும் அவரவர்களுடைய மனோபரி பக்குவத்தைப் பொறுத்திருக்கிறது.

2. இதனை ஒரு கடமையாக நமது பெரியோர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதனால் நன்மை உண்டோ இல்லையோ நமக்குத் தெரியாது. இது அவரவர்களுடைய நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. இறந்து போன மூதாதையர்களுடைய திரு நாளை நினைவுபடுத்திக் கொள்வதற்காகவும் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கான ஒரு சங்கல்பத்தைச் செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டும் இந்த சிரார்த்த தினத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்பது சில அறிஞர்களுடைய கருத்து. சிரத்தையோடு

செய்யப் பட வேண்டிய இந்தச் சிரார்த்தம் இப்பொழுது பல சடங்குகளால் மூடப் பட்டுக் கிடக்கிறது. பொதுவாகவே, நாம் தற்போழ்து கொண்டாடும் சடங்குகள், பண்டிகைகள் முதலியன சத்தில்லாத சக்கையைப் போலிருக்கின்றன. சத்தைக் கொண்டு, சக்கையைத் தள்ளுவது நமது கடன்.

3. ஒரு பத்திரிகாசிரியரைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கும் நண்பருடைய துணிச்சலை, நாம் பாராட்டுகிறோம்; ஆனால் ரஸிக்க முடியவில்லை.

4. கீதை வடமொழியில் இயற்றப் பட்டது. இதன் உச்சாரணம் அப்படியே சிதைவுறாமல் இருக்க வேண்டுமென்பதற்காக மூல சுலோகங்களை நாகரி லிபியிலோ கிரந்த எழுத்துக்களிலோ எழுதுகிறார்கள். இது ஒரு சாதாரண விஷயந்தானே! இதில் என்ன சந்தேகம்?

—ஆசிரியர்

எது நலம் பயக்கும்?

சகோதர,

பத்திரிகையோ அல்லது புத்தகமோ எது படித்தாலும் மனதிற்குள்ளேயே (உதட்டை அசைக்காமல்) படிப்பது, விஷயம் மனதில் பதியவும் சுத்தமாகப் பேசுதற்கும் எழுதுதற்கும் நன்மை பயக்குமா? அல்லது வாய் விட்டு (உதட்டை அசைத்து)ப் படிப்பது விஷயம் மனதில் பதியவும் சுத்தமாகப் பேசுதற்கும் எழுதுதற்கும் நன்மை பயக்குமா? என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புவதுடன் இதுபோன்ற பிரச்னையிலிலங்கும் ஏனையோரும் தெரிந்து கொள்ளுமாறு தங்களின் கருத்தை இங்கொரு முறை மங்களகரமாக வெளிவரும் 'ஜோதி' மூலம் விளக்க வேண்டுகிறேன்.

—சோதி

விஷயம் மனதில் பதிய வேண்டுமானால் மனதிற்குள்ளேயே படிப்பது நல்லது. சரியான உச்சரிப்புகளுடன் சுத்தமாகப் பேசுவதற்குப் பழக்கிக் கொள்ள வேண்டுமானால் வாய்விட்டு உரத்துப் படிப்பது நல்லது. எழுதப் பழகுகிற விஷயம் வேறு. திறமையான பேச்சாளர்களெல்லாரும் திறமையான எழுத்தாளர்களாக இருக்க முடியும் என்பதில்லை. இப்படியே தான் மறுபுறமும்.

—ஆசிரியர்

ஒற்றை வேஷ்டி காந்தி

அன்பு மிக்க ஆசிரியரவர்களே,

உலகப் பெரியார்களில் ஒருவராகிய ஸ்ரீ காந்தி அடிகள் வேஷ்டி முழங்காலுக்குக் கீழ் உடுக்காததின் காரணம் என்ன? சிலர் மதுரையில் சில ஆண்டுகளுக்கு முன் பிரசங்கம் செய்யும் போது கூட்டத்தில் யாரோ ஒருவர் காந்தியடிகளை ஒரு கேள்வி கேட்டதாகவும் அதன்படியே அதே இடத்தில் இருந்தே அணிந்து வருவதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்களே அதன் உண்மை விவரம் என்ன?

வெ. மு. திருப்பதி.

1921ம் வருஷம் செப்டம்பர் மாதத்திலிருந்து காந்தியடிகள் ஒற்றைத் துணியோடு இருந்து வருகிறார். யாரோ ஒருவர் கேள்வி கேட்டதற்காக அவர் இந்த மாதிரி ஆடை அணிந்து கொள்ளவில்லை. **1921**ம் வருஷம் செப்டம்பர் மாதம் **30**ந் தேதிக்குள் அந்நியத் துணி பகிஷ்காரத்தைப் பூர்த்தி செய்து விட

வேண்டுமென்று 28-7-1921ல் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்தப் பகிஷ்காரத்தைப் பூர்த்தி செய்விப்பதற்காக, அடிகளார் இந்தியா வெங்கணும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, 'ஏழையின் வழி' என்று தலைப்பிட்டு ஓர் அறிக்கை விடுத்தார். அதில், தாம் ஒற்றைத் துணியுடன் இருக்கத் தீர்மானித்ததைக் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்:—

'அந்நியத் துணிக்குப் பதில் வேறு துணி அகப்படுவது பலருக்குக் கஷ்டமாயிருக்குமென்பதை நான் அறிவேன். ஏழைகள் கதரை வாங்கி உபயோகிக்க முடியாது. அப்படிப் பட்டவர்களுக்கெல்லாம், சென்னைக் கடற்கரையில் நான் சொன்ன வார்த்தைகளையே திருப்பிக் கூறுவேன். இடுப்பு வேஷ்டியோடு அவர்கள் திருப்தியடையட்டும். நம்முடைய தேகத்தை மூடிக் கொள்ள வேண்டிய மாதிரி நமது தேச சீதோஷ்ண நிலை இல்லை. ஒருவர் அணியும் உடையைக் கொண்டு, அவர்களுடைய கல்வி ஞானத்தை மதிக்கக் கூடிய வழக்கமும் இந்தியாவில் இல்லை.

*முழுப் பொறுப்புடனேயே நான் இந்த யோசனையைக் கூறுகிறேன். பிறருக்கு வழி காட்டியாயிருக்கும் பொருட்டு, நான் 1921ம் வருஷம் அக்டோபர் மாதம் 31ந் தேதி வரையிலாவது—தொப்பியும் சட்டையும் இல்லாமல் இருக்கத் தீர்மானித்திருக்கிறேன். இடுப்பில் ஒருவேஷ்டியுடனும் அவசியமானால் ஒரு மேல்போர்வையுடனும் இருப்பேன். * * * ஆடை விஷயத்தில் நான் இங்ஙனந் துறவு பூண்பது, துக்கத்தின் அறிகுறிக்காகவுமாகும். நான் வசிக்கிற பிராந்தியத்தில் தலையில் ஒன்று மில்லாமல் தேகத்தைத் திறந்து வைத்திருப்பது துக்கத்திற்கறிகுறியாகும். வருஷம் முடிவடையப் போகிறது. நாம் இன்னும் சுயராஜ்யத்தை எட்டிப் பார்க்கவில்லை. நாம் துக்கத்திலிருக்கிறோம் என்பதை நான் வர வர அதிகமாக உணர்ந்து வருகிறேன். என்னுடைய சகோதர தொண்டர்கள், என்னைப் போல் சட்டையையும் தொப்பியையும் துறந்து விட வேண்டுமென்று நான் எதிர் பார்க்க வில்லை. தங்களுக்கு அவசியமென்று தோன்றினால் அவர்கள் செய்யலாம்.*

31-10-1921 வரை என்று வரம்பிட்டுக் கொண்டதை நிரந்தரமாக்கிக் கொண்டார். இதனின்று, அடிகளார் ஒற்றைத் துணி அணிவதன் தத்துவத்தை அன்பர் அறிந்து கொள்ளலாம்.

—ஆசிரியர்

காந்தி—ஒரு துருவ நட்சத்திரம்

காந்தியடிகளின் அஹிம்சா தர்ம உபதேசத்திற்கும், தற்போது ஐரோப்பாவிலே நடைபெறுகிற சம்பவங்களுக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் பல விஷயங்கள் புலனாகும். ஐரோப்பாவிலுள்ள சர்வாதிகாரிகள் பலாத்காரத்திலே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ஆயுத பலத்தைத் தான் இவர்கள் தெய்வமாகப் போற்றுகிறார்கள். இவர்களுக்கு எதிரிடையாக காந்தியடிகளின் சத்தியம், அஹிம்சை, அன்பு இவை நிறைந்த உபதேசங்கள் நிற்கின்றன. இவர்களுக்கு மேலாக காந்தியடிகள் ஒரு துருவ நட்சத்திரம் போல் விளங்குகிறார். பலாத்காரத்தை விட அன்பு சிறந்ததென்று இவர் உலகத்திற்கு நிரூபிக்கிறார். அரசியலிலே பாரமார்த்திக எண்ணத்தைப் புகுத்தி, அதன் மூலமாகவே உலகம் உய்யமுடியும் என்றுநிரூபித்துக் காட்டியவர் உலகத்தில் வேறு யாராவது இருக்கிறார்களா? காந்தியடிகள் ஒரு சாதாரண மனிதரல்ல. நித்தியமாயுள்ள சத்தியத்தின் அவதாரம்.

—ராஜன்.

உடல் நலம் வேண்டல்

(குழந்தைகளின் அன்பன்.)

பரந்தொளிர் சுத்த சக்தி!—இளம்
பால நனைப் பணிந்தோம்;
வரங்கள் மிகத் தருவாய்—எங்கள்
வாழ்வு செழித் திடவே! 1.

காலை விழிப்பு வேண்டும்;—நல்ல
கசரத் பயிற்சி வேண்டும்;
சாலவும் வாயுப் பயிற்சி—நாங்கள்
சரிவரச் செய்ய வேண்டும். 2.

உள்ளினில் வீரம் வேண்டும்;—எங்கள்
உடலில் உறுதி வேண்டும்;
தெள்ளிய அறிவு வேண்டும்;—தேசக்
கலைகளில் தேர்ச்சி வேண்டும். 3.

கல்லிற் கடைந்தவை போல்—உடற்
கட்டுகளாக வேண்டும்;
நல்ல இளந்தளிர் போல்—உடல்
நாளும் பொலிய வேண்டும். 4.

கல்மலை தம்மை யெல்லாம்—முன்னர்
கவிகள் பெயர்த்த தென்று
சொல்லுங் கதை தெளிந்தோம்;—அவ்வலி
சூழ இறைஞ்சு கின்றோம். 5.

காற்றை யெதிர்க்க வேண்டும்;—திரைக்
கடலினை நீந்த வேண்டும்;
கூற்றையும் வெல்ல வேண்டும்;—கற்
குன்றினைத் தாங்க வேண்டும். 6.

பார்புகழ் சுத்த சக்தி!—பச்சைப்
பாலநன் சரண் புகுந்தோம்.
ஆர்வங் குறைந்திடுமோ?—மனத்
தளர்வும் மிகுத்திடுமோ? 7.

சோர்வும் பெருகிடுமோ?—இனிச்
சோம்பலும் வாழ்ந்திடுமோ?
சீர்மை மிக வேண்டும்;—எங்கள்
சீவன் சிறக்க வேண்டும். 8.

சுண்டப் பசிக்க வேண்டும்;—நல்ல
சோறு கறிகள் வேண்டும்.
உண்டல் சமிக்க வேண்டும்;—நல்ல
உறக்க மிரவில் வேண்டும். 9.

பாடும் பெருக வேண்டும்;—எங்கள்
பயனும் உயர வேண்டும்.
நாடும் செழிக்க வேண்டும்;—எங்கும்
நலன்கள் பொலிய வேண்டும். 10.

காண்பவர் கண்களுக்கு—நாங்கள்
கனவிருந் தாக வேண்டும்;
மாண்புயர் விண்ணவர் போல்—இந்த
மண்ணினில் வாழ வேண்டும். 11.

தண்டமிழ் நாட்டு மக்கள்—வெகு
தாட்டிக ரென்று வீர
கண்டா மணி யோசை—எட்டுத்
திக்கும் அதிர வேண்டும். 12.

ஸ்ரீ எஸ். சத்திய மூர்த்தி

——ரா. வேங்கடராமன்
B. A.,

அரசியல் துறையிலோ வேறு துறைகளிலோ சிறப்படைந்திருப்பவர்களை விமரிசன வெளிச்சங் கொண்டு சொல்லோவியம் வரைவது மேனாடுகளில் சர்வ சாதாரணம். இத்தகைய கட்டுரைகள், இலக்கிய உலகத்தில் முக்கிய ஸ்தானம் பெறுவதுண்டு. உதாரணமாக ஈ. டி. ரேமண்டு (E. T. Raymond) என்பவர் ' தணிக்கை செய்யப்படாத பிரபலஸ்தர்கள்' (Uncensored Celebrities) என்ற பெயர் கொடுத்து ஆஸ்டின் சேம்பர்லேன், ஆஸ்க்வித், பால்ட்வின் போன்றவர்களைப் பற்றி பாரபட்சமில்லாமல் விமரிசனம் செய்து காட்டியிருப்பது ஆங்கில மறிந்தார்க்கு நன்கு தெரியும். இன்னும் இதுபோன்ற நூல்கள் பல. தமிழ் இலக்கிய உலகத்தில் இத்தகைய விமரிசனங்கள் மிக அருமை,ஒன்று நன்றாகப் போற்றுவது அல்லது கேவலமாகத் தூற்றுவது. இந்த இரண்டிலே ஒன்றுதான் காண்கிறோம். அதை விடுத்து, ஸ்ரீ வேங்கடராமன், இந்த விமரிசனக கட்டுரை மூலமாக ஒரு புது வழியில் சென்றிருக்கிறார் என்று சொல்ல வேண்டும். இவர், இன்னும் இது போன்ற பல பிரபலஸ்தர்களைப் பற்றி எழுதுவாரென்று எதிர்பார்க்கிறோம்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முந்தியோ பத்து வருஷங்களுக்குப் பிந்தியோ ஸ்ரீ ஸத்தியமூர்த்தி பிறந்திருந்தால் நாம் எல்லோரும் அறிந்திருக்கும் ஸத்தியமூர்த்தியா யிருக்கமாட்டார். பத்து வருஷங்களுக்கு முன்னதாகவே பிறந்திருப்பின் இவர் மிதவாதிகளுடன் பட்டம் பதவிகள்

ஹிட்லரின் கோப்பெல்ஸ் போல் காங்கிரசின் நாக்கு இவர்.

பெற்றிருக்கலாம்., எந்த உத்தியோகம் ஏற்றிருப்பார், எந்தப் பட்டம் பெற்றிருப்பார் என்ற கவலை இப்பொழுது நமக்குவேண்டாம். பத்து வருஷங்களுக்குப் பின்னர் பிறந்திருந்தால் இவரது பழமைவிரும்பும் மிதவாத, தெய்வீக கொள்கைகளுக்கும்இவருக்கும் மதிப்பே ஏற்பட்டிராது.

அப்படி இல்லாது பிறந்ததே இவரது அபூர்வ சக்திக்குக் காரணம். இவர் சர்வஜித் வருஷம் ஆவணி மாதம் 5ந் தேதி (1887ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 19ந் தேதி) புதுக்கோட்டை பிரபல வக்கீல் டி. சுந்தர சாஸ்திரிகள் குமாரராய்ப் பிறந்தார். உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமா? இதுதான் இவரது கிரஹ நிலையாம்.

			ராகு செவ் சனி
கேது			புதன் சூரியன் சந்திர
		ல குரு	சுக்கிரன்

இவர் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியிலும் சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும் நன்கு படித்து வந்தார். ஆங்கிலம், சமஸ்கிருதம், சரித்திரம் முதலிய பாடங்களில் முதன்மையாகத் தேறினார். பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் உபாத்தியாயரா யிருந்தார். பிறகு சட்டம் படித்துத் தேறினார். இவர் வக்கீல் சங்கத்தின் மெம்பரா யிருந்திருக்கிறார். ஆனால் வக்கீல் தொழிலில் ஈடுபடவில்லை. ஈடுபட்டிருந்தால் தொழிலில் விருத்தியடைந் திருப்பாரா என்பது வேறு. அப்படித் தொழிலில் விருத்தியில்லாதபோது அதைக்கவனியாமல் தேசிய இயக்கத்தில் சேர்ந்ததால்தான் இவர் பேரெடுப்பதற்குச் சிரமப்பட்டது. இன்னும் இவருக்கு, வருமானத்தை விட்டவர்களின் கீர்த்தி வரவில்லை.

இவரது வாழ்க்கைச் சரித்திரத்தில் முக்கிய அம்சங்கள் பல உள்ளன. அவைகளில் முக்கியமானது இவரது பேச்சு வன்மை. ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளில் வெகு நன்றாகப் பேசுவார். சட்ட சபைகளிலும், காங்கிரஸ் கூட்டங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், கல்லூரிகளிலும், பொது மேடைகளிலும், சர்வகலாசாலை மன்றங்களிலும், (கோர்ட்டில் பேசுவது வெகு அபூர்வம்) வெள்ளையர் மத்தியிலும் கேட்போர் வியக்கும்படி பேசுவார். இவரது தொனி இனிமையில்லாது கரடுமுரடாயிருந்த போதிலும், சைகைகள் அதிகமில்லாதபோதிலும் தொண்டையைப் பாவத்துடன் ஏற்றி இறக்குவதால் இனிய சங்கீதம் போல் கேட்போரைப் பரவசப் படுத்துகிறது. இது இவருடைய கிராமபோன் பிளேட்டுகளில் வெகு நன்றாயிருக்கிறது.

இவருடைய ஞானம் வியக்கத்தக்கது. பாஷா காவ்யங்கள் சம்பந்தப்பட்ட வரை பழம் பெரும் காவ்யங்கள் இவருக்கு அநேகம் நன்றாய்த் தெரியும். இன்னும் கொஞ்சம் பாஷா ஞான விசாலமும் கூர்மையும் இருந்திருந்தால் தேனொடு பால் கலந்தாற் போலிருக்கும். மற்றவர்கள் பேசுவதை மொழிபெயர்ப்பதில் இவர் வெகு கீர்த்தி யடைந்திருக்கிறார். இவரது பேச்சு வன்மையினால் மட்டுமே காங்கிரஸில் இவரது கீர்த்தி நிலைத்து நிற்கின்றது. பேச்சும், உத்தியோகம் பட்டம் முதலியன ஏற்காததுந்தான் இவரது தியாகங்கள். இன்னும்

கொஞ்சம் சுய நலமி யாயிருந்தால் வெளியில் வராமலே, மூலை முடுக்கு சுதேசி ராஜ்யங்களிலோ, வேறு உத்தியோகங்களிலோ இவர் இருக்கலாம்.

பிரசாரம் செய்வதில் இவருக்கு ஈடு இணையில்லை. தேர்தல் பிரசாரத்தில் இவர் சிறந்த நிபுணர். அன்னி பெசண்ட் அம்மையார், ஸி. ஆர் தாஸ், ஜவஹர்லால் நேரு, ஸ்ரீனிவாசய்யங்கார் முதலியவர்களுடன் இடைவிடாது தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்திருக்கிறார். மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டத்தையும் 1935ம் வருஷத்து சட்டத்தையும் எதிர்த்துத் தீவிர பிரசாரம் செய்தார். ஹிட்லரின் கோப்பெல்ஸ் போல் காங்கிரஸின் நாக்கு இவர். 1926ம் வருஷத்தில் சுயராஜ்யக் கக்ஷிக்கும், 1935ல் ஜில்லா போர்டு தேர்தல்களுக்கும், 1937ல் சென்னை சட்டசபை தேர்தல்களுக்கும் இவர் செய்த பிரசாரம் சரித்திர பிரசித்தி பெற்றவை. டாக்கி, கிராமபோன், பத்திரிகை, ரேடியோ முதலிய எல்லாவற்றையும் இவர் இதற்காக உபயோகப் படுத்தியுள்ளார்.

ஸி. ஆர் தாஸ், பி. ஸி. ராய், அன்சாரி முதலியோருடன் சேர்ந்து காங்கிரஸுக்குள்ளேயே சட்ட சபைக்குப் போகும் எண்ணத்தைக் கொண்டு வந்தார். மாளவியா, லாலாஜி, ஜயகர், ஸாப்ரூ முதலியோருக்கு எதிரிடையாக 1926ம் வருஷத்தில் உத்தியோகம் ஏற்கக்கூடாதென்று பிரசாரம் செய்தார். 1935ம் வருஷச் சட்டத்தின் பிரகாரம் அமைந்த சட்ட சபைகளில் மந்திரிப் பதவி ஏற்க வேண்டுமென்று ஒண்டியாக, தைரியமாக, தீவிரமாகப் பிரசாரம் செய்தார். காங்கிரஸில் சட்ட சபை எண்ணத்தையும் உத்தியோக மேற்க வேண்டியதென்ற புத்தியையும் சோஷலிஸத்திற்கு தேசம் செல்லும் பொழுது இவர் புகுத்தியது வியக்கத் தக்கது. மிதவாதிகள் காங்கிரஸில் இருந்த காலத்தில்—காங்கிரஸ் மிதவாதமாய் இருந்த பொழுது-இது சாதாரணமானதா யிருக்கும்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவோ மெம்பராகவோ இவர் இது வரை இருந்ததில்லை. மந்திரி பதவி ஏற்கவும் இல்லை. இது இவரது தியாகத்தின் எல்லை. இவர் சோஷலிஸத்தின் வீர எதிரி. இவரது ஒரே அபூர்வ சொத்தான பேச்சு வன்மையை—பிடுங்க முடியாத சொற்பொழிவுகளை இவர் இடைவிடாது எங்கும் தாராளமாகச் செய்வதே தார்மீக இந்தியாவில் சோஷலிஸம் அவசியமில்லை எனக் காட்டுகின்றது.

இவர் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவரா யிருந்திருக்கிறார். சென்னைச் சட்ட சபையிலும் மத்திய சட்ட சபையிலும் கக்ஷி உபதலைவராய் இருந்திருக்கிறார். அரசியல், பொருளாதார விஷயங்களில் நிபுணர். கேள்விகள் உப கேள்விகள் கேட்டு உத்தியோக அங்கத்தினர்களை திணற அடிப்பார். சட்ட சபைகளுக்கு என்று பிறந்த சிலர்களில் ஒருவர். எதிரிகளைக் கேலி பண்ணுவதில் சிறந்த ஊக்கம் கொண்டவர். இவரது அரசியல் எதிரிகளில் சிலர் இவரது சிறந்த நண்பர்கள். அரசியல் தோழர்களில் வீர சத்துருக்களதிகம் இவருக் குண்டு.

சென்னையில் ஒரு சபை அல்லது சங்கத்தின் அங்கத்தினராயில்லா விட்டால் அதன் ஸ்தாபகராகவோ பொறுப்பு வாய்ந்தவராகவோ இவர் இருப்

பார். முஸ்லீம் லீக்கிலும் ஜஸ்டிஸ் கக்ஷியிலும் இவர் அங்கத்தினரல்ல. இவரை வேலை வாங்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் இவருக்கு முக்கியமான பதவி கொடுத்து விடுவார்கள். ஒரு சங்கத்தில் ஈடுபட்டால் தீவிரமாக உழைப்பார். உழைப்புக்குத் தூண்டுகோலாகப் பதவி இருக்கும். உழைக்கவே பதவியைப் பிரியப்படுவார். களைப்பே இல்லாத, ஓய்வே வேண்டாத மனுஷன். சென்னை சங்கீத சபை, (Music Academy) புத்தகசாலை சங்கம், (Library Association) சுகுண விலாச சபா இம் மூன்றும் விருத்தியடைய வெகுபாடு பட்டார்.

ஸ்ரீ சத்திய மூர்த்தி, கலைகளில் ஆர்வமுள்ளவர். இவருக்குச் சங்கீதம் தெரியும். பாட ஆசை யுண்டு. சிறந்த நடிகர். மனோகரன் வேஷம் நன்றாய்ப் பொருந்தும்.

கல்வி விஷயத்தில் வெகு சிரத்தையுள்ளவர். இவர் சர்வ கலாசாலை மன்றங்களில் படித்தவருக்கும், படிப்புக்கும், உபாத்தியாயருக்கும் சீர் பெருகும்படி செய்கின்றார்.

பத்திரிகைகளுக்கு நன்றாய் எழுதுவார். ஆனால் இவரது பேச்சு விதம் எழுத்து நன்றாயில்லை. கதைகள் எழுத மாட்டார். புஸ்தகங்கள் எழுதவே யில்லை. இவரைப்பற்றிப் புஸ்தகங்களு மில்லை.

இவரை, எப். ஈ. ஜேம்ஸ் 'எல்லாத் தொழிலிலும் ஈடுபட்டவர். உறைந்து போகாத நயாகரா நீர் வீழ்ச்சி' என்றார்.

இவருக்கு காங்கிரஸ், காந்தி, கடவுள், வந்தேமாதரம் முதலிய வார்த்தைகளிலேயேயுள்ள அதிசய சக்தி வெகு நன்றாய்த் தெரியும். இவர் மஹானுமல்ல; மஹரிஷியுமல்ல. அவர் களது பெருமையறிந்த சாதாரண மனிதர்.

பெரிய, அழகான, தெய்வீக, மனதைக் கவரும் சிலை ஒன்றிருக்கின்றது. அதற்கு வெகு சமீபத்தில் சென்றால் சில்லரை விஷயங்களில் சிலகுற்றங்கள் தென்படுகின்றன. இது போல்சிலை-பேசும்-அழகாகப் பேசும்-ஆர்வமுடன் எப்பொழுதும் பேசும்-கேட்கக்கேட்கத் தெவிட்டாத, அதிகம் கேட்க வேண்டுமென்று தோன்றும் எங்கும் செல்லும், எப்பாஷையிலும், எவ்விடத்திலும், எதைப்பற்றியும் பேசும்—சிலை, அசையும் சிலை—ஸ்ரீ எஸ்-ஸத்திய மூர்த்தி.

திருவல்லிக்கேணி கடற்கரையிலோ, ராயப் பேட்டை காங்கிரஸ் மாளிகையிலோ, சென்னை கார்ப்பரேஷனிலோ, சர்வகலாசாலையிலோ-மாம்பலம்(தியாகராஜ நகர்—இவரது அரசியல் எதிரியின் சிறந்த ஞாபகார்த்த நகர்) பார்க்கிலோ, கிறிஸ்தவ கல்லூரியிலோ வேறு இவர் தோன்றும் எங்கேனும் இவர் போல் சிலை வைத்து நாம் காண வேண்டாமா?

நமது கடவுள் சங்கீதத்தை விரும்புகிறார். வீணையின் ஒலியையும், விருந்தாளிகளின் சந்தோஷ ஆரவாரத்தையும் கேட்க ஆசை கொள்கிறார். ஆனால் பன்றிகளின் உறுமலை அவர் எப்படி வெறுக்கிறாரோ அப்படியே மாதா கோயிலின் மணியோசையையும் அவர் வெறுக்கிறார்.

—ஹென்ரிக் ஹெய்ன்

நியாயந்தான்—

—"புதுமைப் பித்தன்"

சிறு கதைகள் படித்து மன உற்சாகம் பெறுகிற தமிழன்பர்களுக்கு 'புதுமைப் பித்தன்' புதியவரல்லர். இவருடைய சிறு கதைகள் ஆழமானவை; கருத்து நிரம்பியவை. இவரை "ஜோதி" வாசகர்கள் அடிக்கடி சந்திப்பார்கள் என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடலூர் குமரப்பிள்ளை கொழும்புக்குப்போவதென்றுரயிலேறியபொழுது ஐ. பி. கொடுத்துவிட்டு மேல் துண்டை உதறிப்போட்டுக் கொண்டுதான் புறப்பட்டார். தகப்பனாரது திடீர் மரணத்தால், மேல்விழுந்து அமுக்கிய கடன்காரர்களுக்கு புகல் சொல்ல அந்த ஒரு வழிதான் தெரிந்தது. மேலும் அவர் மற்றவர்களைப் போல் 'ஒதுக்கி வைத்து'க் கொண்டு கைகளை விரிக்கவில்லை. அப்பொழுது அவருக்கு அனுபவம் போதாது. பள்ளிக்கூடம் என்ற கனவு உலகத்தின் வாசகங்களை உண்மையாகவே நம்பி மோசம்போனார். உபாத்தியாயர்கள் கற்பித்துக் கொடுக்கவும், பெரியவர்கள் பிரசங்க மேடையில் வாசாமகோசரமாகப்பேசவும் முன்னோர்கள் எழுதி வைத்துப் போனதை உபயோகித்துப் பார்த்தார். கை சுட்டது. தூத்துக்குடி போகும் வண்டியின் மூன்றாவது வகுப்பில் உட்கார்ந்த பின்புதான் சுமையை இறக்கி வைத்த ஆசுவாசம் ஏற்பட்டது.

கொழும்பிலும் அவரது இலட்சியம் பிரமாதப்பட்டுப் போகவில்லை. வர்த்தக உலகைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை ஒன்றும் அவருக்குக் கிடையாது. ஏதாவது வெங்காயக் கிட்டங்கியில், சொன்னதைச் செய்துவிட்டு, நாலுகாசு சம்பாதிக்க வேண்டும் என்பதே நோக்கம். தானோ தனிக்கட்டை. ஊரில் உள்ள தாயாருக்கு மாசம் மூன்று ரூபாய் அனுப்ப வழி கிடைத்தால் போதும் என்பதே அவரது பரிபூரணமான ஆசை.

கொழும்புக்குப் போவதென்றால் எவரும் மேல் துண்டுடன், அதையே துணையாக நம்பிச் செல்லுகிறவர்களுக்கு உபவாச மகிமைதான் ஸ்டேஷனில் காத்திருக்கும். அது பிள்ளையவர்களுக்குத் தெரியாது. டிக்கட்டுக்குப்பணம்; அதற்குமேல் ஒரு வேளை சாப்பாட்டுக்குச் சில்லரை; இதுதான் அவரது ஆஸ்தி. வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கொளும்புக்கு வருகிறவர்கள், மேல் துண்டையே மூலதனமாகவும் ஜாமீன் பேர்வழியாகவும் கொண்டு வருகிறவர்களிடம், வசூல் பட்டியலையோ, ஸ்டோர் அறையின் சாவியையோ ஒப்படைத்து விடுவார்களா? அவ்வளவே வேண்டாம்: நட்டநடுப் பகலில் கடைக்குள் ஏறித்தான் அவர்கள் கண் முன்பே புளங்கவிடுவார்களா? வெள்ளைக்காரர் 'ஸ்லேவ் ஐலண்ட்' என்ற யதார்த்தமான பெயரைக் கொடுத்திருக்கும் சரகத்தில் வசிக்கும் கிட்டங்கிப் பிள்ளைமார்களும் முதலாளிமார்களும் பிள்ளையவர்களை நம்பாததில் அதிசயமில்லை. அவர் அந்தப் பக்கத்தில் ஏறியிறங்காத கடை பாக்கியில்லை; ஜன சங்கியைக் கணக்கு உத்தியோகஸ்தரின் நுணுக்கத்துடன் கடை க்ஷேத்திர யாத்

திரை நடைபெற்றது. இதற்குள் மூன்று நான்கு நாட்கள் கழிந்து விட்டன. அன்னிய நாட்டான் பிச்சை எடுக்க ஆரம்பித்தால், இங்கிலாந்து முதலிய இடங்களில் தாய்நாடு திரும்புவதற்காகவாவது வழியுண்டு. பிடித்துக் கப்பலேற்றி விடுவார்கள். கொழும்பு சட்டங்கள் எப்படியோ? வடலூர் பரமசிவம் பிள்ளையின் மனம் பிச்சை எடுக்க ஒப்பவில்லை. அதனால் தான் அப்படிப்பட்ட சட்டம் அங்கிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வழியில்லாமல் போய்விட்டது.

வர்த்தகத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ராணுவ பலம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு தெய்வ பக்தியும் அவசியம். இந்த உண்மையை பிரிட்டிஷ்காரர் மட்டிலும் தெரிந்து கொண்டிருக்கவில்லை; கொழும்புப் பிள்ளைமாரும் தெரிந்து கொண்டிருந்தனர். ராணுவ பலத்தைப் பொறுத்தவரை யானைக்குப் பாதுகாப்பு கிடைக்கும் பொழுது அதன் மீது ஊரும் எறும்புக்கும் கிடைக்குமல்லவா? அதனால் வெள்ளைக் காரனுக்குக் கிடைக்கும் பாதுகாப்பில் தம் நம்பிக்கையைப் போட்டு விட்டு, பக்தி விஷயத்திற்காக மட்டிலும் ஒரு சிறிய பிள்ளையார் கோயிலைக் கட்டி அதற்குப் பக்கத்தில் ஒரு கிணறு ஒன்றையும் வெட்டிப் போட்டார்கள். பெரிய முதலாளிமார்கள் தர்பாராக வந்து கடைச் சிப்பந்திகள் தண்ணீர் இறைத்து ஊற்ற, குளித்து விட்டுப் பிள்ளையாரை அவரவர் உயர்வுதணிவுகளுக்குத் தக்கபடி வழிபட்டுவிட்டுச் செல்வார்கள். தனித்தனி நபரின் பக்திப் பெருக்கு டைபாய்ட் வியாதியஸ்தன் டெம்பரேச்சர் படம் மாதிரி அன்றைய வியாபார ஓட்டத்தைப் பொறுத்ததாக இருந்தாலும், பொதுவாக சங்கத்தினரின் முழு ஆதரவு இருந்ததால் விநாயகர் பாடு சராசரி பக்தி விகிதத்திற்கு மோசமாகி விடவில்லை. அதிகாலை ஏழு மணிக்கு அந்தப் பகுதியில் நோக்கும் திசை எல்லாம் 'நடமாடும் கோயில்கள் தான்'. பிள்ளையார் கோயில் நைவேத்திய விசேஷங்கள் சிறிய சிப்பந்திகளிடை பக்திக் கவர்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்தது.

வடலூர் பிள்ளையும் சித்தி விநாயகர் பக்கத்தில் கோயில் கொண்டருளினார். பிள்ளையார் மன நிலையைப் பற்றி அறிந்து கொள்ள, எனக்கு தேவதை மனோதத்துவ சாஸ்திரம் தெரியாது. பிள்ளையவர்கள் மனதில் மட்டிலும் கசப்பு, கசப்பு, கசப்பு. கோயில் ஐயர் ஒரு நாளைக்கு மட்டிலும் ஏதோ கொடுத்தார். அதில் அவர் மனது அபார மகிழ்ச்சி கொண்டுவிட வில்லை. மேலும் பிள்ளையாரைப் போல் நிர்விசார சமாதியிலிருக்க அவர், கல் இல்லை. அவர்மனதில் எரி மலைகள் சீறின; புதிய சமூக சாஸ்திரங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தோன்றின; நியாயமானவை என்று அறிவை நம்பும்படி வற்புறுத்தின. இப்படிப்பட்ட தத்துவ ஆசிரியனாகப் பரிணமிக்கும் சமயத்தில் தான், உமையாள்புரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பக்திக் கண்கள், வடலூர் துயரத்தின் பிண்டத்தைக் கண்டன. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் கண்கள் மூன்று தினங்கள், அவரை அதே இடத்தில் பார்த்தன. உமையாள் புரத்து ஆசாமி, ஆர அமர சிந்திப்பதில் விசேஷத் தன்மை வாய்ந்தவர். அதனால் தான் மூன்றும் முறையாக வடலூர் பரமசிவம் பிள்ளையைக் கண்டபொழுது அவர் மூர்ச்சையுற்றிருக்க வேண்டியதாயிற்று. ஏனென்

ஞல் பிள்ளையவர்கள் காற்றைப்புசித்து வாழும் கரடிவித்தை கற்றவரல்ல. கற்றிருந்தால் இந்தக் கொழும்புப் பிரயாணமே சித்திக்திருக்காது. மீனாட்சி சுந்தரம் பிள்ளைதான், அவருக்கு மூர்ச்சை தெளிவித்து 'உனக்கு என்ன செய்கிறது?' என்ருர். 'பசிக்கிறது' என்ருர் வடலூர் பிள்ளை சுருக்கமாக. உமையாள் புரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு உயிர்ப் பிராணிக்கு உதவி செய்வது என்று உறுதி கொண்டு விட்டார். காரணம், அன்று விடியற் காலந்தான் வேலைக்காரப் பையன் ஒருவன் முறைத்துக் கொண்டு வெளியேறி விட்டான்; எண்ணெய் தேய்த்து விடுவதிலும் கால் பிடிப்பதிலும் நிபுணன்.

உமையாள் புரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் கடையில் சிப்பந்தியாயிருப்பதில்அவருக்குஅவ்வளவுஅபார மகிழ்ச்சியும் ஏற்படவில்லை; சேவகம் என்பதற்காக அதிருப்தியும் ஏற்படவில்லை. கடைசியாக விநயகக் கடவுளின் அருள் என்ற நம்பிக்கை ஏற்படாததும் ஆச்சரியந்தான். ஏனென்ருல், விருத்தாந்தத்தைக் கேட்ட, ஐந்தாறு நாட்களுக்கு முன்தான் 'வேலையில்லை போ' என்று விரட்டிய உமையாள் புரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, விநயகக் கடவுளின் பரிபூரணமான அருள் என்றுநினைத்தார். ஆனல் பிள்ளையவர்கள், தமது பிரக்ஞை யிழப்பின் அருள் என்று நம்பினர்; அப்படி வெளிப் படையாகச் சொல்லிக் கொள்ளவில்லை.

பிள்ளையவர்களுக் கிருந்த ஒரே ஆசையெல்லாம் திருநெல்வேலி கடன்காரர்களைத் தம் காலடியில் வைத்து ஆட்டிப் பார்க்க வேண்டும் என்பதே. அது சாத்தியமில்லாததால், தன்னுடன் நெருங்கி, தாம் வசிக்க நேர்ந்த சமுதாயத்தைக் காலடியில் கொண்டு வந்து வைத்து ஒரு நாளைக்காவது கண்ணில் விரலை விட்டு ஆட்ட வேண்டும் என்பதே. இந்த ஆசை, பசியின் சாயை மறைய மறைய பிரம்மாண்டமாக வளர ஆரம்பித்தது. உமையாள் புரம் பிள்ளை, வடலூர் பிள்ளையை பண வசூலுக்கும் சரக்குப் பிடிக்கவும் அனுப்ப ஆரம்பித்தார். பல முதலாளிகளுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தார்.

கொழும்பு கடைகளில் உதவித் தொழிலுக்குப் போகிறவர்களுக்கு எப்பொழுதாவது தனிக் கடை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கும்; அல்லது ஏற்படும். பிள்ளையவர்கள் விஷயத்தில் இது ஏற்பட்டது.

வடக்கத்திசேட் ஒருவன் இவரைநம்பிப் பணம் கொடுக்க உத்தேசித்தான். இத்துடன் உமையாள் புரம் பிள்ளையும் ஏதோ உதவினர். ஒரு நல்ல நாளில் வடலூர் பிள்ளையின் சொந்தக் கடை திறக்கப் பட்டது. முதலாளி ஸ்தானத்தைப் பெற்று விட்டால் வியாபார அனுபவம் வந்து விடுமா? அதனல்தான் ஆள் வைத்துக் கடை நடத்த வேண்டியதாயிற்று. வியாபார நுணுக்கம் தெரிந்தாலும் தெரியா விட்டாலும், முதலாளியான பிறகு வைப்பாட்டி வைத்துக் கொள்ளாமல் இருப்பது கௌரவக் குறைவு. அதை உத்தேசித்தோ அல்லது இயற்கையின் தேவையாலோ மலிவான சிங்களவைப்பாட்டியை வைத்துக் கொண்டார்.

பிள்ளையவர்கள் தொழில் ஆரம்பித்த நேரத்தின் விபரீதமோ என்னவோ வர்த்தக உலகத்தில், பணம் புரளுவது கஷ்டமாயிற்று. பெரிய

பெரிய விலாசங்கள் இரண்டு மூன்று தொடர்ந்தாற் போல மூடப்பட்டன. கடன்காரர் பிடுங்கல் அதிகமாயிற்று. பிள்ளையவர்களின் வியாபார ஓட்டமும் அவ்வளவு தெளிவில்லை. திருநெல்வேலிக்கதை மறுபடி கொழும்பிலும் 'ஒன்ஸ்மோ' ரடித்து விடுமோ என்ற பீதி அதிகமாயிற்று. ஆனால் மிரண்டு விடவில்லை. பேச்சு வெளி வராமல் இருக்க சரக்குகள் அதிகமாக வாங்க ஆரம்பித்தார். திடீரென்று மூன்று கிடங்குகள் வாடகைக்கு அமர்த்தப் பட்டன. அன்று சாயங்காலத்திற்குள்ளாகவே அவ்வளவிலும் லட்ச ரூபாய்க்குச் சரக்கு. சாயங்காலம் கடையடுக்கும் பொழுது சிப்பந்திகளைக் கூப்பிட்டு சம்பளமும் மேலுக்கு ஐந்து பத்தும் கொடுத்து இன்னும் ஐந்தாறு நாட்களுக்கு வேலை கிடையாது; பேசாமல் போயிருங்கள் என்று திட்டப் படுத்தினர். கடை, கிடங்கு எல்லாவற்றையும் இழுத்துப் பூட்டி சீல் வைத்தார்; சிங்களத்தி வீட்டுக்குப் போய் விட்டார்.

மறு நாள் காலை மணி ஒன்பதாகியும் கடை திறக்கப்பட வில்லை. வடலூர் பிள்ளையும் மூறிந்து போனர் என்ற செய்தி காட்டுத் தீபோல பரவியது. சேட்ஜிகளும் சின்னக் கடைக்காரர்களும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்ள வில்லை; மனமார, வாயாரத் திட்டினர்கள்.

சிங்களத்தி வீட்டில் இருப்பதாகத் துப்புத் தெரிந்தது. எல்லாரும் ஒரு மிக்க வீட்டுக்குள் புகுந்தார்கள். 'பேமானி பயலே....' என்று ஆரம்பித்தார் சேட்ஜி. மற்றவர்களும் அவர்கள் குலாசாரப்படி திட்டினர்கள்.

பிள்ளையவர்கள் அமைதியாகக் கல்போ விருந்தார்....சந்தடி ஓய்ந்ததும், 'உங்களை ஏமாற்றுவது என் நோக்கம் அல்ல....கடன் எல்லாவற்றையும் பைசா விடாமல் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. பெரிய முதலாளிகளே தியங்குகிருர்கள். ஒரே சமயத்தில் எல்லாரும் கேட்டுவிட்டால், எல்லாருக்கும் நஷ்டமாகுமே என்பது என் வருத்தம். இப்பொழுது சொல்லுகிறேன்; நீங்கள் கொடுத்திருக்கும் கடனை தவணையாகப் பெற்றுக் கொள்ளுகிறீர்களா? அப்படியானல்பாக்கியில்லாமல்செலுத்துகிறேன். இல்லாவிட்டால் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறதைப் பங்கு போட்டுக் கொள்ளுங்கள்' என்று கடைசியாகச் சொன்னர். வர்த்தகர்கள் பீதியடித்துப் போனர்கள். 'இப்பொழுது வசூல் செய்தால் தம்படி கூடத் தேறுமோ என்னவோ? அவன் தவணை மூலம் பூர்த்திசெய்வான் என்பது எப்படிநிச்சயம்?' ஒரு வழியாக நிர்ணயிக்க முடியவில்லை. முடிவில் அவரைத் திட்டி விட்டுச் சென்ருர்கள்.

வடலூர் பிள்ளை அத்துடன் தூங்கப் போய் விடவில்லை; அல்லது ஊருக்கும் கம்பி நீட்ட வில்லை. ஒரு முரட்டு வக்கீலைப் பிடித்து அமர்த்தினுர். அவன் கையில் தம் வழக்கையும் யோசனையையும் ஒப்படைத்தார். வக்கீல், கடன் கொடுத்திருந்தவர்கள் பட்டியல் தயாரித்து அவரவர்கள் தொகைக்குத் தக்கபடி விகிதாசாரம் போட்டு, முடிவு கூற ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்து அனுப்பினுன். சின்னக் கடன்காரர்கள், கிடைத்தது போதும் என்று ஒன்றுக்குக் காலாக வாங்கிக் கொண்டு ஓடினர். இப்படி மெஜாரிட்டி தொல்லை ஒழிந்தது. மற்



காதலின் வெற்றி

எழுதியவர்: ஸ்ரீ. ம. கி. திருவேங்கடம் அவர்கள்; வெளியிட்டோர்: லோக சக்தி பிரசுராலயம், 21 A, சௌத்கூவம் ரோட், கோமளீஸ்வரன் பேட்டை, சென்னை; விலை: மூன்று அணா; டபிள் கிரவுன் அளவு 1x16; 88 பக்கங்கள்.

“காதலின் வெற்றி என்னும் இப் புத்தகம் மனித சமூகத்திற் கொரு பொக்கிஷமாகும்” என்று காதல் நாயகி (!) என்பவர், இந்தப் புஸ்தகத்தின் சிறப்புரையில் குறிப்பிட்டிருக்கிறார். ‘பண்டைச் சரித்திரத்தைத் தழுவி எழுதப் பட்ட இப் புத்தகம் காதலர்கள் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துவ தோடன்றி, தமிழ் மொழிக்கும் கலை வளர்ச்சிக்கும் ஏற்ற சேவை புரியுமென நம்புகின்றேன்’ என்கிறார் ஆசிரியர் முன்னுரையில். இப் புஸ்தகம், மனித சமூகத்திற்கு ஒரு பொக்கிஷமாகுமானால், அந்த மனித சமூகம் வெகு சீக்கிரத்தில் இன்ஸால்வெண்டாகி விடும். அப்படியாவது மிகவும் நல்லது. செல்லாத காசுகளை வைத்துக் கொண்டு, எத்தனை நாளைக்கு ஒருவன் பணக்காரன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டிருக்க முடியும்? இந்தப் புஸ்தகத்தை

றும் பெரிய புள்ளிகள் வேறு விதியில்லாமல் நிபந்தனையை ஏற்றுக் கொண்டனர்.

கையில் மூலதனம் போடாமல் ஒரு லட்ச ரூபாய் சரக்கு; அதிருக்கும் பொழுது தவணை செலுத்துவதற்குமா வலிக்கிறது? மாதம் முதல் தேதியன்று ‘டணார்’ என்று ரொக்கம் நபருக்குப் போய் விடும். ஆனால் மார்க்கெட்டில் பிள்ளையவர்கள் நம்பிக்கையை யிழந்து விட்டார். ரொம்ப காலம்வரை அந்த கருப்புப் புள்ளி மாறவில்லை. தவணை குறியாகச் செலுத்தியது அவரிடம் நம்பிக்கையை அவருக்குக் கிழடு தட்டிய பின்பே வருவித்தது. அவருடைய தொழிலும் நன்றாகவளர்ந்தது. பத்து வருஷம் கொழும்பு வியாபாரமே அவரது கைக்குள் என்ற நிலைமையாயிற்று.

மூலதனம் பெறுவதற்கு வடலூர் பிள்ளை செய்தது சரியா தப்பா? சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டார். அப்புறம் நாணயஸ்தனாக இருந்தாரே? முதலில் அவரது கை ஓய்ந்துகிடக்கும்பொழுதுஅவரை நசுக்கிப்போடவேண்டுமென்றுசமூகம் என்ற தனித்தன்மை யற்ற ஒன்று நினைத்ததே. அவர் செய்தது பிசகானால், முதலில் அவர் ஐ. பி. போடவேண்டிய நிலைமை ஏற்பட வைத்தது மட்டும் சரியா?

வெளியிடுவது தமிழ் மொழிக்கும் கலை வளர்ச்சிக்கும் சேவை செய்வதாகுமானால், இந்தச் சேவையினின்று தமிழ் மொழியும் கலையும் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு விடுதல் அவசியம்.

இந்தப் புஸ்தகத்தில்—நூல் என்று சொல்ல நமக்கு மனம் வரவில்லை. அதற்குச் சில லட்சணங்கள் உண்டல்லவா?—இலக்கண சமரஸம் நிறையக் காணப்படுகிறது. ள ல கரத்திற்கும், ர ற கரத்திற்கும், ஒருமை பன்மைக்கும், காற்புள்ளி முற்றுப் புள்ளிக்கும், கிருஷ்ண பக்ஷம், சுக்கில பக்ஷத்திற்குங் கூட எவ்வித வேற்றுமையும் காண்பிக்கப்படவில்லை. கொஞ்சம் சுவைத்துப் பார்க்கிறீர்களா சில உதாரணங்களை?

கதிரவுன் ஒலி இழந்து ப-14

சிறிது நேரம் காந்திமதியுடன் அளவலாவிக் கொண்டிருந்தான் ப-28

நல்விரவு ஒன்றில் ப-61

உன் வரலாற்றினை விரிவாய் உறைப்பாயாக ப-30

அருகில் உட்கார்ந்து பேரிறைச்சலுடன் ப-67

இவ் வண்ணம் ஒரு மாத காலமாயின ப-32

கவலைத் தீயானது மேன் மேலும் அதிகரிக்கலாயின ப-39

வாலிபனுக்கு அச்சமும் திகைப்பும் உண்டாயிற்று ப-20

அன்று கிருஷ்ண பக்ஷமாகும்........ வெளியே தோன்றினான் வெண்சுடர் மதியோன். பூர்ண சந்திரனைக் கண்ட வாலிபன்............ ப-15

இந்த மாதிரி 88 பக்கங்களிலும் ஏராளமாகப் பார்க்கலாம். இது கிடக்கிறது. கீழ்க் கண்டவற்றிற்கு என்ன அர்த்தம் என்பதை வாசகர்கள் சொல்லட்டும்.

பார்க்குங்கால், இவ்வாலிபன் உருவமும், செய்கையும் முற்றிலும் முயற்கொம்பாகவே இருக்கிறது. பக். 54

திடீரென்று திங்கள் தோன்றி கானகமனைத்தையும் வெண்ணிலவு வீசலாயின. பக். 56

பெண்கள் புருஷர்களிடத்தில் கொள்ளும் காதல் முயற் கொம்புக்குச் சமானமாகும். பக். 57

கூந்தல் குலைந்து ஆடைகள் கலைந்து அலங்கோலமாக அலறும் அக்கிழவியை * * * * பக். 68

அவனை மார்புறக் கட்டித் தழுவி முத்தமிட்டு காம மென்னும் அலைகளில் சிக்கித் தத்தளிக்கும் மோக மென்னும் சாகரத்தைக்கடக்க விரும்பினான். பக். 69

சந்திரனும், கடலும், தாமரை மலரும் இந்தப் புஸ்தகத்திலே உவமைப் பொருளாக அகப்பட்டுக் கொண்டு திணறுகின்றன பாவம்! இந்த ஜன்மமே இனி வேண்டாம் என்று இவை பிரார்த்தனை செய்யுமானால், அந்தப் பிரார்த்தனைக்கு இரங்குமாறு நாம் கடவுளுக்குச் சிபார்சு செய்யத் தயார். எத்தனை தரந்தான் இந்தச் சந்திரன், முகத்திற்குப் போட்டியாக வருவான்? எத்தனை தரந்தான் இந்தக் கடல், கவலைக் கடலாக மாறி இந்தக் கதையிலே வரும் பேர்வழிகளை அழுத்தும்? சிவ! சிவா! இப்படிப் பட்ட ஒரு புஸ்தகத்தை இதன் ஆசிரியர் வெளியிடத் துணிந்ததைப் பற்றிக் கூட நாம் ஆச்சரியப் படவில்லை. இது இரண்டாம் பதிப்பு என்று சொல்லப் பட்டு வெளி வந்திருக்கிறதே அதுதான் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அட, தமிழ் நாடே!

ஜப்பானை பகிஷ்கரிக்க முடியுமா ?

—பாரி டாம்விலே

சீனாவின் மீது ஜப்பான் தொடுத்துள்ள போரைக் கண்டிக்கவும், சீனாவின் மீது நமக்குள்ள அநுதாபத்தைக் காட்டிக் கொள்ளவும், ஜப்பான் சரக்குகளைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்ற இயக்கம் இங்கிலாந்தில் இருக்கிறதென்பதை நேயர்கள் அறிவார்கள். இதே மாதிரி இந்தியாவிலும் பிரசாரம் நடை பெறுகிறது. ஆனால் இந்தப் பகிஷ்கார இயக்கம் அநுபவ சாத்தியமான தல்ல வென்றும், இதனால் நன்மையை விடத் தீமைகளே அதிகம் விளையு மென்றும் ஸர் பாரி டாம்விலே (Sir Barry Damvile) என்பவர் இந்தக் கட்டுரையில் கூறுகிறார். இவர் ஒரு கப்பற் படை அதிகாரி. நிரம்ப அநுபவஸ்தர். பகிஷ்காரத்துக்கு விரோதமான கட்சியை அழகாக எடுத்துச் சொல்கிறார்.

தற்போதைய உலகம் விசித்திரமானதாயிருக்கிறது; நிரம்ப அறிவற்ற தன்மையிலும் இருக்கிறது. எல்லா நாடுகளும் தங்கள் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு வருகின்றன. ஆனால் அதே சமயத்தில் சமாதானம் என்ற பேச்சை மட்டும் ஓயாமல் சொல்லிக் கொண்டு வருகின்றன. ஏதோ அநுபவ சாத்திய மில்லாத தத்துவங்களைச் சொல்லிக் கொண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி வலம் வருகிறார்கள் சர்வதேச ராஜதந்திரிகள். ஒவ்வொருவருக்கும், உலகத்தில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டு மென்ற எண்ணமென்னவோ இருக்கிறது. ஆனால் இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியிலே செல்ல விரும்புகின்றனர். இதனால் ஏற்படும் பயன் விபரீதமாயிருக்கிறது.

சமாதான நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்ட சங்கங்கள் பல, யுத்தந் தொடுக்கும் தேசங்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூச்சலிடுகின்றன. சர்வதேச சங்க யூனியன் என்ன, சமாதான நிபுணர் நிர்மாண கவுன்சில் என்ன, ஆசிரியர்களின் யுத்த எதிர்ப்பு இயக்கமென்ன, இவை யாவும் ஒன்று சேர்ந்து ஜப்பானைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றன. ஆனால், இந்த மாதிரியான விஷயங்களில் கொஞ்சம் ராணுவப் பார்வையோடு பார்க்க வேண்டிய போர் வீரர்கள், கப்பற் படை மாலுமிகள் முதலியோரோ இந்தக் கிளர்ச்சிகளை விரும்பவில்லை. இது விநோதமாக இல்லையா?

இந்தச் சமாதான வாதிகள், ஏதோ ஒரு லட்சியத்தை வைத்துக் கொண்டு அநுபவ சாத்திய மில்லாததும் நமக்கு (பிரிட்டிஷாருக்கு) தீங்கு விளைவிப்பதுமான முறைகளை அநுஷ்டிக்குமாறு கூறுகிறார்கள். இதை அவர்கள் எதிரிலேயே எடுத்துச் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஒரு தேசத்தையோ அல்லது அதனிடமிருந்து வரும் சாமான்களையோ பகிஷ்கரிப்பதென்பதில் உள்ள கஷ்ட நிஷ்டூரங்களையும் சிக்கல்களையும் இவர்கள் உணர்வதேயில்லை. முதலாவது ஜப்பான் சாமான்களைப் பகிஷ்கரிப்போமானால் இங்கிலாந்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகும். ஜப்பானுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்று இருக்கிற தொழில்

கள் ஸ்தம்பித்துப் போகும். தவிர, ஜப்பானிடமிருந்து சில மூலப்பொருள்களை வரவழைத்துக் கொடுக்கிற வியாபாரிகள் பாதிக்கப் படுவார்கள்.

இந்தப் பகிஷ்கார பலன்கள் ஒரு புற மிருக்கட்டும். ஜப்பான் உடனே என்ன செய்யுமென்றால், பிரிட்டிஷாருடைய உரிமைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் பதிலுக்குப் பதில் செய்ய ஆரம்பிக்கும். ஒரு நாட்டின் பொருள்களைப் பகிஷ்கரிப்பதென்றால், அது அந்நாட்டின் மீது நமக்குள்ள விரோத மனப்பான்மையையே காட்டுகிறது. அந்தப் பகிஷ்காரம் பூர்த்தியாகும் வரை நாம் விடாப்பிடியாக இருக்க முடியுமாவென்பதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். பகிஷ்காரத்தின் உடன் விளைவு என்ன? யுத்தந்தான். இதற்குத் தயாரா யில்லாதவர்கள் பகிஷ்காரத்தைப் பற்றிப் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கட்டும். நமக்கு நெருக்கமாயுள்ள சர்வாதிகாரிகளிடமோ, அல்லது கீழ்க்கோடியிலுள்ள ஒரு நாட்டினிடமோ நாம் ஜபர்தஸ்துடன் நடந்து கொள்ள முடியாது. இவ்வளவு தூரம் எச்சரிக்கை செய்தும், பகிஷ்கார இயக்கம் ஆரம்பிக்கப் படுமானால், நமது கௌரவம் கெட்டுப் போய் விடும்.

சரி, இந்தப் பகிஷ்காரப் பிரசாரகர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு, அரசாங்கத்தினரும் யுத்தத்தில் இறங்குகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். இந்தப் பிரசாரக் கோஷ்டியைச் சேர்ந்த லார்ட் செஸிலோ, அறிஞர் கில்பர்ட் முர்ரேயோ, தளபதி அட்லியோ யுத்தத்திற்குச் செல்வார்களானால் அதைப் பற்றி யாருக்குமே ஆட்சேபமிராது. யாருக்குமே, தங்கள் நம்பிக்கைக்காகஇறக்க உரிமையுண்டு. ஆனால் இந்தச் சமாதான வாதிகள் யுத்தத்திற்குச் செல்ல மாட்டார்களே. இவர்களுடைய அரை குறையான தத்துவங்களுக்காக, தரைப்படை வீரர்களும் கப்பற் படை வீரர்களுமன்றோ சென்று மடிவார்கள்? நமக்குச் சமீபமாயுள்ளவர்களோடு போர் புரிவதென்பது வேறு விஷயம். ஏனென்றால் நமது துருப்புகளைச் சீக்கிரத்தில் கொண்டு போய் சத்துருக்களை எதிர்க்க முடியும். முன்னர் நமக்குச் சத்துருக்களாயிருந்த ஸ்பெயின், ஹாலந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகள் நமக்குச் சமீபத்திலேயே இருந்தன. ஆனால் வெகு தூரத்திலுள்ள ஒரு சத்துருவுடன் போர் புரிவதென்பது தனி விஷயம். இதில் அதிக கஷ்டங்கள் நிறைந்திருக்கின்றனவென்பதை உணர்வதில் அவ்வளவு கஷ்டமில்லை.

கப்பற் படை மூலமாக ஜப்பானைத் தாக்குகிறோமென்று வைத்துக் கொள்வோம். முதலாவது நமது வியாபாரக் கப்பல்கள் தாராளமாகக் கடல்களில் சென்று வருவதைப் பாதுகாவல் செய்யத் தனிப்படையொன்றுவேண்டும். அதனோடு எதிரிக் கப்பல்களை தாராளமாகப் போக விடாதபடி தடுக்க வேண்டும். தவிர எதிரியின் கப்பற் படையோடு போர் செய்ய வேண்டும். இந்தப் போரைச் சரிவரச் செய்ய வேண்டுமானால், சத்துருக்களின் கடற் படைக்கு அருகாமையிலேயே நமது கடற் படை இருக்க வேண்டும். அதாவது ஜப்பான் துறைமுகங்களுக்குச் சமீபமாக நமது கடற் படை இருக்க வேண்டும். இந்தக் கப்பற் படை தங்குவதற்கு சரியான தொரு தங்குமிடம் வேண்டும். இங்கே கப்பல்களைப் பழுது பார்க்கவோ, புதிய விதமாக மாற்றியமைக்கவோ, தக்க சௌகரியங்கள்

இருக்க வேண்டும். இஃதொரு முக்கியமானதும் விசேஷமானதுமான அமிசம். ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது, கீழ்த் திசையில் நமக்கென்று தனியான கப்பற் படை ஸ்தலம் ஒன்றும் இல்லை. நம்முடைய முயற்சியெல்லாம் இங்கிலாந்திலேயே இருந்தன. இதனால்தான், மேற்படி ஐரோப்பிய யுத்தம் முடிந்தவுடன் சிங்கப்பூர் கப்பற் படை ஸ்தலத்தைக் கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஜப்பான் தாக்கினால் அதனை எதிர்த்து நிற்கக் கூடிய மாதிரி கப்பற் படையொன்று இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தச் சத்துருவின் கப்பற் படையும், இந்தியா, நியூ ஜீலந்து, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளின் மீது தாக்க முடியாதபடி இந்தக் கப்பற் படை ஸ்தலம் இருக்கிறது.

சிங்கப்பூர் கடற் படை ஸ்தலம் தற்காப்புக்காகவே அமைக்கப் பட்டிருக்கிறது. ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்காக, சிங்கப்பூருக்கு வட கோடியில் சுமார் மூவாயிரம் மைல் தூரத்தில் ஒரு கப்பற் படை ஸ்தலத்தை அமைக்க வேண்டும். கடல் மூலமாகத் தாக்கக் கூடிய சாதனங்களை வைத்துக் கொள்ளாமல், ஜப்பானோடு யுத்தஞ் செய்ய முடியுமென்று யாருமே சொல்ல முடியாது. ஜப்பானுக்கு விரோதமாக பகிஷ்கார இயக்கத்தைத் தொடங்கி விட்டு, சிங்கப்பூரிலேயே தற்காப்பு நிமித்தம் நாம் உட்கார்ந்து கொண்டிருந்தோமானால், எந்த ராஜ தந்திரியும் நினைக்க முடியாத ஒரு தற்கொலையைச் செய்து கொள்வது போலாகும். தவிர, சைனாவில் நமக்குள்ள உரிமைகள் யாவும் ஜப்பானால் தாக்கப் படுமானால் அதைக் குறித்தும் நாம் ஆச்சரியப் பட முடியாது.

ஜப்பானுக்குச் சமீபத்திலேயோ, அல்லது சீனத் தீவுகளில் ஏதேனும் ஒன்றிலேயோ நாம், ஒரு கப்பற் படை ஸ்தலத்தை அமைத்துக் கொள்வதென்றால், அதில் கொண்டு நிறுத்த இங்கிலாந்திலிருந்து, கப்பற் படையின் பெரும்பாகத்தை வர வழைத்துக் கொள்ள வேண்டும். ஜப்பான் கப்பற் படையை விட அதிகமான படையாக இது இருக்க வேண்டும். ஏனென்றால்ஜப்பானியக்கப்பற்படை, தனது நாட்டுக்கு வெகு சமீபத்திலேயே இருப்பதால், எந்தச் சமயத்திலும் தன் படை பலம் முழுவதையும், நமக்கு எதிரே கொண்டு நிறுத்த முடியும். நம்மிடத்தில், அந்த எதிர்ப்பைச் சமாளிக்கக் கூடிய அளவு பலம் இருக்க வேண்டும். அதாவது நமது கப்பற் படை அனைத்தையும் கீழ்க் கோடிக்கு அனுப்பி விட வேண்டும். எந்தப் பொறுப்புள்ள அரசாங்கமாவது இதைச் செய்யுமா?

கப்பற் படை பூராவுமே ஜப்பானுக்கு விரோதமாகச் செல்கிறதென்றும்வைத்துக்கொள்வோம். அதனால் நாம் ஜெயித்து விட முடியுமா? கப்பற் படை யொன்றைக் கொண்டே வெற்றி யடைகிற காலம் போய் விட்டதே. சத்துருக்களை நாம் கொஞ்சம் நெருக்கலாம். அவ்வளவுதான். அதனாலேயே சத்துருக்களைச் சமாதானத்திற்கு வரச் செய்து விட முடியாது. சிறப்பாக ஜப்பானை எதிர்க்க வேண்டுமானால், நமக்குப் பெருவாரியான தரைப் படையும் அவசியம். தவிர, சமாதானம் ஏற்பட்டு, அதன் உடன்படிக்கை ஷரத்துகள் சரியாக நிறைவேற்றப் படுகின்றனவா வென்பதைப் பார்க்க, நிரந்தரமான துருப்புகளை நிறுத்தி வைக்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

பகிஷ்காரப் பிரசாரகர்கள் இவை

யெல்லாம் பற்றி யோசனை செய்தார்களா? இந்தச் சங்கடங்களிலெல்லாம் புகுந்து வெளிவர அவர்கள் தயாராயிருக்கிறார்களா? இதனால் விளங்குகிற உண்மை யென்னவென்றால், லட்சியங்க ளென்னமோ உயர்ந்தவை தான். ஆனால் அவை அநுபவத்தில் கொண்டு வந்து பார்க்கிற போது, அவை உலகத்திற்கே ஆபத்தாய் வந்து முடிகின்றன. நமது கொள்கையும், யுத்த தந்திரங்களும் எப்பொழுதும் ஒன்று சேர்ந்தே போக வேண்டும். ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு, இந்த முக்கியமான உண்மையைக் கை நழுவ விட்டு விட்டோம். இதனால் தான் மஞ்சூகோ, அபிசீனியா ஆகிய நாடுகளின் ஆக்ரமிப்பின் போது, நாம் பரிதபிக்கத் தக்க நிலையில் இருந்தோம். நம்மால் நிறைவேற்றப்பட முடியாத காரியங்களைப் பற்றிப் பயமுறுத்திக் கொண்டிருப்பதில் என்ன பயன்?

சர்வ தேச சங்கமானது, அகால மரண மடைந்ததற்குக் காரணம், அதனை உற்பத்தி செய்து ஆதரித்தவர்களுடைய உற்சாகமுள்ள கொள்கைகள் தான். இனி அது நல்ல குழந்தையாக வளர வேண்டுமானால், செயற்கைப் பிராண வாயுவை அளித்து, அநுபவ சாத்தியமான கொள்கை யுடையவர்களால் போஷிக்கப் பெறுதல் வேண்டும்.

யுத்தந் தொடுத் திருக்கிறோம் என்று உத்தியோக தோரணையில் அறிவிக்காமலே சைனாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் நடை பெற்றுக் கொண் டிருக்கிற தென்பது விசனிக்கத்தக்க விஷயம். இரண்டு கட்சியினருடைய வாதப் பிரதி வாதங்கள் எனக்குத் தெரியாது. ஆனால் ஜப்பானைத் தண்டிக்க வேண்டு மென்று சொல்கிறார்களே அந்தப் பேர்வழிகளை விட எனக்கு நன்றாகத் தெரியும். கீழ் நாட்டில் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஜப்பானின் நீண்ட நாளைய கொள்கையின் ஒரு முகந்தான், இந்தச் சீனப் படையெடுப்பு. நாளாவட்டத்தில் இந்தக் கொள்கை பலன் தருமா என்று சந்தேகிக்கப்படக் கூடிய ஒரு காரியத்தில் ஜப்பான் இறங்கி யிருக்கலாம். அல்லது சர்வ தேச சங்கத்தின் நிறைவேற்றப் படாத உறுதி மொழிகளை நம்பி, சைனா இந்த யுத்தத்தில் இறங்கும்படி நேரிட்டிருக்கலாம். ஏற்கனவே, இந்த நிறைவேற்றப் படாத உறுதிமொழிகளுக்குப் பலியாகி இருக்கிறது அபிசீனியா. இஃதொரு அருவருக்கத்தக்க விஷயம். இவை யெல்லாம் போக, ருஷ்யா ஒன்று இருக்கிறது. இன்றைய நிலைமையில், ஜப்பானைத் தீவிரமாக எதிர்க்க சைனாவால் முடியாமல் இருக்கலாம். ஆனால், விசாலமான தனது நாட்டில், ஆங்காங்குச் சத்ருவைத் தாக்கிச் சில்லரைச் சேதங்கள் உண்டாக்கித் தானும் சோர்வடைந்து சத்ருவையும் சோர்வடையச் செய்யலா மல்லவா? அல்லது பின்னால் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தால் பார்த்துக் கொள்வோ மென்று சொல்லி இப்பொழுது சமாதானம் செய்து கொள்ளலாம்.

நாம் இப்பொழுது செய்யக்கூடியதென்ன வென்றால், நட்பு முறையில் இரண்டு நாடுகளுக்கும் ஆலோசனை சொல்லலாம்; சமரஸப் படுத்திவைக்கலாம். ஆனால் சமரஸமாகப் போவதோ, சண்டை போடுவதோ சைனாவையும் ஜப்பானையும் பொறுத்த விஷயம். தங்கள் உரிமைகள் நேரடியாகத் தாக்கப்பட்டா லொழிய மேனாட்டு வல்லரசுகள் இதில் தலையிட உரிமையோ அதிகாரமோ இல்லை.

ஸ்திரீகளின் சமூக அந்தஸ்து

—"குயில்"

சரித்திரத்தை நாம் ஆதியிலிருந்து ஆராய்ந்து பார்த்தோமானால், ஆண்களைப் போலவே பெண்களும் சரித்திரத்தை உண்டுபண்ணியிருக்கிறார்கள். வேண்டுமானால், ஸ்திரீகளை மூலப்பொருளாகவும், புருஷர்களைப் பண்பட்ட பொருளாகவும் கூறலாம். எப்படியிருந்தபோதிலும் மனித சமூகத்தின் பாதி தொகையினராயுள்ள இவர்கள், உலக நாகரிக வளர்ச்சியின் காரணஸ்தர்களாக இருந்திருக்கிறார்கள். இதை யாருமே மறுக்க முடியாது.

நாகரிக தீவட்டியை முன்னே பிடித்துச் சென்றவர்கள் ஆண்களேயென்றும், அவர்களுக்குப் பின்னாலேயே ஸ்திரீகள் வந்து கொண்டிருந்தார்களென்றும் சாதாரணமாக எண்ணப்பட்டுவருகிறது. இதனாலேயே, சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் இவர்களுக்கு முக்கிய ஸ்தானத்தைக் கொடுக்கவில்லை. விவாக முறை ஒழுக்க நிலை முதலியவற்றைப்பற்றிப் பேசும்போது மட்டும் எங்காவது ஓரிரண்டு இடங்களில் ஸ்திரீகளைப்பற்றியகுறிப்புகள்வரும். அவ்வளவே தவிர ஆண்களைப்போல் பெண்களிடத்தில் சரித்திர ஆராய்ச்சி, சரியான கவனஞ் செலுத்தவில்லை. மனிதனுடைய சரித்திரம் என்றால், அது ஸ்திரீயினுடைய சரித்திரமும் அல்லவா? இரண்டு பேரும் மனித சிருஷ்டிகள் தானே! இரண்டு பேருக்கும் வாழ்க்கையிலே ஒரே வழிதானே!

ஆதிகாலத்தில் மனிதன் குகைகளிலும், மர நிழல்களிலும், ஆற்றோரங்களிலும் வசித்துக் கொண்டிருந்த போது—காட்டு மிருகங்களோடு போராடியவண்ணம் இருந்த போழ்து—ஆண்களின் சரித்திரமும் பெண்களின் சரித்திரமும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஆனால் காலஞ் செல்லச் செல்ல, மனித சமூகம் வளர்ந்து, விவசாயஞ் செய்தல், யுத்தந்தொடுத்தல், கூட்டங் கூட்டமாகச் சிலபொதுவிதிகளுக்குட்பட்டுவாழ்தல் முதலிய நியதிகள் ஏற்பட்டதும், இரண்டு பேருடைய சரித்திரமும் வேறு வேறாகப் பிரிய ஆரம்பித்தன. அது முதற்கொண்டு, 'ஸ்திரீகளின் அந்தஸ்து' என்ற சொற்றொடரும் வழக்கில் இருக்கத் தொடங்கியது.

ஆண்களின் சரித்திரமும் பெண்களின் சரித்திரமும் வேறு வேறாகப் பிரிந்ததற்கு நான்கு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. அவை (1) பால் வேற்றுமை (2) யுத்த எண்ணம் (3) பொருளாதார சக்திகள் (4) பொதுப்படையான தத்துவங்கள் என்பவை.

தேக சம்பந்தமான வேற்றுமைகளைக் கவனிக்கிறபோது, ஆணைவிடப் பெண் பலஹீனமாயிருக்கிறாள். தாய்மை என்கிற பெரும் பொறுப்பு இவள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே, ஆண்களுக்கென்று சில பழக்க வழக்கங்களென்றும் பெண்களுக்கென்று சில பழக்க வழக்கங்களென்றும் ஏற்பட்டன.

மனித சமூகமானது, தான் வளர்ச்சியடையுங் காலத்தில் பல சக்திகளோடும், பல இனத்தாரோடும் போ

ராடி யிருக்கிறது. இந்தப் போராட்டங்கள், எப்பொழுதும் ஸ்திரீகளின் அந்தஸ்துக்குப் பாதகமாகவே இருக்கிறது. ஏனென்றால் ஸ்திரீகளின் மனப்பான்மை யானது, யுத்தத்தில் செல்வதே கிடையாது. அந்த மனப்பான்மையோடு, இவர்களுடைய தேக வலிமையின்மையும் சேர்ந்திருப்பதனால், யுத்தத்தில் வெற்றிப் பொருள்களாக இவர்கள் கருதப்பட்டார்கள். ஆண்கள் எவ்வளவுக் கெவ்வளவு யுத்த வெறி பிடித்து அலைந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஸ்திரீகளின் நிலைமை கேவலமடையத் தொடங்கியது. ஆனால் இப்படிப் பொதுப்படையாகச் சொல்லி விடுவதற்குமில்லை. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப்பிறகு பொதுவாகவே, ஸ்திரீகளின் அந்தஸ்தும் முக்கியத்துவமும் அதிகமாயிற்று என்று சொல்ல வேண்டும். எப்படி யென்றால், யுத்தகளத்திற்கு ஆண்கள் சென்று விட்டபடியால், சமூகத்தின் பொருளாதாரத் தேவைகளைப் பெண்கள் பூர்த்தி செய்து வைத்தார்கள். இதன் பிறகுதான், ஸ்திரீகள், தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அதிகமாகப் போராட வேண்டியிருந்தது. இதற்கு ஆண்கள் பலர் துணை செய்தனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பொருளாதார சக்திகளைப்பொறுத்த அளவில், ஸ்திரீகள், குறைவான ஊதியம் பெற்று அதிகமான உழைப்பைச் செய்ய வேண்டி யிருக்கிறார்கள். ஸ்திரீகளின் மெல்லிய சுபாவத்தை ஆதாரமாகக் கொண்டு, சமூகத்தின் ஒவ்வொரு சாராரும் தங்களுக்குச் சாதகத்தைத் தேடிக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

பொதுப் படையான தத்துவங்கள் என்று சொல்கிற அளவிலே, சட்டம், ஒழுக்கம், சொத்துரிமை முதலியன ஸ்திரீகளுக் கென்று தனியாகவே ஏற்பட்டிருக்கிறது.

இனி முற் காலத்து உலக நாகரிக தேசங்களில், ஸ்திரீகள் என்னென்ன விதமாக நடத்தப் பட்டார்கள் என்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். இற்றைக்குச் சுமார் ஆறு யிரம் வருஷங்களுக்கு முன்னே, எகிப்து தேசத்தில் உன்னதமான நாகரிகம் பரவி யிருந்தது. நீதி மன்றங்கள், தபால் போக்கு வரத்து சௌகரியங்கள், வியாபாரப் போக்கு வரத்து முதலியன யாவும் இருந்தன. அப்பொழுது, ஆண்களைப் போலவே பெண்களும் எல்லா வகையிலும் முற்போக்கடைந் திருந்தார்கள். பெண்கள் தனிப்பட்டவர்களாயிருந்தாலும் விவாகமாகியிருந்தாலும் சொத்துரிமையுடையவர்களா யிருந்தார்கள். சட்ட சம்பந்தமான எல்லா உரிமைகளையும் இவர்கள் பெற்றிருந்தார்கள். ஆண்களைப் போலவே பெண்களும் வியாபாரம் செய்தார்கள்; மாஜிஸ்ட்ரேட், கவர்னர், ஜட்ஜ் முதலிய உத்தியோகங்களை வகித்தார்கள். ஆசிரியர்களாகவும் கோயில் பூசாரிகளாகவும் இருந்தார்கள். ஒழுக்க விஷயத்தில் கூட ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான சட்டமே அமுலில் இருந்தது. விபசாரம் செய்த ஆண்களோ பெண்களோ நீரில் மூழ்கடிக்கப் பட்டார்கள்.

சுமார் மூவாயிர வருஷங்களுக்கு முந்திய காலம் வரை கிரீஸ் தேசத்தில் ஸ்திரீகளுக்குச் சம அந்தஸ்து இருந்தது. அதற்குப் பிறகுதான், ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதை கிரேக்கர்கள் வெறுத்தார்கள். வர வர, இவர்கள் ஆண்களின் உபயோகத்திற்காகவே இருந்தார்கள் என்

னும்படியான நிலைமைக்கு வந்தார்கள். ஒழுக்கமுள்ள ஒரு ஸ்திரீ வீட்டோடு இருக்க வேண்டு மென்ற எண்ணம் வர வர வேரூன்ற ஆரம்பித்தது. குழந்தைகளின் பாது காப்பில் கூட ஸ்திரீகளுக்கு எவ்வித உரிமையும் கொடுக்கப்படவில்லை.

ரோம ராஜ்யத்தில் சட்ட பூர்வ மாகவே ஸ்திரீகளுக்கு எல்லா உரிமை களும் அளிக்கப்பட்டிருந்தன. சொத் துரிமையும் இருந்தது. தற்போது பார்லிமெண்டில் ஸ்திரீ அங்கத்தினர் கள் இருப்பது போல, ரோம செனெட்டிலும் ஸோயே மியா என்ற ஒரு ஸ்திரீ இருந்து, பல சட்டங்கள் நிறைவேறுவதற்குக் காரணமாயிருந் திருக்கிருள். ஆனல் பிற்பாடு இது வர வர மாறி வந்து விட்டது.

பொதுவாகச் சொல்லப் போனல் ஸ்திரீகளின் தியாகம், வீரம் முதலி யன வெல்லாம் அவர்களுடைய நெருங்கிய உறவினர் சம்பந்தப் பட்ட தாகச் சொல்லப் பட்டதே தவிர ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுக் கப் பட்டதைப் போல் கொடுக்கப்பட வில்லை. இதனை எல்லாத் தேச சரித்தி ரங்களிலும் பரக்கக் காணலாம்.

இந்தியாவை எடுத்துக் கொள் வோம். வேதகாலத்தில் பெண்களுக்கு எல்லாவித உரிமைகளும் ஆண்களுக் குச் சமமாகவே கொடுக்கப் பட்டன. ஸ்திரீகள் கவி பாடினர்கள் ; அறு வடை செய்தார்கள் ; போர் புரிந்தார்கள் ; கப்பல் செலுத் தினர்கள். ஆனல் புராண காலத்தில் ஸ்திரீகள் தாழ்ந்த அந்தஸ்து அளிக் கப் பட்டார்கள். உலகியலிலும் ஆத் மார்த்திகத்திலும், எதிலுமே ஸ்திரீ களுக்கு இரண்டாம் ஸ்தானந்தான் கொடுக்கப் பட்டது.

புராதன நாகரிகம் படைத்த தேச மென்று சொல்லப் பட்ட சீனவிலும் ஸ்திரீகளின் அந்தஸ்து பரிதவிக்கத் தக்கதாகவே இருந்தது. பெண் குழந்தைகளின் பாதங்களைச்சிறுவயதி லிருந்தே நசுக்கி வளர விடாமல் செய்கிற வழக்கம் இருந்து வந்த தைக் கொண்டே, ஸ்திரீகளை நிர்க்கதி யினராக்கி வைக்க வேண்டு மென்ற எண்ணம் சமூகத்தில் வேரூன்றி இருந்தது என்பது நன்கு விளங்கு கிறதல்லவா?

இடைக் காலத்தில், இந்திய முதலிய கீழ் நாடுகளில், இல்லறத் தைத் தூற்றியும் துறவறத்தைப் போற்றியும் பேசுவது சிறந்ததென்ற எண்ணம் தோன்றலாயிற்று. இது பின்னர் மேனுடுகளிலும் பரவலா யிற்று. மனிதனுக்கு பிரம்மசரியம் அவசிய மென்றும், ஆனல் இது கெடுவதற்கு ஸ்திரீகள் காரணர்களா யிருக்கிருர்க ளென்றும், இதனல் இவர்கள் இழிவானவர்க ளென்றும் கூறப்பட்டன. நரகத்தின் வாயில் என்று ஸ்திரீகள் கூறப்பட்டார்கள். மேனுட்டிலும், மடங்களில் பாதிரிக ளாகச் சேருவோர் பூர்ண பிர்ம்மசா ரிகளாக இருக்க வேண்டு மென்றும், அதுதான் மனிதனுடைய அபிவிருத் தியின் உன்னத ஸ்தானம் என்றும் சொல்லப்பட்டன. பெண்கள், பேய் பிசாசுகளின் தூதர்களென்றும், இவர் களைக் கடவுள் தவறுதலாகவே சிருஷ் டித்து விட்டா ரென்றும் பாதிரிமடங் களில் சொல்லப் பட்டு வந்தன. பின் னர்தான், ஸ்திரீகள் பாதிரி மடங்க ளில் சேர்ந்து பிர்ம்மசாரிணிகளாய் சமய சேவை செய்யலா மென்று சொல்லப் பட்டது.

பாதிரிக ளல்லாத மற்றவர்கள், சிறப்பாக உயர் குடும்பத்தினர், தாங் கள் செய்யும் எந்தக் காரியமும் ஸ்திரீ களின் தயவைச் சம்பாதிப்பதற்காகவே

என்ற எண்ணம் இடைக்காலத்தில் —அதாவது கி.பி. 1200 லிருந்து 1500 வரை—பரவியிருந்தது. ஸ்திரீகளின் மேல் வைத்த காதலுக்காகவே வீரர்கள் யுத்த களத்திற்குச் சென்றார்களென்றும், அந்தக் காதலிகளோ, தங்கள் கணவன்மாருடைய வருகைக்காகவே காத்துக் கொண்டிருந்தார்களென்றும் இப்படியெல்லாம் சொல்லப் பட்டன. இடைக்காலத்துக் காவியங்களெல்லாம் இந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த எண்ணமானது பிறகு ஸ்திரீகளுக்குச் சாதகமாகவே பரிணமித்தது. என்றாலும் சில தீமைகளும் இதனால் உண்டாகாமலில்லை. ஸ்திரீகள் தங்களைப்பற்றி அதிக உயர்வாக எண்ணிக் கொண்டு விட்டார்கள். ஆடவர்களை வசீகரிப்பதற்கென்று ஆடம்பரச் செலவுகள் செய்யவும், செயற்கை அலங்காரங்கள் செய்து கொள்ளவும் முற்பட்டு, புருஷர்களின் குடும்ப வாழ்க்கையில் ஒரு கலக்கத்தை உண்டு பண்ணினார்கள்.

பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகுதான் ஸ்திரீகளின் சுதந்திர இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதென்று சொல்லலாம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கை, தங்கள் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று ஸ்திரீகள் போராடினார்கள். ஏனென்றால் அந்தக் காலத்தில் ஐரோப்பா முழுவதும் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டது. பெரிய பெரிய தொழிற் சாலைகள் நிறுவி, பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்வது என்ற இயக்கம் தீவிரமாகப் பரவவும், ஸ்திரீகளால் நடத்தப்பட்டு வந்த குடிசைத் தொழில்கள் நசித்துப் போக, அநேக குடும்பங்கள் நகரங்களில் வந்து குடியேறலாயின. ஆண்களும் பெண்களும் தொழிற்சாலைகளில் வேலையாட்களாக நியமிக்கப் பட்டார்கள். ஏற்கனவே கூறியுள்ளபடி, ஸ்திரீகளின் மென்மையான சுபாவத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, தொழில் முதலாளிகள் அவர்களுக்குக் குறைவான கூலியும் அதிகமான உழைப்பும் கொடுத்தார்கள். இதனாலும் இன்னும் பிற காரணங்களினாலும், ஸ்திரீகள் சமூகத்தின் தாழ்ந்த அந்தஸ்திலிருந்தார்கள். இவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆங்காங்குப் பல இயக்கங்கள் தோன்றின. சமூகத்தில் செல்வாக்கு நிரம்பிய ஸ்திரீகள் பலர் இந்த இயக்கங்களின் ஜீவ நாடிகளாய் இருந்தார்கள். இது முதற்கொண்டு ஸ்திரீ சுதந்திர இயக்கம் வலுத்து வரத் தொடங்கியது. இப்பொழுது இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் ஸ்திரீகள் பல அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தியா, சீனா முதலிய கீழ் நாடுகளிலும் ஸ்திரீகள் இப்பொழுது கௌரவமான ஸ்தானங்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் அரசாங்க நிருவாகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ~~ஐக்கிய மாகாணத்தில் ஸ்ரீ விஜய லட்சுமி பண்டிட் ஒரு மந்திரியாக இருக்கின்றார். இன்னும் இது போல் பலர் பொறுப்பான பதவிகளை வகிக்கிறார்கள். சீனாவில் ஸ்ரீமதி சியாங் கைஷேக் சிறந்த சேனாதிபதியாக இருந்து சமீபத்திலேயே அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.~~ இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? ஸ்திரீகளின் சமூக அந்தஸ்து முன்னைவிட அதிகப்படியாக உயர்ந்திருக்கிறதென்பது தெளிவுபடவில்லையா?

விசுவ விசித்திரம்



இந்தப் பட்சிக்கு இரண்டு கழுத்துக்கள் இருப்பதாக நினைத்து விடாதீர்கள். இது விரும்பினால், பின் பக்கம் காட்டப்பட்டிருக்கிற மாதிரி, அவ்வளவு நீளமாகத் தன் கழுத்தை நீட்டிக் கொள்ள முடியும் என்பதையே இந்தப் படம் காட்டுகிறது. தென்னமெரிக்காவில் இந்தப் பறவைகள் ஏராளமாக இருக்கின்றன.

ஒரு ஜப்பானியப் பெண் தன் முதுகில் எப்படி பச்சை குத்திக் கொண்டிருக்கிறாள்! பச்சை குத்திக் கொள்வதிலே சீனர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் அதிக விருப்பம்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் ஸ்பெயின் தேசத்து மாட்ரிட் நகரத்திலே ஒரு மருந்துக்கடை. ஆகாயவிமானங்களிலிருந்து விழும் குண்டுகளுக்குப் பயந்து, மணல் நிறைந்த சாக்கு மூட்டைகளை அடுக்கி அவற்றிற்குள் இருந்து வியாபாரஞ் செய்கின்றனர் பல மாட்ரிட் வியாபாரிகள்.

இனி, காபி குடிக்க வேண்டுமானால் கவலையேயில்லை. காபி குடிப்பதற்குப் பதிலாக காபியைத் தின்று, மென்று விழுங்க வேண்டும். காபியின் சத்தையெல்லாம் திரட்டி பல் பசை (டூத் பேஸ்ட்) மாதிரி செய்து விற்பனைக்கு வரப் போகிறது. பல் பசையோடு காபி பசையும் வாங்க வேண்டியது தான்.



இந்தப் புதிய ஆகாய விமானத்தைப் பார்த்தீர்களா? எல்லாம் மரத்தினாலேயே செய்யப் பட்டவை, இஞ்சின் தவிர.



காதலர்களே! இனிக் கவலை வேண்டாம். உங்கள் நாயகியோ, நாயகரோ எவ்வளவு தூரத்திலிருந்த போதிலும் சரி, தந்தி மூலமாக முத்தங் கொடுத்து இன்பமடையலாம். வெறும் தந்தி பாரம் ஒன்றில் நீங்கள் முத்தங் கொடுங்கள். உங்கள் காதலர்களுக்கு, முத்த அழுத்தத்துடன் அந்தத் தந்தி போய்ச் சேருகிறது. இந்த விந்தை அமெரிக்காவிலே கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவில் சீக்கிரம் இதனைக் கொண்டு வருவதற்காக, காதலர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்திக் கிளர்ச்சி செய்வார்களா?

இங்கிலாந்தில் ஜீவகாருண்ய இயக்கங்கள்

——க. சரவணமுத்து

சென்ற நூற்றாண்டின் இடைக் காலத்தில், இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் ஒரு பெரிய கைத் தொழிற் புரட்சி ஏற்பட்டதல்லவா? சிறு சிறு அளவினதாகப் பொருள்களை உற்பத்தி செய்யாமல், தொழிற்சாலைகளினின்று ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் மூலமாக சமூகத்திலேயே ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது. 1851ம் வருஷம் லண்டனில் ஒரு பெரிய பொருட்காட்சியைசிலபிரமுகர்கள் சேர்ந்து நடத்திக்காட்டினார்கள். பெருவாரியான பொருள் உற்பத்தியின் காரணமாக சமூகத்தில் என்னென்ன விதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று இங்குக் காட்டப் பட்டன. ஆனால் இந்த மாற்றத்தின் அடிப்படையிலே, சமூகத்தில் எத்தகைய துயரம் நிறைந்திருந்தது, ஜனங்கள் எவ்விதமான துன்பங்களையெல்லாம் அநுபவித்தார்கள் என்கிற விஷயங்கள் இந்தப் பொருட் காட்சியில் காட்டப்படவேயில்லை. உன்னதமான மாளிகைகளிலும் அழகான பூங்கா வனங்களிலும் நடனமாடியும், உல்லாசமாகத் திரிந்தும் காலங்கழித்த கனவான்கள், தங்கள் காலத்தில் இங்கிலாந்து தேசமானது முன்னேற்றத்தின் சிகரத்தையடைந் திருப்பதாகப் பெருமித எண்ணத்துடன் கீழ் நோக்கிப் பாராமலே இருந்தார்கள்.

ஆனால் 1851ம் வருஷத்துப் பொருட் காட்சியைச் சென்று பார்த்த ஒரு சில இளைஞர்களுடைய இளகிய மனதில், மைல் கணக்கில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் யந்திரங்களும், இன்ன பிறவும் ஒரு வித கிளர்ச்சியை உண்டு பண்ணின. இவர்களே, பிற் காலத்தில் பெரிய சீர்திருத்தக்காரர்களாக விளங்கினார்கள். ஆனால் இந்தக் காலத்திற்கு முன்னாலேயே—அதாவது பத்தொன்பதாவதுநூற்றாண்டின் ஆரம்பத்திலேயே, ஒரு சிலர்சமூகத்தின்அடிப்படையைக் கவனிக்கத் தொடங்கினார்கள் ஆனால் இவர்கள் தனி முறையில் ஆங்காங்கு ஏதோ செய்து வந்தார்களே தவிர கட்டுப்பாடாக இருந்து ஒன்றுஞ் செய்யவில்லை. அப்படிக் கட்டுப்பாடாக ஒரு காரியத்தைச் செய்வதற்குச் சாதகமாக, ஜன சமூகத்தின் எண்ணமும் அவ்வளவு பண்படவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக் காலத்தி லிருந்துதான் இவர்களின் கிளர்ச்சிகள் உருவம் பெற்றன. ஏழைகளின் நிலைமையை விருத்தி செய்வதே என்பதே இவர்களின் நோக்கமாயிருந்தது. இவர்கள் சொல்லளவில் நிற்கவில்லை. செயலிலும் தங்கள் உற்சாகத்தைக் காட்டினார்கள். ராபர்ட் ஓவன் (Robert Owen) என்பவர் லானார்க் என்ற இடத்தில், மாதிரித் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தி, அதில் தொழிலாளர்கள் இன்னின்ன விதமாக வேலை வாங்கப் படவேண்டுமென்றும், அவர்களை இன்னின்ன விதமாக நடத்த வேண்டுமென்றும் காட்டினார். ஆனால் இவரும் இவரைப் போன்றவர்களும், சீர்திருத்த நோக்கத்துடன் இந்தத் தொழிற் சாலைகளை ஆரம்பிக்கவில்லை. அரசியல் போட்டி

யாகவே ஆரம்பித்தார்கள். என்றாலும், இவை பின்னால் ஜீவகாருண்ய நோக்கத்துடன் தொடங்கப் பெற்ற இயக்கங்களுக்கு விதைபோ விருந்தன. இதனோடு, மத ஸ்தாபனங்களிலிருந்த பலர் ஜீவகாருண்ய வேலைகளில் ஈடுபட்டுழைத்தார்கள். இவர்களனைவருக்கும் சமூகத்தை உத்தாரணம் செய்ய வேண்டுமென்பது நோக்கமல்ல. தனிப்பட்டவர்களின் ஆத்மாவைக் கை தூக்கி விட வேண்டுமென்பதுதான் இவர்கள் நோக்கம்.

இவர்களிலே எலிஜபெத் ப்ரை (Elizabeth Fry) என்ற ஓர் அம்மையார் இருந்தார். இவர் சிறைச்சாலைகளிலே கிடந்துழலும் கைதிகளைச் சீர்திருத்தும் விஷயத்தில் அதிகமாக ஈடுபட்டுழைத்தார். ஆனால் இவருடைய சீர்திருத்த வேலை, சிறைச்சாலை வாயில் அளவோடுதான் நின்றுவிட்டது. தவிர, சமூகத்தின் ஒரு சாராருக்கு மட்டுந்தான் இது பயன்பட்டது. ஜன சமூகத்தின் பொது வாழ்வை மாற்றி யமைக்கக் கூடிய சீர்திருத்த வேலைகளாக இவை இல்லை என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

வில்லியம் வில்பர் போர்ஸ் (William Wiberforce) என்பவர், அடிமை வழக்கத்தை ஒழிக்கப் பெருங் கிளர்ச்சி செய்தார். அநேகர் இவரை உற்சாகத்துடன் ஆதரித்தார்கள். இவர்களுடைய தொடர்ந்த கிளர்ச்சியின் பயனாக, 1833ம் வருஷம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் அடிமை வியாபாரமே ஒழிக்கப் பட்டது. ஆனால் இங்கிலாந்தில் இந்த அடிமை வியாபாரம் இல்லை. தூர தேசங்களான ஜமைக்கா தீவு, ஆப்ரிக்கா கண்டம் முதலிய இடங்களிலேதான் இந்தக் கொடுமை வழக்கம் இருந்து வந்தது. பிரிட்டிஷ் ஜனங்களுடைய மனப்பான்மை இந்தச் சீர்திருத்தத்தினால் எவ்வித மாற்றத்தையும் அடையவில்லை. அதற்கு மாறாக, தங்கள் சமூகத்தின் நிலைமை, மிகவும் திருப்திகரமாகவே இருக்கிறதென்ற பொய் நம்பிக்கை பிரிட்டிஷ் ஜன சமுதாயத்தினிடத்தில் ஏற்பட்டு விட்டது.

ஆனால் இந்தப் பொய் நம்பிக்கையை யகற்றி, ஆறறிவு படைத்த மக்களுக்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லா ஜீவராசிகளுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரியோர்கள் பலர் தோன்றினார்கள். இவர்களால், பிரிட்டிஷ் ஜன சமுதாயத்தின் பாசி படிந்த அமைதி கொஞ்சம் கலக்க மடைய ஆரம்பித்தது.

மார்டின் (Martin) என்ற ஒருவர் தோன்றினார். இவர் ஓர் ஐரிஷ்காரர். பிறரோடு சண்டை போடுவது இவருக்கு சகஜம். கொஞ்சங் கூடப் பொறுமையில்லாதவர். குடியர். ரத்த வெறி பிடித்தவர். ஆனால் இவர், வாயில்லாத கால் நடைகளுக்கு மனிதர்கள் செய்கிற ஹிம்சைகளைக் கண்டு சகிக்க மாட்டாதவராய் பலத்த கிளர்ச்சி செய்தார். இவருடைய தொடர்ந்த முயற்சியின் பேரில்தான் ஜீவஹிம்சை செய்யக் கூடாதென்ற ஒரு சட்டம் பார்லிமெண்டில் 1822ம் வருஷம் நிறைவேற்றப் பட்டது. இதைத் தொடர்ந்தாற் போல் இன்னும் பல சட்டங்களும் பின்னர் பார்லிமெண்டில் நிறைவேற்றப் பட்டன.

ஹன்னா மோர் (Hannah More) என்ற ஓர் அம்மையார் கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்களுக்கு, ஞானக் கண்ணைத் திறந்து விடுகிற வேலையில் பெரிதும் உழைத்தார். இவர் ஒரு பாதிரி மடத்தைச் சேர்ந்தவர். படிப்

யில்லாமல் ஞான சூனியமா யிருக்கும் ஆத்மாக்களைக் கைதூக்கி விடவேண்டு மென்ற நோக்கத்துடன் இவர் கிராம ஜனங்களுக்குக் கல்வி போதிக்க ஆரம்பித்தார். ஆனால் இது பின்னர், கல்வி இலவசமாகப் போதிக்கிற ஒரு பெரிய கைங்கரியமாக மாறி விட்டது. இங்கிலாந்தில் இந்தக் காலத்தில், சமூகத்தின் உயர் படியில் இருந்த ஸ்திரீகள், பொழுது போக்குக்காக இந்த மாதிரியான பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டார்கள். அநேகர், ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகளைக் கண்டு ஆறுதல் சொல்லிவிட்டு வருவதும், சுகாதாரமற்ற இடங்களில் வசிக்கிறவர்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றிப் போதிப்பதும், வாழ்க்கையிலே பல கஷ்ட நிஷ்டூரங்களை அநுபவிக்கிறவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்வதும் தங்கள் தின சரிக்கடமைகளாகவும், வாழ்க்கையின் லட்சியமாகவும் கொண்டார்கள்.

கைத்தொழில்கள் அபிவிருத்தியாவதற்குச் சமதையாக ஆங்காங்குத் தொழிற் சாலைகள் ஏற்படவும் அவைகளைச் சுற்றி நகரங்கள் தோன்றவுமாயின. இந்த நகரங்களில் வசிக்கிற ஜனங்களின் சுகாதாரத்தைப்பற்றியோ, வாழ்க்கையில் அவர்கள் அநுபவிக்கிற கஷ்ட சுகங்களைப் பற்றியோ, தொழிற்சாலை முதலாளிகள் கவனிக்கவேயில்லை. இந்தக் தொழிற் சாலைகளில், இத்தனை மணி நேரந்தான் வேலை செய்வது என்ற நியதி இல்லாமல் இருந்தது. இவர்களுக்குக் கிடைக்கிற கூலியோ மிகச் சொற்பம். இவர்களுக்குக் குழந்தைகள் பிறந்ததும், அவைகளுக்கு நடக்கத் தெரிந்தவுடன், தொழிற் சாலைகளில் கொண்டு வேலை பழக்க ஆரம்பிப்பார்கள். இந்தக் குழந்தைகள், நீண்ட நேரம் கூடத் தூங்க முடியாது. ஏனென்றால் பெற்றோர்கள், விடியற் காலையிலேயே, வேலைக்குப் போவதற்காக அடித்து எழுப்புவார்கள். தொழிற்சாலைகளிலிருந்து வீடு திரும்பிய பெற்றோர்கள், சமையல் செய்து சாப்பிடுகிற வரை குழந்தைகள் விழித்திருக்க வேண்டும்: இல்லா விட்டால் அடிதான். இந்தக் குழந்தைகளின் பரிதாபகரமான நிலைமைதான், பலருடைய உள்ளத்திலும் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது. லார்ட் ஷாப்ட்ஸ்பரி, ஸாட்லர் போன்றவர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். முதலாளிகளுடைய மனதைச் சட்ட பூர்வமாக மாற்ற முடியாதென்பது இவர்களுக்குத் தெரியும். ஆனால் பொதுஜன உணர்ச்சியைக் கிளப்பி விட்டால், நிலைமை தானாகச் சீர்திருந்தும் என்பது இவர்களுக்குத் தெரியும். இதனால் தொழிற் சாலைகளில் குழந்தைகள் வேலை செய்வதைப் பற்றி விசாரிக்க கமிஷன்கள் நியமிக்கப் பெற வேண்டு மென்று இவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அப்படியே பல கமிஷன்கள் நியமிக்கப் பெற்று விசாரணை நடத்தின. இந்த விசாரணையின் பயனாக வெளி வந்த விவரங்கள் ஜன சமூகத்தின் மத்தியில் ஒரு பெரிய அதிர் வெடி போட்டதுபோலிருந்தது. நான்கு வயது நிரம்பாத குழந்தைகள் தினம் பன்னிரண்டு மணிநேர விகிதம் சரிகை நூல் தயார் செய்யும் வேலை செய்தன. சிறு குழந்தைகள் மிக உயரமாயுள்ள புகைப் போக்கிகளைச் சுத்தம் செய்ய மேலே அனுப்பப்பட்டன. அங்கே அவை, உஷ்ணத்தினால் உயிருடன் எரிந்து போவதும் உண்டு. பூமிக்குக் கீழே சுரங்கங்களில், பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்லும் வண்டிகளைப்பெண்கள், குதிரைகளைப் போல் முழங்கால்

மண்டியிட்டும், இரண்டு கைகளையும் கீழே ஊன்ற வைத்தும் இழுத்துச் சென்றார்கள். இந்த மாதிரியான பல கொடூரமான விவரங்கள், மேற்படி கமிஷன் விசாரணையி லிருந்து தெரியவந்தன. இதனால், தொழிலாளர்களின் நிலைமையை, ஜீவதயைக் குட்பட்ட ஒரு அந்தஸ்தில் வைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நாடெங்கணும் தீவிரமாகத் தொடங்கப்பெற்றது. இந்தக் காலத்திலிருந்துதான், தொழிலாளர்களின் வேலை நேரம் நிர்ணயிக்கப்பட வேண்டு மென்றும், தொழிற்சாலைகள் அவ்வப் பொழுது அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய மேற்பார்வைக்குட்பட வேண்டுமென்றும் இயக்கங்கள் தோன்றின. இந்த இயக்கங்களில் காலக் கிரமத்தில் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள். இதனடியாகத் தொழிலாளர் இயக்கம் ஒன்று பிறந்தது.

இப்படித் தொழிலாளர் விஷயமாக ஜன சமுதாயத்தின் விழிப்பு ஏற்படுவதற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. மேற்படி விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு பல நூலாசிரியர்கள், நாடகங்கள், நாவல்கள் முதலியன எழுதத் துவங்கினார்கள். இவை, அறிவு உலகத்தில் ஒரு புரட்சியையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணி விட்டன.

இந்தச் சமயத்தில் 1854ம் வருஷத்திலிருந்து 1856ம் வருஷம் வரை, ருஷ்யாவுக்கும் கிரிமியாவுக்கும் யுத்தம் நடைபெற்றது. இங்கே, காயமடைந்தவர், துன்புற்றவர் முதலியோருக்கு உதவி செய்யும் பொருட்டு ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் என்ற அம்மையார் சென்றார். இவர் திரும்பி வந்து தாம் கண்ட அநுபவங்களைச் சொன்னபோது, பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயம் அப்படியே குலுங்க ஆரம்பித்தது. அரசாங்கத்தினரால் நிருவகிக்கப் பெறுகிற எந்த ஸ்தாபனத்தின் மீதும், ஆஸ்பத்திரிகள்—தருமசாலைகள் முதலியன மீது—பொதுஜனங்களுக்கு நம்பிக்கையே இல்லாமற் போய்விட்டது. அநாதை விடுதிகள், பைத்தியக்கார ஆஸ்பத்திரிகள் முதலிய இடங்களிலே யுள்ளவர்கள் மிகக் கேவலமாக நடத்தப் படுகின்றனரென்ற விவரங்கள் வெளிவரலாயின. இதற்குப்பின்னர்தான், பொது நலத்திலே ஈடுபட்ட முறையில் அநாதை விடுதிகள், இலவச பாடசாலைகள் முதலியன ஆரம்பிக்கத் தொடங்கினார்கள்.

விக்டோரியா மகாராணியாருடைய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் தோன்றிய சமுதாய ஊழல்கள், அவருடைய ஆட்சியின் அந்திய காலத்திலேயே ஒரு பரிகாரங் கண்டன.

முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னே ஹாரிவார்ட்மான் என்ற ஓர் ஆங்கிலேயன், அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகரத்திற்கு ஜீவனார்த்தமாகப் போய்ச் சேர்ந்தான். அப்பொழுது இவன் கை யிருப்பு சுமார் ஐந்து ரூபாய்தான். இவன் சமீபத்தில் தனது 65வது வயதில் இறந்து விட்டான். இவனுடைய ஆஸ்தி மதிப்பு 90,000,000 ரூபாய். என்ன விசித்திரம் பார்த்தீர்களா? தச்சுத் தொழிலில் இவன் முதலில் இறங்கி அரசாங்கக் காரியாலயங்களில் சொற்ப சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கும் சிறு உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டான். இதன் மூலமாக இவனுடைய வருமானம் அதிகரித்துக் கொண்டு வந்தது. வாஷிங்டன் நகரத்தில் இவன் கட்டிய வீடுகளில் சுமார் அறுபதினாயிரம் பேர் வசிக்கிறார்கள்.

நமது அரசியல் டைரி

காங்கிரஸ் காரியக்கமிட்டி

கல்கத்தாவில் 1-4-38 முதல் 6-4-38 வரையில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ்-காரியக் கமிட்டி கூடியது. அடுத்த காங்கிரஸ் சம்பந்தமான நடைமுறைகள் கீழ்க் கண்டவிதமாக நிர்ணயிக்கப்பட்டன :—

அடுத்த காங்கிரஸ்—1939ம் வருஷம் பிப்ரவரி மாதம் கடைசி வாரம்.

தலைவர் தேர்தல் பிரகடனம்—2—2—1939.

தலைவரையும். அ. இ. கா. க. அங்கத்தினர்களையும் தெரிந்தெடுப்பதற்காகப் பிரதிநிதிகளின் கூட்டம்—29—1—1939.

தலைவர் ஸ்தானத்திற்கு பெயர்கள் சிபார்சு செய்யப்படவேண்டிய தேதி—16—1—1939.

பிரதிநிதிகளின் தேர்தல்—?—1—1939.

காங்கிரஸுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் கடைசி தேதி—1-10-1938.

காரியக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவை வருமாறு :—

எல்லைப்புற மாகாணத்தி லுள்ள உலர்ந்த பழ வியாபாரிகளின் குறைகளைக் காரியக் கமிட்டி கேட்டது. இவர்களுடைய கஷ்டங்களில் காரியக் கமிட்டி தன் அநுதாபத்தைச் செலுத்துகிறது. இந்தியாவிலுள்ள ஆப்கன் ஸ்தானீகருடனோ அல்லது ஆப்கன் அரசாங்கத்தாருடனோ நேராகக் கடிதப் போக்குவரத்துச் செய்து இந்தக் கஷ்டத்திற்குப் பரிகாரம் தேடிக் கொள்வது நல்லது என்று கமிட்டி கருதுகிறது. இது விஷயமாகக் கவ

னிக்கும்படி மௌலானா அபுல் கலாம் ஆஜாத்தைக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவிக்கு அபேட்சகராக நிற்போர், அதற்கு முன்னர் மூன்று மாதமாவது அங்கத்தினராயிருக்க வேண்டுமென்ற விதியை, சமீபத்தில் வங்காளத்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் விஷயத்தில் தள்ளி வைப்பதென்று இந்தக் கமிட்டி தீர்மானிக்கிறது.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள காங்கிரஸ் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துவைக்க, கமிட்டியின் 22-2-1938 தீர்மானப்படி மௌலானா அபுல் கலாம் ஆஜாத் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார். தேக அசௌகரியங் காரணமாக அவர் போக முடியாதென்று தெரிவித்துள்ளமையால் அவருக்குப் பதிலாக ஸ்ரீ ஜயராம் தாஸ் தௌலத் ராம் செல்லவேண்டுமென்று கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

வடமேற்கு எல்லைப் புற மாகாணத்திற்கும் ஸ்ரீ ஜயராம் தாஸ் தௌலத் ராமே சென்று, காங்கிரஸ் ஸ்தாபனங்களைச் சீர்திருத்தியமைக்க வேண்டுமென்று கமிட்டி தீர்மானிக்கிறது.

உலகத்துச் சர்வதேச நிலைமை மிகவும் சிக்கலாயிருக்கிற படியாலும், அதனால் இந்தியாவும் பாதகமடையக்கூடிய நெருக்கடிகள் ஏற்படலா மென்ற சூசகங்கள் இருப்பதாலும், காங்கிரஸ் தலைவர், காங்கிரஸ் பொதுக் காரியதரிசி, பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய மூன்று பேரும் அடங்கிய ஒரு உப கமிட்டியை, காரியக் கமிட்டி நியமிக்கிறது. சர்வ தேச நிலைமையைப் பற்றிக் காங்கிரஸின் கொள்கையை அவ்வப் பொழுது விளக்குவதற்கு அநுகூலமாக இந்த உப கமிட்டி காரியக் கமிட்டிக்கு ஆலோசனைகள் சொல்லிக்கொண்டு வரும்.

அந்நியர்களுடைய மூல தனத்தைக் கொண்டும், நிருவாகத்தின் கீழும் 'இந்தியா லிமிடெட்' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பட்ட பல அந்நியக் கம்பெனிகள் இந்தியாவில் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டு வருவதைக் கண்டு காரியக் கமிட்டி வருந்துகிறது. இதனால் இந்தியக் கைத்தொழில்களுக்குச் சலுகை காட்டப்படுகிற கொள்கையானது பயனில்லாததாய் விடுகிறது. இந்தியர்களுடைய நிருவாகத்தின் கீழும் மேற் பார்வையிலும் இருக்கிற கம்பெனிகளே சுதேசி கம்பெனிகள் என்று கமிட்டி கருதுகிறது.

மத்திய மாகாணத்தில், அரசியல் கைதிகளல்லாதார் சிலர் விடுதலை செய்யப் பட்ட விஷயமாகக் காரியக் கமிட்டி ஆலோசித்து இது சம்பந்தமான தஸ்தவேஜுகளை ஒரு பிரபல சட்ட நிபுணரைக் கொண்டு பரிசீலனை செய்து அவருடைய முடிவை எதிர்பார்ப்பதென்று தீர்மானிக்கப் பட்டது.

ஒரிஸா மாகாணத்தில், மந்திரிகளுக்குக் கீழ் உத்தியோகம் பார்த்து வந்த ஒருவரை ஆக்டிங் கவர்னராக நியமித்திருப்பதைக் கண்டு காரியக் கமிட்டி ஆச்சரியப் படுவதுடன் இது சம்பந்தமாக கவர்னர்-ஜெனரலும் இந்தியா மந்திரியும் தகுந்த பரிகாரங்கள் தேடுவார்களென்று எதிர் பார்க்கிறது.



1938

மார்ச்

29 இத்தலியின் அபிசீனிய ஆக்ரமிப்பை பெல்ஜியம் அங்கீகரித்துக் கொண்டு விட்டது.

பிரிட்டனுடைய அந்நிய நாட்டுக் கொள்கையை விஸ்தரித்து லார்ட்ஸ் சபையில் லார்ட் ஹாலி பாக்ஸ் பேசுகையில், நாம் நமது ஜன நாயக ஸ்தாபனங்களைப் பாது காக்க வேண்டு மென்றும், ஐரோப்பிய வல்லரசுகள் இரண்டு மூன்று கட்சிகளாகப் பிரிந்து போகாமல் பாது காப்பது நமது கடமை யென்றும் சொன்னார்.

30 ருமேனியாவில் மிரோன் கிறிஸ்டியா என்ற பாதிரியின் தலைமையில் நடைபெற்று வந்த மந்திரிச்சபை ராஜீ நாமா செய்து விட்டது.

இத்தாலிய செனெட் சபையில் முஸோலினி பேசுகிற போது, இத்தலியை மூன்றாவது போராட்டத்தின் வெற்றிக்குத் தான் அழைத்துக் கொண்டு போகப் போவதாகக் கூறினார்.

31 பாஷை வாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டு மென்ற தீர்மானம் சென்னை அஸெம்ப்ளியில் நிறைவேறியது.

எகிப்து பார்லிமெண்டுக்கு இன்று தேர்தல் நடைபெற்றது.

ஏப்ரல்

1 எல்லைப் புற மாகாணத்திற்கென்று ஒரு தனி சர்வ கலாசாலை ஏற்படுத்த வேண்டு மென்று ஸர் அப்துல் காயம் கொண்டு வந்த தீர்மானம் இந்திய சட்ட சபையில் நிறைவேறியது.

பம்பாய் மாகாணத்தில் ஆறு தாலுக்காக்களில் இன்று மது விலக்குத் திட்டம் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப் பட்டது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று கல்கத்தாவில் கூடியது.

மத்திய மாகாண கவர்னராயிருந்த ஸர் ஹைட் கோவன் லண்டனில் இறந்து விட்டார்,

2 கைத்தொழில் முதலாளிகளின் ஐந்தாவது மகா நாடு ஜி. டி. பிர்லாவின் தலைமையில் டெல்லியில் கூடியது.

சென்னை அஸெம்ப்ளி தலைவரான புலுசு சாம்ப மூர்த்தி, காங்கிரஸ் காரியக் கமிட்டியின் யோசனைக் கிணங்க, தமது ஐரோப்பா பிரயாணத்தை நிறுத்திக் கொண்டு விட்டார்.

பம்பாய் அஸெம்ப்ளியில், ஸ்தல ஸ்தாபன சம்பந்தமான ஒரு மசோதா வாதம் செய்யப் பட்டு வருகையில், தாங்கள் கொண்டு வந்த திருத்தப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப் பட வில்லையென்ற காரணத்திற்காக இருபது முஸ்லீம் லீக் அங்கத்தினர்கள் கூட்டத்தினின்று வெளியேறி விட்டார்கள்.

இன்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் கூடியது.

ஸ்பெயின் யுத்தத்தில் கலகக்காரப் படையினர் கண்டேஸா என்ற ஊரைப் பிடித்

துக் கொண்டனர். இதனால் கடற்கரை யோரமாயுள்ள பாதைகளின் போக்கு வரத்தை இவர்கள் தடைப் படுத்த முடியும்.

3 ஸ்பெயின் யுத்தத்தில், கலகக்காரப் படையினர், பல நாட்களாகப் போராட்டத்தின் நிலைக்களனாயிருந்த லெரீடா என்ற ஊரைக் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

சீன ஜப்பானிய யுத்தம் தொடங்கியது முதல், இருபதினாயிரம் ஜப்பானியர்கள் தான் இறந்து விட்டதாக ஜப்பானிய அரசாங்கத்தார் கூறினர். ஆனால் 280,000 ஜப்பானியர் இறந்திருப்பதாக சீன அரசாங்கத்தினர் கூறுகின்றனர்.

எகிப்திலே நடைபெற்ற தேர்தலின் முடிவு வருமாறு:—அரசாங்கக் கட்சியினர் 99 பேர். ஸாத் கட்சியினர் 79 பேர். வாப்த் கட்சியினர் 12 பேர். எந்தக் கட்சியிலும் சேராதவர் 59.

வங்காள மாகாணத்திலே யுள்ள அரசியல் கைதிகள், தாங்கள் விடுதலை செய்யப் படுவதற்குமுன்னர், இனி பலாத்காரத்தில் இறங்குவ தில்லை யென்று உறுதி மொழி கொடுக்க வேண்டு மென்று சொல்வதாக எழுந்த வதந்திகள் பொய்யென்றும், அப்படி ஒருக்காலும் தாம் உறுதி மொழி கொடுக்குமாறு சொல்ல வில்லை யென்றும் மகாத்மா காந்தி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

4 பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அநுஷ்டிக்கும் அந்நிய நாட்டுக் கொள்கையைக் கண்டிப்பதற்காக பிரிட்டிஷ் தொழிற் கட்சியார் பார்லிமெண்டில் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியுற்றது.

இன்றைய காமன்ஸ் சபைக் கூட்டத்தில் ஷின்வெல் என்ற ஒரு தொழிற் கட்சி அங்கத்தினர், தளபதி பவர் என்ற ஓர் அங்கத்தினரைக் கன்னத்தில் அறைந்தார். ஏதோ அவமரியாதையாகப் பின்னவர் முன்னவரைச் சொன்னதே இதற்குக் காரணம்.

5 கர்நாடக மாகாண மென்று தனியாக ஒரு மாகாணம் பிரிக்கப் பட வேண்டு மென்று பம்பாய்ச் சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தினர் தங்களுடைய தேவைகளுக்காக வேண்டிய ஆயுதங்களை வெளி நாடுகளிலிருந்து பெற உரிமை உண்டென்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை விட்டிருக்கின்றனர்.

6 இன்றோடு காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் முடிந்தது.

தேசீய வாரம் இன்று ஆரம்பமாகி எல்லா இடங்களிலும் கொண்டாடப் பட்டது. இந்த வார ஆரம்பத்தின் அறிகுறியாக பம்பாய் சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் அனைவரும் தேசீயக் கொடி சின்னங்களைத் தங்கள் சட்டைகளுடன் அணிந்து வந்தார்கள்.

சுமார் 44 கப்பல்களைச் சொந்தமாகவுடைய ஒரு சீனக் கப்பல் கம்பெனியை அமெரிக்க முதலாளிகள் சிலர் சேர்ந்து வாங்கிக் கொண்டு விட்டனர்.

7 இந்தியா சட்ட சபைக்கு மதுரை தொகுதிக்காக திருமதி ராதாபாய் சுப்பராயன் எதிர்ப்பின்றித் தெரிந் தெடுக்கப் பட்டார்.

இன்றைய பஞ்சாப் சட்ட சபைக் கூட்டத்தை, அங்கத்தினர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதன் காரணமாக தலைவர் தள்ளி வைத்து விட்டார்.

சீன—ஜப்பானிய யுத்தத்தில் இன்று டின்ஸ்டின்—புகோ ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையில் சீனர்களுக்குப் பெரிய வெற்றி ஏற்பட்டது.

ஜெர்மன் பீரங்கிகள் ஜிப்ரால்டர் துறை முகத்துக் கருகாமையில் கொண்டு நிறுத்தப்பட் டிருக்கின்றன வென்று லார்ட்ஸ் சபையில் கூறப்பட்டது.

8 ஸ்ரீ ப்ளம்மைத் தலைமையாகக் கொண்ட பிரெஞ்சு மந்திரிச் சபை இன்று கலைந்து விட்டது.

ஜெர்மனியானது, ஜெக்கோ—ஸ்லோவேகியாவைத் தாக்கினால் அப்பொழுது ருஷ்யா, போலந்து, ருமேனியா முதலிய நாடுகள் என்ன செய்யு மென்பதைப் பற்றி மேற்படி நாடுகளை பிரெஞ்சு அரசாங்கத்தார் கேட்டிருக்கின்றனர்.

கல்கத்தா பிரஸிடென்ஸி ஜெயிலில் இன்று மகாத்மா காந்தி அரசியல் கைதிகளை யெல்லாம் கண்டு பேசினார்.

10 டலாடியர் என்பவருடைய தலைமையில் புதிய பிரெஞ்சு மந்திரிச் சபை அமைக்கப் பட்டது.

இன்று ஜெர்மனியோடு ஆஸ்திரியா ஐக்கியமானதைப் பற்றிப் பொது ஜன வாக்கு எடுக்கப் பட்டது. மிகப்பெரும் பான்மையோர் ஹிட்லருடைய செய்கைக்கு ஆதரவளித்து வாக்குக் கொடுத்தனர்.

11 ஸ்ரீ கே. நாகேசுவர ராவ் பந்துலு தமது 71வது வயதில் காலமானார்.

மைசூர் சமஸ்தானத்தி லுள்ள சிவபுரி என்ற ஊரில் காங்கிரஸ் மகா நாடு ஒன்று நடை பெறுவதாக இருந்தது. இதற்கு திரு டி. சித்தலிங்கையா என்பவர் தலைவராகத் தெரிந் தெடுக்கப் பட்டிருந்தார். ஆனால் இவர் காங்கிரஸ் கூடுவதற்கு முன்னரேயே கைது செய்யப்பட்டார்.

இன்று ஸ்ரீ ராதாபாய் சுப்பராயன், இந்தியா சட்ட சபையில் அங்கத்தினரா யமர்ந்தார்.

சீன—ஜப்பானிய யுத்தத்தில், ஜப்பான் சமரஸத்தை விரும்புகிற தென்று எழுந்த வதந்தியை ஜப்பான் மறுக்கிறது.

தேர்தலுக்காக ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பது வீண் என்று மந்திரி ராமன் மேனன் காரைக்குடி நகர சபை பத்தாவது வருஷக் கொண்டாட்டத்தின் போது கூறினார்.

12 எகிப்திய பார்லிமெண்டை பரூக் மன்னர் திறந்து வைத்தார்.

மெக்ஸிகோவி லிருந்த பிரிட்டிஷாருடைய எண்ணெய்ச் சுரங்கங்களை மெக்ஸிகோ அரசாங்கம், எவ்வித நஷ்டஈடோ, முன்னெச்சரிக்கையோ கொடுக்காமல் சுவாதீனப் படுத்திக் கொண்டு விட்டதைக்கண்டித்துபிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஓர் அறிக்கை அனுப்பியிருக்கின்றனர்.

13 ஷ்லெஸ்விக் என்ற பிரதேசத்திற்கு அருகாமையில் ஸில்ட் என்ற இடத்தில் ஜெர்மனி ஒரு பெரிய கப்பற் படை தளத்தை ஏற்படுத்தி யிருக்கிற தென்று பிரிட்டிஷ் பார்லி மெண்டில் தெரிவிக்கப் பட்டது.

சிவபுரியில் கூடிய மைசூர் காங்கிரஸ் மகா நாட்டின் தலைவரான திரு கே. டி. பாஷ்யம் என்பவரும் வேறு இருவரும், தேசியக் கொடியை ஏற்றவிடும் சமயத்தில் கைது செய்யப் பட்டார்கள். இதே காரணத்திற்காக நேற்றும் சிலர் கைது செய்யப் பட்டனர்.

டச்சு பார்லிமெண்டில் நீதி இலாகா மந்திரியைக் குறிபார்த்து இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

14 ஸ்பெயின் குடியரசு ஸ்தாபிதமாகி ஏழு வருஷமாகிறது. அதன் ஏழாவது வருஷக் கொண்டாட்டம், இன்று பார்ஸிலோனாவில் குடியரசு அரசாங்கத்தினரால் கொண்டாடப் பட்டது.

சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி சத்தியவதிதேவி இன்று டெல்லியில் கைது செய்யப் பட்டார்.

15 மகாத்மா காந்தியும் லார்ட் லின்லித்கௌவும் இன்று டெல்லியில் கலந்து பேசினார்கள்.

ஸ்பெயின் யுத்தத்தில் கலகக்காரப்படையினர், இன்று கடற்கரை யோரமாக வுள்ள பிரதேசங்களைக் கைப் பற்றிக் கொண்டு விட்டனர்.

16 ஆங்கிலோ—இத்தாலிய ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

17 பம்பாயில் ஹிந்து—முஸ்லீம் கலவரம்.

ஸ்பெயின் சண்டையில், குடியரசு அரசாங்கக் கட்சியினருக்குப் பல முகங்களிலும் வெற்றி கிடைத் திருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

கல்கத்தாவில் ஜனாப் ஜின்னா தலைமையில் முஸ்லீம் லீக் மகாநாடு கூடியது.

18 ஸ்பெயின் யுத்தத்தில் கலகக்காரப்படைத் தலைவனாகிய தளபதி பிராங்கோவுக்கு, போப்பாசர் தமது ஆசியை அனுப்பினார்.

19 ஸ்பெயின் யுத்தத்தில்தான் ஜெயித்து விட்டதாக இன்று தளபதி பிராங்கோ ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இன்று ரோமாபுரியில் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இத்தாலிய அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் சமரஸப் பேச்சுகள் ஆரம்பமாயின.

20 ஹிட்லரின் 49வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று ஜெர்மனி யெங்கும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

துருக்கியி லுள்ள அனடோலியா மாகாணத்தில் இன்று பெரிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டு பலத்த சேதம் உண்டாயிற்று. 18 கிராமங்கள் அடியோடு நாசம். சுமார் ஐம்பதினாயிரம் பேர் வீடின்றித் தவிக்கின்றனர்.

21 9—5—38ல் கூடப்போகிற சர்வதேச சங்கக் கூட்டத்திற்குத் தம்முடைய பிரதிநிதிகளை அனுப்பப் போவதாக ஹெய்லி செலாஸி சர்வதேச சங்கக் காரியதரிசிக்கு எழுதி யிருக்கிறார்.

பிரதம உருது கவியான ஸர் முகம்மது இக்பால் லாகூரில் மரணமடைந்து விட்டார்.

பம்பாயில் ஏற்பட்ட கலகத்தின் விளைவாக 1457 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

22 பானே என்ற அமெரிக்கக் கப்பலை மூழ்கடித்ததற்காக ஜப்பானிய அரசாங்கம், 4,42,000 பவுன் நஷ்ட ஈடு செலுத்தியது.

பிரிட்டிஷ் யுத்த மந்திரியாகிய ஹோரே பெலிஷா, ரோமாபுரிக்கு வந்து முஸோலினியுடன் கலந்து பேசினார்.

23 ஸ்பெயின் யுத்த சம்பந்தமாக காஸ்டல்லான் மாகாணத்திலுள்ள 18 வயதுக்கு மேல் 45 வயதுக் குட்பட்ட எல்லா ஆண்களும் யுத்த சேவை செய்ய வேண்டுமென்று குடியரசு அரசாங்கம் உத்திரவு பிறப்பித் திருக்கிறது.

24 ஜெக்கோ—ஸ்லோவேகியாவி லுள்ள ஜெர்மானியர்கள் சார்பாக, ஹெர் ஹென்லீன் என்பவர் வெளியிட்டிருக்கிற அறிக்கையில், ஜெர்மானியர்களுக்குச் சம சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்றும் இன்னும் பல நிபந்தனைகளையும் கேட்டிருக்கிறார்.

25 ஆங்கிலோ—ஐரிஷ் ஒப்பந்தம் லண்டனில் கையெழுத்திடப் பெற்றது.

26 பிரிட்டிஷ் அரசாங்கத்து 1938—39ம் வருஷத்து வரவு செலவுத் திட்டத்தை ஸர் ஜான் ஸைமன் காமன்ஸ் சபையில் ஆஜர் படுத்தினார்.

பீஹார் சட்ட சபையில் மதுவிலக்கு மசோதா நிறைவேறியது.

27 அல்பேனிய மன்னரான ஜோக் அரசருக்கும் ஹங்கேரியைச் சேர்ந்த கெரால்டைன் அப்போன்யி என்ற மாதுக்கும் விவாகம் நடை பெற்றது.

மேமியோ குர்க்கா டைரி.

தலைமை ஆபீஸ் :—மேமியோ

தேக ஆரோக்கியமே சிறந்த செல்வம்!

எப்பொழுதும் எங்களுடைய சுத்தமான புதிய வெண்ணெய், நெய், கிரீம், பால் முதலிய வற்றையே உபயோகிங்கள்.

எங்கள் பெயர் பிரசித்தமானதற்குக் காரணம், வாடிக்கைக்காரர்களுக்குப் பூரண திருப்தியைக் கொடுக்கிறோம் என்பதே.

நாங்கள் தயாரிப்பவை நூற்றுக்கு நூறு சுத்தமானவை; உத்திரவாதம்.

ஒரு முறை ஆர்டர் கொடுத்து பரீக்ஷியுங்கள்.

பசு வெண்ணெய் (டேபிள்)	பவுண்டு	1 0	பசுவின் நெய்	வீசை	4 0
,, (சமயல்)	,,	0 12	,, கிரீம்	பவுண்டு	1 0

எந்த நேரத்திலும் உங்கள் வீட்டில் எவ்வித செலவுமின்றி சப்ளை செய்யப்படும்

MAYMYO GURKHA DAIRY,

Telephone No. 171 — No 229, Lewis Street, Rangoon.

மேமியோ குர்க்கா டைரி,

டெலிபோன் நம்பர் — பிராஞ்சு:-229, லூயில் வீதி, இரங்கூன்.

Head Office :–Maymyo.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர்:—'மணிக் கொடி' ஆபீஸ்,

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதருஸ்.